

ாய்பிறன் கைப்படச் சகிப்பவனுகி
வெனன வாழ்வோன் நமரிலிங்குளனே?
ரத நாடு பாக்கெலாம் திலகம்
ாகன் புதல்வர்; இந்நினைவகற்றுதீர்!

காய்த்திரு நாட்டைக்
ுகர்த்திடு மிலேச்சரை



ாய்த்திட விரும்பான்
ாழ்வுமோர் வாழ்வுகொல்?
ரத பூமி பழம்பெரும் பூமி;
ன் புதல்வர்: இந்நினைவகற்றுதீர்!

எழுத்தாளன்

EZHUTHALAN

பாரதி விழா

சிறப்பு மலர்

February 1962

தரத்துக்கும் சேவைக்கும்
தக்கதோர் சின்னமாக
விளங்கும் பெயர்

வின்சென்ட்

சோடா, கலர், கீரஷ், கனிச்சுவை பானங்கள்
ரொட்டி, கேக், பிஸ்கட் தயாரிப்பில்
புகழ் பெற்றவர்கள்.

உபசரணை விருந்துகளுக்கு உற்றபணியாளர்கள்

தலைமை நிலையம்: திருச்சிராப்பள்ளி.
கிளைகள்: சென்னை, மதுரை, நெல்லை, சேலம், கோவை, குடந்தை, காரைக்குடி, கடலூர்

சிறப்பு மலர்

"எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்"
— பாரதியார்.

எழுத்தாளன்


தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி



Bharathi 81st Birth Day
CELEBRATIONS SOUVENIR

மகா கவி பாரதியார்
81வது பிறந்த தின விழா
சிறப்பு மலர்

திருச்சி-2.

விலை ரு. 4—00

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம்

(31/1961. பதிவு செய்யப்பெற்றது)

சென்னை.

—: தலைவர் :—

பேராசிரியர் அ. சீனிவாசராகவன், எம். ஏ.,
(முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி)

—: உபதலைவர்கள் :—

திரு. கி. வா. ஜகந்நாதன், எம். ஏ.,
,, தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான்
எம். ஏ., ஐ. ஏ. எஸ்., (ரிட்டயர்டு)
திரு. ல. கிருஷ்ணசாமி பாரதி, எம். ஏ., பி. எல்.,
திரு. வித்வான் மீ. ப. சோமசுந்தரம்.
திருமதி ,, வை. சரோஜினி, பி. ஓ. எல்.

—: செயலாளர் முதல்வர் :—

திரு. அகிலன்.

—: செயலாளர்கள் :—

திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
,, நாரண துரைக்கண்ணன்
,, ப. ந. தியாகராஜன்

—: பொருளாளர் :—

திரு. கண. முத்தையா.

—: உறுப்பினர்கள் :—

—: சென்னை :—

திரு. டி. எஸ். சொக்கலிங்கம்
,, கொடுமுடி ராஜகோபாலன்
,, எஸ். ஆர். வெங்கடராமன்
,, அழ. வள்ளியப்பா
,, என். சிதம்பரசுப்ரமண்யம்
,, ஏ. கே. செட்டியார்
,, கே. டி. கோசல்ராம்
,, சுகி. சுப்ரமண்யம்
,, எஸ். ஏ. ரகீம்
,, த. ந. குமாரசாமி
,, ஜே. தங்கவேல் (சுபி)
,, வ. விஜயபாஸ்கரன்
,, ரா. வெங்கடாசலம்
,, வை. கோவிந்தன்
,, கு. அழகிரிசாமி
,, ரங்கதுரைவேலன்
,, சா. விஸ்வநாதன் (சாவி)
,, எஸ். வி. சகஸ்ரநாமம்
,, கோமதி சுவாமிநாதன்
,, கெச். வைத்தியநாதன்
,, ஏ. வி. ரெங்கராஜன்
,, எஸ். டி. சுந்தரம்
,, சாண்டில்யன்
,, பகீரதன்
,, ஜம்புநாதன்
திருமதி சரஸ்வதி ராமநாத்
,, தங்கம்மாள் பாரதி

—: கம்பன் தமிழ் எழுத்தாளர் மன்றம் சென்னை :—

திரு. வரகவி வேங்கடன்
,, டி. ஆர். சுவாமிநாதன்
,, புலவர் தணிகை உலகநாதன்
,, தண்டமிழ்ப் பித்தன்
,, வெங்கட்டராவ்
,, (சக்திதாஸன்) சுப்ரமண்யம்

—: நீதுச்சி த. எ. சங்கம் :—

,, திருலோக சீதாராம்
,, சி. எஸ். தமம்பதி எம். ஏ.,
,, எஸ். கந்தசாமி (துறைவன்)
,, ஏ. எஸ். ராகவன்
திரு ஷண்முகநாதன்
,, என். கிருஷ்ணசாமி
,, கு. கோவிந்தராஜு
,, ரா. நிலமேகம்

—: மதுரை த. எ. சங்கம் :—

,, வி. ஜி. சீனிவாசன்
,, எஸ். ராமகிருஷ்ணன்
,, வீ. ப. நடராஜன்

—: கோவை த. எ. சங்கம் :—

,, ஆர். ஷண்முகசுந்தரம்
,, எம். கே. சாமி.

—: வட ஆற்காடு த. எ. சங்கம் :—

,, ப. தாண்டவராயன்
,, திலக் சாஸ்திரி
,, கே. ஆர். கல்யாணராமய்யர்

—: தென்னாற்காடு த. எ. சங்கம் :—

,, லால்குடி கிருஷ்ணமூர்த்தி
,, டி. எஸ். கோதண்டராமன்
,, எம். பி. ராஜன்

—: கருர் த. எ. சங்கம் :—

,, கே. கோவிந்தராஜன்
,, இரா. பாண்டுரங்கம்
,, கே. ஆர். பசுபதி

—: சேலம் த. எ, சங்கம் :—

,, சே. ர. குமாரசாமி, பி. ஏ.,
,, ஷண்முகசுந்தரம்
,, வை. சுப்ரமண்யம்

—: திருநெல்வேலி த. எ. சங்கம் :—

,, சிதம்பர ரகுநாதன்
,, வல்லிக்கண்ணன்
,, தி. க. சிவசங்கரன்

—: தஞ்சை த. எ. சங்கம் :—

,, அன்பு வேதாசலம்
,, வரதராஜன்

—: கல்கத்தா த. எ. சங்கம் :—

,, அரு. சொக்கலிங்கம் செட்டியார்
,, சிவ. ஜம்புநாதன்
திருமதி .வேங்கடலக்ஷ்மி அம்மாள்

உலகமெனும் பெருவியப்பை உலகில் மாந்தரீ
உயிர்வாழத் துடிக்கின்ற முனைப்பில் தோன்றும்
கலகத்தைச், சிறுபிணக்கைக் காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக் கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து ஆய்ந்தும் மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற மானுடத்தின்
குலமுயரக் குணமுயரக் கொடிதான் ஏந்தும்
குறிக்கொண்ட எழுத்தாளர் ஓர் குலத்தார்!



Digitized by N58
K3-1

பாரதியார் 81-ஆவது பிறந்ததின விழா மலர்

பாரதி பிறந்தார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல்,
இளங்கோவைப் போல் பூமிதனிலே யாங்கணுமே
பிறந்ததில்லே—உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லே

என்று பாடிப் பரவசமடைந்தவர் மகாகவி சுப்ரமண்ய பாரதி.

இத்தகைய நெடிய மரபில் இந்த நூற்றாண்டில் தமிழுக்குப் பெரும் புகழும் தமிழ் மக்களுக்குப் புது வாழ்வும் கொண்டுவந்தவர்களில் பாரதியைப் போல் யாரும் பிறந்ததில்லே என்று நாம் கொண்டாடுவோம்.

இந்தக் கொண்டாட்டத்தின் வினேவுதான் சென்னையில் இவ்வாண்டு நடைபெற்ற பாரதியின் 81-வது பிறந்த நாள் விழா.

பாரதியின் அமரநாமோப் பல்லாண்டுகளாகத் தமிழகம் கொண்டாடித்தான் வந்திருக்கிறது. பாரதிக்கு எட்டயபுரத்தில் மணிமண்டபம் அமைத்து ஏற்கனவேயே அவருக்கு நாம் அஞ்சலி செலுத்தியிருக்கிறோம். பாரதி தமிழ் மக்களின் பொதுச் சொத்து என்பதை நிரூபிக்க, அவரது பாடல்கள், எழுத்துக்களின் பதிப்புரிமைகளே முன்னமேயே நாம் பொதுவுடைமையாக்கி யிருக்கிறோம்.

பாரதியின் பிறந்த நாளே ஒரு தேசிய விழாவாக, இந்தியாவின் பிற பிற மொழிகள் பேசும் ராஜ்ஜியங்களிலெல்லாம் கொண்டாட வேண்டுமென்பது, நம்முடைய மொழியபிமானமோ இனப் பற்றுதலோ மட்டும் காரணமல்ல. இமயம் முதல் குமரி வரை இந்தியா முழுவதையும் ஒருருவமாகக் கண்டு ஒரு பாரததேவியாக வணங்கிப் பாமாலே சூட்டிய தேசபக்த கவி பாரதியைத் தவிர வேறு யாரும் கிடையாது என்ற உண்மையே இத்தகைய நமது ஆவலுக்கு அடிப்படை. அதுவும் அரசாங்கத்தின் போற்றுதலுடன் மக்களின் விழாவாகப் பாரதி



பிற்ற நிலையில் மிகவும் முக்கியமாகு மென்பதை அரசாங்கம் நன்கு சிந்தித்து முடிவு செய்தது.

அரசியலாரும் எழுத்தாளர்களும் தேசியத் தொண்டர்களும் முன் னணியாகச் சேர்ந்து உழைத்து பாரதி பிறந்த நாள் விழாவைச் சென்னையில் டிசம்பர் 9, 10, 11 தேதிகளில் கொண்டாடிய சிறப்பைத் தமிழ் மக்கள் அறிவார்கள். விழாவின் நிகழ்ச்சிகள் தமிழ் வரலாற்றில் நின்று நிலைக்க உதவும்பொருட்டு அரிதின் முயன்று தொகுத்து இந்த மலரை உருவாக்கியிருக்கிறோம்.

பாரதி பிறந்தார், அதனல் தமிழகத்தில் புது வாழ்வு பிறந்தது. பாரத நாட்டில் கலாசார, உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு முகிழ்த்தது. அடிமைத்தனத்துக்கு எதிரான ஜனநாயக வாழ்வு நமக்கு மலர்ந்தது.

அடுத்த ராஜ்யங்களின் முதலமைச்சர் திருவர் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பிக்க, பிற மொழி வல்லுனர் பலர் பாரதியின் இலக்கிய மேன்மையை விளக்க, இன்றைய கவிவாணர் பலர் அரங்கேறிப் பாரதி புகழ்பாட நடைபெற்ற பாரதி பிறந்த நாள் விழா வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

விழா முடிந்தது. இனி ஆண்டுதோறும் இந்த விழாவை முன்னின்று நடத்தும் பொறுப்புக்கு அஞ்சிநிற்கிற தமிழ் எழுத்தாளர்ப் பெருமன்றத்தை அமைச்சர் திரு. பக்தவத்சலம் அன்புடன் அழைப்பு விடுத்திருக்கிறார்.

பாரதி பெயரால் தனி இலக்கிய நிறுவனம் அமைப்பதைப் பற்றி மைசூர் முதலமைச்சர் கூறியதும், பாரதி பெயரால் மதுரைப் பல்கலைக் கழகம் பெயரிடப்பட வேண்டுமென்று அமரர் ஜீவானந்தம் அன்று மேடையில் கூறியதும் நமது சிந்தனையில் இடம்பெற்றுச் செயலாக்கப்பட வேண்டிய காரியங்களாகும். இவ்விரு பணிகளிலும் தமிழக அரசாங்கம் தடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று பெருமன்றம் வேண்டுவதுடன், இத்துறையில் தனது முழு ஒத்துழைப்பையும் அளிப்பதுக் கொள்ளுவதாகத் தீர்மானம் ஒன்றை அரசாங்கத்துக்கு அனுப்பியிருக்கிறது.

குறிப்பாக, வருங்கால மக்களுக்கே பாரதியின் முழுப்பயனும் கிடைக்கவேண்டும். ஆரம்பநிலை, உயர்நிலை, கல்லூரி நிலை முன்றிலும் உள்ள மாணவர்களுக்கு ஏற்ற பாட புத்தகங்களாகப் பாரதி இலக்கியங்களை வகைப்படுத்திக் கொளுத்து வெளியிட்டு அவரவர் நிலைக்கு ஏற்பக் கற்பிக்கும் ஏற்பாடுகளை அரசாங்கம் உடனடியாகச் செய்வது இன்றியமையாத தென்பதையும் தமிழக அரசாங்கத்துக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இப்படி ஒரு பாடத் திட்டத்தை உருவாக்கும்போது தக்க பாரதி அறிஞர்களைக் கொண்டே இதனைச் செய்வது ஒரு மாணவன் தனது படிப்பைத் தொடங்கி வெளியுலகுக்கு வரும்போது பாரதியைப் பற்றி முழுவதும் தெரிந்துணர்ந்தவனாக இருக்க உதவ முடியும்.

பாரதி தமிழ்க் கவிஞர் – பாரதக்கின் தேசியப் பெருங்கவிஞர், பாரதத்தின் தலைசிறந்த கவிமன்னர்களில் ஒருவர். அவர் மகாகவி. பாரதியின் பிறந்த நாளேதான் கொண்டாட வேண்டு மென்ற எண்ணம் பல ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது. கிராம ஊழியனில் அமரர் கு. ப. ரா. ஆசிரியராக இருந்தபோது இந்தக் கருத்தை வலியுறுத்தி முதன் முதலில் அதைப் பிரசுரம்செய்தோம். உடனடியாக, குடந்தையிலும், கரூரிலும் தொடர்ந்து பாரதியின் பிறந்த நாள் விழாதான் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. தேசிய அவசர கால நெருக்கடியின் விளைவாகப் பாரதியின் 81-ஆவது ஜயந்தியைக் கொண்டாடுவது பொருத்தமானது என்ற கருத்து அரசாங்க உணர்வினால் பட்டு இவ்வாண்டு மிகச் சிறப்பாகப் பாரதி பிறந்த நாள் விழா நடைபெற்றிருக்கிறது. இனி தொடர்ந்து ஜயந்தி விழா முதலிடம் பெறும்.

இந்த விழாவுக்குப் பேரார்வத்துடன் உதவிய அரசினர், எழுத்தாளர்கள், தேசிய சக்திகள், இலக்கியப் பித்தர்கள் அனைவருக்கும் இந்தச் சிறப்பில் பங்குண்டு.

விழாக்கள் காற்றில் கலந்து, கருத்துக்கள் எழுத்தில் தேக்கப்படாமல் போய்விடக் கூடாதென்று இந்த மலரைத் தொகுத்தோம். பிறமொழியினருக்கும் இந்தச் செய்தி எட்டவேண்டுமென்பதற்காக ஆங்கில மொழியிலும் கூடுமான வரை எல்லா நிகழ்ச்சிகளையும் கொடுத்திருக்கிறோம். பாரதிக்கு தமிழ் மக்கள் செலுத்தும் இந்த அஞ்சலியில் பங்கு கொள்ளும் முறையில், இம்மலருக்கு விளம்பர ஆதரவளித்துள்ள பெருமக்களுக்கும் இவ்விழாவில் ஒவ்வொரு வகையிலும் தொடர்புள்ள அனைவர்க்கும் தமிழ் எழுத்துலகத்தின் சார்பாக நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி,
ஆசிரியர்.

பாரதி விழாச் சிந்தனைகள்

—அகிலன்

081.m411.N58
k3-1

தமிழ்நாட்டு அரசு மகாகவி பாரதியாருக்கு விழாக் கொண்டாட முன்வந்து, அதை மிகச் சிறப்பாக நடத்தி வைத்தது ஓர் வரலாற்றுப் பெருமை வாய்ந்த கிழ்ச்சியாகும். ஏற்கனவே பாரதியாரைப் பொது மக்களிடம் பரப்புவதற்காகத் தனிப்பட்டவர்களிட மிருந்த அவருடைய எழுத்துரிமையைப் பெற்றுப் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளது நமது அரசு. அதனால்தான் இன்றைக்கு மிகவும் குறைந்த விலையில் பாரதியாரை அனைவரும் வாங்கிப் படிக்க முடிகிறது.

அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றம் 1—3—62 கூடிய ஆட்சிக்குழுக் கூட்டத்தின் போதே பாரதியாரின் பிறந்த நாள் விழாவை டிசம்பர் 62-ல் பிறந்த முறையில் கொண்டாட வேண்டுமென்று தீர்மானம் செய்தது.

"வள்ளுவர், கம்பர், இளங்கோ முதல் பலப்பல கவிஞர்கள் நம்மிடையே இருக்க, பாரதிக்கு மட்டும் விழாவெடுக்கத் தீர்மானித்த காரணம் என்ன?" என்ற வினவைச் சிலர் எழுப்பலாம்.

மகாகவி பாரதி, தமக்கு முன்பிருந்த மாபெரும் கவிஞர்கள் பலரது கருத்துக்களில் ஊறித் தேர்ந்து, அவற்றை ஏற்றுக்கொண்டு, இந்த நாற்றாண்டு மக்களின் வாழ்க்கையைப் ஆராய்ந்து, அவர்களுக்கு ஏற்றவாறு வள்ளுவர் முதல் ராமலிங்க அடிகளார வரையிலுள்ள பலரது கருத்துக்களையும் தமது தீஞ் சுவைக் கவிதைகளால் வாரி வாரி வழங்கியுள்ளார். ஆகவே, பாரதிக்கு விழாவெடுப்பது என்பது அவருக்கு முன் பிருந்த எல்லாக் கவிஞர்களுக்குமே விழாவெடுப்பதற் கொப்பாகும் என்று கருதினேன்.

மேலும், பாரதி அவருக்குப்பின் னும் புதியதொரு இலக்கியப் பரம்பரையையே தோற்றுவித்து விட்டார். இக்காலத்து மக்களுடைய வாழ்க்கை என்கிற மாபெரும் பல்கலைக் கழகத்தில் அனுபவப் படிப்புப் படித்து, புதுப்புது விதமான கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதக்கூடிய மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பலர் தோன்றக் காரணமாக இருந்தவர் மகாகவி பாரதி. புதுமைத் தமிழுக்கு ஆக்க சக்தியும், கடையில் வலிமைக்க வேகமும், வாழ்க்கைக்குத் தன்னம் பிக்கை கொண்ட லட்சியப் பிடிப்பும் கொடுத்தவர் அவர்.—ஆதலால் பழமைக்கும் பழமை வாய்ந்த சங்க காலப் புலவர்களுக்கும், இன்று பலப்பல புது முயற்சி கள் செய்து தமிழை உலகில் பரப்பும் மறுமலர்ச்சி எழுத் தாளர்களுக்கும் அவர் பிரதிநிதியாக விளங்குகிறார்.

இவற்றைத் தவிர இன்னுமொரு முக்கியமான காரணமும் இருக்கிறது.

இந்த நாற்றாண்டு மக்களின் தேவைகளே, கடமை களே, இன்ப துன்பங்களே, பெருமை சிறுமைகளே அனு தாபத்துடன் ஆராய்ச்சி செய்த அறிஞர் அவர். அறிவின் ஆராய்ச்சி யோடு தாம் கண்ணுற்ற வாழ்க்கையை உணர்ச் சிப் பிழம்பான ஆவேசத் துடன் அவர் தம் கவிதை களில் முழங்கியிருக்கி றார். அரசியல், பொரு ளாதாரம், கலை, இலக்கி யம், மொழி, நாடு, தேசம், உலகம், மதம், சமயம், கடவுள், கல்வி, தொழில், விஞ்ஞானம் எதையுமே அவர் விட்டு வைக்கவில்லை. மக்களி டம் ஒற்றுமை யை வளர்த்து, உற்சாக மூட்டி, தன்னம்பிக்கை ஏற்படுத்தி, அவர்களைக் கோபாவேசத்தோடு



திரு. அகிலன்

இடித்துரைத்து, தட்டிக் கொடுத்து இப்படி எத்தனையோ வழிகளில் புதிய சமுதாயம் காண அழைத்துச் செல்கிறார். தெருவில் திரியும் சாதாரணத் தமிழனிடம் தன் கருத்துப்பரவ வேண்டு மென்பதற்காக எத்தனை எத்தனை விதமான இனிய எளிய சந்தங்களில் அவர் பாடியிருக்கிறார். உயர்ந்த கருத்துக்கள், ஆழ்ந்த தத்துவங்கள், சிறந்தசிந்தனைகள் இவ்வளவையும் அவர் பொதுமக்களுக்குப் புரியும் மொழியில் வாரி வாரி வழங்கியபராயிற்றே.

புதிய சமுதாயத்தின் விடிவெள்ளி பாரதி தீய சக்திகளைத் தீயிடுங் கொளுத்தும் கடுங்காலன் பாரதி. அறிவுச் சக்திகளின் அறிவுச் சக்தி பாரதி. ஆக்கசக்தி களின் தூண்டாமணி விளக்கு அவரது உள்ளொளி. மாபெரும் ஆக்க சக்திகள் அனைத்தும்ஒன்றுசேர்ந்த புதிய சமுதாயத்தின் வித்து அவர்.

ஆகவேதான் பாரதிக்கு விழா எடுப்பதன் மூலம் இங்கு புதிய சமுதாயத்தைத் தீவிரமாக உருவாக்கு வதில் துணைசெய்ய முடியும் என்று பெருமன்றம் நம்பியது.

சிந்தனையும் செயலும்

எழுத்தாளர்களுடைய செயல் சிந்தனை செய்வது தான். சிந்தித்து எழுததில் வடிப்பதே ஒரு பெரும் செயல். அந்தச் சிந்தனையைச் செயலாக்க வேண்டிய வர்கள் மற்றவர்கள். விழாவெடுக்க 1—3—62 லேயே தீர்மானித்த பெருமன்றத்திடம், இந்தவிழாவை மத்திய அரசு கொண்டாடிய தாகூர் விழாவைப்போல் செய்து பாரத தேசமும் பாரதியைப் பரப்ப வேண்டுமென்ற ஆர்வத்தோடு பலர் முன்வந்து ஒத்துழைப்புத் தருவ தாகக் கூறினர்கள். சிந்தனையாளர்களை மட்டும் கொண்ட பெருமன்றம், இத்தனை பெரிய அளவில் அதைச் செயலாற்றிவிட முடியுமா என்று சிந்தனை செய்தது.

இதையெல்லாம்விட மக்கள் கவிஞனை பாரதிக்கு மக்கள் அரசே விழாவெடுக்க முன்வந்தால் அது எவ்வளவு சிறப்பாக நிறைவேறும்? கவிஞரின் சனவுகளே நனவாக்க எவ்வளவோ புதுப்புதுப் பொருளாதாரத் திட்டங்களே வகுத்து நாட்டு மக்களுக்கு நலனை செய்ய முன்வந்திருக்கும் அரசு இது. ஆனால் இவ்வளவு திட்டங்களிலோடும் நாட்டு மக்களின் மனத்திலே எழுப்பாராவும், உற்சாகமும், ஒற்றுமை உணர்வும், கடமையுணர்வும், தன்னம்பிக்கையும், ஏழ்படச் செய்தல் வேண்டும். மனிதர்களின் மனத்தை உருவாக்கும் திட்டங்களே, புறவாழ்வுத் திட்டங்களின் அஸ்திவாரங்கள். பாரதியான் மனத்திட்டங்களே உருவாக்கும் மாபெரும் சிந்தனையாளர்.

எனவே, பாரதி விழாவைத் தமிழ்நாடு அரசு ஏற்றுநடத்தினால் அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற ஆலோசனையை எழுத்தாளர் பெருமன்றம் கல்வி அமைச்சர் அவர்களிடம் வெளியிட்டது. ஆலோசனையை ஏற்றுக்கொண்ட அரசு உடனடியாகச் சிந்தித்துச் செயலாற்றவும் தொடங்கிவிட்டது. ஊக்கமும், உற்சாகமும், உழைப்புத் திறனும் கொண்ட விழாக்குழு ஒன்று சல்வி அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பெற்றுத் திட்டங்களும் வகுத்தது.

பாரதியாரின் கவிதைகள் சிலவற்றைப் பொறுக்கி எடுத்து, பத்துக்காசு வீலையில் குழந்தைகளுக்கேற்ற படங்களுடன் இரண்டு வட்சம் பிரதிகள் வெளியிட்டு வழங்கியது அறியுக சாதனைதான் மிகச்சிறிய விலையும் போல் தோன்றக்கூடிய இந்தச்செயலில்தான் எதிர்காலக் குழந்தைகளின் உருவாக்கமே இருக்கிறது. பாரதி என்கிற சுடரொளி இந்த நாட்டு வருங்கால மன்னர்களின் நெஞ்சங்களில் ஏற்றிவைக்கப்பட்டிருக்கிறது! அவர்கள் வளரவளர பாரதியின் முழு உருவையும் கண்டு புதிய பாரதத்தை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை பிறந்துவிட்டது.

இடையில் திடீரென்று ஏறபட்ட வஞ்சகத்தனமான சீன ஆக்கிரமிப்பு, 'பாரதி விழா அவசியம்தானு?' என்ற ஐயத்தைக்கூட எழுப்பச் செய்தது. ஆனால், மற்ற எல்லாச் சமயத்தையும் விட இந்த நெருக்கடியான சமயத்தில்தான் பாரதி நமக்கு மிகமிகத் தேவை என்பதை வலியுறத்தினர் விழாக்குழுத் தலைவர். தணிச்சலும் தியாகமும் கொண்ட வீரப் போர் முரசுவல்லவர பாரதி? விழா நிகழ்ச்சிகள் அனைத்துமே இந்த நோக்குடன் உருவாகத் தொடங்கின. அரசினர் வெளியிட்டுள்ள மூவர்ண பாரதி சுவரொட்டிகளே இதற்குச் சான்று கூறும்.

விழாவைப்பற்றி நான் கூறுவதைவிட, 'கலிமகன்' பத்திரிகை வெளியிட்டிருக்கும் செய்தியின் சிலபகுதி களை இங்கு கொடுப்பது பொருத்தமாக இருக்கும்.

"கடற்கரையில் மாபெரும் கூட்டம் கூடி ஒரு கவிஞனுடைய திருநாளைக் கொண்டாடினார்கள்; அதற்கு ஐம்பதினாயிரம் பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள்' என்ற செய்தியை யாராவது வெளிநாட்டுக்குச் சென்றிருக்கும் தமிழர் ஒருவர் பத்திரிகையில் படித்தால் கம்பமே மாட்டார். அப்படிப்பட்ட அதியமான் ஒன்று சென்னையில் நடந்தது....."

ஆம்; கவிஞருக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டுத் தமிழ்நாட்டு முதலமைச்சர், கல்வி அமைச்சர் முதல் இன்னும் சில அமைச்சர்களும், சமுதாயத்தின் மன சாட்சிப் போர்வீரர்களான எழுத்தாளர்களும், மாதர், மாணவ—மாணவியர், தொழிலாளர், கசரப் பிரமுகர்கள் பலரும் கான்முகைல் தூரம் ஊர்வலமாக நடந்து சென்று கடற்கரையில் அஞ்சலி செலுத்தினர்கள் கண்ணியமுள்ள பெருமக்கள் நிறைந்த கூட்டப்பாடான ஊர்வலம் தெருவெல்லாம் தமிழ் முழங்கிய பாரதிக்கு வணக்கம்செலுத்தியகாட்சிகண்கொள்ளாக்காட்சிதான

'கலிமகன்' பத்திரிகைகூறும் மேற்கொண்டு செய்திகள்

"மூன்று நாட்களும் சென்னை ராஜாஜி ஹாலில் அறிஞர்கள் பாரதி பாடலிலுள்ள சனுக்கை ஆய்வுக்கட்டுரைகள் சீனவதைப் பறண்படி வீரச்சியப் பம் வீரமுயடினார். சனடைம், ஆந்திரம், தமிழகம் ஆகியவற்றின் ஐக்கியமைமைச்சர்கள் ஒன்று சேர்ந்து பாரதியாரைப் புகழ்ந்து பேசினார். பல்வேறு மாநிலங்களின் அறிஞர்களை வந்து பாரத நாட்டில் ஒருமைப்பாட்டைப் பற்றப் பேசினார். பாரதியின் கவிதைகளைக் சன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது முதலிய மொழிகளில் பாடியுள்ள கவிஞர்கள், தாங்களே வந்து தங்கள் மொழிகளில் பாடிக் காட்டினர்..... எழுத்தாளர்கள் மதிப்பையும். கவிஞனின் உயர்வையும் அரசாங்கம் கன்கு உணர்ந்து இந்தத்திருநாளை மிகமிகச் சிறப்பாகக் கொண்டாடி வெற்றி பெற்றது. வரப்போகும் நல்ல காலத்தின் அறிகுறி இது என்றே சொல்லவேண்டும்."

பாரதி கண்காட்சி ஏற்பாடுசெய் பாரதியின் வாழ்வையும் எழுத்தையும் படங்களின் வாயிலாகவும் சிற்பங்கள் வாயிலாகவும் எடுத்துக்காட்டத் தூண்டுகோலாக இருந்தது. விழாவின் மூன்றும் நாள் முடிவு, தமிழ்நாடு தலைமையமைச்சரின் முன்பாக அனைவரும் சேர்ந்து பாரதாகப்பு உறுதி மொழி எடுத்துக்கொள்வதாக அமைந்தது. அந்தப் புல்லரிக்கும் காட்சியின் பிரதிபலிப்பை வானொலியின் மூலமாகக் கேட்ட வர்கள்கூட இன்றும் தங்களது வியப்பைத் தெரிவிக்கத் தவறுவ தில்லை

மூன்று வகைப் பிரிவினர் இந்த விழாவுக்காக அயராது உழைத்திருக்கின்றனர். அரசினர் பிரிவு, பொதுமக்கள் பிரிவு, எழுத்தாளர் பிரிவு—இந்த மூன்று சக்தியிலும் பலப்பலர் இணைந்து பணியாற்றியிருக்கின்றனர். விழாக்குழுத் தலைவராக கல்வி—நிதி அமைச்சர் அவர்களின் உற்சாகமான ஒத்துழைப்பும், முதல் அமைச்சர் அவர்களது ஆதரவும் முழுமையாகஇருந்தன

அரசினர் சார்பில் கூட்டுச் செயலாளராக இருந்து தேவையானவற்றைக் கவனித்தவர் செய்தித்துறை இயக்குனராக திரு. ரா. குழந்தைவேலு. பொது மக்களே ஒன்று திரட்டுவதற்காகப் பல அன்பர்களை ஒன்று திரட்டி உழைக்கச் செய்தவர் மற்றொரு கூட்டுச் செயலாளர் திரு. கருப்பையா. பொருளாளர் திரு. கி.பாலகிருபிரமணியஐயர் எம்.எல்.சி.அவர்களுடனுவோர் சனகளே இந்த விழாவை மிகமிகச் செட்டும் சிக்கனமுமாக நடத்த உதவி செய்தன.

சென்னையிலுள்ள எழுத்தாளர் பெருமன்றத்தின் அன்பர்கள் பலரும், வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் பலரும் விழாவைத் தங்களுக்குப் பெருமைதரும் விழாவாகவே மதித்து உழைத்தார்கள். திரு. அழ வள்ளியப்பா இதில் பெரும் பங்கை ஏற்றுக் கொண்டவர். மேலே குறிப்பிட்ட மூன்று வகைப் பிரிவினரான மூப்படையினருக்கும் நாம் நன்றி கூற வேண்டும்.


விழா மூன்று நாட்களிலோ, அல்லது ஒரு வாரத்திலோ முடிந்து போய்விடக்கூடாது. ஆலல் இந்த விழா என்பது தமிழ் மொழியிலுள்ள ஆக்க சக்திகளை வெளிப்படுத்திக் காட்டிய ஒரு சீரு மின்னல் தீற்றுத்தான். நாட்டு மக்களின் மன வளத்தைப் பண்படுத்தக்கூடிய பாரதியின் பரம்பரை இந்த விழாவில் புதிய சமுதாயக்தை உருவாக்குவதற்கான ஒரு சீரிய விதைதத்தான் ஊன்றியிருக்கிறது. விதை வளர்ந்து ஆலபோல் தழைத்து அருகுபோல் வேரோடி நன்கு செழிக்குமாறுல் அதுவே நாடு செழிக்கவும் துணைசெய்யும். பாரதியின் புகழ் படிப்பு பாரத சமுதாயத்திற்கு உழைத்திடுவோம்!

பாரதி கண்காட்சி

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

(பொறுப்பாளர், பாரதி கண்காட்சி)


★



"அப்பா, அப்பா, இதோ பாரப்பா, பாரதியார் கையெழுத்தை!" என்று உற்சாகத்துடன் துள்ளிக் குதித்துக் கொண்டே கூறினான் ஒரு சிறுவன்.

"என்ன! பாரதியார் கையெழுத்தா? யாருக்கு எழுதினது இது?" என்று கேட்டுக்கொண்டே மூக்குக் கண்ணாடியை நெற்றிக்கு மேலே தூக்கிவிட்டுக் கொண்டு உற்றுப் பார்த்தார் தந்தை.

மதுரை தேசபக்தர் ஸ்ரீநிவாசவரதன் அவர்களுக்குப் பாரதியார் எழுதிய கடிதமே அது. பார்த்தாயாடா,



எப்படி முத்து முத்தாக எழுதியிருக்கிறார்! நீயும் எழுதுகிறாயே, கோழி கிளறின மாதிரி!" என்றார் தந்தை.

அங்கிருந்த மற்றக் கையெழுத்துப் பிரதிகளைப் பார்ப்பதிலே மும்முரமாக ஈடுபட்டிருந்த பையன், தந்தை சொன்னதன் பின்பகுதியை சரியாகக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பாரதியார் தம் கைப்பட எழுதிய 'ஜெய பேரிகை கொட்டடா' பாட்டை வாய் விட்டுப் பாடினான்; பரலி நெல்லையப்பர் களுக்கு எழுதிய கடிதத்தையும், சந்திரிகையின் கதை 9-வது 10வது பாகங்களின் சில பகுதிகளையும் அபூர்வமாய் படித்தான். கையெழுத்துப் பகுதியில் அவன் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது எட்டயபுரம் மகாராஜா வெங்கடேசுவரெட்டப்ப பூபதிக்குப் பாரதியார் எழுதிய சீட்டுக் கவியேயாகும். எட்டயபுரம் ராஜாவின் புகைப் படத்துடன் வைக்கப்பட்டிருந்த அந்த அசல் கடிதம் அச்சிறுவனின் கவனத்தை மட்டுமன்று; காட்சிக்கு வந்த எல்லோரது கவனத்தையுமே கவர்ந்து விட்டது.



காட்சி நடந்த ராஜாஜி மண்டபத்திற்குள் நுழைந்ததும், அங்கே இருபுறமும் ஒளிவீசும் கண்களுடன் பாரதியாரின் பெரிய படங்கள் காட்சி அளித்தன. அவற்றில் ஒன்று, பாரதியார் உருவத்தைத் தத்தக முறையில் வரைந்து மற்றைய ஓவியர்களுக்கெல்லாம் வழிகாட்டியாயமைந்த ஆர்யா அவர்கள் தீட்டியது. மற்றொன்று, வண்ண ஓவியம். திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள் சென்னை அரசினர் கலைக் கல்லூரியிலுள்ள சீதக்காதி தமிழ் மன்றத்துக்கு அன்பளிப்பாக வழங்கியது. அவ்விரு படங்களும் (ஒன்று)

"ஒளிபடைத்த கண் ணினை யுடை வா, வா, வா;
உறுதி கொண்ட நெஞ்சினை யுடை வா, வா, வா"

என்ற உள்ளே நுழையும் ஒவ்வொருவரையும் நம்பிக் கையோடு வரவேற்பதுபோல் அமைந்திருந்தன.

காட்சியின் துவக்கத்தில், பாரதியார் தடியுடன் அமர்ந்திருக்கும் பெரிய புகைப்படம் ஒன்றும் அதன் கீழ் 39 ஆண்டுகளில்' என்ற தலைப்பில் 39வது வயதில் அமரரான பாரதியாரின் வாழ்க்கைக் குறிப்புக்கள் (தமிழிலும், ஆங்கிலத்திலும்) தரப்பட்டிருந்தன.

அதைப் பார்த்த ஒருவர் "அடேயப்பா! 39 வயதுக்குள் எத்தகைய சாதனை செய்திருக்கிறர்! எனக்கும்தான் வயது 49 ஆகிறது என்று பெருமூச்சு விட்டார்.

"இப் பூவுலகிலேயே தாம் செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் அவர் செய்து முடித்துவிட்டார். அதனால்தான் போய்விட்டார்! நாம் இன்னும் ஒரு காரியமும் செய்து முடிக்காததால் தான் இன்னும் இருக்கிறோமோ, என்னவோ!" என்றார் பக்கத்தில் நின்ற ஒருவர். அதற்குள் இன்னொருவர், செயற்கரிய செயல் செய்பவர்களுக்கே 39 வயது ஒரு கண்டம் என்றுதான் நான் நினைக்கிறேன். சுவாமி விவேகானந்தரும் இந்த வயதில்தானே மறைந்தார்?" என்றார்.

அப்போது 'அச்சில் வந்த முதல் பாடல்கள் என்று யாரோ ஒருவர் உரத்த குரலில் படிப்பது கேட்டு திரும்பிப் பார்த்தார்கள். அங்கே 1904ஆம் ஆண்டு மதுரை 'விவேக பானு' பத்திரிகையில் வெளிவந்த பாரதியாரது 'தனிமை இரக்கம்' என்ற பாடலின் புகைப்படமும்,

1907ல் வெளியான 'சுதேசகீதங்கள்' என்ற 4 பக்கத் துண்டுப் பிரசுரத்தின் புகைப்படங்களும் இருந்தன. பாரதி விழாக் குழுப் பொருளாளர் திரு. கே. பால சுப்பிரமணிய அய்யர் அவர்களுக்கும், எழுத்தாளர் திரு. கி. சந்திரசேகரன் அவர்களுக்கும் தந்தையாகிய திரு. வி. கிருஷ்ணசாமி அய்யரவர்களே இத்துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டுப் பல பள்ளிகளுக்கும், பொது மக்களுக்கும் அன்பளிப்பாக வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் முதலாக அச்சான பாடல்களையடுத்து, பாரதியார் எழுதிய நூல்களின் பழைய, புதிய பதிப்புக்கள் பலவும் இடம் பெற்றிருந்தன. பாரதியார் கவிதைகள் வசனங்கள் முதலியவற்றுடன் பாரதியார் ஆங்கிலத்தில் எழுதிய 'AGNI AND OTHER POEMS' ESSAYS AND OTHER PROSE FRAGMENTS' என்ற நூல்களும். விழாக்குழுவின் விருப்பப்படி டாக்டர் மு. வ., கி. வா. ஜ., ஈ. கிருஷ்ணய்யர் ஆகிய மூவரும் சிறுவர்க்கென்றே தேர்ந்தெடுத்த பாடல்களை, பாரத சமுதாயம் என்ற பெயரில் செய்தித் துறையினர் மிகவும் அழகாக வெளியிட்டிருந்த சிறு புத்தகமும், வேறு இரு பதிப்பகத்தார் சிறுவருக்காகத் தாயாரித்த பாரதி பாட்டுப் புத்தகங்களும் அங்கே இருந்தன.

பாரதியார் உயிரோடிருக்கும்போது அவருக்கு ஒரு பெரிய ஆசை இருந்தது. தம்முடைய கவிதைகளையும் வசனங்களையும் நாற்பது பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் 10,000 பிரதிகள் அச்சிட வேண்டும் என்றும் அப்பிரதிகளை மிக மலிவான விலைக்கு விற்க வேண்டும் என்றும் விரும்பினர். மண்ணெண்ணெய், தீப்பெட்டியிலும் ஸாதாரணமாக அந்த நூல்கள் எங்கும் பரவவேண்டும் என்றும் அபேக்ஷைப்பட்டார். இதற்கென்றே தமிழிலும் ஆங்கிலத்திலும் வேண்டு கோள் தயாரித்து நண்பர்களுக்கெல்லாம் அனுப்பினர். காட்சிக்கு வந்தோர் அந்த வேண்டுகோள்களின் புகைப்படங்களையும் கண்டிருப்பார்கள்.

பாரதியாரின் இந்த ஆசை அவர் உயிரோடிருக்கும் வரை நிறைவேற வில்லை. அவர் மறைந்து 35 ஆண்டுகள் ஆனபிறகும் நிறைவேறவில்லை. ஆனால் 36வது ஆண்டில், பாரதியார் எதிர்பார்த்ததற்கும் மேலாக அதாவது 1-50 விலையில் அவரது கவிதைகளே யெல்லாம் ஒன்று சேர்த்து 612 பக்கங்களில் வெளியிட்டார் சக்தி திரு.வை. கோவிந்தன் அவர்கள். இந்த மலிவுப் பதிப்பும் இதைத் தொடர்ந்து வெளிவந்த பல மலிவுப் பதிப்புக்களும் 'பாரதியின் நான்கள்' என்ற பகுதியிலே இருந்தன.

பாரதியாரின் படைப்புக்களே ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் பலர் மொழி பெயர்த்துள்ளனர். சமீபத்திலே சாகித்ய அகடாமியார் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென் மொழிகளில் வெளியிட்டுள்ளனர். இவற்றை யெல்லாம், பிறமொழிகளில் பாரதி என்ற பகுதியில் காண முடிந்தது. இன்னும் பாரதியார் பற்றி ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பெற்ற நூல்கள் பல இருந்தன. இவற்றில் பாரதி விழாவை யொட்டி தி. ஜ.ர. எழுதி, ஒவியர் ரெஜாக் படம் போட்டு, மதுரையப்பா பிரதர்ஸார் வெளியிட்ட 'பாப்புக் குப் பாரதி' என்னும் வண்ணப் படங்கள் கொண்ட புத்தகத்தைப்பார்த்து மகிழாதவரே இல்லை என்னலாம்.

இப் புத்தகத்திற்காக வரைந்த அசல் படங்கள் 28-ம் 'பாரதி வாழ்க்கைச் சித்திரம்' என்ற தலைப்பில் தனிப் பகுதியாகக் காட்சியில் வைக்கப் பெற்றிருந்தன. அவற்றை ஒரு முறை பார்த்தாலே பாரதியார் வாழ்க்கை மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்து விடும். காரணம் கவர்ச்சியான படங்களும், அவற்றிற்குக் கொடுக்கப் பட்டிருந்த சுருக்கமான—ஆனால், தெளிவான விளக் கங்களுமேயாகும்.


பாரதியார் கவிஞராகவும், எழுத்தாளராகவும் மட்டுமே விளங்கவில்லை; பத்திரிகாசிரியராகவும் விளங் கினர் என்பதை அறியும்போது, அவர் எந்த எந்தப் பத்திரிகைகளை நடத்தினர் என்று தெரிந்துகொள்ள ஆசை எழுவது இயற்கையே. 'சக்ரவர்த்தினி' (மாத இதழ்), 'விஜயா' (தினசரி), 'இந்தியா' (வார இதழ்), 'ஞானபோதம்' (வார இதழ்), 'கர்மயோகி' (மாத இதழ்) ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளையும், 'பால பாரதம்' என்ற ஆங்கில வார இதழையும் பாரதியார் ஆசிரியராயிருந்து நடத்தினர்; 'சுதேசமித்திர'னில் உதவியாசிரியராய்ப் பணிபுரிந்தார். ஆனாலும், சென்னையிலும், புதுவையிலும் அவர் நடத்திய 'இந்தியா' பத்திரிகையின் சில பக்கங்களையும், அவரது எழுத்தோவியங்கள் கொண்ட 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் பழைய இதழ்களையுமே காட்சியில் காண முடிந்தது.

கேலிச்சித்திரங்கள் போடத் தொடங்கிய பத்திரிகைகளில் 'இந்தியா' முக்கியமானது. அக்காலத்தில் கேலிச்சித்திரங்களை அட்டையில் வெளியிட்டது. உள்ளே 'கேலிச்சித்திர விளக்க'மும் எழுதப் பட்டிருப்பதையும், உள்ளூர் 'முக்காலணு' 'வெளியூர் ஒரணு என்ற அப்பத்திரிகை முகப்பிலே'யில் குறிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டி அந்நாள் பத்திரிகை உலகத்தை நினைவு கூர்ந்தனர் சிலர். சுதேசமித்திரன் பழைய இதழ் ஒன்றில், வ.உ.சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதிய கட்டுரைக்கு மத்தியில் பாரதியாரின் 'காலனுக்கு உரைத்தல்' என்ற பாடல் வெளியாகி யிருப்பதைக் கண்டு பலர் வியப்புற்றனர்.



சென்னையில் 'இந்தியா' பத்திரிகை நடந்தபோது அதன் அலுவலகம் பிரபட்வே யிலுள்ள ஒரு கட்டிடத்தில் இருந்தது. அக்கட்டிடத்தின் புகைப்படத்தைக் காட்சியிலே கண்ட ஒருவர் "அடடே, இப்போது இது தோல் கிடங்காக அல்லவா இருக்கிறது!" என்றார்.

இக் கட்டிடத்தைப் பற்றிக் கூறியதும், பாரதியார் வாழ்ந்த கட்டிடங்களின் நினைவு வருகிறது. ஆம், பாரதியார், வாழ்ந்த இல்லங்களின் புகைப்படங்களில் நான்கு அங்கே இருந்தன. எட்டயபுரத்திலே பாரதியார் அவதரித்த இல்லம், திருவல்லிக்கேணியிலே பாரதியார் அமரரான இல்லம், கடையத்திலும், புதுச்சேரியிலும் 'எமக்குத் தொழில் கவிதை' எனக் கூறிக் 'கவித் தொழில்' நடத்திவந்த இல்லங்கள் ஆகியவற்றைப் பார்த்தோரில் சிலராவது இவ்வீடுகள் என்ன தவம் செய்தனவோ!'' என்று கூடித்தானிருப்பர்.



'பாரதி பிறந்த அறை இதுதான்' என்று ஓர் அறையைச் சுட்டிக் காட்டிக்கொண்டு, பாரதியரின் மாமா சாம்பசிவ ஐயர் நிற்கிறார் எட்டயபுரப்படத்திலே. திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில்



தெருவிலுள்ள இவ்வீட்டில்தான் பாரதியார் அமரரானார்' என்ற குறிப்பைப் பார்த்த ஒருவர், டி.பி. கோயில் தெருவில் சிலப்பாக ஒரு மாடிவீடு இருக்கிறதே, அதுதானே!'' என்று கேட்டார்.

''ஆமாம் அதுவேதான் அதை அரசாங்கமே விலைக்கு வாங்கி பாரதி நினைவுச் சின்னமாக்கக் கூடாதோ! என்றர் மற்றிருவர்.

''எல்லாம் கூடிய சீக்கிரம் நடக்கும். அரசாங்கமே இதற்கு முயற்சி எடுத்து வருவதாகக் கேள்விப்பட்டேன். தாகூர் அகடாமியைப் போல, பாரதி அகடமி ஒன்றை ஆரம்பித்து, அதிலே இந்தக்காட்சிப் பொருள் களையெல்லாம் நிரந்தரக் காட்சியாக வைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! வெளிநாடுகளிலிருந்து வருபவர்களெல்லாம் பார்த்து மகிழ்வார்களே!'' என்றர் இன்னொருவர்.

சென்னையில் நினைவுச் சின்னம் இல்லையே!' என்று வருந்தியோருக்கு எட்டயபுரத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் பாரதி மண்டபத்தின் புகைப்படம் ஆறுதல் கூறுவதுபோல் அங்கே இருந்தது. ஒரு கட்டுரை எழுதி, அதன் மூலம் நாற்பதினாயிரத்துக்கும் அதிகமாக நிதி திரட்டி எட்டயபுரத்தில் மணி மண்டபம் எழுப்பிய 'கல்கி' அவர்களையும், ராஜாஜி அவர்கள் அம்மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு திறந்து வைத்ததும், சிறப்பித்த காட்சிகளையும் புகைப்படங்களிலேயே பலர் கண்டு மகிழ்ந்தனர். அதே சமயம் ''எழுத்துக்கு இத்தகைய சக்தி இருக்கிறதா!'' என்று மூக்கின் மேல் விரலை வைத்துக் கூறினர் சிலர். ''பாரத்தீர்களா எழுத்தின் சக்தியை என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையோடு கூறிக் கொண்டனர் சில எழுத்தாளர்கள்!



காட்சியில், பலவகைத் தோற்றங்களில் பாரதியாரையும் அவரது குடும்பத்தாரையும் கொண்ட புகைப்படங்களுடன், பாரதியாருடன் பழகிய சிலர், பாரதியார் போற்றிய 'பெரியோர்' என்ற இருபகுதிகளும் எல்லோருடைய கருத்தையும் கவர்ந்தன. பாரதியாருடன் பழகிய அரவிந்தர், வ.வெ.சு. ஐயர், சுப்பிரமணிய சிவா, சேரமகந்தர பாரதி, வ.ரா. பரலி சு. நெல்லையப்பர், பாரதிதாசன் போன்ற சுமார் 25 அன்பர்களின் புகைப்படங்களும், அவர்களுக்கும் பாரதியாருக்கும் உள்ள தொடர்பு பற்றிய குறிப்புக்களும் இருந்தன பாரதியார் தம் கவிதைகளால் போற்றிப் புகழ்ந்த மகாத்மா காந்தி, சகோதரி நிவேதிதா, திலகர், சிதம்பரனார், நொளரோஜி' டாக்டர் உ.வெ. சாமிநாதையர் போன்ற பல பெரியோரின் படங்களும் அவர்களைக் குறிக்கும் கவி வாக்குகளும் காட்சிக்கு அணிபாய் விளங்கின.



டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் தபால் - தந்தி அமைச்சராக இருந்தபோது (11—9—60-ல்) வெளியிட்ட பாரதி தபால் தலையின் பெரிய அளவு புகைப்படமும், முதல் நாள் தபால் உறையும், 'தபால் தலையில் பாரதி' என்று மகுடமிட்ட இடத்தில் வைக்கப்பெற்றிருந்தன.

டி. கே. எஸ். சகோதரர்கள் தங்களது 'கப்பலோட்டிய தமிழன்' நாடகத்தில் பாரதியார் வரும் பல காட்சிகளை அளித்துத் தமிழ் மக்களை மகிழ்வித்துள்ளனர். அதேபோல், பாரதியாரது 'பாஞ்சாலி சபதத்தை'யும், 'குயில் பாட்'டையும் திரு. எஸ். வி. சகஸ்ர நாமம் அவர்கள் தமது சேவா ஸ்டேஜ் மூலம் சிறப்பான கவித்தை நாடகங்களாக மேடையேற்றி இருக்கிறார்கள். இம்மூன்று நாடகங்களிலும் காணப்பெறும் சில காட்சிகளின் புகைப்படங்கள் 'கலை உலகில் கவிஞர்' என்ற பகுதியில் கண்ணுக்கு விருந்தாக அமைந்திருந்தன.

இன்னொரு முக்கியமான பகுதியைப் பற்றிக் கூற வேண்டும். அதுதான் 'கவிச் சொல்லே நீயே வாழ்த்தும் காட்சிகள்' என்பது. சுதந்திர பாரதத்தில் நாம் காணும் எத்தனை எத்தனையோ காட்சிகள் பாரதி வாக்குகளை நினைவூட்டுகின்றன. நாடு வளம்பெற்றுவரும் நற் காட்சிகளைக் காட்டும் பல புகைப்படங்களைச் செய்தித் துறையினிடமிருந்து பெற்றோம், அவை ஒவ்வொன்றுக்கும் மிகவும் பொருத்தமான பாரதி வாக்குகளைக் கொடுத்து எல்லோரையும் வியப்புறச் செய்துவிட்டார் திரு. தம்பி சீனிவாசன் அவர்கள்.

காவியம் தீட்டிய பாரதியாருக்கு ஓவியம் தீட்டி அஞ்சலி செய்யத் தமிழகத்து ஓவியர் பலர் முன்வந்தது காட்சி சிறக்கப் பெரிதும் உதவியது. 'வெற்றியே அன்றி வேறெதும் படியேலேம், செற்றெரி மிலேச்சரைத் தீர்த்திட வம்மின்' என் சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்குக் கூறும் வீர வாசகத்திற்கு ஏற்ப ஓவியர் மாதவன் பிள்ளை தீட்டியிருந்த வண்ண ஓவியம் நாட்டுப் பற்றையும் வீர உணர்ச்சியையும் ஒவ்வொருவருக்கும் ஊட்டும் என்பதில் ஐயமில்லை. பாரதியாரின் கவிதைக் காட்சிகளைப் பின்னணியாகக்கொண்டு, திரு. ஆர்யாவும், 'கண்ணன் - என் அரசன்' பாடலுக்கு ஏற்ப திரு. கோபுலுவும், பாரதியார் வர்ணிக்கும் 'எங்கள் அன்னை'யை திரு. சாமாவும், 'எங்கிருந்தோ வந்தான்', 'பாரதியின் வீர முழக்கம்' என்னும் இரு ஓவியங்களை இணை பிரியா ஓவிய நண்பர்களாகிய ஸாமி, சங்கர் இருவரும் தீட்டியிருந்தனர். இன்னும், உமாபதி, சுபமணி தீபா, நடனம், சுதர்ஸன், வேலு முதலியோரும் தங்கள் கைவண்ணத்தால் காட்சி சிறப்புறப் பெரிதும் உதவினர்.

காட்சியிலே, காகிதத்தால் செய்த பாரதியாரின் மார்பளவு உருவம், 'தாயின் மணிக்கொடி' பாடலே அளக்கும் பெரும்மைக் காட்சி முதலியனவும் இடம் பெற்றிருந்தன. ஆனாலும், அவை சோபிக்க வில்லில.

பாரதியாரின் 81-வது பிறந்த நாளே பொட்டி நடத்தப்பெற்ற காட்சியாதலால் அவரது மணிமொழிகளில் 81ஐத் தேர்ந்தெடுத்து; அவை கருத்தைக் கவர்வது துடன் கண்ணைக் கவரும் வகையிலும் வைக்கப்பட்டிருந்தன.

டிசம்பர் 8-ஆம் தேதி காலை நம் முதலமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்களால் துவக்கிவைக்கப் பெற்ற இக்காட்சி டிசம்பர் 16 வரை நடைபெற்றது. தினமும் ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்களும், பொதுமக்களும் வந்து, காட்சியைக் கண்டு களித்தனர்.

ஆறே வரத்தில் ஏற்பாடு செய்யப்பெற்ற இக்காட்சி இந்த அளவில் வெற்றி பெற்றதற்குக் காரணமாய் நின்றுழைத்தோர் பலர் அவர்களில் முக்கியமானவர் திரு. ரா. அ. பத்மநாபன் அவர்களாகும். பாரதி பற்றிய காட்சிப் பொருள்களையெல்லாம் பல்லாண்டுகளாகச் சேகரித்து, அவற்றை தம் மனைவியார், குழந்தைகள் உதவியுடன் காட்சியாகப் பல இடங்களில் நடத்தியவர் அவர் என்பது பலரும் அறிந்ததே. அவர் தம்மிடமிருந்த பொருள்களை யெல்லாம் மனமுவந்து கொடுத்துதவியதால் கண்காட்சிக் குழுவின் வேலை முக்கால் பங்குக்கு மேல் குறைந்துவிட்டது.



ஊக்கமும் உற்சாகமுமிக்க இலக்கியத் தொண்டர் எம்பி சீனிவாசன். பயனுள்ள பல யோசனைகள் கூறி பங்களுக்கு வழிகாட்டியாயிருந்த திரு பரலி நெல்லையப்பர், 'இம்' மென்னும் முன்னே உதவி என கண்காட்சிக் குழுவினருக்கு அன்போடும் ஆதரவோடும் பல வகையிலும் உதவிவந்த சென்னை அரசாங்க செய்தித் துறையினர், கதர் இலாகா நண்பர்கள், காட்சிக்கு வேண்டிய முன்னேற்பாடுகளை யெல்லாம் உடனிருந்து உதவிய செயலாளர் திரு. அகிலன், துணைச் செயலாளர் திரு. கருப்பையா, தங்கள் வெளியீடுகளை அனுப்பியுதவிய பதிப்பாளர்கள் காட்சிக்கு தேவையான புகைப்படங்களையும் பிற பொருள்களையும் கொடுத்துதவிய பேரன்பர்கள் ஆகியர் அனைவருக்கும் இவ்வெற்றியில் பங்கு உண்டு. அவர்கள் விழாக்குழுவின் நன்றிக்கு உரியவர்கள்.



பாரதிக்காக கல்கத்தாவில் நீட்டிய அமரர் 'கல்கி' அவர்கள்

காட்சியில் இடம் பெற்ற பொருள்கள் அனைத்தும் நிரந்தரக் காட்சியாய் விளங்க அரசினர் முயன்று வருகின்றனர். இச் சீரிய முயற்சி சிறந்து மிக்கோங்கப் பிரார்த்திப் போமாக!

சிறப்பு மலர்

அமரகவி

சுப்ரமணிய பாரதியாரின்

81-வது பிறந்ததின விழா

9—12—62

முதல்நாள் நிகழ்ச்சி

★

ராஜாஜி மண்டபம்

விழா ஆரம்பம்.

கண்காட்சித் திறப்பு.

இந்திய மொழிகளில் தேசியம்.

(கருத்தரங்கு)

பரிசு வழங்குதல்.

மாலையில் மாபெரும் ஊர்வலம்

★

கடற்கரை திலகர் கட்டடத்தில்

முதலமைச்சர் தலைமையில்

பொதுக்கூட்டம்



செயலாளர் அகில இந்தியாவை கூறுகிறார்.

வரவேற்புரை

கனம் எம். பக்தவத்சலம் அவர்கள்
விழாக் குழுத் தலைவர்.

★

டாக்டர் ராமஸ்வாமி ஐயர் அவர்களே! நிஜலிங்கப்பா அவர்களே! புலவர் பெரு மக்களே! பெரியோர்களே! நண்பர்களே!

இந்த விழாவில் கலந்து கொண்டு, இதற்குச் சிறப்பளிக்க பல ஊர்களிலிருந்து வந்திருக்கிற உங்கள் எல்லோருக்கும் மனப்பூர்வமான நல்வரவு கூறுகிறேன். என்னுடைய நன்றியையும், பாராட்டு தல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். கவி சுப்பிரமண்ய பாரதியார் தமிழ் நாட்டின் சிறந்த புலவர் மட்டுமல்ல; அவர் சிறந்த தேசிய கவி. தேசிய கவி மட்டுமல்ல. உலக மகா கவி. பாரதியார் தமிழில் பல கவிதைகளே இயற்றியிருக்கிறார். பல கருத்துக்களே நமக்கு அவர்கள் புகட்டியிருக்கிறார்கள் என்றாலும், நமக்கு அவர் ஒரு புதிய உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்.

பாரதியாரைப் பாரத நாடு பூராவும் அறியும். பாரத நாட்டின் மேன்மை பற்றி நமக்கு நினைவூறுத்தினர் பாரதியார். பாரத நாட்டை பாதுகாக்க வேண்டியதின் பொருட்டு, பாரத நாட்டு மக்களின் நல்வாழ்க்கை நிலையாக அமைக்கும் பொருட்டு அவர் பாடியிருக்கிறார். மக்கள் எல்லோரும் இன்புற்று வாழக் கூடிய வழியைத்தான் பாரதி வகுத்துக் கொடுத்திருக்கிறார். தனது ஒப்புயர்வற்ற கவிதைகள் மூலம் எனினும், மகாகவி தாகூரைப்போல் உலகம் அவ்வளவு தூரம் பாரதியாரை அறியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்களைத்தான் நான் கூறுவேன். ஒன்று, மகாகவி தாகூர் தம்முடைய தாய்மொழியில் கவிதைகளே இயற்றி அதை ஆங்கிலத்தில் அவரே மொழி பெயர்த்து வைத்தார். ஆகவே உலகம் தாகூரை நன்றாக அறிந்திருக்கிறது.

ஆனால் கவி சுப்பிரமண்ய பாரதி தம்முடைய தாய் மொழியான தமிழிலேதான் கவிதை இசைத்தார்கள். கொஞ்ச காலமாகத்தான் வேறு மொழிகளில் பாரதி பாடல்கள் இப்பொழுது மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன. இன்று இங்கு பல மாநிலங்களில் இருந்து பல மொழிகளில் தேர்ந்த புலவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களும், மற்ற வர்களும் மகாகவி பாரதியின் கவிதைகளின் அருமையை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். மற்றவர்களும் இப்போது உணர முனைந்திருக்கிறார்கள். எனினும் உலகத்திற்கு பாரதியைப் பற்றி முழுமையும் தெரியாது. ஓரளவிற்கு, கொஞ்சம்தான் தெரியும்.

இன்று நாம் அவர்களுடைய 81 வது பிறந்த தினத்தை சிறந்த விழாவாக கொண்டாடுவதன் மூலம், கவி பாரதியார் ஒரு தேசியக் கவி மட்டுமல்ல, உலக மகாகவி, உலகத்திற்கே சிறந்த வழி காட்டியவர் என்பதை நாடும், உலகமும் நன்கு உணர்ந்து கொள்ளும் என்று, நான் நம்புகிறேன். மற்றொரு காரணம், தாகூரைப்போல் பாரதியார் உலகத்திற்கு போதிய அளவு தெரியாததற்குக் காரணம், 39 வயதுக்குள் அவர் நம்மை விட்டு மறைந்து விட்டதுமாகும். அவர் இன்னும்



அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் வரவேற்புரையாற்றிக் கொண்டிருக்கிறார். டாக்டர் டி.பி. ராமஸ்வாமி அய்யரும் திரு நிஜலிங்கப்பாவும் அருகில் அமர்ந்துள்ளனர்.

சிறிது நாள் இருந்து, இந்த 81 வது வயது வரை இருந்திருந்தால் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் இன்னும் உணர்ச்சியைப் பெருக்கியிருப்பதோடு பாரதியார் உலக மகாகவி என்பதை உலகம் நன்குதத் தெரிந்து கொண்டிருக்கும். பாரதியின் பெருமையை தமிழ் மக்களாகிய நாம் நன்குணர்ந்துள்ளபடியால் இப்பொழுதிருக்கிற நெருக்கடியான நிலையில் நாம் இன்று பாரதி விழாவை கொண்டாடுவது மிகவும் பொருத்தமானது. இந்த 81 வது பிறந்த தினத்தை சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று முதன் முதலாக அண்த்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தார் யோசனை கூறினர்கள். சென்னை அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டது. அதை ஏற்றுக் கொண்டு மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று, எழுத்தாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்று, புலவர்கள் மற்றவர்களின் ஆதரவைப் பெற்று சீரிய வகையில் கொண்டாட வேண்டுமென்று முற்பட்டோம். அப்பொழுது நம் முடைய முக்கியமான லட்சியம் நாட்டின் ஒருமைப்பாடு. அதைப் பரப்புவதற்கு பாரதி விழாவைக் கொண்டாடுவதை விட வேறு சிறந்த வழியுங்காது என்று தெளிவாக உணர்ந்தோம்.

அன்றே பாரதி நம்மிடையே ஒருமைப்பாடு உணர்ச்சியை அடையச் செய்தார். அந்த உணர்ச்சியோடுதான் நாம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சுதந்திரம் பெற்றோம். அந்த உணர்ச்சி இப்போதும் வேண்டியிருக்கிறது. அதற்கு, பாரதி விழா கொண்டாடுவதை விட வேறு சிறந்தவழி ஒன்றுமில்லை.

தொடர்ந்து சீனுக்காரர்கள் ஆக்கிரமிப்பால் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டது. அப்போதும் யோசித்தோம். இந்த நெருக்கடியான நிலையில் மக்களுக்கு புதிய ஒரு உணர்ச்சியை ஏற்படுத்தவும் உள்ள உணர்ச்சியை வளர்ப்பதற்கும் (அதை நல்வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கும் பாரதி விழாக் கொண்டாடுவதை விட வேறு சிறந்த வழியில்லை என்பதை உறுதியாக உணர்ந்து, முதலில் யோசித்தது போல் பாரதி விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும்- (சிறப்பு என்ற்ல் இப்போதுள்ள நிலைமைக்கேற்றவாறு சிக்கனமாக ஆனல் பயனுள்ள முறையில் மக்களிடையே உணர்ச்சியை வளர்க்கும் வகையில்) என்று ஏற்பாடு செய்ய முற்பட்டோம்.

எனவேதான், விழா ஏற்பாடுகளில் சம்பிரதாயமாக நம்முடைய பெரும் தலைவர்கள், ஒப்புயர்வற்ற ஜனநாயகி அவர்கள், நமது பிரதம மந்திரி அவர்கள் இவர்கள் எல்லோருக்கும் இம்மாதிரி விழா நடக்கிறது என்று தெரிவித்து அவர்கள் ஆசிச் செய்திகள் வாங்கி அவைகளைப் படிப்பது வழக்கம். அவர்களுக்கு இந்தத் தொல்லை கொடுக்க வேண்டாம் என்று இவற்றையெல்லாம் கூட நாம் தவிர்த்தோம்.

ஆனல் வேறு மொழிகளில் உள்ள சிறந்த புலவர்கள், வேறு மாநிலங்களில் உள்ள எழுத்தாளர்கள் இவர்கள் இந்த விழாவில் கலந்து கொள்வது நாட்டின் ஒருமைப்பாட்டை நாம் மேலும் உணர்ந்து கொள்ளப் பயன்படுமென்றும், அந்த ஒருமைபாட்டு உணர்ச்சியோடு இன்ற நாட்டில் ஏற்பட்டுக்கிற ஆபத்தை விளக்க ஒருமுகமாகப் பாடுபட இது அவசியந்தான் என்றும் கருதி நாம், அவர்களையெல்லாம் அழைத்தோம். அவர்களும் மனமுவந்து தங்கள் சொந்த அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் இங்கு வந்து இந்த விழாவிற்குச் சிறப்பளிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வெளி ஊர்களில் இருந்து வந்திருக்கிறவர்கள். அவர்களே, இப்போதுள்ள ஒரு நிலைமையில் போதிய அளவு நாம் உபசரிக்க முடியாததற்கு நான் வருந்துகிறேன். ஆனல் அவர்கள் நிலையை உணர்ந்து தங்களது அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் கருத்தருங்கு, மற்ற வற்றை சிறப்பாக நடத்தி இந்த விழாவைச் சிறப்பிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

பொதுவாக இம்மாதிரி விழாக்கள் கொண்டாடும்போது சிக்கனம் வேண்டும். இந்த நெருக்கடியான நேரத்தில் மட்டுமல்ல, சாதாரணக் காலத்தில் கூட வேண்டும். ஆனல் ஒன்றில் மட்டும் சிக்கனம் கூடாது. உணர்ச்சியில் சிக்கனம் கூடாது. எப்போதும் உணர்ச்சி ஏராளமாக இருக்க வேண்டும். சில்லறைப் பூசல்களில், பயித்தியக்காரத்தனமான சண்டைகளில், கட்சிச் சண்டைகளில் எல்லாம் ஈடுபட்டு இதுவரை நம் கவனத்தை சிதறடித்த போதிலும் இன்று நம்மிடையே போதிய அளவு ஒரு நல்ல உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்று நாடெங்கும் மக்களிடையே காணப்படும் நல் உணர்ச்சிக்கு அன்றே வித்திட்டவர் கவி பாரதியார்.

40 ஆண்டுகளுக்கு முன்பே அவர் அதற்கு வித்திட்டார். பாரதியின் காலத்திலேயே அது செடியாகி வளர்ந்தது. அதற்கு, தண்ணீர் விட்டு வளர்ப்பது மட்டுமல்ல கண்ணீர் விட்டும் வளர்த்தோம் என்று சொன்னர்கள். கண்ணீர் விட்டு வளர்த்த செடி அப்போதே பூக்க ஆரம்பித்தது. அப்போதே அது பலன் அளிக்க ஆரம்பித்தது. அந்த சுதந்திரப் பழத்தைப் பெற்றோம். அந்த சுதந்திரப்பழம் ஒருமுறை வந்து விட்டது. மேலும் அந்த மரம் வேண்டாமென்று யாராவது வெட்டி விடுவார்களா? அந்த மரத்தை நாம் மேலும் வளர்க்க வேண்டும். பாரதி வித்திட்ட அந்தச் செடி மரமாகியிருக்கிறது. அந்த மரத்தை நாம் மேலும் பாதுகாத்துப் பயன் பெறவேண்டும், அந்த வகையில் நாம் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கிறது.

இந்த நெருக்கடியான நேரத்தில் நாம் பாரதியாரைப் பற்றி சிந்தனை செய்கிறோம் என்றால், இன்று நாம் பாரதியாரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்கிறோம் என்றல், முதன்முதலாக நாம் பாரதியாரைத் தெரிந்து கொண்டது அவரது தேசீயப் பாடல்களின் சக்தியால்தான். மும்முரமாகப் தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாளில் நமக்கு உணர்ச்சியும் தேசீயப் பற்றும், தேசீய ஆவேசமும்

வேண்டியிருந்தன. அதை நமக்கு ஊட்டியவர் பாரதி.

நம் பக்கத்திலுள்ள ஆந்திரர்கள், கேரள நாட்டு மக்கள், கர்நாடக நாட்டு மக்கள் நம்மோடு இருந்தவர்கள் – அவர்களுக்கும் நமக்கும் தொடர்பு அன்றும் உண்டு, இன்றும் உண்டு. ஆகவே, மைசூர் முதல் அமைச்சர் அவர்கள் இன்று இங்கு இவ்விழாவைத் துவக்கி வைக்க வந்திருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு அந்த ராஜ்யத்தில் வேலே இல்லாமல் இல்லே – நெருக்கடியான நிலே எல்லோருக்கும்தான் – இருந்தாலும் அதைச் சிறிது தள்ளி வைத்து விட்டு நமது அமைப்பை ஏற்றுக் கொண்டு இந்த விழாவைத் துவக்கி வைப்பதற்காக வந்திருக்கிறார்கள். அதேபோல் ஆந்திர முதலமைச்சர் அவர்களும் ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருக்கிறார்கள், சிக்கிரத்தில் வந்து விடுவார்கள். நமது முதலமைச்சர் அவர்களும் நேற்று வரை திருநெல்வேலியில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு இன்று காலே மதுரையில் இருந்து புறப்பட்டு இங்கு இவ்விழாவில் கலந்து கொள்ள வந்து கொண்டிருக்கிறார். தென் மண்டலத்தி லுள்ள பிராந்தியங்களில் இருப்பவர்கள் வெவ்வேறு மொழிகள் பேசுகிறார்கள் என்றால் அது வேறு இது வேறு என்று இல்லே. அன்று பாரதி சொன்னபடி நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பாடு பட்டு வருகிறோம். பக்கத்திலுள்ள பிராந்திய மக்களுக்கும் நம் சகாக்களுக்கும் பாரதியின் அருமை பெருமை நன்கு தெரியும். பாரதியின் தேசிய உணர்ச்சி அவர்களுக்கும் பயன் பட்டிருக்கின்றது. அவர்கள் நடத்திய சுதந்திரப் போராட்டத்திலும் அது பெரிதும் பயன்பட்டது.

ஆக, இன்று மக்களிடையே காண்கிற அற்புத மான உணர்ச்சிக்கு, உற்சாக உணர்ச்சிக்கு வித்திட்டவர் பாரதி- அன்று அவர்கள் வித்திட்ட உணர்ச்சியை நாம் வளர்க்க வேண்டியிருக்கிறது. அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்கு பாரதி தீண்டாக நிற்கிறார். அன்றே அவர் போர் முரசு கொட்டினார்.

(இன்று நீங்கள் இது குறித்த பொருள்காட்சியைப் பார்ப்பீர்கள்.)

அதை நாம் இன்றும் செய்ய வேண்டியிருக்கிறது. அன்று சத்திரபதி சிவாஜி தம் தூதுப்புகளுக்குக் கூறிய வீர கர்ஜனைகள் இன்கு வரையப் பட்டிருக்கிறது. பாரதியின் சிறந்த கவிதைகள் இங்கு வரையப் பட்டிருக்கிறது. பாரதியின் சிறந்த கவிதைகள் இன்றும் நமக்கு பயன்படுகின்றன. நமது பிரதம மந்திரி அவர்கள் நமது வீர தீர ஜவான்களிடம் அவ்வண்ணம் கர்ஜனே புரிகிறார்கள், அவர்களுக்கு வேண்டிய ஆதரவு அளிக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கிறார்கள். "இங்குள்ள நிலேயைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறாயா, பயித்தியக்காரத்தனமாக தெரியாமல் காலே வைத்து விட்டாய்" என்று சீனர்களேப் பார்த்துக் கேட்பதுபோல் அன்றே சொல்லியிருக்கிறார் பாரதி. பாரதியின் பாடலில் இருந்து, அவரது கவிதைகளில் இருந்து அவர் எத்தகைய தீர்க்க தரிசி என்று நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள். எவ்வளவு பெரிய தீர்க்க தரிசி.

இன்றைய நெருக்கடியான நிலேயை எப்படி சமாளிப்பது என்பதைப் பற்றி பாரதி அன்றே சொல்லியிருக்கிறார். "ஆயுதம் செய்வோம், நல்ல காரிதம் செய்வோம்" என்று பாடியிருக்கிறார். இரண்டும் இன்று வேண்டியிருக்கிறது. ஆயுதம் வேண்டியிருக்கிறது. காரிதமும் ஏராளமாக வேண்டும். எல்லோரும் படித்துக் கொண்டு வருகிறார்கள்.

பத்து ஆண்டுகளில் எல்லோரும் படித்திருப்பார்கள். ஆகவே நமக்கு காரிதம் வேண்டும். இன்னும் காரிதத்திற்கு நாம் அன்னிய நாடுகளே எதிர் பார்த்துக் கொண்டிருக்கக்கூடாது. ஆகவே காரிதம் செய்ய நாம் மேலும் முற்படுவோம். அதற்கு மூலப்பொருள் வேண்டும். ஒரு வார்த்திற்கு முன்பு கூட சுவீடன் நாட்டிலுள்ள ஒரு நிபுணர் என்னிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார். காரிதம் செய்வதில் நிபுணர், அவர், ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்த மூலப்பொருளே, அம்மரங்களே நம் காடுகளில் எப்படி வைத்து வளர்ப்பது என்பதைப் பற்றி யெல்லாம் பேசிக்கொண்டு இருந்தார்கள். மத்திய அரசாங்க அழைப்பின் மூலம் வந்திருக்கிறார். ஆக, ஆயுதம் செய்வோம், நல்ல காரிதம் செய்வோம் என்று சொன்ன பாரதி எவ்வளவு பெரிய தீர்க்க தரிசி.

அடுத்தபடியாக, காவியம் செய்வோம் நல்ல காடு வளர்ப்போம் என்று கூறியிருக்கிறார்கள். காவியமும் வேண்டும். இங்கு இன்று புலவர் பெருமக்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளக் கூடியிருக்கிறார்கள்.

பாரதியார் பிற மொழிகளே வெறுக்கவில்லே. பாரதியாருக்குப்பல மொழிகளில் அனுபவம் உண்டு. தெலுங்கு தெரியும், கன்னடம் தெரியும், மலேயாளம் சமஸ்கிருதம், பிரெஞ்சு இம்மாதிரியான பல மொழிகளேக் கற்றுயர்ந்தவர். அதனால்தான் துணிவோடும், தெளிவோடும், அனுபவத்தோடும் உலகத்தாருக்கு, தமிழ் மொழியில் சிறப்பைப் பறை சாற்றினார். செந்தமிழ்நாட்டைப்பற்றி சொல்லும்போது அளவு கடந்த ஆவேசம் கொள்கிறார்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே..... என்றும்,

பாரத நாட்டைப்பற்றி "மன்னும் இமயமலே எங்கள் மலேயே....." என்றும் பாடியிருக்கிறார். செந்தமிழ்நாடென்று சொல்லும்போது, காதில் தேன் வந்து பாய்கிறது, அது மட்டுமல்ல. இவை களே எல்லாம் "சுந்தர தெலுங்கில் பாட்டிசைத்து" உணர்ந்து அனுபவிக்க வேண்டுகின்றர். அத்தகைய பரந்த மனப்பான்மையை உணர்த்தியுள்

னார். மன்னும் இமயமலே எங்கள் மலே என்று உல கத்தாருக்குப் பறை சாற்றியிருக்கிறார். இதன் மீது யாரும் அடி எடுத்து வைக்க வரிமையில்லே. இப் போது சீனர் ஏதோ அடி எடுத்து வைத்திருக்கிறார் கள் என்றலும் சீக்கிரத்திலே அவர்கள் விரட்டப்படு வார்கள் என்பது மட்டும் உறுதி. அதற்கு மகா கவி பாரதியாருடைய அருள் நமக்குப் பரிபூர்ணமாக உண்டு. அதன் அடிப்படையிலே தாம் இப்போது ஆடப்படிருக்கிறோம்.

தமிழ் இலக்கியத்தில் பாரதியார் அரும்பெரும் சாதனைகள் செய்துள்ளார்கள். நமக்குப் புதிய நடையை அளித்திருக்கிறார். கவிதை, வசனம் எல்லாவற்றையும் பாமர மக்கள் எளிதில் புரிந்து கொள்ளுகின்ற முறையில் நமக்கு இயற்றித் தந்துள் ளார். பெரிய புலவர்கள் எல்லாம் கூட, ஆழ்வார் கள்—நாயன்மார்கள், இவர்கள் எல்லாம் பாமர மக்கள் படித்து, அனுபவித்து, கைகொள்கின்ற முறையில் பாடல்களே அமைத்திருக்கின்றார்கள். அதே மாதிரி தான் பாரதியாருடைய பாட்டுகள் எல்லாம், சிறந்த முறையில், ஒப்புயர்வற்ற முறை யில், பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளன. அதோடு மக் கள் வயாராப்பாடி உணர்ச்சி ததும்ப அனுபவிக்கக் கூடிய முறையில் பாடியிருக்கிறார். தமிழ் மொழிக்கு மட்டுமல்ல, பிற மொழிகளுக்கும் கூட வழிகாட்டி யாக இருக்கின்றன பாரதியாருடைய பாட்டுகள். இதை மற்ற மொழியிலுள்ள புலவர்கள் உணர்ந் திருக்கிறார்கள்.

மேலும், நம்முடைய மக்களில் ஒருசிலர், துரோக மனப்பான்மையோடு இருக்கிறார்கள். அவர்களே எல்லாம் நிர்தாட்சணியமின்றி கண்டித் திருக்கிறார். பாரதியார் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே மகா கவியாக இருந்திருக்கிறார். தமிழ் இலக்கியத்துக்குச் சிறந்த கவிஞராக விளங்கி னார். அவர்களது 81-வது பிறந்தநாள் விழா நடை பெறுகின்ற இன்று பல கருத்தரங்குகள் நடை பெற இருக்கின்றன. பாரதியாருடைய அருமை பெருமை களேப்பற்றி எல்லாம் பலர் எடுத்துச்சொல்வார்கள்.

மற்றவர்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும், எப்படி திறமையோடு வாழ்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கெல்லாம் பாரதி பாடல்கள் வழிகாட்டும். பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, மற் றும் புதிய ஆத்திசூடி—இதனுல் பழைய ஆத்திச் சூடி தேவையில்லே என்று அர்த்தமல்ல— இன் றுள்ள நிலேமைக்கு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு புதிய ஆத்திசூடி வழிகாட்டுகிறது. வாழ்வுக்கு எப்படி சிறப்பு அளிப்பது என்பதற்கு வழிகாட்டியாக பல கவிதைகளே பாரதியார் அமைத்திருக்கிறார்கள்.

மேலும், இவ்விழாவையொட்டி மூன்று நாட் களும் கருத்தரங்கு நடைபெறும். பொருட்காட்சி ஒன்றும் நடைபெறும். பாரதியார் பற்றித்தெரிந்து கொள்ள இது நல்லதொரு சந்தர்ப்பம். இந்நிகழ்ச்சி களே எல்லாம் இத்தகைய நல்ல முறையில் நடத்து வதற்கு அல்லும் பகலும் பாடுபட்டு வருபவர் களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலேயும் தெரி வித்துக்கொள்கிறேன்.

இவ்விழாவிற்கு பல பெரியார்கள் வந்திருக்கி றார்கள். தலேமை வகிக்க டாக்டர் ராமசாமி அய்யர் அவர்கள், துவக்கிவைப்பதற்கு மைசூர் முதலமைச் சர் திரு. நிஜலிங்கப்பா அவர்கள், பரிசுகள் வழங்கு வதற்கு--பாரதியார் கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி இவைகளில் கலந்து கொண்டு வெற்றி அடைந்த பல கல்லூரி மாணவர்கள், மாணவிகள், உயர்நிலேப் பள்ளி மாணவர்கள் மாணவிகள் இவர்களுக்குப் பரிசளிக்க ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவ ரெட்டி அவர்கள் ஆகியோர் அன் புடன் வந்துள்ளார்கள். இப்போட்டியில் நீதிபதிக ளாக இருந்து பணியாற்றிய பெரியார்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு நடைபெற இருக்கும் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்கு நம்து முதலமைச்சர் அவர்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருக்கும் வரவேற்பு கூறிக்கொண்டு, இவ்விழாவிற்கு டாக்டர் ராமசாமி அய்யர் அவர்களேத் தலேமை வகித்து நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். *





மைசூர் முதலமைச்சர் கனம் எஸ். நிஜலிங்கப்பா அவர்கள்

துவக்க உரை

விழாவைத் துவக்கி வைத்த மைசூர் முதல மைச்சர் கனம் எஸ். நிஜலிங்கப்பா அவர்கள், ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் பாடலைத்தை அழகு தமிழ் மொழியில் தன்னுல் பேச இயலாதிருப்பது பற்றி வருந்தினர். இரண்டொரு தமிழ்ச் சொற்களை யேனும் சேர்த்து இந்த மேடையில் பேச வேண்டு மென்ற ஒரு ஆவல் தனக்கிருந்தும் அது இயல வில்லை என்றார். மேலும் ஆங்கிலத்தில் அவர் பேசியதாவது :

"இந்த விழாவைத் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்வு அடைகிறேன். மாணவனுக இருந்த நாளிலிருந்தே பாரதியாரைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன். கன்னட மக்களாகிய நாங்கள் பாரதியாரை வியந்து போற்றுவதுடன் அவருடைய கருத்துக்களில் பெரு மதிப்பும் கொண்டிருக் கிறோம். காலசக்தியின் வேகத்தால் உந்தப்பட்ட அவரது கருத்துக்கள் அந்த நாளிலேயே இளைஞர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பியவை. அந்த சக்தி தான் சுதந்திர தாகம். சென்னையில் மட்டுமின்றி, புதுவை, காசி, கல்கத்தா போன்ற நகரங்களிலும் பல உத்தம புருஷர்களுடன் பாரதிக்குத் தொடர்பு ஏற்பட்டிருந்ததை நாம் அறிகிறோம். இந்தத் தொடர்புகளின் பயனுகப் பாரதியார் ஒரு தமிழராக மட்டுமில்லாமல் எல்லா வகையிலும் அவர் இந்தியா முழுமைக்கும் உரிய ஒரு பொது சக்தியா கத் திகழ்ந்தார். தமிழ் நாட்டில் வேர் விட்டுப் பாரதமெங்கும் கனி தரும் பயன் மரம் ஒன்றைப் போல் வாழ்ந்தவர் பாரதி. அவரது கவிதைக் கனிகளைத் தமிழகம் மட்டுமின்றி இந்திய நாடு முழுவதுமே பயன் படுத்தி மகிழ்ந்தது. அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த போதிலும், அகில பாரதமும், ஏன், அகில உலகமே அவரது வாழ்க்கையால் பயன் பெற்ற தென்று கூறவேண்டும்.

பாரதியாரின் இலக்கியங்கள் அனைத்தையும் நான் பார்த்திராவிட்டாலும் ஒரு சிலவற்றை மொழி பெயர்ப்புக்களின் மூலம் படித்து வியந்திருக்கி றேன். உண்மையில் அவர் இன்று நம்மிடையில் இல்லையே என்றுதான் வருந்துகிறேன். பாரதியார் நிறைய எழுதியிருக்கிறார். அவரது எழுத்துக்கள் இன்றும் நமக்கு உயிர்ப்பும் உணர்ச்சியும் தருகின் றன. தமது வாழ் நாளில் சிறைவாசம் முதலான தொல்லைகளையும் அவர் ஏற்றுக் கொண்டார். பல பத்திரிகைகளை நடத்தியிருக்கிறார். அவர் புதுவை யில் தலைமறைவாகப் போய் இருந்த காலத்தில் அன்றைய அரசாங்கத்தின் கொள்ளிக் கண்கள் அவரை வட்டமிட்டன. மக்களை அவர் உசுப்பி எழுப்பி விடுதலைக்குப் போராடும்படியான துணிவை உண்டாக்கியதுதான் காரணம். மக்க ளுக்கு அந்த மகாகவியின் குரல் தெளிவாகக் கேட்டது. தமிழ்நாடு, விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற பெருமையுடைய தும் பாரதியார் அந்நாளில் நமக்குக் கூறியவை யாவும் இன்றுள்ள நெருக்கடி நேரத்துக்கும் நூற்றுக்கு நூறு பொருந்தக் கூடியவையாக இருப்பதை இன்று நாம் பார்க்கிறோம். அன்று விடுதலை வேட்கையை நமக்கு உண்டாக்கினர். இன்று பெற்ற விடுதலை யைப் பேணிக் காக்கும் உணர்ச்சியையும் அவரது பாடல்கள் தருகின்றன. இன்றைய சூழ் நிலையி லும் அவரது அமர வாக்கியங்கள் நமக்குப் புத் துயிர் ஊட்டுகின்றன.

நீங்கள் இன்று காலைப் பத்திரிகைகளில் நமது சமாதான நிபந்தனைகளைச் சீனர்கள் ஏற்கவில்லை யென்று தந்திச் செய்தியைப் படித்திருக்கலாம். இந்தச் செய்தி நாம் நிமிர்ந்து உட்கார்ந்து சிந்திக்கு மாறு செய்கிறது. இது நமக்கு ஒரு நல்ல படிப் பினை. சீனர்களின் சமாதான நாடகம் இது.

நம்மைக் குழப்பியடிக்கவே அவர்கள் திட்டமிட்டி ருக்கிறார்கள் என்பது இன்றைய தகவலில் தெளி வாகிறது. எனவே எந்த நிலைக்கும் நாம் தயா ராக இருக்க வேண்டியது அவசியமாகிறது. இன்று

நாடு பூராவும் ஒரு எழுச்சி பூர்வமான தீவிர உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆக்கிரமிப்பாளரை விரட்டியடித்தாக வேண்டுமென்ற வேகம் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படுகிறது. ஆட வர், பெண்டிர், மதகீயர் யாவருக்கும் இவ்வுணர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஏழை பணக்காரர் என்ற வேறுபாடின்றி தகரங்கள், கிராமங்கள், பட்டி தொட்டிகள் எங்கும் ஏற்பட்டுள்ள இவ்வுணர்ச்சி நம்மக்கு பெருமையும் துணிவும் தருகிறது.

அரசியல் ரீதியாக நம்முடைய நாடு என்றேனும் ஒரு முழு தேசமாக இருந்தது கிடையாது. பல மன்னர்கள், பல சக்ரவர்த்திகள் பிரபலமாக வாழ்ந்த வரலாறுகள் நமக்கு உண்டு. எனினும் அவர்கள் இந்தியா முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டார்கள் என்று கூறுவதற்கில்லை. ஒருவேளை இங்கு வீற்றுள்ள டாக்டர் சி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்களுக்கு என்னைக் காட்டிலும் அதிகமாகச் சரித்திர உண்மைகள் தெரியக்கூடும் — எப்படியும் தான் அறிந்த மட்டில், ஒரு குடை, ஒரு ஜனதிபதி, என்ற அமைப்பின்கீழ் இந்தநாடு முன்னர் வாழ்ந்ததில்லை. சமீபகாலம் வரையில்கூட இங்கே எண்ணற்ற மன்னர்கள், நவாப்புகள், மகாராஜாக்கள் இருந்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் கடந்த பதினேந்து ஆண்டுகளில்— அதாவது நாடு சுதந்திரம் பெற்ற பிறகு — அந்த மன்னர்களும் கூட நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையும் போற்றி ஒழுகத் தலைப்பட்டு விட்டார்கள். எனவே ஒவ்வொருவரும் இந்தப் பெரிய நாடு முழுவதும் தனக்கு உரிமையானதே என்ற உணர்ச்சி பிறந்திருக்கிறது. எந்த இடத்தில் வாழ்ந்த போதிலும், என்ன மொழிபேசிய போதிலும் நாடு முழுவதுமே இங்குள்ள ஒவ்வொருவருக்கும் சொந்தம் என்ற உண்மை விளங்கக் காண்கிறோம். இந்த நிலை இப்பொழுது தான் ஏற்பட்டிருக்கிறது. எங்கு போனலும் நாட்டின் ஆங்காங்கும், மொழி, இன, கலாசார வேற்றுமைகளோப் பொருட்படுத்தாமல் ஒன்றுபட்டு நாட்டின் சுதந்திரத்தைக் காப்பதில் முனைந்து நிற்பதைப் பார்க்கிறோம். நாம் அனைவரும் ஒருகுலம் என்ற உணர்ச்சி அல்லவா இது?

இன்று பாரதியார் உயிர் வாழ்ந்திருந்தால் அவருடைய இந்த 81 வது பிறந்த நாள் விழாவை இன்னும் எவ்வளவோ சிறப்பான முறையில் நாம் கொண்டாடி இருப்போம். உண்மையில் முன்னேக் காட்டிலும் இந்த நேரத்தில் தான் அவரது வரக்கு வலிமை நமக்கு அவசியமாகிறது. அவரும் இப் பொழுதிருந்தால் அவர் நமக்கு இன்னும் அதிக உணர்ச்சி ஊட்டியிருப்பார். பரவாயில்லை. அவர் விட்டுப்போன பாடல்களும் கருத்துக்களும் அவர் நேரில் இருந்து நமக்குப் பேசுவது போன்றே உயிர்ப்புடன் இன்றும் நம்மிடத்தில் இருப்பதே நாம் செய்த பாக்கியமாகும். பகைவனை வெருட்டி அடித்து பாரத சுதந்திரத்தைக் கட்டிக் காக்கும் சக்தியைப் பாரதி பாடல்கள் நமக்கு நிச்சயம் வழங்கும்.

இறுதியாக ஒன்று கூற விழைகிறேன். பாரதியாரின் பாடல்களேயும் இதர எழுத்துக்களேயும் பற்பல மொழிகளிலும் பெயர்க்கும் பெரிய காரியம் ஒன்றை நாம் மேற்கொண்டாக வேண்டும். இந்தத் துறையில் சிறிதளவு நாம் செய்திருக்கிறோம் என்பது சரி. ஏற்கெனவே கன்னடத்தில் பாரதி எழுத்துக்களே நாங்கள் மொழி பெயர்த்துக் கொண்டுள்ளோம். ஆந்திர முதலமைச்சர் திரு. சஞ்சீவ ரெட்டியும் இந்த விழாவிற் கலந்துகொள்ள வந்திருப்பது பற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். கன்னட தேசத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். திருவாளர் நடராஜ் அவர்கள் இதோ வீற்றிருக்கிறார். எனவே இது ஒரு முக்கூடல்—அதாவது திரிவேணி சங்கமம் என்றே நான் மதிக்கிறேன். கேரள நண்பர் திரு. சங்கரன் அவர்களும் இங்கு வந்திருக்கக் கூடுமாயின் உண்மையில் இந்த விழா ஒரு சதுர்வேணி சங்கமமாகவும் ஆகியிருக்கும்.

உண்மையில் சகல வேணி சங்கமமாக நாம் யாவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டுமென்பதே நமது லட்சியம். நாட்டின் பிறபாகங்களிலுமிருந்து கவிஞர்களும் மொழிப் பண்டிதர்களும் கருத்தரங்கம் கவியரங்குகளில் கலந்து கொள்ள விருக்கிறார்கள் என்பதை நிகழ்ச்சி நிரலில் கண்டு நான் பெரு மிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு உண்மை யென்ன வென்றால் பாரத நாடு முழுவதிலும் எல்லா இடங்களிலும் ஒவ்வொரு பாஷையிலும் பாரதிக்கு ஒரு அன்பர் அல்லது ரசிகர் இருக்கிறார் என்பதுதான். எனவே பாரதி தமிழகத்து மட்டுமே உரியவரல்லர். நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் அவர் உரியவர். இந்தியன் என்று ஒருவன் எங்கிருப்பினும் அவனுக்கு மிக உன்னதமான ஒரு தேசிய ஒருமையுணர்ச்சியை உண்டாக்கும் மந்திர சக்தி பாரதி பாடலுக்கு இருக்கிறது.

பாரதியின் நிஜவை நிகேயாகச் செய்யும் ஒரு நிறுவனம் நம்மிடம் இல்லே என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் அவர் பெயரால் நடைபெற்று வரத்தான் செய்கின்றன. எனினும் இவை யெல்லாம் போதா வென்றே எனக்குப் படுகிறது. பெரிய அமைப்பில் ஒரு நிறுவனத்தை நாம் காண வேண்டிய அவசியம் இருக்கிறது. பாரதியின் 81-வது பிறந்த நாள் கொண்டாடும் நேரத்தில் அவரது எழுத்துக்களேயும், மற்ற தமிழ் இலக்கியங்களேயும் பிறமொழி மக்களுக்கு உணர்த்தக்கூடிய மொழி பெயர்ப்புப் பணியைச் செய்யக்கூடிய ஒரு அமைப்பு அவசியம் என்பதையும் எண்ணுவோம். இந்த நேரத்தில் உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு செய்தியைக் கூற விரும்புகிறேன்.

எங்கள் மைசூர் ராஜ்யத்தில் தமிழ் இலக்கியப் படைப்புக்கள் பலவற்றைக் கன்னடத்தில் மொழி பெயர்க்கும் நடவடிக்கைகளே நாங்கள் ஏற்கனவேயே தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறோம். மாடத்தூர் கிருஷ்ண மூர்த்தி என்ற எங்கள்

எழுத்தாளர் ஒருவர், தமிழ் எழுத்தாளரான அகிலன் அவர்களது நூல்கள் பலவற்றைக் கன்னட மாக்கியுள்ளார். அதே போன்று உங்கள் கவிஞர்களில் ஒருவரான திருலோக சீதாராம் அவர்களின் கவிதைகள் சிலவற்றையும் பங்களூரிலுள்ள கன்னட ஆசிரியர் சிலர் மொழிபெயர்த்துள்ளார்கள். இது போன்றே தமிழ் மக்களும் கன்னட இலக்கியங்களைத் தமிழாக்கும் துறையில் பரஸ்பரம் ஈடுபட வேண்டும். இதைப் பற்றி நான் சொல்லியாக வேண்டுமா? கன்னடத்து பிரபுலிங்கலீலையும் மாஸ்தி வெங்கடேசய்யங்காரது எழுத்துக்கள் சிலவும் தவிர வேறு கன்னட இலக்கியங்கள் எதுவும் தமிழில் வந்துள்ளதென்று எனக்குத் தெரியவில்லை. எனவே சிறந்த கன்னட இலக்கியங்களைத் தமிழாக்கம் செய்ய வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பாரதியின் பெயரால் நல்ல வலிமையாய்ந்த அடிப்படையில் ஒரு இலக்கியப் பரிவர்த்தனைக் கழகம் தோற்றுவித்து இத்தகைய வேலைகளை மேற்கொள்வது பயனுடையதாகும். தமிழைப் பிறமொழிகளிலும் பிறமொழி இலக்கியங்களைத் தமிழிலும் ஆக்குவது இதன் குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த முயற்சி பாரத நாட்டின் ஒருமைப் பாட்டுக்குப் பெருந்துணையாக இருக்குமென்பது உறுதி.

சென்னையில் இத்துறையில் ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் மைசூரிலும் இதுபோன்ற தீவிர முயற்சிகள் மேற்கொள்ள நான் உறுதி கூறுகிறேன். இந்த முயற்சிகள் மிகவும் அவசியமாகி விட்டன. ஏனெனில் இவற்றின் மூலம்தான் நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்கவும் நிலநாட்டை வும் எளிதில் இயலும். விடுதலைக்குப் பாடுபட்டதைக் காட்டிலும், பெற்ற விடுதலை வாழ்வைப் பேணிக் கொள்வதில் நாம் ஒவ்வொருவரும் அதிகப் பாடுபட்டாக வேண்டும். இலக்கியங்களே நமக்கு நம்மிடையுள்ள அடிப்படை ஒற்றுமையை நமக்கு உணர்த்தும் சக்தி படைத்துள்ளன. எழுத்தாளர், பேச்சாளர் ஆனவரும் மக்களுக்கு ஒரு மைப்பாட்டுணர்ச்சி ஏற்பட்டு வளருமாறு செய்யும பணியை அயராது செய்யவேண்டிய தருணம் இது. அதன் மூலம்தான் தாயகத்தில் அண்னியர் எவ்வகையிலும் காலடிவைத்து ஆக்கிரமிக்க முடியாத வாறு அவர்களைத் தடுத்து நிறுத்தவும், தொலைவில் வெருட்டவும் நம்மால் இயலும். இந்த வகையில் நம் ஒவ்வொருவரையும் பாரதியாரின் எழுத்துக்கள் உணர்ச்சி பெறச் செய்யவேண்டும். பாரதி பாரத நாட்டின் பொதுக் கவிஞர். இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியின் தனிச் சிறப்பையும் அவர் விவரித்து வியந்து போற்றியுள்ளார். ஆந்திரம், மலையாளம், கன்னடம், வங்காளம் என்று ஒவ்வொரு பிரதேசத்தையும் அவர் புகழ்ந்துள்ளார். எனவே அவர் விட்டுப் போன ஒற்றுமைப் பணியைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

இந்த விழாவில் நாம் முன்னர் கூறியதுபோல ஒரு மகத்தான நிறுவனம் காணும் வேலையில் கவனம் செலுத்துமாறு மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒவ்வொரு வகையிலும் சாஸ்திரீயமான ஆராய்ச்சிப் பணியுரிய அந்த நிறுவனம் பயன்பட வேண்டும். இப்பொழுது நமது மக்களிடை நிலவும் ஒற்றுமையுணர்ச்சி எந்த நாளும் நம்மில் நின்று நீங்காமாறு செய்வதுதான் நமது அடுத்த வேலை. பாரத நாடு முழுமைக்கும் பொதுவான சுப்ரமண்ய பாரதியின் 81-வது பிறந்த நாளைக் கொண்டாட முன்வந்தது காலமறிந்து நாம் செய்த மிக நல்ல கருமம். இந்த விழாவை மிக்க மகிழ்ச்சியுடன் நான் துவங்கிவைக்கிறேன். ★

டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர்,
அண்ணாமலை பல்கலைக் கழகம்

★

தலைமையுரை

அன்பர்களே,

திரு நிஜலிங்கப்பா அவர்கள் கூறியது போல பழங்காலத்தில் ஜனநாயக அடிப்படையில் அமைந்த பாரத முழுமைக்கான பேரரசு ஒன்றும் இல்லை யென்பது உண்மைதான். பழைய சக்கரவர்த்திகள் தங்கள் நிலப்பரப்புக்கு மட்டுமல்லாமல் இமயம் முதல் குமரி யீறாக உள்ள பரதக் கண்ட முழுமைக்கும் தாங்களே ஏக சக்ராதிபதி என்பது போன்ற எண்ணம் படைத்தவர்களாக இருந்தார்களே யன்றி உண்மையில் அவர்கள் யாரும் ஒரு குடைக்கீழ் இந்தியாவை ஆண்டதில்லை என்பதை நாம் உணரவேண்டுமென்று குறிப்பிட்டார். பழைய தமிழ் வேந்தர்களும் தாங்கள் பிறந்த வெற்றிகள் யாவும், பாரத நாட்டின் இதர பகுதிகளுடன் தாங்கள் ஒரு தொடர்பும் உறவும் கொள்ளாதவரையில், முழு வெற்றியாக மாட்டார என்றே எண்ணியிருக்கிறார்கள். எனவே இந்தியா முழுவதும் ஒன்று என்ற எண்ணமே இதற்கு முன் இருந்தது கிடையாது என்று நிஜலிங்கப்பா அவர்கள் கூறியதை அப்படியே ஒப்புக் கொள்ள இயலாமல் இருக்கிறது. பண்டைய மன்னர்கள் பிற நாடுகளை ஆக்கிரமித்ததை ஒரு ராஜரீகக் கடமையாகக் கருதியதில்லை என்பதற்கு ஆதாரங்கள் காட்ட முடியும். போர் வெற்றி மட்டுமே பெரிதென்று அவர்கள் எண்ணியதில்லை. கலிங்கத்தைப் போரில் வென்ற ருவம் சத்துச் சக்ரவர்த்தி ஒருவர் கலிங்கர் (இன்றைய ஒரிசா) களுக்கே அந்த நாட்டைத் திரும்பக் கொடுத்து விட்டு ஊர் திரும்பினர் என்ற செய்தி இருக்கிறது. அந்த நாள் மன்னர்களின் வெற்றியின் விளைவே அதுதான்.

நமது சமாதான உணர்ச்சியைச் சீனர்கள் புறக்கணிப்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் ஒரு உயிராக ஒன்றுபட்டு எந்த நெருக்

ஆடவும் சமானிக்கும் ஒத்த மனத்துணிவுடன் நிகழ வேண்டுமென்பதுதான்.

மகாகவி பாரதியாரை சிறு வயதிலிருந்தே நான் அறிவேன்.

கவியரசர் பாரதியாரை நான் முதன் முதலில் சூரத் காங்கிரசு மாநாட்டில் சந்தித்தேன். காங்கிரசுக் கட்சியில் அப்போது மிதவாதிகள், தீவிரவாதிகள் என்ற இரு பிரிவினர் இருந்தனர். நான் மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவன், பாரதியார் தீவிரவாதக் கட்சியைச் சேர்ந்தவர்.

மிதவாதக்கட்சியைச் சேர்ந்த திரு. வி. கிருஷ்ணசாமி ஐயர் பாரதியாரின் வெளிப்படையான எதிரிகளில் ஒருவர். ஒரு சமயம் பாரதியாரின் இருப்பிடத்திற்கு ஜி. ஏ. நடேசனுடன் திரு. வி. கிருஷ்ணசாமி ஐயர் அழைத்து வரப்பட்டார். அப்போது பாரதியார் திரு. கிருஷ்ணசாமி ஐயருக்கு உணர்ச்சி மிக்க கவிதைகள் பலவற்றை எடுத்துக் கூறினர். அவருடைய உணர்ச்சிக்க கவிதை நயத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த கிருஷ்ணசாமி ஐயர் பாரதியாரின் கவிதைகள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அன்று முதல் அவர் பாரதியாரின் நண்பரானார்.

பாரதியார் 1898-ஆம் ஆண்டு பதினெறு வயது இளைஞராக இருக்கும்போதே ''பாரதியார்'' என்ற சிறப்புப் பெயரை அவர் பெற்றார். உணர்ச்சிகளே வியத்தகு முறையில் வெளிப்படுத்தும் தனித் திறமையின் மூலமாகவே அவரது புகழ் ஓங்கியது. அவர் தமிழாசிரியராகவும், அலுவலராகவும், பின்னர் ''சுதேசமித்திரன்'' நாளிதழில் துணையாசிரியராகவும் அவர் பணியாற்றினார். புரிந்துகொள்ள முடியாத ஒரு கவிஞராகவே அவர் இருந்தார். தூர்க்கையினிடத்திலும், கிருஷ்ணனிடத்திலும் அளவுகடந்த பக்தி கொண்டிருந்தார்.

'பாஞ்சாலி சபதத்தை' எழுதிய அவர், முன்னுரையில் மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் எழுதினால் நம்முடைய உணர்ச்சியை நல்லமுறையில் வெளியிடமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார். பாரதியார் தேசிய வாடையை முழுக்க முழுக்கக் கொண்டிருந்தவர். பாரதமாதாவின் பராசக்தி என்ற நூலின் கண் அவரது நாட்டுப் பற்று நன்கு விளங்குகிறது. அவரது நாட்டுப்பற்று தமிழகத்தோடு நின்றுவிடவில்லை. இந்தியாவெங்கும் அது சுடர்விட்டு விளங்கியது.

''இந்திய விடுதலை'' என்ற சுயசரிதையில் இந்தியாவின் விடுதலை கோரும் கர்மயோகியாகவே அவர் காணப்படுகிறார். அந்த நூலில் ஓர் இந்தியனுக்கும் - வெள்ளையன் ஒருவனுக்கும்; இடையே நடைபெறும் பேச்சு மூலம் இந்தியாவின் விடுதலைக்குப் போராடிய எல்லாத் தலைவர்களையும் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்.

கோபால கிருஷ்ண கோகலே, சர். பிரோசுஷா மேத்தா, பாலகங்காதரதிலகர் போன்ற தேசியத் தலைவர்களின் மாண்புபற்றியும் அவர் பாடியுள்ளார். வங்காளப்பிரிவினை, எதிர்ப்புணர்ச்சியிலும் கவிதை இயற்றுவதிலும், அரசியலில் சுறுபட்டுப்பணியாற்றுவதிலும் அவருக்கு ஊக்கத்தை அளித்தது.

அவரது குயில் பாட்டும், வெண்ணிலா பாட்டும் அவரை ஓர் இயற்கைக் கவிஞராகவே நமக்குக் காட்டுகிறது. அதே நேரத்தில் பிரிட்டிஷ் நிருவாகத்தின் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டும் கவிஞராகத் திகழ்ந்தார். பிரிட்டிஷ் நிருவாகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியதோடல்லாமல் நல்ல தேர் நிருவாகம் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் அவர் எடுத்துக் கூறினர். அல்லா, புத்தர், ஏசுநாதர் போன்றவர்களைப்பற்றியும் கவிதை இயற்றியுள்ளார். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாது அவர் சிறுகதை எழுத்தாளராகவும் இருந்தார். அவருடைய சிறுகதைகளில், ''ஞானரதம்'' விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடியதாய் அமைந்துள்ளது. ''நவதந்திரம்'' ''சந்திரிகா'' போன்ற நூல்களும் சிறந்து விளங்குகின்றன. பிறரைக் கவரக்கூடியவிதத்தில் மட்டுமின்றி உணர்ச்சியை ஊட்டக் கூடியதாகவும் அவரது கவிதைகள் அமைந்திருக்கின்றன.

பாரதியாருடைய பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளவு பற்றி நான் மிகவும் மகிழ்வடைகிறேன். *

கண்காட்சி திறப்புரை – முதலமைச்சர் கனம் கு. காமராஜ்

கண்காட்சியை திறந்து வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. கு. காமராஜ் அவர்கள் பேசினார்கள். அவர்களது உரையில்.....

''தலைவர் அவர்களே, கவிஞர் பாரதியார் அவர்களுடைய 81-வது பிறந்தநாளை கொண்டாடுவதற்கு நாம் இங்கே கூடியிருக்கிறோம். அதோடு அவர்களது வரலாற்றை தெரிந்து கொள்வதற்காக நாம் கண்காட்சியையும் நடத்துகிறோம். பாரதியார் அவர்கள், நம்முடைய தமிழ்நாட்டில் தேசீய உணர்ச்சியை தட்டி எழுப்பிய பெரிய கவிஞர். தமிழ்நாட்டு மக்களுக்கு சுதந்திர உணர்ச்சியை அவர்களுடைய பாடல்களின் மூலமாக ஊட்டினார். அதன் காரணமாக தமிழ்நாட்டில் சுதந்திர உணர்ச்சி ஏற்பட்டு, சுதந்திர இயக்கத்தில் மக்கள் முன் வந்து பாடுபடுவதற்கு முன் வந்தார்கள் எத்தனையோ மக்கள். சுதந்திரமும் பெற்றோம். இவ்வாறு பெற்ற அந்த சுதந்திரத்திற்கு ஆபத்து வந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மீண்டும் நம்முடைய கவிஞருடைய 81-வது பிறந்த நாளை கொண்டாடுவது மிகவும் பொருத்தமாக இருக்கிறது. அவர்களுடைய பாடல்களை நினைவுக்குக் கொண்டு வந்தால், இதன் மூலம் மக்கள் உணர்ச்சி கொண்டு, நாம் பெற்ற சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு லட்சக் கணக்கில் முன்வருவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை என்பதை தெரிவித்துக்கொண்டு, இந்தக் கண்காட்சியை திறந்து வைக்கிறேன். *



திரு. இ. வா. ஜகன்னாதன்

சிறப்புச் சொற்பொழிவுகள்

★

பின்னர் திரு. கி. வா. ஜ அவர்களும், டாக்டர் மு. வ. அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

திரு. கி. வா. ஜகன்னாதன் அவர்கள் ஆற்றிய உரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள். அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத்தின் ஆதரவோடும், அரசாங்க ஆதரவோடும் மகாகவி பாரதியின் 81 வது பிறந்த தின விழா கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் ஒன்று என்ற நினைவோடு பாரத நாடு இதில் இணைந்தது என்ற நினைவை பலகாலமாக தமது பாடல்களில் எடுத்துக் காட்டியவர் பாரதி. பாரதியின் தீர்க்க தரிசனத்தைப்பற்றி எடுத்துக் காட்டாக, இன்றைய நிலைக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது "சீனத் தராய் விடுவாரோ பிற தேசத்தர் போற் பல தீங் கிழைப்பாரோ" என்ற பாடல் மற்ற நாடுகளை விட்டு சீனாவைப் பற்றி கூறியிருப்பதையும், தற் போதைய நிலைமையையும் பார்க்கும்போது பாரதியின் தீர்க்க தரிசனம் புலப்படுகிறது. நமது இலக்கியங்கள் எல்லாவற்றிலும் ஒருமைப்பாடு உணர்ச்சி இருந்து வருகிறது.

எம் மொழியை எடுத்துக் கொண்டாலும் அம்மொழியில் நிச்சயமாக ராமாயணக் காவியம் பாரதம் இவை இருக்கும். நம் நாட்டின் ஒருமைப்பாட்டை அவை குறிக்கின்றன. இந்த இரண்டு காப்பியங்களும் அறம் வெல்லும், பாவம் தோற்கும் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. அவை, தீமையை அழித்து நன்மையை ஓங்கச் செய்வதற்காகும். அதர்மம் தோற்கும் தர்மம் கடைசியில் நிச்சயமாக வெற்றி பெறும் என்பதைத்தான் அந்த இரு காப்பியங்களும் எடுத்துக் காட்டுகின்றன.

அந்தக் காப்பியங்கள், மற்றும் கந்தபுராணம் போன்றவைகள் வீர வீனியாடல்களைச் சித்திரிக்கின்றன. நம் நாடு வீரத்தில் என்றுமே சோடை போனதில்லை. இமயம் முதல் குமரி வரையில் உள்ள மக்கள் எல்லோரும் ஒரே பண்பாட்டை உடையவர்கள் தாம். உணவு உடை வித்தியாசப் படலாமே தவிர பண்பாடு ஒன்றுதான், அச்சம் தவிர்க்கப்படவேண்டும். அதற்கு நாம் எல்லோரும் ஒன்று என்ற நினைப்பு ஏற்பட்டால் அச்சம் தானுகவே போய்விடும்.

"ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங்கிருப்பவர் அன்றே
சீனத்தராய் விடுவாரோ—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப்பாரோ"

என்று பாரதி கூறியிருப்பதிலிருந்தே அவரது தீர்க்க தரிசனத்தை நாம் தெரிந்து கொள்ளலாம்.

பாரதி மனிதருக்காக மட்டும் வக்காலத்து வாங்கியவர் அல்ல. எல்லா உயிரினங்களுக்குமே ஏன், இந்த பிரபஞ்சத்தில் என்னென்ன உண்டோ அத்தனைக்குமாகப் பாரதி பேசியிருக்கிறார் என்றுல் பாரதியை ஒரு "பிரபஞ்சக கவி" என்றே கூறி விடலாம்.

பழைய ஆத்திசூடியில் "தையல் சொற் கேளீர்" என்று கூறியிருப்பதை, பெண்களை இழிவுபடுத்தியிருப்பதாக யாரும் நினைத்துவிடக்கூடாது என்று கருதியே "தையலே உயர்வு செய்" என்று குறிப்பிட்டார் பாரதி, தனதுபுதிய ஆத்திசூடியில். கடவுளே இல்லை என்று சொல்லக்கூடிய நேரத்திலும், பாரதி பாரதமாதேவியைப் படைத்தார். நாம் ஒருமுகம், நான்முகம், ஆறுமுகம் என்று எண்ணி வணங்குகிறோமே அம்மாதிரி இல்லாமல் பாரததேவிக்கு (அப்போது இந்தியாவின் ஜனத்தொகையாக இருந்த) முப்பது கோடி முகங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். இத்தனை முகங்கள் இருந்தாலும் உயிர் ஒன்று தான் என்கிறார்.

"முப்பது கோடி முகமுடையாள், உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்"...

என்று கூறுகிறார். அதுமட்டும் அல்ல. மொழிகள் எத்தனை இருக்கின்றன.

"செப்பு மொழி பதினெட்டுடையாள், எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்....."

என்கிறார். பதினெட்டு மொழி பேசுகிறுள். ஆனுல் சிந்தனை – கருத்து – ஒன்று தான். வெவ்வேறு

வகையில் பேசலாம். பல மொழிகளில் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். கவிஞர்கள் ஒருவிதமாகப் பேசலாம். அரசியல் வாதிகள் ஒருவிதமாகப் பேசலாம், ஆனால் அடிப்படை ஒன்றுதான். பாட்டுக்கச்சேரி நடத்தும்போது பல விசைகள் பாட்டு கேட்பார்கள். ஆனால் சுருதிக்கு ஒப்பித்தான் பாடவேண்டும். இல்லாவிடில் அபஸ்வரம் வந்து விடுகிறது. இப்போதுள்ள நிலையில் பார்த்தால் நாற்பது கோடி முகங்கள் இருந்தால் கூட, உயிர் ஒன்று தான். அது தான் பாரதப் பண்பாடு. இதைத்தான் பாரதியார் கூறினார்.

மனிதனுக்குத் தேவை என்ன என்பதைக்கூறுகின்ற நேரத்தில்...ஔவைப்பாட்டி 'ரேஷனே'யே வைத்திருந்தாள். ''உடுப்பது நான்கு முழம், உண்பது நாழி'' என்று. நாழி என்று மினிமம் அளவு கூறுகிறாள். நாழி என்பது திருச்சிராப்பள்ளி படிக்கு ஒரு படியாகும். இதை மினிமம் என்று எடுத்துக் கொண்டால் அந்த வீதத்தில் இன்று யார் உன்கிறார்கள். ஆதோடு ''மீதான் விரும்பேல்'' என்றும் கூறுகிறாள் ஔவைப்பாட்டி. பாரதி தற்காலத்திற்கேற்ப ''ஊண் மிக விரும்பு'' என்று சொல்லுகிறார்.

குழந்தைகளுக்குக் கூறுகிறார். ''பாதகம் செய்பவரைக்கண்டால் பயங்கொள்ளலாகாதுபாப்பா...' பாதகம் செய்பவர்களைக் கண்டவுடன் பயங் கொள்ளக்கூடாது. ஆனால் என்ன செய்யவேண்டும், பாதகம் செய்பவரைக் கண்டால் ''பாதகம் செய்பவரைக்கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா— மோதி மிதித்துவிடு பாப்பா. அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா''... என்கிறார். பாதகம் செய்கின்ற சீனத்தவரை எதிர்க்க நமது சின்னக்குழந்தைகளுக்கு வேறு என்ன வேண்டும்? மோதி மிதித்துவிடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா – என்பதில் வீரக்கனல் கொப்பளிக்கிறது.

பாஞ்சாலி சபதத்தில் பெண்மையைப்பற்றிக் கூறுகிறார். திரௌபதை துகில் உரிதல் என்று கூறவில்லை. ஒரே விஷயத்தைச் சொல்லுவதில் இரண்டு விதம் இருக்கிறது. ''வாலி வதம்'' என்று சொல்லுவதிலும், ''வாலி மோட்சம்'' என்று சொல்லுவதிலும் வித்தியாசம் இருக்கிறது. கம்பர் ஜவஹர்லால் நேரு அவர்கள் உணர்ச்சியோடு பேசியிருக்கிறார்கள், அதைப் பத்திரிகையில் போடவேண்டும் என்றால், வேண்டியவர்கள் ''ஜவஹர்லால் நேரு வின் முழக்கம்'' என்று போடுவார்கள். வேண்டாதவர்கள் ''ஜவஹர்லால் நேருவின் அரட்டை'' என்று போடுவார்கள். அந்த முறையில் ''பாஞ்சாலி சபதத்தில்'' வீரத்தைப்பற்றிக் கூறுகிறார். தனக்குத் துன்பம் வந்த நிலையில் திரௌபதை கூறுவதை எல்லாம் சொல்லிவிட்டு ''ஜயசக்தி'' யை அழைக்கின்ற நிலையில் பாடல்களை அப்படியே நிறுத்திவிடுகிறார் பாரதியார். பாஞ்சாலி சபதத்தை வீரச் சுவைப்பட அமைத்திருக்கிறார்கள். எல்லோரும் வீரத்தைப் பெறுகிற அளவுக்கு அமைத்திருக்கிறார்கள்.

நம் தமிழ்நாட்டிலுள்ள அகப்பொருள் என்ற தமிழ் நூல்களில் ஆண்மையைப்பற்றி சொல்லப் படுகிறது. ஆண்மை நாட்டைக் காக்கும், பெண்மை வீட்டைக் காக்கும் என்றும் சொல்லப் படுகிறது. இவ்விதம் பல வீர நூல்களை எல்லாம் நாம் பெற்றிருக்கிறோம். இத்தகைய நாட்டில் மேலும் வீரத்தை வளர்த்திருக்கிறது பாரதியாரு டைய நூல்கள்.வீரத்தை அடிப்படையாக்கொண்டு அவருடைய பாடல்கள் உருப்பெற்றிருக்கின்றன. அரிச்சுவடியாகசொல்லும்போதே குழந்தைகளுக்கு ''பாதகம் செய்பவரைக் கண்டால் பயங்கொள்ளலாகாது பாப்பா, மோதி மிதித்து விடு பாப்பா, அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா — என்று வீரத்தை வளர்க்கிறார். அது பாரதப் பண்பாடு. அப்பண்பாடு நம் நாட்டு மக்களிடையே ஓங்கி வீளங்கட்டும் என்று கூறி என் உரையை முடிக்கின்றேன். ●●

டாக்டர் திரு. மு. வரதராசனுர்

திரு. மு. வரதராசனுர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''அந்தந்தக் காலத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையில் சிறந்து விளங்கியிருக்கிறார்கள். கி.பி. 600 முதல் 1300 வரையில் வியாபாரத் துறையில் சிறந்த புகழோடு விளங்கியவர்கள் பலர் உண்டு. இன்றும் வியாபாரத் துறையில் புகழ் பெற்று விளங்கும் பலர் இருக்கிறார்கள். ஆனுல் அவர்களது புகழ் 2052 ல் விளங்குமா என்றுல் அப்படி அவர்களது புகழ் நிலைபெற்று விளங்காது. அவர்களே அப்பொழுது இருக்கும் மக்கள் நினைவில் வைத்துக் கொண்டிருப்பார்களா என்ருல் வைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இன்று அரசியல் துறையில் பலர் புகழ் பெற்று விளங்குகிறார்கள். அவர்களைப் பற்றிய நினைப்பு வருங்கால மக்களுக்கு இருக்குமா என்ருல் இருக்காது. இன்று பாரதியின் பாட்டிலிருந்தே நிலைத், லஜபதிராய் போன்றவர்களே அறிய முடிகிறது. வ. உ. சி. போன்றவர்களின் பெயர்களை நாடகக் கலைஞர்கள் வாழ வைக்கின்றார்கள்.

ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு காலத்தில் புகழ் பெற்றிருந்தவர்களைச் சில ஆண்டுகள் கழிந்த பிற்பாடு மக்கள் மறந்து விடுவது இயற்கை. ஆனுல் புலவர்களின் பெயர்களை மட்டும் மக்கள் என்றுமே மறப்பதில்லை. இதற்குக் காரணம் என்னவென்ருல் மற்றவர்கள் தங்கள் காலத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே தொண்டு செய்தவர்கள். ஆனுல் புலவர்களோ தம் காலத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் தொண்டு செய்தவர்கள் அல்ல. அவர்கள்



திரு. மு. வரதராசனார்

வருங்காலத்து மக்களுக்கும் தொண்டு புரியக் கூடிய வகையில் அவர்கள் தொண்டாற்றுகிறார்கள் தங்கள் காவியங்கள் முலம், தங்கள் பாடல்கள் மூலம். ஔவை போன்ற வர்கள் உலகமே போற்றக் கூடிய உண்மைகளே கூறி விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஆகவேதான் அவர்களைப் போன்றவர்களின் நினைவு என்றும் இருக்கிறது. ஆகவேதான் அவர்கள் என்றுமே மக்களால் மதிக்கப்படுகிறார்கள். அன்றுவள்ளுவர் இயற்றிய குறள் அன்றுள்ள மக்களுக்கு மட்டுமட்டுமல்ல பயன்பட்டது. அது இன்று மக்களுக்குப் பயன்படுகிறது. என்றென்றும் அது மக்களுக்குப் பயன்படும்.

ஆந்திர நாட்டு அறிஞர்கள், கன்னட நாட்டு அறிஞர்கள், சிந்தி நாட்டு அறிஞர்கள், இங்கிலாந்து நாட்டு அறிஞர்கள், ரஷ்ய நாட்டு அறிஞர்கள், அமெரிக்க நாட்டு அறிஞர்கள், பண்பாடு வளருமாறுள் சீன நாட்டு அறிஞர்களும் வரலாம். அப்பொழுது உலகப் பெரும் கவியாக அவரது மிழாவைக் கொண்டாடுவோம். நமக்கு இருப்பது வீரம் மட்டுமல்ல, தீரம் மட்டுமல்ல. ஈரத்தில், உபகாரத்திலும் நாம் சிறந்து விளங்குகிறோம் என்று போற்றியிருக்கிறார்கள். உலகில் எந்த நாட்டிற்கு வது இடுக்கண் ஏற்பட்டால் முதலில் குரல் எழுப்பும் நாடாக இந்தியா விளங்குகிறது. எந்த நாட்டிற்கு இடுக்கண் வந்தாலும் அவற்றிற்கு நம் துணை இருக்கிறது. துணை புரிகிறோம். ஆகவேதான் நமக்கும் துணை புரிய வருகிறார்கள் மற்ற நாட்டினர். அறம் வளர்க்கும் நாடு நம் நாடு. நமக்குப் பிற நாடுகளை அடக்கி ஆள வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

> ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
> வான் புகழ் கொண்ட தமிழ்நாடு''

என்று பாரதி கூறியிருக்கிறார்கள். வர இருக்கிற புலவர்கள் ''பாரதி தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட பாரத நாடு'' என்று பாரதியைப் பற்றிப் பாடுவார்கள். பாரதியின் நூற்றாண்டு விழாவிற்கு திரு. காமராஜ் அவர்கள், திரு. பக்தவத்சலம் அவர்கள் மற்றும் நாம் எல்லோரும் இருந்து அதைச் சிறப்பாக கொண்டாட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ''வாழ்நாள் மிக விரும்பு'' என்று நான் சொல்கிறேன். பாரதியின் நூற்றாண்டை, நூற்றாண்டு விழாவை எல்லா நாட்டு மக்களும் சேர்ந்து கொண்டாடுவோம் இதே அரங்கில். பாரதியின் நூற்றாண்டு விழாவை

பாரத நாட்டைச் சொல்லுகின்ற நேரத்தில், பாரத நாட்டிலுள்ள மக்களைப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில், உடல் வன்மையில் சிறந்தவர்கள். ஆக்கத்திலே, தொழில் ஊக்கத்திலே, புய விக்கத்திலே இவை எல்லாவற்றிலும் உயர்ந்தவர்கள் இருக்கும் நாடு. இத்தனை எதற்காக என்று பார்க்கும் போது, இவையெல்லாம் உயர் நோக்கத்திற்காக என்று கூறுகிறார். இவ்வளவு பண்பட்ட குரல் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. இப்பேர்ப்பட்ட நம் மக்களைத் தலைமை தாங்க ஒப்பற்ற நேரு நமக்குக் கிடைத்திருக்கிறார். அவர் தலைமையின் கீழ், இந்நாட்டிலுள்ள மக்கள் எல்லாம், ஆக்கம் தொழில் ஊக்கம், புய வீக்கம், எல்லாம் பெற்று வாழ்வோமாக. பின்னர் சஞ்சீவி ரெட்டி அவர்கள் பரிசுகள் வழங்கிப் பேசினர்.

பரிசளிப்பு உரை: கனம் என். சஞ்சீவி ரெட்டி அவர்கள்



பாரதி இலக்கியக் கட்டுரை,பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கிய ஆந்திர முதலமைச்சர் கனம் என். சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஆற்றிய உரை:

நண்பர்களே,

எனக்குக் கொஞ்சங் கொஞ்சம் தமிழ் தெரியும், பேசவும் வரும், என்றாலும் தமிழ் நாட்டு அமைச்சர்களில் ஒருவனாகப் பணிபுரிந்து வில்கிப் பத்தாண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது பேச வருமோ என்பது சந்தேகம். எனவே நான் இப்பொழுது எனது தமிழாற்றலைச் சோதித்து உங்களையும் சோதிக்க விரும்பவில்லை. ஆங்கிலத்திலேயே பேச அனுமதிப்பீர்களாக.



ஆந்திர முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார்

சென்ற வாரம் உணவு மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்னை வந்து இரண்டு மணி நேரம் தங்கியிருந்தேன். மறுபடியும் இந்த விமானில் கலந்து கொள்ள வந்து இரண்டு நாட்கள் தங்கி யிருக்கப் போகிறேன். அடிக்கடி எதாவது சாக்கு வைத்துக் கொண்டு சென்னைக்கு வருவது போல எனக்கே தோன்றுகிறது. பற்பல ஆண்டுகள் சென்னையுடன் ஒன்றுக வாழ்ந்த பழைய உறவும் அபிமானமும் இப்படி மறுபடியும் எங்களைப் பற்றி இழுக்கிறது போலும். சென்னையை நாங்கள் அன்னியமாக என்னுவதோ மறப்பதோ எப்படி இயலும்? ஸ்ரீமான் பக்தவத்சலம் போன்ற பழம்பெரும் நண்பர்கள் எங்களுக்கு இங்கே எண்ணற்றவர்கள் இருக்கிறார்கள் அல்லவா !

தமிழ் நாடு முழுவதையும் தட்டி எழுப்பிய வரகவி சுப்ரமண்ய பாரதியார். தமிழகத்துக்குமட்டு மின்றி பாரத நாடு முழுமைக்கும் உரியவரான தேசிய கவி அவர்.

அந்த நாளில் உணர்ச்சியூட்டும் பாடல்களை இயற்றுவது மிகவும் சாகஸமான காரியம். தேசத் தைத் தவிர வேறென்றும் கிடையாது என்ற தீவிர உத்வேக முள்ளவர்கள் மட்டுமே துணிவுடன் செய்ய முடியும். அத்தகைய வீர சுதந்திர புருஷர் களில் ஒருவர் பாரதியார். எத்தகைய இடர்கள் வந்து சூழ்ந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாத துணிவு அவரிடமிருந்தது. எனவே விடாமல் மக் களுக்கு அவர் ஆவேசம் ஊட்டிவந்தார். மிகவும் சிறு பிராயத்தில் அவரை நாம் இழந்து விட்டது தான் துர்ப்பாக்கியம். நாற்பது வயது கூட நிறையா மூன்னமே அவர் காலமாகிவிட்டார். இப்பொழுது அவர் இருந்திருப்பின். தமது முதுமையிலும் அவர் நமக்கு மூன்னணியில்தான் இருப்பார். அதுவும் குறிப்பாக மொழியின் பெயராலும், சமயம், எல்லை ஆகிய வேறுபாடுகளின் பெயராலும் பிளவுணர்ச்சி தோன்றுகிற நேரத்தில், நமக்கு ஒரு பாரதியாரைத் தால் போதாது, பற்பல பாரதிகள் நமக்குத்தேவை. அதிலும் தேச சுதந்திரத்துக்கு ஒரு நெருக்கடி வந் துள்ள இந்த நிமிஷத்தில் மக்களை ஒன்றுபட்டுஎழச் செய்யும் தீவிரமான தூண்டுதல் நமக்குத் தேவை. இந்தக் தறையில் முயலும் ஒவ்வொருவருமே நாட் டின் திருப்பணிக் கேற்ற நற்றொண்டர்கள் என்று போற்றப் படுவார்கள். இவ்வகையில் பாரதி ஆற் றியுள்ள மகத்தான பணி மறக்க முடியாத ஒன்று. நெருக்கடிகளில் தான் வழிகாட்டும் தலைவர் கள் தேவை. விடுதலைப் போரில் காந்தியடிகள் நமக்கு வழிகாட்டக் கொடுத்து வைத்தோம். ஆனால் விடுதலை பெற்ற பின்னர் நம்மீது ஒருவித மயக்கம் வந்து படர்ந்து சாதி, இனம், மொழி போன்ற கீழ்த்தர உணர்ச்சிகள் மக்களை வந்து கவ் வ்க்கொண்டு விட்டன. இந்த நேரத்தில் தான் நமக்குத் தெளிவும் அறிவும் தணிவும் தரும் பொருட்டு பாரதியை நினைக்க வேண்டும். மிகுந்த பக்தியுடனும் நம்பிக்கையுடனும் அவரை எண்ண வேண்டும்.

வருடந்தோறும் நாம் அந்தப் புண்ணிய புருஷ ருக்கு விழா எடுத்து வருகிறோம் என்பது உண்மை தான். பாரத ஒற்றுமையைப் பாட்டிசைக்கும் பாவலர் பலர் பற்பல ராஜ்யங்களிலும் இருக்கிறார் கள். இந்திய ஒற்றுக்கீதமிசைக்கும் குயில்கள் இவர்கள்.

முன்பு இந்தியா அரசியல்ரீதியாக ஒரு நாடாக இருந்ததில்லை. பிரிட்டிஷார் காலத்தில்தான் இது ஆங்கிலப்பின் கீழ் வந்தது, காந்தியடிகள் மீண்டும், இந்த நாட்டைப் பாரத மாதா என்ற திருவுருவமாக நமக்கு உணர்த்தி இதன் புது வாழ்வுக்குப் போராடி மாறு நம்மைத் தூண்டி நடத்தினார். சிதறிப் பல துண்டுகளாகக் கிடந்த இந்தப் பரந்த பூப்பிரதே சத்தைத் தங்கள் ஆட்சி வலிமையால் ஒரு நாடாக உருவாக்கினர் வெள்ளையர். எனினும் இந்த ஒருமை மக்களின் மனப்பூர்வமான விருப்பத்தால் விளைந்த தல்ல.

அரசியல் ரீதியாக இல்லாவிடினும் எந்த நாளுமே கலாசார மனப்பண்பின் அடிப்படையில் இந்தியா ஒரே நாடாகவே பல்லாயிரம் ஆண்டுக ளாகத் தனது உள்ளுணர்வில் வாழ்ந்து வந்திருக்கி

தது. அந்த வகையில் எல்லையற்ற காலமாக நாம் ஒரே நாட்டவராக இருந்து வந்திருக்கிறோம். இமாலயத்திலுள்ள பத்ரிநாத் அல்லது வேறெரு ஆலயமாயினும் சரி, குமரியிலும் அல்லது வேறு எங்கு மூள்ள ஒரு கோயிலும் சரி, நாம் அனைவரும் ஒரு குலத்தினர் என்ற எண்ணத்தையே நமக்கு உண்டாக்கி வந்துள்ளன. அரசியலால் பிரிந்து பிளவுபட்டிருந்த காலங்களிலும் கூட அஸ்ஸாம், ஆந்திரம், கேரளம் அல்லது தமிழ்நாடு எந்தப் பிரதேசமாயினும் ஆன்காங்கும் இந்தக் கலாசார ஒருமைப்பாடு மட்டும் கொஞ்சமும் குறையாமல் நிலைத்து நின்றிருக்கிறது. புற வாழ்வின் பிரிவினைகளின் காரணமாகப் பிரிவின் முற்றுகைக்கும் படையெடுப்புக்கும் இந்திய மக்கள் இரையாகிப் போயிருக்கிறார்கள். நல்ல காலமாக இன்று நமது நிலை அப்படியில்லை. பாரதியும், காந்தியும் மற்றும் நம்மிடை வந்து தோன்றிய பற்பல தலிவர்களும் நமக்களித்த அறிவால், உணர்ச்சியால் நாம் அனைவரும் ஒரு நாட்டார் என்ற உண்மை நமக்கு வினாவி அதுவே நமது உயிர் வாழ்வாகவும் மலர்ந்து விட்டது. இன்று நாம் ஒன்றுபட்ட ஒரே இந்திய மக்கள். அகிலம் குறிப்பாகச் சீன ஆக்ரமிப்பு வந்த மறுகணமே இந்த நாட்டிலும் முன்னிருந்திராத அளவுக்கு ஒரு ஒருமைப்பாடு பளிச்சென்று தோன்றிப் பிரகாசிக்கிறது. இந்த உணர்ச்சி எப்பொழுது நமக்கு வந்து விட்டதோ, இனி பகைவர்களே எதிர்த்து நாம் வெற்றி பெறுவதில் துளியும் சந்தேகம் கிடையாது. நாம் அரிதின் பெற்ற சுதந்திரத்தை அபாயத்திலிருந்து எப்படியும் காப்பாற்றிவிட நம்மால் முடியுமும். இன்று சீனர்கள் போர் நிறுத்தம் செய்து பின் வாங்கவும் செய்திருக்கள் என்றால் அதற்குக் காரணம் நாம் காட்டும் இந்த ஒருமைப்பாடுதான்.

ஆக்ரிமிப்பின் வீனைவாக அகில உலகத்து மூள்ள ஜனநாயக சக்திகளின் ஆதரவு நமக்குக் கிடைத்துள்ளது. நாம் ஒற்றுமையாக இருந்தால் மேலும் வலிமை பெறும் எள்ளுக்குவது திண்ணம். நம்மை உணர்ச்சியூட்டும் பாரதி பாடல்கள் இந்த நேரம் எங்கும் முழங்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் அவர் காட்டிய தேச பக்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். எதற்காக சாதி மதங்களின் பேரால் மக்கள் வீணுகப் பிரிந்து நிற்க வேண்டும்? இந்த வேற்றுமைகளுக்கெல்லாம் முடிவு கட்டிவிட்டு நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். பாரதியைப் போற்றுவதற்கு இதுவே சரியான மார்க்கம். ஒரு மைப்பாடு இல்லையென்றால் உலக படத்தில் நாம் இருக்கும் இடமே மறைந்து போய்விடும். ஒவ்வொரு தேசத்திற்கும் தனிப்பட்ட சூழ்நிலையுண்டு. மேற்கத்திச் சிறு நாடுகளுடன் பாரதப் பெருநாட்டின் நிலையை ஒப்பு நோக்குவதில் ஒரு பயனும் இல்லை. மிஸ்டர் டிட்டோ இந்தியாவுக்கு வந்திருந்தபோது அவருடைய யுகோஸ்லேவிய நாடு ஆந்திர ராஜ்யத்தில் சரிபாதி அளவுகூடக் கிடையாதென்று சொன்னார். ஆனல் அது நமக்குப் போதிய பெருமையோ திருப்தியோ தரமுடியாது. யுகோவைவிட தமிழ் நாடும் இருமடங்கு பெரி

தென்று எண்ணி இறுமாந்து போய்விடுவதற்கில்லை. இந்தியா முழுவதையும் ஒன்றெனக் கொண்டால் அதன் கனம் மற்றெந்த நாட்டவராலும் அசைக்க முடியாத பெரும் பாறையாக அது அமையும்.

ஐரோப்பிய நாடுகளை எடுத்துக்கொண்டால் அவற்றில் மிகப் பெரியதான ஒரு சில நாட்டார் மட்டுமே விஞ்ஞானக் கலை வல்லவர்களாக இருப்பதைக் காணலாம். சிறு நாடுகளின் பாடு எப்பொழுதும் திண்டாட்டம் தான். பொருளாதாரத் துறையில் அவை தன்னிறைவு பெற்றவையாக ஒருக்கால் இருக்கலாம். எனினும் ருஷ்யா, அமெரிக்கா போன்றவற்றிற்கு இணையாக அவை தலை யைத் தூக்கிப் பார்க்க முடியாது. காரணம் சிறிய நாடுகளில் விஞ்ஞானத் தொழில் வளத்திற்கான மூலப் பொருள்கள் அனைத்தும் இருக்கமுடியாது. மூலப் பொருள் வளமிருந்த பெரிய நாடுகளே முன்னணியில் நிற்கமுடியும். இந்த அடிப்படையை உணர்ந்து கொண்டால்தான் நாட்டைப் பல பிரிவுகளாகக் கூறு போடும் கருத்து எவ்வளவு பேதமை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

சிறிய நாடுகளுக்கு எப்போதும் உலக அரங்கில் ஒரு முக்கியத்துவமும் கிடையாது. எனவே பிரிவினே எண்ணங்களை நாம் விட்டுத் தொலைத்தாக வேண்டும். மேலும் மேலும் ஒன்றுபட்டு நாம் மாபெரும் அளவில் விரிவடைவதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். மொழி வாரியாக நாம் பிரித்துக் கொண்டிருக்கிறோம். இது நாம் மேலும் அதிக ஒற்றுமைப்படும் பொருட்டுத்தான். என் அனுபவத்தில் மொழி வாரி ராஜ்யங்கள் தலிவர்கள் மட்டத்தில் மட்டுமன்றி மக்களிடையும் நல்ல அபிமானமும் நட்புமே மிகுந்திருக்கிறதென்றே தெரிகிறது. பரஸ்பர நம்பிக்கையும் பெருகித்தான் திருக்கிறது. இத்தகைய உறவுணர்ச்சி இரண்டு தலிவருமை மக்களிடை மலர்ந்து நிலைபெற்ற வருவதைப் பார்க்கிறேன். இந்த உணர்ச்சி நம்மை மேலும் வலிமையுறச் செய்யும்.

நம்மில் உள்ள வேறுபாடுகள் யாவும் நமது ஒற்றுமையை வலியுறுத்தவே என்பதைத்தான் பாரதி மிகவும் அழகாகப் பாடினர். நாம் அவருடைய அந்தக் காட்சியை மெய்ப்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம் பாரதி பிறந்த விழா ஆண்டு தோறும் நடைபெறவேண்டும் அவருடைய இந்த ஒருமைப்பாட்டுச் செய்தி உலகெலாம் பரவவேண்டும். இது தனெனஞ்சிற்கு மட்டுமின்றி பாரத மக்கள் யாவருடைய கடமையும் ஆகும். இந்த விழாவிற் பங்கு பெரும் வாய்ப்பை யளித்த குழுவினர்க்கு என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

(சொற்பொழிவைத் தொடர்ந்து கட்டுரை பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்கு அவர் பரிசுகளை வழங்கினர்.)

செயலாளர் திரு. அகிலன் அவர்களின் நன்றியுரையுடன் காங்கே நிகழ்ச்சிகள் இனிது முடிவுற்றன.

★

வரலாறு கண்டறியாத

மாபெரும் பாரதி ஊர்வலம்

★

சென்னை மாநகரில் வரலாறு கண்டறிந்திராத அளவுக்கு மகாகவி பாரதியின் பிறந்த நாள் விழா ஊர்வலம் நடைபெற்றது ஒரு கண் கொள்ளாக் காட்சி.

ஊர்வலம் என்றால் தமிழகத்து மக்களே சரி வைத்துச் சென்றது போன்ற பிரம்மாண்டமான ஊர்வலம். சென்னை மவுண்ட்ரோட் ரவுண்டானாவில் ஊர்வலத்தின் இறுதி இருந்த போது அதன் முகப்பு ஜனரல் பாட்டர்ஸ் ரோடைக் கடந்து கொண்டிருந்த தென்றால் அதன் நீளத்தை ஊகித்துக் கொள்ளலாம்.

ஜெமினி கலைஞர்கள் தயாரித்த பாரதியின் திருவுருவச் சித்திரம் ஆள் உயரத்துக்கு மேல் ஓங்கி உயர்ந்து நின்ற பாங்கில் ஊர்வலத்தின் முகப்பில் கம்பீரமாக வகித்து நடக்க, வந்தேமாதர கோஷம் வானைப் பிளந்தது. ஊர்வலம் சுமார் இரண்டு மணி நேரம் மூன்று மைல் தூரம் சென்று திருவல்லிக்கேணிக் கடற்கரையடைந்தது. பேர்க்களம் செல்லும் வீரர்களைப் போன்று காக்கி உடையணிந்த மாணவர் அணிவீர நடை போட்டுச் சென்றது. பெண் மக்கள் தங்கள் குலத்தின் விடுதலைக் கவிஞனுடைய புகழைப் பாடியவாறு மாணவரணியைத் தொடர்ந்தனர்.

மக்களின் தலைவர் மாணவர் முதலமைச்சர் காமராஜர் நடுவில் வர அமைச்சர் பக்தவத்சலமும் தமிழரசர் ம. பொ. சியும் மருங்கில் நடக்க, தலைவர்கள், அமைச்சர்கள், கவிஞர்கள், புலவர்கள் புடைசூழ ஊர்வலம் நடந்தது. பாரதியின் புதல்வியரும் அவர் தம் மக்களும் பாரதியின் பழைய நண்பர்களும், உறவினரும் விழா ஊர்வலத்தில் மகிழ்வுடன் நடந்தனர். கம்யூனிஸ்ட்டுகளின் தலைவர் ஜீவானந்தம் தமது வாழ்நாளில் இறுதியாக கலந்து கொண்ட மாபெரும் நிகழ்ச்சியும் அணிவகுப்புப் அதுவாகத்தான் இருக்கக் கூடும்.

அரசியல் ஊர்வலங்களில் ஒழிக என்ற குரலைக் கேட்டுச் செவிடுபட்டிருந்த மக்களின் செவிகளில் அன்று பாரதி பாடல்களும் வாழ்த்தொலிகளும் புகுந்து மங்கள நாதம் நிறைத்தது.

நெடுகிலும் ஆடவரும் மகளிரும் அணிவகுத்துச் சென்ற நெடிய ஊர்வலத்தின் இடையில் மூன்று பெரிய வண்டிகள்; அவற்றில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிவாணர்கள் ஒலிபெருக்கி வைத்து உரத்த குரலில் பாரதி பாடல்களை முழங்கினர். பாரதி புகழும், சீன எதிர்ப்புக் கோஷமும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய உத்வேகத்துக்கு முரசறைந்து கொண்டிருந்தன.

ஒரு டிரக்கில் முத்தமிழ்க் கலாவித்வரத்ன டி. கே. எஸ். சகோதரர்கள் இசையுடன் பாரதிபாடல் களை முழக்கி வந்தனர்.



மாணவர் படை நடையிலும் மார்ச்சியார் காட்சி

ஒரு வண்டியில் கொத்தமங்கலம் சுப்பு, சங்கு சுப்பிரமணியம், திருலோக சீதாராம், எஸ். டி. சுந்தரம், சக்திதாசன் சுப்பிரமணியம், ஏ. கே. கோபாலன் ஆகியோர் இடிமுழக்கம் செய்தனர்.

மற்றொரு வண்டியில் இசைவல்ல கலைஞர் கோஷ்டி யொன்று பாரதி பாக்களைப் பாடிவந்தது.

அன்று சென்னை மக்கள் ஒன்று ஊர்வலத்தில் இருந்தனர், அல்லது வழி நெடுகிலும் நின்று ஊர்வலக் காட்சியைக் கண்டு களித்துப் பின்தொடர்ந்தனர். யாவரும் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் பாரதிக்கு அஞ்சலி செய்தனர்.

ராணி எலிஸபெத் வந்த நாளில்கூட இத்தகைய கோலாகலத்தைச் சென்னை கண்டதில்லை யென்றனர் சென்னை மக்கள்.

★

கடற்கரைப் பொதுக் கூட்டம்

★

திருல்லிக்கேணி கடற்கரையில் மக்கள் கடல் போல் திரண்டு கூடியிருந்தனர். பாரதியின் பாடல்களை அவரது வீர கர்ஜனையுடன் கேட்டுப் பழகியிருந்த அந்தக் கடல், இன்று அவருடைய புகழைக் கேட்க ஆவலாயிருப்பது போல் ஜனக் கூட்டத்தை எதிரேறிப் பார்த்தது. உயரமான மேடை, எதிரே லட்சோப லட்சம் மக்கள், சிறு சத்தம்கூட இல்லாமல் அமைதியுடன் மூன்று மணி நேரம் பாரதிபுகழ் முழங்கியது. மக்கள் கேட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார்கள். புத்துணர்ச்சி பெற்றார்கள்.

அன்று நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் ஒருவர்பின் ஒருவராகப் பல அன்பர்கள் மேடைக்கு வந்து பாரதி பாடல்களே முழங்கினர். ஆம் அங்கும், ஷண்முகம் அன்று முழங்கத்தான் செய்தனர். இசையுடன் சௌந்தரராஜன் முதலில் பல பாடல்களைப் பாடினார். பாரதியின் பேத்தியர் இருவரும் இன்குரலில் உணர்ச்சி ததும்ப இசைத்தனர். கொத்தமங்கலம் சுப்பு தமது பாரதி சரித்திர நாடோடிப் பாடலில் ஒரு பகுதியைப் பாடினர். டி. கே. ஷண்முகத்தின் செல்வன் இன்னிசை வாணன் இனிமையாகப் பாடினான். பாரதாசன் பாரதியின் ஆணைச் சிறப்பைப் பற்றிப் பாடிய உணர்ச்சி மிகுந்த பாடலைக் கவிஞர் திருலோக சீதாராம் பாடிக்காட்டினர்.

பின்னர் பொதுக் கூட்டம் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

விழாக் குழுவின் சார்பாக, துணைச் செயலாளர் திரு. கருப்பையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

குழுத்தலைவர் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் பேசும் பொழுது, விழா தொடங்கப் பெற்ற வரலாற்றை விளக்கிக் கூறிவிட்டு தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பாரதி பாடல்கள் நமக்குத் தரக்கூடியவையாக இருப்பதுடன் அருமையாக நாம் பெற்ற தேசிய சுதந்திர வாழ்வுக்கு அன்னிய ஆக்ரமிப்பு ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியில் மக்களுக்குச் சுதந்திர ஆவேசம் ஊட்டக் கூடியவையாகவும் அவை இருக்கின்றன வென்றும், பாரதி விழாவைக் கொண்டாடுவதன் மூலமே நமது மக்களின் உள்ளுணர்ச்சியில் நல்ல பண்புகள் செயல் படக்கூடுமென்றும் எடுத்துக் காட்டினார். பாரதி விழா எதிர்பார்த்ததைக் காட்டிலும் பெரும் வெற்றியாக அமைந்துவிட்டதென்றும், ஒரு கவிஞனுடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாட இப்படி வெள்ளம் போல் மக்கள் கூட்டம் திரண்டு வந்திருப்பதை எண்ணி ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமிதமடையலாமென்றும், இனி ஒவ்வொரு ஆண்டிலும் பாரதி பிறந்தநாளை மக்கள் அதிக உற்சாகத்துடன் கொண்டாடுவார்களென்று நம்புவதாகவும் கூறி, பொதுக்கூட்டத்திற்குத் தகுந்தமைதாங்கி நடத்திக் கொடுக்கும்படி முதலமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

முதலமைச்சர் தமது தெளிவான சொற்பொழிவில், பாரதியைப் பற்றி விளக்கிப் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமேயில்லை யென்றும், பாரதி பாடல்களே வாய்விட்டு அதன் பொருளும் உணர்ச்சியும் மக்களின் காதையும் கருத்தையும் தொடுமாறு பாடத்தெரிந்தவர்கள் தெருத் தெருவாகமுழங்கினாலே போதுமென்றும் கூறினர். சங்கு சுப்பிரமணியம் போன்றவர்கள் தேசியப் போராட்ட காலத்தில் இப்படிப் பாரதி பாடல்களைப் பாடி முழங்கிய அந்த நாளில் எத்தகைய உணர்ச்சியும் ஆவேசமும் மக்களிடையில் தோன்றியதோ அந்தச் சூழ்நிலையை மறுபடியும் தோற்றுவிக்க வேண்டுமென்றும், குறிப்பாக, இளம் சிறுவர்களுக்குப் பாரதி பாடல்களைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்.

தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. பேசும்போது, இருபதாண்டுகளுக்கு முன் மக்களுக்கு இருந்த அதே தேசிய ஆவேசத்தை மறுபடியும் இன்றைய பாரதி விழாவில்தான் காண்பதாகவும், இதனால் தான் இருபதாண்டு இளமை தனக்கு ஏற்பட்டிருப்பது போன்று உணர்வதாகவும் மிகவும் சுவையபடக் கூறி, தேசிய சக்திகள் சிறு பிளவுகளை மறந்து மறுபடியும் தோளோடு தோள் சேர்ந்து ஒன்றுபடக் கூடிய காலம் வந்திருப்பதைக் கண்டு தான் பெருமிதமும் பேருவகையும் அடைவதாகக் கூறினர்.

பின்னர் பேசிய ஆந்திர மாநில முதல மைச்சர் திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள், பழைய தண்பர்களான தேசியத் தலேவர்களும் தியாகிகளும் மீண்டும் ஒரே மேடையில் பாரதியின் பெயரால் சந்திக்கவும் ஒத்த மனத்துடன் நாட்டின் பொது நலத்தையும் பாதுகாப்பையும் பற்றிச் சிந்திக்கவு மான ஒரு தேசியச் சூழ்நியைப் பாரதி விழாவில் நாம் காணும் போது எல்லேயற்ற மகிழ்ச்சியும் புத்து ணர்ச்சியும் பெறுவதாகக் குறிப்பிட்டார். நீதிமுறை விசாரத பாரத நாடு, அன்னிய ஆக்ரமிப்பிலிருந்து விடுபட்டு உலகில் உயர்ந்து விளங்கப் போவது உறுதி; பிரிந்து சென்ற ஆந்திரமும் தமிழ்நாடும் உற்ற சகோதரர்களாக வாழ்ந்து வருவது மகிழ்ச்சிக் குரியது; எல்லா ராஜ்யத்து மக்களும் இவ்வாறே ஒன்றுபட்டு நமது பிரதமர் நேரு அவர்களின் கரங் களே பலப்படுத்த வேண்டியது ஒன்றுதான் நமது வெற்றிக்கு அடிப்படை யென்று கூறினர். தொடர்ந்து டாக்டர் மு. வரதராசனர், கலே மகள் ஆசிரியர் திரு. கி. வ. ஜகன்னதன், திருமதி எஸ். அனந்தநாயகி ஆகியோர் அருமையான சொற்பொழிவுகளேச் செய்தனர். செயலாளர் திரு. அகிலன் அவர்கள் பேச்சாளர்களே அறிமுகம் செய் வித்துக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் பாரதி கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவன் பட்டாபிராமனும் மாணவி ஜயாவும் வளர்ந்து வரும் இளேஞர் சமுதாயத்தின் உணர்ச்சி எத்தகைய தென்பதை நிரூபிக்கும் முறையில் அரு மையாகச் சொற்பொழிவாற்றினர்கள்.

திரு. அழ. வள்ளியப்பா அவர்களின் நன்றியு ரைக்குப் பின்னர் வாழிய செந்தமிழ்ப் பாடலுடன் கடற்கரைப் பொதுக் கூட்டம் இனிது முடிந்தது. பாரதிபுகழ் வாழ்க, வந்தே மாதரம் என்ற கோஷங் கள் வானேப்பினக்க, லட்சோப லட்சம் மக்கள் எழுந்து நின்று பாரதிக்கு அஞ்சலி செய்து வீடு திரும்பினர். ★



கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் தொடங்குமுன்பு ஜனத் திரளுக்கிடையில் அமர்ந்திருந்த மக்களின் தலேவர்களேப் படத்தில் காணலாம். முதல மைச்சர் காமராஜரும் அருகில் தமிழரசுக் கழகத் தலேவர் ம. பொ. சி. மற்றும் கா. மு. ஷரீப், டாக்டர் மு. வரதராசனர், நாரணதுரைக்கண்ணன், ஆக்கூர் அனந்தாச்சாரி யார் ஆகியோர் மேடையில் முழங்கப் பெறும் பாரதி பாடல்களேச் செவிமடுத்த வண்ணம் அமர்ந்திருக்கின்றனர்.



ராஜாஜி ஹால் முகப்பில் மலர்ந்த முகத்துடன் மாபெரும் தலேவர்கள்



அமரகவி

சுப்ரமண்ய பாரதியாரின்

81-வது பிறந்தநாள் விழா

10–12–62

இரண்டாம்நாள் நிகழ்ச்சி

★

ராஜாஜி மண்டபம்

இந்திபமொழிகளில் தேசியம்

பன்மொழிக் கருத்தரங்கம்.

பிறமொழிகளில் பாரதி

பாரதியின் கவிதைகளை பிறமொழியில்
மொழிபெயர்த்த கவிஞரும் கவிதையும்
அறிமுகம்.

பாரதியும் பாரதமும்

தமிழ் இலக்கியக் கருத்தரங்கம்.

—: இன்றைய விழாத் தலைவர்கள் :—

திரு. ஆர். வெங்கட்டராமன்
,, கி. பாலசுப்ரமண்ய அய்யர் M.L.C.
,, பாலபாரதி ச. து. சு. யோகி
,, தெ. பொ. மீனுட்சிசுந்தரனார்

இரவு 8 மணிக்கு
சேவா ஸ்டேஜ் குழுவினரின்
இசை பாரதம்
—இசைநாடகம்



இந்திய மொழிகளில் தேசியம்

அமைச்சர் கனம் ஆர். வெங்கட்ராமன் தலைமை உரை

இன்றைய காலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகிக்குமாறு எனைக் கேட்டுக்கொண்டார்கள். அதை பாக்கியமாகக் கருதுகிறேன். நம் நாட்டின் சிறந்த இலக்கிய மேதைகள் இந் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு அற்புதமான விருந்தளிக்கப் போகிறார்கள். எந்த ஒரு சமூக அல்லது அரசியல் விழிப்புக்கும் அந்த யுகத்தின் இலக்கிய புருஷர்களே காரணம். அவர்களது எழுத்து அல்லது கவிதைதான் ஆத்ம மலர்ச்சி தந்திருக்கிறது. அதுவும் இன்று நம் நாடு இருக்கும் நிலையில் இன்றைய நிகழ்ச்சிக்குத் தனிச் சிறப்பு ஏற்படுகிறது.

பாரதி வாழ்ந்த காலம் நாடு அடிமைப் பட்டிருந்த காலம். அடிமை வாழ்வே விதி என்று மக்கள் நம்பியிருந்த காலம், எனவே மக்களின் மனத்தில் தேசிய உணர்ச்சியை விடுதலைவேட்கையை ஊட்டும் வேலையில் பாரதியார் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியிருந்தது, சமுதாயச் சூழ் நிலையும் மனிதர்க்கு மனிதன் வேறுபாடென்றும் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனி நீதி என்றும் அமைந்திருந்தது. பாரதியார் இந் நிலை கண்டு இரங்கி மனிதனுக்கு மனிதன் பேதமில்லை என்று அறை கூவினர், பெண்டிர்க்கு விடுதலை பாடினர். 'தனியொரு வனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று குரலெடுத்தார். நாடெங்கும் பொருள் வளம் பெருக தொழில் வளம் பெறுக வேண்டும் என்றார். நமது பணி என்ன என்பதை தெரிந்துகொள்ள வேறெங்கும் தேடி அலைய வேண்டாம். பாரதியைப் படித்தாலே போதும். (கரகோஷம்)

அரசியல் எழுச்சிக்கும், சமுதாய உயர்வுக்கும், தமிழ் மேம்பாட்டுக்குமாக மூன்று பாணிகளில் பாரதியின் சேவை சிறந்து விளங்குகிறது. பல் மொழியினரும் கூடும் இவ் வரை யரங்கம் தேசிய உணர்வின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாகவும், உறு துணையாகவும் அமையும் என்று நம்புகிறேன்.

பின்னர் திரு. எஸ். ஏ. பி. அண்ணாமலை பிறமொழி அறிஞர்கள் அவைக்கு அறிமுகம் செய்வித்தார்.

திரு சச்சிரவுத்ரயர்—ஒரியா

என் இளமை தொட்டே மகாகவி பாரதியிடம் எனக்கு எல்லையற்ற ஈடுபாடு உண்டு. அவருடைய கவிதைகளை தமிழில் நான் பார்க்கக் கூடவில்லை. பாரதி ஒரு தேசிய கவி. தென்னாட்டுக்கு மட்டும் உரியர் அல்ல அவர். இந்தியா முழுமைக்கும் உரியவர்.

தேசிய உணர்வுக்குக் கோற்றுவாய் சமீப காலத்தில் தான ஏற்பட்டிருக்கிறது. முன்னெல்லாம் அரசர்கள், ஜமீன்தார்கள் என்றுஇருக்கும்போது, உணர்வின் அடிப்படை அரசியலாக இருந்தது. இப்போதோ பொருளாதார, சமூக அடிப்படையில் தேசிய உணர்வு முகிழ்த்திருக்கிறது. ஒரியாவில் இவ்வுணர்வுக்கு முதற்குரல் எழுப்பியவர் அமரர் மதுசூதன் தாஸ் ஆவார். பிரிந்து கிடந்த ஒரிய மக்களே தமது கவிதைகளால் ஒன்று திரட்டி அண்டை மாகாணங்களில் சிதறுண்டு கிடந்த பகுதிகளை எல்லாம் இணைத்து தனித்த ஒரிசா மாகாணத்தை அவர் அமைக்கப் பாடுபட்டார்.

வங்காளம் பிரிக்கப்பட்டதும், மக்களிடையே உத்வேகம் எழுந்தது. முடியரசியை எதிர்த்து திரு. ராயின் கவிதைகள் ஆவேசமாக அன்றைய நிலை பச்தர் கீனேயும், ராவ் பகதூர் கீனேயும் சாடின. திரு. ஆர். சி. சென், பிளாசி யுத்தத்தை நிகழ்ச்சிகளைக் கொண்டு அற்புதமான கவிதை எழுதினர், இவரைத் தொடர்ந்து நிறையிலே வாழ்நாளைக் கழித்த திரு. ஜி. பி. தாஸின் சேவை பெரிதாக விளங்கிற்று, 1930-ஐத் தொடர்ந்த கவிதைகளில் பொதுவுடைமை அல்லது சோஷலிஸ தத்துவம் புரை போடலாயிற்று ஒரியாவைப் பொறுத்த வரையில், எண்ணற்ற எழுத்தாளர் பலர் மக்களிடையே தேசிய உணர்வைப் பரப்பும் பணியில்அயராது பாடு பட்டிருக்கிறார்கள்.

இறுதியாக, ராய் அவர்கள் பேசும்போது, பாரதியின் வாழ்வே நியாசக் கிரமமும் என்றார். அவரைப் போன்ற கவிஞர்களது நியாசமே நாட்டை அடிமைப் பிணியிலிருந்து மீட்டது என்றார்.

திரு. எம். வி ராஜத்யட்சா—மராத்தி.

மகாகவிக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு தமக்குக் கிடைத்த பெரும் பேறு என்றார் ராஜத்யட்சா.

பாரத நாடு பழம் பெரும் நாடு. இக் கினவை அகற்றவர் பாரதி. தேசிய உணர்வு என்பது வெறும் உணர்ச்சிக் கூச்சலல்ல எனபதை உணர்ந்து, ஆழமீக அடிப்படையில் அதை நிலை நிறுத்தியவர் பாரதி.

பாரதி தமிழ் நாட்டுக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல. அவர் தேசிய கவி. தாகூரைப் போல மகாத்மாவைப் போல தமிழ் நாட்டுக்கு அவர் ஒரு பொக்கிஷம்.

மாத்திபில ஞானேஸ்வர் தான் முதன் முதலாக தனி மனிதனின் பொருட்டு வாதாடிப் பாடியவர். 'அனைத் துயிரும் சமமே' என்ற கருத்தும் அவர் கற்பித்ததே. துகாராமும், ராம்தாஸரும் உயர்ந்த இலக்கியப் படைப்புகளை மாத்திக்குத் தந்திருக்கிறார்கள். 'சேக வதம்' போன்ற புராண கதைகளை வைத்து தேசிய உணர்வுக்குக் கோபுரம் கட்டியாழுத்தவர்கள் வரலாற்றையும், புராணத்தையும் அழகாகப் பினனி, அதன் மூலம் மக்களைக் கவர்ந்தவர்கள். கிண்டலாகவும் சிலேடையாகவும் எழுதிய ஒரு பெரியார் இருந்தார். அக்காலத்தில் 'இம்' என்ருல சிறைவாசம் ஆயிற்றே! தேசிய உணர்வை அப்படடமாகச் சொல்ல முடியுமா!

ராமாயண காதை எழுதியவர் கவி 'ஏகநாதர்' மானிட தத்துவத்தின் மெய்ப் பொருளாக ராமனை அவர் காட்டினர். ஏகநாதர் எழுதகால் எழுதியதை சிவாஜி செயலில் காட்டினர் என் று சொல்வார்கள், அக்காலத்தில் பக்தியே சாதனம். தேசிய உணர்வை எழுப்ப அதுவே வாகனம் ஆயிற்று,

மாவீரர் நிலக்கின் எழுத்தும் பேச்சும் மக்களை வீறு கொண்டு எழச் செய்தன. அவரது சேவையால் மாராஷ்டிரம் மட்டுமல்ல இந்தியா முழுதுமே தேசிய உணர்வு பெற்றெழுந்தது.

கேசவ சுதா எழுதினர், தமக்கு ஜாதியே தெரியாது என்று.

பழைய பெருமை வேண்டியதுதான், ஆனல் அதிலேயே அமைவது சரியாகாது. புதிய சமுதாயம் காணவேண்டும். ஜஸ்டிஸ் ரானடேயின் எழுத்துக்கள் கவின உலகை அமைக்கும் பணிக்கு மக்களை அறைகூவின.

எந்த இலக்கியமாகட்டும், அது பாமரனுக்கும் சொந்தமானதாக இருக்கவேண்டும். இல்லாவிட்டால் இலக்கியம் வாழாது. இம்முறையில் நோக்கினுல், பாரதியின் பாடல்கள் பாமரனுக்கும் உண்மையாக இருக்தன. தனிமனிதனின் உணர்ச்சிகளை அவை வெளியிட்டன. (ஃகோஷம்)


திரு. எம். மாரியப்ப பட் — கன்னடம்

கன்னட இலக்கியத்தில், தேசிய உணர்வுக்கு எப்போதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. கன்னடத்து வள்ளுவர் என்று போற்றப்படும் திரு. சர்வஞ்ஞரின் எழுத்துக்கள் சிறப்பானவை. 1920-க்குப் பிறகு இப்புத்துணர்ச்சியை வெளியிடும் எண்ணற்ற கவிதைகளும் கவினங்களும் எழும்தன. இவற்றில் அலூர் வெங்கடராவின் கர்னாடக கதா வைபவா என்னும் நூலே ஆதி நூலாகப் போற்றப்படும். மனிதரில் சிலரை மேல்சாதி என்றும் சிலரைக் கீழ்சாதி சன்றும் கூறும் மடமையைக்கண்டித்தவர் கோவிந்தபாய் என்னும் 90 வயதை கெருங்கும் அறிஞர். உழைக்காது வாழ்பவனும், தேசத்துரோகியும், சுயநலக்காரனும், நாட்டுப்பற்று அற்றவனுமே கீழ்சாதிக்காரன் என்றார் அவர்.

கவி பர்திரே மற்றொரு வாடாமலர். கவி புட்டப்பா கன்னடத்து கோகிலம ஆவார். அவரது பாடல்கள் அனைத்திலும் தேசீயமே எதுதை, தேசீயமே மோனை. மற்றொரு மூதறிஞர் டி.வி. குண்டப்பாவின் சுதந்திர பாரதம் எனும் சிறு காவியம் குறிப்பிடத்தக்கது. இவர்களெல்லாம் மூச்சு முட்டிப்போன உலகுக்கு பிராண வாயு போன்றவர்கள்.

டாக்டர் வே. ராகவன்—வடமொழி

வேதக் கடவுளர்களும் கருத்துக்களும் பாரதியைக் கவர்ந்தன. ரிக் வேதம் தெய்வங்களைப் போற்றித் துதித்ததுடன் சமுக வாழ்வின் சித்திரங்களாகவும் அமைந்து அன்ருட வாழ்வின் வழித்துணையாகவும் இருக்கிறது. மனிதராசியின் ஒருமைப்பாட்டையும் அமைதியையும் இங்கிதத்தையும் பன்னெடுங்காலத்து



கருத்தரங்கிற்கு வந்திருந்த ரசிகப்பெருமக்களில் ஒரு பகுதியினர்

முன்பே வேதங்கள் பாடியிருக்கின்றன. பாரதியின் "ஜய பேரிகை" வேதக் கருத்துக்களையே ஒலிக்கின்றன.

வீரர்களின் வெற்றிக்கு மட்டுமல்லாமல் சமூகத்முன்னணியில் நிற்க வேண்டிய இளைஞர்களுக்கும் பேசியிருக்கின்றன. தேசப்பக்தி யென்பதை ஒரு தத்துவமாக மட்டுமே குறிப்பிட்டு விடாமல், நடைமுறையில் நாடு காக்கவும், ஆளவும், அனுபவிக்கவும் மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள் யாவும் வேதங்களில் காணப்படுகின்றன. கமகம் என்று சொல்லப்படும் பகுதியான போக போக்யங்களின் சிறப்பைப் பாடும் கவிதைகள்.

பாரதமாதா என்ற சொல் இன்று ஒவ்வொருவர் நாவிலும் நடமாடுகிறது. சக்தி உபாசகர்களான பங்கிம்-பாரதி இருவரிடமும் இந்தியநாடு-பாரதமாதா வெனும் பராசக்தி யென்றும் புகழும் பெற்றுப் பொலிந்தன. மண்ணுலகைப் பூமிதேவியென்றும் காக்கும் கடவுளான மகாவிஷ்ணுவின் பத்தினியாகவும் கொண்டு வழிபடும் மரபு நமதுடையது. இது வேதக் கருத்தாகும்.

இமயம் முதல் குமரி யீறாக உள்ள மண்ணகத்தை பாரத வாஷம் என்று ஒருருவில் சித்தரிக்கும நமது புராணங்கள் மிகப் பழமையானவை. பூகோள ரீதியான ஒரு இந்தியச்சித்திரமாக நமது உள்ளத்தில் இன்று படிந்திருக்கிறதெனறால் அது நமது பண்டைய புராணங்களின் சித்திரமேயாகும். சப்த கதிகள், சப்த மலைகள், சப்த க்ஷேத்திரங்களென்றுமம நமது அனுஷ்டானவைகளில் நாம் எண்ணுமல் இருப்பதில்லை. இவையெல்லாம் தொன்மையாக வர்தள்ளதுமைப்பாட்டுணர்ச்சியின் வினையேயாகும். தீர்த்த யாத்திரையில், ராமேஸ்வரம் போய்வந்தால் தவிர கங்கா ஸ்நான பலன் சித்திக்காது என்ற முன்னோர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் அல்லவா! புராணங்கள் இந்தப்பரந்த நாட்டை ஒருருவாக்கவே கண்டிருக்கின்றன. நமது மகரிஷிகள் இந்தியாவுக்கு இமயம் எத்துணை முக்கியமென்பதைக் கண்டவர்கள். எனவேதான் இமயமலையைப் பாரத மக்கள் எங்காளுக போற்றும் படியாக, இறைவன் இறைநியர்க்கு அங்கு ஒரு கைலாசத்தையும் வைத்திருக்கிறார்கள். நமது வெளி வீவகார மக்ராலயப் பிரதிநிதிகள் பிகிங் சென்ற எல்லி விவகாரம் பற்றிப் பேசும் போதும், நமது புராணச் சான்றுகளை ஆதாரங்காட்டித் தொன்று தொட்டு இமாலயம் நம் முடையதாகவே இருந்துவரும உண்மையை வாதிட்டிருக்கிறார்கள்.

வேதங்கள் குறிப்பிட்டுள்ள பல வேள்விகளில் அஸ்வமேதம் ஒன்று. ஒரு சக்ரவர்த்தியின் ஆட்சியில் அமையும் ஒரு பெரும் பாரதநாடு என்ற கருத்தே இந்த வேளவியின் அடிப்படை. ராஜ ரிஷிகளையும், சக்ரவர்த்திகளையும் பற்றிய ஒவ்வொரு குறிப்பிலும் ஒரே இங்கியர என்ற கருத்தையே புராணங்கள் வலியுறுத்தியுள்ளன.

பூமிப் பரப்பை அளக்கும் நெடுங்கோலென நீண்டு கிடக்கிறதென்ற காளிதாஸன் இமயத்தை வருணித்தான். அவனுடைய ரகுவம்சம் பாரத பூகோளத்துக்கு ஒரு சித்திரமே தருகிறது. குமார சம்பவத்தில் இமயம் ஒரு கதா பாத்திரமாகவே ஆகிவிடுகிறது. பார்வதி இமவான் புதல்வியாகும் வெற்றியும் பெறுகிறள், காளிதாஸனுக்குப் பின்னர், ஸ்ரீ ஹர்ஷர், குமிப் பிடத்தக்கவர். இப்பால் இந்தியநாடிலும் சமஸ்கிருத இலக்கியத்தில் தேசிய உணர்ச்சிக்கு உரிய இடம் தரப்பட்டுள்ளது.

உன்னி கிருஷ்ண நாயர்.

பொதுப்படையாகச் சொன்னல், இந்திய இலக்கியங்கள் அனைத்திலுமே தேசிய உணர்வு அடங்கிக் கிடக்கிறது. வியாசரை இந்திய நாகரீகத்தின் ஆதிகர்த்தாவாகவும், வால்மீகியை நெறிச் சர்பாகவும், காளிதாசரை அருள், பொருள் என்னும் இவற்றின் சார்பாகவும் கொள்ளலாம். புராணங்களில் ஜம்பூ நிபத்தையும் பாரத வர்ஷத்தையும் பற்றி எண்ணற்ற குறிப்புகள் காணக்கிடக்கின்றன. இமயமே நிலத்தை அளக்கும் கோல் என்ருன் காளிதாசன். கடலே ஆணையாகவும் இமயமும் விந்தியமும் காதணிகளாகவும் கொண்ட நாடு என்ற வர்ணித்தான் பாணன். இவற்றால் பண்டைப் புலவோர்க்குத் தாயகம் ஒரு ஒருமித்த பூமியாகத் தோன்றியதை நாம் காண்கிறோம்.

முன்னுர் தேசிய உணர்வுக்கும் இந்நாள் உணர்வுக்கும் இடையே உள்ள நீண்ட காலத்தில் இலக்கிய கதி மேகமாக இருந்திருக்கிறது. கிருஷ்ண கதையை செருலோரி எழுதிய போதும், ராமாயணத்தை எழுத்தச்சன் எழுதிய போதும், அவற்றில் இன்று நாம் காண்கிற தேசிய உணர்வுக்கு அழுத்தம் தரப்பட்ட தாகச் சொல்ல முடியாது. பின்னர் வந்த குஞ்சன் நம்பியார் நெய்த்த கடையிலிருந்து விஷ்ணு துளசி பண் இசைத்தார். அவரது பாடல்களுக்கும் புராண மே மூலமாயினும், அவற்றுக்கு கதையின் உத்திகளை ஏற்றிஞர்.

குஞ்சன் நம்பியாருக்குப் பின்னர் ஒரு நூற்றைம் பது ஆண்டுக் காலம் வரண்ட காலம ஆகும். அக்மிய ஆட்சிக்கு அடிமைப்பட்டு ஏதாவதொரு அரசரை அண்டி வாழ்ந்த புலவரின் உள்ளத்தில் தேசிய எழுச்சியே இல்லே. 19ம் நூற்றாண்டு நிறுதியில் தேசிய உணர்வு மெல்லத் தலேகீட்டிற்று. வள்ளத்தோலே இவ்வுலைப்புக்கு முதற்குரல் கொடுத்தவர். எண்ணற்ற சமஸ்கிருதப் புராணங்களே மலேயாளத்தில் மொழி பெயர்த்தார் இவர். அவரது மொழி பெயர்ப்பில் நாட்டின தொனமை பற்றிய அற்புதமானகாட்சிகளைத் தீட்டினர். புராணங்களின் நோக்கமே விடுதலே என்ரு அவர். நாட்டுப்பற்று என பது அவரைப் பொறுத்தவரை வேள்வியாகும். அரியற் காரணம் ஏதும் கிடையாது அவருக்கு. ஆங்கிக கலாசார அடிப்படையே இவ்வுணர்வின அடிப்படை.

குமரன் ஆவினும் உள்ளூரும் சிறந்த கவிஞர்கள். ஆனல அவர்களது கவிதைகளில் தேசிய உணர்வுக்கு அதிக இடமில்லே. ஆசாரமிப்பொறுத்தவரை, சமுதாய அடிப்படையே அவருக்குப் போதுமானதாக இருந்தது. தவிரவும் அவர் அதிக காலம் வாழ்ந்து காட்டின அவதி நிலேமைக் காண முடியவில்லே. உள்ளூரைப் பொறுத்த வரை, அவரது உதவியோகமே பெருந் தடையாயிற்று. மேயா அம்மையார் எழுதிய குற்றச்சாட்டுக்குப் பதில் கூறும் வகையில் அமைந்த அவரது சித்சாலாவைக் குறிப்பிடலாம். இப்பால் ஜி. சங்கர குருப் பற்றியும் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் அ. சீனிவாசராகவன்.

தமிழில்க்கியத்தில் தேசீயக் கருத்தை அறிய வேண்டுமானால் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங்காலத்திலிருந்தே நாம் ஆரம்பிக்க வேண்டியதாகும்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ அடிகள், மூவேந்தர்கள் என்ற பகுப்புக்களைக் கடந்து தமிழ மென்ற முழுமைக் கருத்துக்கு தம்மை உயர்த்துகிறார். சேர பல்லவ முலத்து மாதவரான இளங்கோ, சோழ, பாண்டிய அரசர்களின் பெற்றியைப் பராட்டுகிறார். சோழநாட்டு நங்கை கண்ணகி ஒரு பாண்டிய மகளாகவே புகழ்பெற்று சேரநாடும் தெய்வமகளாகவே உயர்கிறாள். சிலப்பதிகாரமே தமிழ் மக்களின் தேசீய உணர்ச்சிக்கு ஒரு மகா காவியமென்று கூறவேண்டும்.

சங்க காலத்திலும் தமிழ் மக்கள் ஏனைய மண்ணக நாடுகளுடன் தொடர்புடையவர்களாக விளங்கியிருந்தார்கள். வாணிகம், சமயம், கலைகள் ஆகியவற்றில் உலகத் தொடர்பே பூண்டிருந்தனர் தமிழ் மக்கள். பட்டினப் பாலையில் காவிரிப் பூம்பட்டிணத்துக் கடைத் தெருவைப் பற்றிய செய்திகள் கிடைக்கிறது. பற்பல மொழிகளைப் பேசும் பிற பிற நாட்டினர் பலர் அங்கு கூடியிருந்து வாணிகம் புரிந்திருக்கின்றனர். வியப்புக்குரிய இயலும் பழந் தமிழருக்கு எட்டாத தொலைவிலோ, கற்பனையாகவோ இருந்ததில்லை. தமிழ் பொதியை அவர்களுக்கு எப்படியோ அப்படித்தான் இயலும். அவர்களுக்குப் புறநானூறும்சிலப்பதிகாரமும் இயலும்—பொதிகை இரண்டையும் ஒரே தராமகப் போற்றியிருக்கின்றன. தமிழகத்தில் பற்பல மன்னர்கள் வாழ்ந்த காலத்தும் தமிழ் மக்கள் ஒரு குலமாகவே இருந்து வந்திருக்கின்றனர். கயிலர் வடதிசை மாந்தர் செல்வரென்றும், தன்பற்றெரென்றும் புகழ்ந்துள்ளார். காரிகர் வாழும் கருணையாளர்களே அவர் போற்றியுள்ளார். புறநானூறு இந்திய மக்கள் அனைவரும் ஒன்றெனக் கருதியிருக்கிறது. இமயம் இறைவன் திருக்கோயில் என்று புலவர்கள் பாடித் துதித்துள்ளர்.

இவையெல்லாம் இந்திய ஒருமைப்பாடு எப்படி ஆதி நாள் தமிழர் வாழ்வுலேயே வேர் கொண்டு வளர்ந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டும். சமயமும் கலைகளுமே இதைச் சாதித்துள்ளன. இவை வெற்பின் சிறு கல்லும் எத்துணைப் புனிதமென்றும் அதைக் கங்கையிற் புனலாட்டிய பிறகே சிற்பச் சீலைகளே வடிக்கலாகும் என்றும் பேசியுள்ள சிலப்பதிகாரம் இந்த உண்மையை நீரூபிக்கும்.

சமய மறுமலர்ச்சி ஏற்பட்டபின்னுமிலும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இமயம் முதல் குமரியீறாக உள்ள திருத்தலங்களைப் பாடியிருக்கின்றனர். அவர்களுக்கு இருந்த ஆழ்ந்த பக்தி பரவசத்தில் திருத்தலங்களனைத்தும் ஆன்மாவினுடைய திருவடிவமென்றே புகழ்ந்து உள்ளனர்.

இடைக்காலத் திருள் கடந்து பாரதியின் வாக்கில் மீண்டும் இந்த ஒருமைப்பாடு-தேசீய உணர்ச்சி வீறு கொண்டு எழுந்துள்ளதை இன்று காண்கிறோம்-எனவே தமிழிலக்கியத்தில் தேசீய உணர்ச்சி என்பது மிகவும் தொன்மையானது. என்றும் நம்மை இயக்கி நிற்பது.

அமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் சொற்பொழிவாளர்களோடு பாரதரட்டி முடிவுரை கூறினர். பின்னர் 'பிறமொழிகளில் பாரதி' என்ற நிகழ்ச்சி திரு. கே. பால சுப்பிரமணிய அய்யர் M. L. C. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பிற மொழிகளில் பாரதி

திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமை உரை.

பெரியோர்களே!

பாரதியை வழிபடச்செய்யும் என் அன்பர்களே!

இப்போது பிறமொழிகளில் பாரதியின் பெருமையைப் பற்றி கூறப்போகும் கவி அரங்கு நடக்கப் போகின்றது. அதிலே முக்கியமாக மூன்று பேர்கள் பங்கெடுத்துக் கொள்ளப் போகின்றார்கள். முதலிலே திரு. பி. ஸ்ரீராமுலு ரெட்டியார் அவர்கள். அவர் சித்தூர் ஜில்லாவிலே இருந்து வருகின்றவர். நல்ல கவி. அவர் தெலுங்கிலே 'கம்ப ராமாயணம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய உயர்ந்த தமிழ் நூற்களை நன்றாக மொழி பெயர்த்து இருக்கிறார்கள். அவர் சுப்பிரமணிய பாரதியாருடைய சில கவிதைகளையும் இப்போது தெலுங்கில் நமக்கு மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார், அதை அவர்கள் இப்போது செல்வார்கள்.



அடுத்தபடியாக, நம்முடைய கன்னட நண்பர் திரு. எல். குண்டப்பா அவர்கள் திருக்குறளை மொழி பெயர்த்தவர். அவருடைய பாரதியாரின் மொழிபெயர்ப்பை சென்ற ஆண்டு சாகித்ய அகாடமியார் வெளியிட்டிருக்கிறார்கள். அவர் கன்னட பாஷையில் பல உயர்ந்த நூல்களை இயற்றியிருக்கிறார். அவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், தமிழ் போன்ற பாஷைகளில் வல்லவர். அவருக்கு திருக்குறள் மொழிபெயர்ப்பிற்காக மைசூர் அரசாங்கத்தார் பரிசளித்து இருக்கின்றார்கள். அவருக்குத் தமிழ் எழுத்

'பிற மொழிகளில் பாரதி' என்ற தலைப்பில் திரு. கே. பாலசுப்ரமணிய அய்யர் அவர்கள் தலைமை தலைமையுரை ஆற்றினார்.

தாளர் சங்கமும் நாகர்கோயிலில் மதிப்பு அளித்திருக் கிறது.

மூன்றாவதாக, திரு. ஹரசத் சுக்ரவர்த்தி என்பவர் பாரதியின் சில பாடல்களை உருதுவில் மொழிபெயர்த் துள்ளதைப் பாடிக் காட்டுவார்கள். அவரும் இரண்டு நூற்கள் இயற்றி இருக்கிறார்கள். திருக்குறளை உருதுவில் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அதைச் சாகித்ய அகாடமி வெளியிட்டிருக்கிறார்கள். அதேக உருதுப் பத்திரிகை களில் அவர் பல கவிகளை இயற்றியிருக்கிறார்கள். அவர் திருச்சியிலுள்ள ஜமால் முஹம்மது கல்லூரியில் உருது ஆசிரியராக பணியாற்றி வருகின்றார்.

அமரர் பாரதியாருடைய உயர்ந்த கவிச்சுவைகளை பிற பாஷைகளில் இவர்கள் மொழிபெயர்த்திருக்கின் றார்கள். ஆனால் மொழிபெயர்ப்பு என்பது மிகவும் ஒரு கடினமான வேலையாகும் இதைப்பற்றி நமது தமிழ்த் தாத்தா அவர்களே ஒன்று சொன்னார்கள். அதாவது சில மொழிபெயர்ப்புகளுக்கு பதிலாக, மொழியையே பெயர்த்து விடுகின்றார்கள் என்று சொல்லியிருக்கிறார். இப்படி மொழிபெயர்ப்பு என்பது கடினமான ஒரு வேலை என்று சொல்வதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று, தமிழ் பாஷையிலே உள்ள சில அழகான சொற்களுக்கு ஈடான அழகான சொற்கள் பிற பாஷைகளிலே புகுத்து வது என்பது முடியாத ஒரு காரியம். நான் மொழி பெயர்ப்பைப் பற்றி இழிவாகக் கூறுகிறேன் என்று நீண்டக வேண்டாம். தமிழ் பாஷையிலே உள்ள தனிப் பெருமையை, பிற பாஷைகளிலே அவ்வளவு சுலபமாக மொழிபெயர்ப்பது என்பது முடியாது என்பதற்காகச் சொல்ல வருகிறேன். பாரதியாருடைய ''செந்தமிழ் நாடெனும் போதினிலே'' என்ற பாட்டில், 'புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு' என்பதற்கு எப்படி சரியான மொழிபெயர்ப்பு எப்படிச் செய்வது என்று பார்க்கும்போது, சரியான மொழிபெயர்ப்பு நமக்குக் கிடைப்பதில்லே. இது பல பேச்சுகளால் முடியவில்லே. இதிலே உள்ள அழகான சுவையைக் குறைக்காமல் மொழிபெயர்ப்பதுதான் இதிலே மிகவும் முக்கியமானது. இப்படிப்பட்ட பல உயர்ந்த, சுவையுள்ள சொற்கள் தமிழ் மொழியிலே உள்ளது. இதை பாரதியாரின் கவிதைகளிலேயும் அதிகமாகக் காணலாம். இதை கவிச்சுவை அறிந்த அன்பர்கள் மறக்கக்கூடாது.

ஆங்கிலத்திலே பல நூற்கள் மொழிபெயர்க்கப் பட்ட போதிலும், இதுவரை இரண்டு நூல்கள் மட்டுமே அவர்கள் சிறந்த மொழிபெயர்ப்பாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று, பைபிள், அது மிகவும் அழகாக அமைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இரண்டாவது, 'உமர்கயாம்' என்று சொல்லப்படும் பர்சிய கவிதை. அதையும் மிகவும் உயர்ந்தது என்று ஒப்புக் கொள்கிறார்கள். இப்படி சிலரே நல்ல மொழிபெயர்ப்புக்களைச் செய்யமுடியும், அப்படிப்பட்ட வகையைச் சேர்ந்த சிலர் இப்போது பிற மொழிகளிலே தாங்கள் செய்துள்ளவைகளை இங்கே படிக் காட்டப் போகின்றார்கள். அதை நீங்கள் இப்போது கேட்கப்போகின் றீர்கள்.

கவி பாரதியார் அவர்கள், அவருடைய பாடலுக்கு ஒரு பரீட்சை வைத்திருக்கிறார். அதை அவரே தெரிவித் திருக்கிறார். ''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டா யின், வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்று பாடி யிருக்கிறார். அதை அவர் முக்கியமாக தன்னுடைய கவிகளிலே செய்திருக்கிறார். அவரது கவிகளிலே உள் ளத்திலே உண்மை ஏற்படுகிறது. ஒளி விடுகிறது. வாக்கினிலும் ஒளி உண்டாவதைக் காண முடிகிறது. உள்ளத்திலே உண்மை இல்லாவிட்டால், அதை வாக்கினுல் நன்கு புரிந்துகொள்ளலாம்.

ஒருவர் ஒரு கூட்டத்திற்கு சென்றுவிட்டு வரும் போது, 'அவர் மிகவும் அழகாகப் பேசினர்; கேட்ப தற்கு இனிமையாய் இருந்தது; அவ்வளவும் தப்பாக பொய்யாக இருந்தது' என்றார். அப்படி பேசப்படுவது உண்மையில்லாமல் போனலும், அது கீண்ட நாட் களுக்கு நிலைத்து நிற்காது. மனதிலேயும் ஆழப் பதியாது. ஆகவே, கவிகள் முதலில் உள்ளத்திலே ஒளியை வைத்துக்கொண்டு, அதற்குப் பிறகு வாக்கி னிலே அந்த ஒளியின் உண்மையை வெளியிடு கிறார்கள். அப்படி உண்மையை வெளியிடுவதிலும் இரண்டு, மூன்று வகை உண்டு. ஒன்று, சிலர் கவிதை என்று சொல்லிக்கொண்டு அசட்டுக் கவிதைகள் செய் கிறார்கள். மற்றொன்று, சாதரண நல்ல கவிகள். அந்தப் பாட்டுக்கள் நல்லதாக இருக்கும் கேட்பதற்கு. ஆனல் பின்னுல் அவைகள் மறைந்துவிடும். அதற்குப் பிறகு மகா கவிகள் இருக்கிறார்கள். அந்த மகா கவிக களுடைய பாடலானது கொஞ்ச காலம் வரைக்கும் இருக்கும். ஆனல், அமர கவிகள் என்ற ஒருசிலரே உண்டு, அவர்கள் எழுதும் கவிதைகள் எக்காலத்திலும் அழியாமல், சித்திக்கக்கூடியதாக அமையும். இப்போது நம் பாரதியாரின் கவிதைகளைப் பார்த்து சந்தோஷப் படுகிறோம். பல பிரச்னைகளுக்கும் தீர்வுகான இதிலே ஆதாரம் இருக்கின்றது என்று சொல்கின்றோம். அவர்கள் நமக்கு பல நல்ல திட்டங்களே யெல்லாம் கொடுத்திருக்கிறர் என்று ஆனந்தப்படுகிறோம். காலே யில்கூட கனம் அமைச்சர் அவர்கள், பாரதியார் 'காகிதம் செய்வோம்' என்றார். நாங்கள் காகிதம் செய்யும் தொழிற்சாலேயை அமைத்துவிட்டோம் என்று பெருமையாக பேசினர்கள். அத்தகைய பலதேயெல் லாம் அவருடைய கவிதைகள் நமக்கு அளிக்கின்றன. 'ஆலேகள் அமைப்போம், சாலேகள் அமைப்போம்' என்று பாரதியார் பாடினர். அதனுல்தான் என்னவோ, கரும்புச் சாலேகளுக்காக மட்டும், உச்ச வரம்பிலிருந்து அரசாங்கம் விதிலிலக்கு அளித்திருக்கிறது.



பாரதியார் இந்தக் கவிதைகளை யெல்லாம் எப்போது பாடினர்? 1905 லிருந்து 1920 வரையில் அவர் பாடியிருக்கின்ற அந்தக் கவிதைகளை இப்போது நாம் 40 வருஷங்களுக்குப் பிறகு இப்படிப்பட்ட உண்மைகளை யெல்லாம் சொல்லியிருக்கிறபோது என்று நாம் ஆச்சரியப்படுகிறோம். அவர் நமக்குத் தெரியாத பல உண்மைகளை யெல்லாம்கூட, அழகாக, உள்ளத் திலே உண்மை ஒளி வீச அளித்திருக்கிறார்கள். அத் தகைய பாரதியின் நாளைதான் நாம் இன்றையத் தினம் இப்போது இங்கு கூடி கொண்டாட இருக்கிறோம்.

அடுத்து, திரு. பி. ஸ்ரீராமுலு ரெட்டியார் அவர்கள், தான் மொழிபெயர்த்துள்ள பாரதியின் சில பாடல்களைப் படித்துக் காண்பித்தார். அப்பாடல்களை தமிழில் திரு. டி. கே. சண்முகம் அவர்கள், உணர்ச்சி வசத்துடன் சபையோருக்குப் பாடிக் காண்பித்தார்கள். அடுத்து திரு. எல். குண்டப்பா அவர்கள், தான் மொழிபெயர்த்துள்ள 'சத்பதி சிவாஜி' என்னும் பாரதியின் பாடலைப் படித்தார். அதிலே சில முக்கியப் பகுதிகளை மட்டும் திரு. டி. கே. சண்முகம் பாடிக் காட்டினர். அடுத்து, திரு. ஹரசர்வத்தி அவர்கள் உருது மொழிபெயர்த்துள்ள சில பாடல்களைப் பாடினர். அதையும் திரு. டி. கே. சண்முகம் அவர்கள் தமிழில் அழகாகப் பாடிக் காட்டினர்.

அரங்கம் நிறைவுபெற்றது.



சுபகிருது

ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கியதைப்போ, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேசபக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

"ஸ்வதேச கீதங்கள்" —பாரதி

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மொய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகநந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதாதேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

"ஜன்ம பூமி" —பாரதி

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங் மனகோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னை யறியாது குதூஹல மடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்-ஓர் மார்க்கம்—தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திருப்பும் குரியகாந்த மலர்போல, அவ் வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவினமார்க்கம் தோன்றியது. நல்லோருடைய சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனுகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச்சென்ற வருஷம் சில கவிதை மலர் பூனைந்து மாதாவின் திருவடிக்குப் பூனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராத வண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் "இம்மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்துகொண்டாள். இதனுல் துணிவு மிகுகியுறப் பெற்றேனுகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன்; 'குழலினது யாழினிதென்பர் தம் மக்கள் மழலைச்சொற்கேளாதவர்' என்பது வேதமாதலின்.

இங்ஙனம்

ஸ்ரீ. சுப்ரமணிய பாரதி

பாரதியும் கவிதையும்

பராசக்தி

1. கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்;
காவியம் பல நீண்டன கட்டென்பார்;
வித விதப் படு மக்களின் சித்திரம்
மேவி நாடகச் செய்யுளே மே வென்பார்;
இதயமோ எனிற் கலீயு மாலீயும்
எந்த நேரமும் வாணியைக் கூவும் கால்
எதையும் வேண்டில தன்னே பராசக்தி
இன்ப மொன்றினேப் பாடுத லன்றியே.

2. நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென்றிருரு தெய்வங் கூறுமே;
கூட்டி மானுடச் சாதியை யொன்றெனக்
கொண்டு வையமு முழுதும் பயனுறப்
பாட்டிலே யுறங் காட்டெனுமோர் தெய்வம்;
பண்ணி லின்பமும் கற்பனே விந்தையும்
ஊட்டி யெங்கும் உவகை பெருகிட
ஒங்கு மின்கவி யோதெனும் வேறொன்றே.

3. நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேனிலே யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி, நான்
மூட்டு மன்புக் கனலோடு வாணியை
முன்னுகின்ற பொழுதி லெலாங் குரல்
காட்டி யன்னேன பராசக்தி யேழையேன்
கவிதை யாவுந் தனக் கெனக் கேட்கின்றாள்.

4. மழை பொழிந்திடும் வண்ணத்தைக்
கண்டு நான்)
வானிருண்டு கரும் புயல் கூடியே
இழையு மின்னல் சரே லென்று பாயவும்
ஈர வாடை யிரைந் தொலி செய்யவும்
உழை யெலாம் இடையின்றி யிவ் வான நீர்
ஊற்றுஞ் செய்தி யுரைத் திடவேண்டும் கால்,
''மழையுங் காற்றும் பராசக்தி செய்கை காண்!
வாழ்க தாய்!'' என்று பாடுமென் வாணியே.

5. சொல்லினுக் கெளிதாகவு நின்றிடாள்
சொல்லீ வேறிடஞ் செல்ல வழி விடாள்;
அல்லினுக் குட் பெருஞ் சுடர் காண்பவர்
அன்னே சக்தியின் மௌலி நலங் கண்டார்.
கல்லினுக் குள் அறி வொளி காணுங் கால்,
கால வெள்ளத்திலே நிலே காணுங் கால்,
புல்லினில் வயிரப் படை தோன்றுங் கால்,
பூதலத்தில் பராசக்தி தோன்றுமே!

———


கவிதா தேவி அருள் வேண்டல்

வாராய்! கவிதையாம் மணிப்பெயர்க் காதலி!
பன்னுள் பன்மதி ஆண்டு பல கழிந்தன,
நின்னருள் வதன நானேருறக் கண்டேட.
அந்த நாள் நீ யெனே யடிமையாக் கொள, யாம்
மானிடர் குழாத்தின் மறைவுறத் தனியிருந்
தெண்ணிலா வின்பத் திருங் கடற் றிளக்தோம்;
கலந்து யாம் பொழிவிடைக் களித்த வன்னுட்களிற்
பூம் பொழில் குயில்களி னின் குரல் போன்ற
தீங்குரலு டைத்தோர் புள்ளினேத் தெரிந்திலேன்!
மலரினத் துன்றன் வாள் விழி யொப்ப
நிலவிய தொன்றினே நோக்திலேன்; குளிர் புனற்
சுனேகளி லுன் மணிச் சொற்கள் போற் றண்ணிய
நீருடைத் தறிகிலேன்; நின்னேடு தமியனுய்
நீயே யுயிரெனத் தெய்வமும் நியென
நின்னையே பேணி நெடுநாள் போக்கினேன்.
வானகத் தமுத மடுத்திடும் போற்று
மற்றகனிடையோர் வஞ்சகந் தொடுமுள்
வீற்றிடைத் தொண்டையில் வேதனே செய்தென
நின்னேடு களித்து நினேவிழந் திருந்த
எனேத்துயர்ப் படுத்தவந் தெய்திய துலகிற்
கொடியன யாவுளும் கொடியதாம் மிடிமை.
அடிநா ளுள்ளினே அயல்சிறி தேகிக்
கனேந்து பின்வந்து காண்பொழுது, ஐயகோ!
மறைந்தது தெய்வ மருந்துடைப் பொற்குடம்.
மிடிமை நோய் தீர்ப்பான் வீரர்தம் முலகப்
புன்தொழில் ஒன்று போற்றுதும் என்பான்
தென்திசைக் கண்ணெரு சிற்றூர்க் கிறைவனும்
திருந்திய ஒருவனேத் துணேயெனப் புகுந்து அவன்
பணிசெய இசைந்தேன், பாதகிநீ! என்னேப்
பிறந்தும்ஓ நகன்றனே. போசொனு நின்னருள்
இன்பமத் தனேயும் இழந்துநான் உழன்றேன்.
சின்னுள் கழிந்தபின்—யாதெனச் செப்புவேன்!
நின்னேடு வாழ்ந்த நினேப்புமே தேய்ந்தது.
கதையிலேர் முனிவன் கடியதாஞ் சாப
வினேவினுல் பன்றியா வீழ்ந்திடு முன்னர்த்
தன்மக னிடை ''என் தனயநீ யான்புலிப்
பன்றியாம் போது பார்த்துநில் லாதே!
விரைவிலொர் வாள்கொடு வெறுப்புடை யவ்வுடல்
துணித்தெனைக் கொன்று தொலேத்தலுன் கடனும்.
பாவமிங் கிலேயென் பணிப்பிற் தாகவின்!''
தாதை சொற்கு இணங்கினுன்.
இணங்கினுன்.

முனிவனும் பன்றியா மூடிந்தபின், மைந்தன்
முன்னவன் கூறிய மொழியினே நினேந்தும்,
இரும்புகழ் முனிவனுக்கு இழியதா மிவ்வுடல்
அமைந்தது கண்டுநெஞ் சமுற்றிடல் கொண்டும்
வாள்கொடு பன்றியை மாய்த்திட லுற்றனன்.
ஆயிடை மற்றவ் வருந்தவப் பன்றி
இனேயது கூறும்: ''ஏடா! நிற்க!

நிற்க! நிற்க! முன்னர்யாம் நிகேந்தவாறு
அந்தணீன் தன்புடைத் தன்றிவ் வாழ்கை.
கூறறும் புனலும் கடிப்புற் கிழங்கும்
இனியவல் லின்பர் இதன்கணே யுளவாம்;
ஆறேழ் திங்கள் அகன்றபின் வருவதியேல்
பின்னெனைக் கோறலாம்.” பிழையோ டிவ்வுரை
செவியுறநி முடிசாய்த் தினியவன் சென்றனன்.
திங்கள் பல போனபின், முனிமகன் சென்று
தாதைப்பன்றியோர் தடத்திடைப் பெடையோடும்
போத்தினைப் பலவோடும் அன்பினிற் பெருந்தி
ஆடல்கண் டயிர்தனன். ஆற்றெணு தருகுசென்று
“ எந்தாய்! எந்தாய்! யாதரே மற்றிது!
வேதநூ லறிந்த மேதகு முனிவரர்
போற்றிட வாழ்ந்தநின் புகழ்க்கிது சாலுமோ ?”
எனப்பல கூறி இறங்கினன்; பன்னர்
வள்கொடு பன்றியை மாய்திடல் விழைந்தான்.
ஆயிடை முனிவன் அகப்பதைத் துரைக்கம்;

“ செல்லடா! செல்லத் திக்குணத் திழிஞ!
எனக்கிவ் வாழ்க்கை இன்புடைத் தேயம்;
நினைக்கிதில் துன்பம் நிகழுமேல் சென்றவ்
வாளினின் நெஞ்சை வகுத்து நீ மடிக”
என்றது கூறி இருந்தவப் பன்றிதன்
இனத்தொடும் ஓடி இன்னுயிர் காத்தது.
இன்னது கண்ட இனியவன் கருதும் :
“ஆவர! மானிடர் அருமையின் வீழ்ந்து
புன்னிலீ மெய்திய போய்தனில் நெடுங்கால்
தெருமரு கின்றிலர். சிலபகல் கழிந்தபின்
புதியதா நீசப் பொய்மைக் கொள் வாழ்வில்
வீறுப்புடை யவரோய் வேறுதா மென்றும்
அற்ந்திவ ரேபோன் றதிற்களிக் கின்றார்,
என்சொல்கேன் மாயையின் எண்ணரும் வஞ்சம்.”
... ... வேந்தன்
தன்பணிக் கிசைந்தென் தருக்கெலாம் அழிந்து
வாழ்ந்தனன் கதையின் முனிபோல் வாழ்க்கை!



சீரடியாற் பழவேத முனிவர் போற்றுஞ் செழும் சோதி—சீர்களும் களும் இயைந்த மந்திரங்களால் முன்னிய வேதரிஷிகள் போற்றிய ஞாயிறு.

இங்கு சூரியாஸ்தமன வர்ணனை கூறப்படுகிறது. இப்பாடல்களின் கருத்து நன்கு விளங்கும் பொருட்டு, நமது “கர்ம யோகிர்” பத்திரிகையிலே இவ்விஷயத்தைப்பற்றி எழுதியுள்ள வியாஸமொன்றை இங்கு தருகின்றோம்.

உலகத்தில் எங்கு பார்த்தாலும் நிறைந்து கிடக்கும் லாவண்யங்களின் தமிழர்கள் கவனிப்பது கிடையாது. சனிக்கிழமை சாயங்காலந் தோறும் குளக்கரைகளிற் போய்க் கருடன்பார்ப்பதற்கென்றுல் நம்மவர்கள் கூட்டங் கூட்டமாக ஓடுகிறர்கள். சூரியாஸ்தமன காலத்தில் வானத்திலே தோன்றும் அசிரியங்களைப் பார்க்க ஒருவன்கூடப் போகிறதில்லை. அப்போது வானத்திலே இந்திர ஜால மஹேந்திர ஜாலங்களெல்லாம் நடக்கின்றன. இந்த க்ஷணமிருந்த தோற்றம் அடுத்த க்ஷணமிருப்பதில்லை. உலகத்திலுள்ள திரவிய முழுவதையும் செலவிட்டு வர்ணக் காட்சிகள் ஏற்படுத்திப் பார்ப்போமானாலும், அது ஸூர்யாஸ்தமன காலத்தில் வானத்திலே நாம் பொருட் செலவில்லாமல் பார்க்கக்கூடிய் காட்சிகளிலே கோடியிலொரு பங்குகூடக் காணுது. வான வேடிக்கைகள் பார்க்க ஒரு செல்வன் பதினாயிரக்கணக்கான திரவியம் செலவிடுகிறன். அவனது செல்வத்திலென்றே இந்தக் காட்சி சுலபமாகிறதென்று அதைப் பார்த்து ஆயிரம் ஏழைகள் பெருமூச்செறிகிறார்கள். ஸைக்ளோதரா, ஸூர்யாஸ்தமனத்தின் விநோதங்களைச் சென்று பார். ஸூர்யனைப் பார்த்தால் கண்ணுக்குக் கெடுதியென்று குருடர் நம்பிக்கையைப் பொருட்டாக்காதே. ஸூர்யனைப் பார்ப்பது பாவமென்று சொல்லும் மூடர் சாஸ்திரத்தைக் கண்கொண்டு பார்க்காதே

நமது நாட்டில் வேதகாலத்து ரிஷிகள் பிரகிருதியின் சௌந்தர்யங்களைக் கண்டு மோஹித்துப் பரமானந்தமெய்தியவர்களாய்ப் பல அதிசயமான பாடல்கள் பாடியிருக்கிறர்கள். பிரகிருதியின் அழகைக் கண்டு பரவசமெய்தக் காளிதாசன் முதலிய பெருங்கவிகள் அற்புதக் கவிதைகள் செய்திருக்கின்றனர். இக்காலத்திலே தான் இந்த தூரதிர்ஷ்ட நீக்கேகொண்ட நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்களெல்லாரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிறர்கள்.

—பாரதியார்.

அழகுக்கும் சிக்கனத்துக்கும்



சிக்கனத்தையும் வனப்பையும்
சேர்ந்துகொடுப்பது
கோ - ஆப்டெக்ஸ் ஆடைகளே.
புடவைகள் – வேஷ்டிகள் – செக்குகள்
ஷர்டிங்குகள் – சோளிரகங்கள் முதலியன.
கண்ணைப் பறிக்கும் வர்ணங்கள்
ரம்யமான டிஸைன்கள், சேர்த்தியான செவு
– இத்தனையும் – அத்துடன் சிக்கனமும்.

கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்


சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
34/1A பாந்தியன் ரோடு, மதராஸ் - 8.

ELEGANT

கவியரங்கம்

திரு. பரலி சு. நெல்லையப்பர்
துவக்க உரை

இன்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்பு திருவல்லிக் கேணியிலே காலஞ் சென்ற பாரதியாரின் இறுதி உடல் எடையில் 90 பவுண்டே இருந்தது. அவரது உடலே திருவல்லிக்கேணி மயானத்திற்கு எடுத்துச் சென்ற போது, அவருடன் 20 பேர்கள் இருந்தார்கள்.



அப்போது அவருடன் இருந்தவர்களில் இப்போது ஒரு சிலரே இருக்கிறார்கள். ஆனால், இன்று அவர் புகழ் எங்கெலாம் பரவி வருகின்றது என்பதைப் பார்க்கிறோம். எத்தனை லட்ச வாய்கள் அவரது பாடல்களை, அவரது புகழைப் பாடுகின்றன; பேசுகின்றன. இதைப் பார்க்கும் போது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறது.

தான் முதன்முதலிலே அவரது பாடல்களை 1917ம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டேன். அப்போது அச்ச கத்தார் அதிலே சில பாடல்களை அச்சிட்டு வெளியிட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அப்போது பாரதியார் அவர்கள் புதுச்சேரியில் இருந்தார்கள். சில பாடல்களை எடுத்தே வெளியிட நேரிட்டது. "ஆயிரம் இங்குண்டு ஜாதி" என்னும் நாட்டுப் பாட்டை முதன் முதலில் போட்டேன். பின்னர் கண்ணன் பாட்டு, கண்ணன் என் அரசன் என்ற பாட்டை அச்சிட மறுத்துவிட்டார்கள். அத்தகைய காலம் அது. ஆனால், இப்போதோ பாரதியாரின் புகழ் உலகமெல்லாம் பரவி வருகிறது. அவருடைய ஆத்மா நம்மை வாழ்த்தும் என்று அறிகிறேன்.

இதுகாறும் பாரதியார் சங்கம் பாரதி விழா கொண் டாடி வந்தது. இப்போது அரசினரே ஏற்று நடத்துகின் றனர். இதுகாறும் திரு. ஆக்கூர் அனந்தாச்சாரி அவர்கள் நடத்தி வந்தார்கள். பல ஆண்டுகளாக நடத்தி வந்த அவர்கள், தற்போது அதைவிட்டுவிட்ட மாருக்குப் போகப் போவதாக சொல்கிறார்கள். இந்தச் சமயத்தில் அரசினரே ஏற்று நடத்த முன்வருவது மிகவும் மகிழ்ச்சிக்கு உரியதாகும். நம் தமிழ் நாட்டிலே தோற்றுக்கணக்கான கவிஞர்கள் இருக்கிறார்கள். அவர் களை யெல்லாம் அழைத்து இப்படி வருஷம்தோறும் கவி அரங்கு நடத்தி, சிறந்த கவிஞர்களுக்கு அரசினர் பரிசுகள் கொடுக்க வேண்டும். பாரதியார் இருந்த காலத்தில்தான் அவரைப் பட்டினியால் சாகவிட்டோம் என்குலும் இப்போதுள்ள கவிஞர்களையாவது அந்த நிலைக்கு உட்படுத்தாமல், அரசாங்கம் இப்படி பரிசுகள் வழங்கி அவர்களை ஊக்குவிக்க முன்வரவேண்டும்.

அதேபோல் ஆங்காங்கே இப்படிப்பட்ட கவி அரங்கங்களிலே பாடப்படும் பாடல்களை யெல்லாம் தொகுத்து ஒரு நூலாக வெளியிட வேண்டும். அப்படி வெளியிட்டால் அது மிகவும் பயன் உள்ளதாக இருக் கும். இப்போது கடைசியாக ஒரு பாட்டைமட்டும் படித்துவிட்டு முடித்துக்கொள்கிறேன்.

("சீனத்து வீணை ஓட்டி நாம் ஜெயக்கொடி நாட்டி வாழ்வோம்" என்றபாடலிப் பாடி கவியரங் கைத் தொடங்கிவைத்தார்கள்.

திரு. ச. து. சு. யோகியார் அவர்கள்

அன்பர்களே, வணக்கம். இக்கவி அரங்கிற்குத் தலைமை தாங்கக் கோரிய பாரதியார் 81—வது பிறந்த தின விழாக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றி. இதே சமயம், அக்கோரிக்கையைச் சரிவர நிறைவேற் றத்தக்க வகையில் என் உடல் நலம் இல்லாமைக்காக வருந்தவும் வருத்துகிறேன். பாரதியார் நம்எல்லோருக் கும் குருநாதர்; தற்காலத் தமிழ் இலக்கியத்தின் தந்தை; கவிஞன் என்ற ஹோதாவில் அடியேனுக்கு அவர் ஒரு தெய்வீக ஸாந்நித்யமாவார். எனவே என் உடல் நிலை எப்படி இருப்பினும், அவர்பிறந்ததற்நாளில் அவருக்கு என் காணிக்கையைச் செலுத்த வேண்டும், அதிலும் பிற அன்பர்களுடன் கூடி இப்பணியைச் செய்ய வேண்டும் என்ற அவாவினுலேயே இவ்விழா வில் கலந்து கொள்ள எண்ணினேன். இவ்வாவைப் பெருக்கன்றி வேறில்லாத நிலையினுல் ஏற்படக்கூடிய குற்ற குறைகளை அவையினர் மன்னித்தருள வேண் டும். பாரதியார் பிறந்த காலம் எத்தகையது? அக் காலத்திற்கு ஏற்ப அவர் என்ன செய்தார்?

செந்தமிழின் சீர் மறைந்து
பாவாணர் குலம் சிதைந்து
சொழமை நீங்கி
அந்தமிழர் அடிமைகளாய்
அந்நியராய் ஆங்கிலராய்
அலையுங் காலை
எம் தமிழ்நா டெம்தமிழர்
எங்கள் குலப் பண்பாட்டின்
ஏற்றம் கூற
வந்த பிரான் பாரதியாம்
மணிப்புலவன் வான் கவிஞன்
வாழ்க மாதோ.

மற்றும் நம் பாரதியார் தமிழ் மொழிச் சாதனையின் உச்சம்! எனவே அடியேன் பாடினேன்.

சங்கத் தமிழ் மறவர்
தனி வலியும் வள்ளுவனர்
தரும நீதி
எங்களிளங் கோவினசை

பாரதியார் 81-ஆவது பிறந்ததின விழா மலர்

இன் சில்ம்பும் சித்தர்களின்
இயல்பும் வேதம்
பொங்கு மொழி நால்வருடன்
பன்னிருவர் தேனிசையின்
போதத்தோடு
துங்கமுமும் கம்பனுரைக்
காவியமும் கொடுமுடிகொள்
தூய்மை பெற்றன்!

ஆம். பாரதியார் புலமையின் சிகரம். இதுவரையில் தமிழ் நாட்டில் எத்தனையோ பாரதிகள் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர், ஏன், அடியேனும் ஒரு பாரதிதான். எனினும் அடை மொழிகளில்லாமல், சொந்தப் பெயரையும் குறிப்பிடாமல், எவருமே "பாரதி" என்று மட்டும் சொன்னால் அது நம் பாரதியாரை மட்டுமே குறிக்கும். எனவே அடியேன் பாடுகிறேன்.

பாரதிலே பல புலவர்
பாரதியென் நடைமொழியால்
பண்புற்றாரே
பாரதியென் நிடிலெங்கள்
பாரதியில்லாமலித்தப்
பார்மேல் வேறே
பாரதியார் ? இப்பெயரின்
பண்பெல்லாம் தனக்கெனவே
படைத்துக் கொண்டான்
பாரதி எம் தனித்தலைவர்
சி. சுப்ர மண்யனெனும்
பாவின் வேந்தன்

மற்றும் பாரதியார் வெறும் கவிஞர் மட்டுமல்ல, ரஸிக கவிஞர்; தீர்க்கதரிசி; அவர் இன்றுள்ளவற்றை யெல்லாம்

அன்றுரைத்தான் எமைத்தட்டி
எழுப்பி விட்டான்
என்றுமுள உண்மைகளை
எமக்கருளிக் குருநாத
னெனவே நின்றன்
தின்றுழலும் வறுமையிலே
சிதைந்தாலும் மனம் சிதையாச்
சிங்கம் போன்றன்
பொன்றினும் பொன்றுத
புகழுடையான் பாரதியைப்
போதும் வாழி

அவரது தீர்க்க தரிசனத்திற்குப் பல உதாரணங்கள் கூறலாம். தமது ஐந்தாண்டுத் திட்டங்களில் பல அவரது கனவில்கண்டவையே. இன்று இமயத் தெல்லையில் நடக்கும் சீனப்போர்கூட அவரது காலக் காட்சியில் புலனுயிற்றே என்னவோ ? அக்காலத் திலேயே

சீனத்தாய் விடுவாரே—பிற
தேயத்தார் போற்பல தீங்கிழைப்பரோ

என்று கூறியுள்ளார். ....கிற்க—

அவர் பிறந்த நாளையா? இறந்த நாளையா? எதைக் கொண்டாடுவது? பிறந்த நாளேதான். அவர் மரணத்தை எதிர்த்தார்; வாழ்வை வளர்த்தார் வளமையை வளர்த்தார்.

மலிவு கண்டிரிவ்வுண்மை
பொய் கூறேன் நான்
மடிந்தாலும் பொய் கூறேன்
மானுடர்க்கே
நலிவுமில்லே சாவுமில்லே
கேளீர் கேளீர்

என்று அவர் சாவாமை பேசினர்; பின்னும் பழைய கொள்கையான

பாரேயாம் போது செத்தும்
பாலனும் போது செத்தும்———

என்று வரிசை வைத்துக் கடைசியில்

நாளு நாள் சாகின்றேமால்
நமக்கு நாம் அமரத என்ன?

என்ற வகையாபதிக்கு நேர்மாருகப் பாரதியார் ஒவ்வொரு மூச்சையும் ஒவ்வொரு புதுப் பிறவியாக எண்ணி

மேன் மேலும் புதிய காற்றெம்முள் வந்து
மேன் மேலும் புதிய உயிர் விளைத்தல் கண்டீர்

என்று கணங்கணம் உயிர்ப்பின் பிறப்பைக் கற்பனை செய்தார். எனவே, அவருக்குப் பிறந்த நாள் கொண்டாடுவதே ஏற்புடைத்தாகும்;

குநள் வெண்பா—யமகம்

பாரதியார் பாரதியார் பாரதியார் பாரதியார்
பாரதியார் பாரதியார் பார்.



கயிலரங்க மேடையில் வீற்றிருக்கும் கவிஞர் பெருமக்கள்.

ஆவலவே. பாரதியார்? என்பதற்கு பாரதியார் என் றுறதான் விடை. இதென்னேயர பேத்தல் எனில், பேத்தலில்லே, ஒரே வார்த்தையில் பாரதியாரை வாரித் தல் என்று பதில் கூறலாம்.

ஒருமுறை காந்திமதிநாதன் (மதுரைச் சிலேடை வெண்பா, அங்கயற்கண்ணி மாலே முதலியவற்றின் ஆசிரியர்) என்னும் கவிஞன் நம் பாரதியாரை இழிவு படுத்த எண்ணினுன்: 'பாரதி சின்னப்பயல்' என்ற ஈற்றடி கொடுத்துப் பாடச் சொன்னுன்: பாரதியாரும் உடனே பாடினுர்.

காரது போல் நெஞ்சிருண்ட காந்திமதிநாதனேப் பார்அதி சின்னப் பயல்

என்பதே அப்பாட்டின் கடையிரு வரிகள். இதில் காந்திமதி நாதனேப் பார், அதி சின்னப் பயல்—ரொம் பச் சின்னப் பையன் என இழிப்புரை கேட்டவர் மேலேயே திருப்பி விடப்படுதல் காண்க.

பாரதி என்னும் சொல், பார்—அதி எனப் பிரிக்கப் பட்டு வேறு பொருள் தருகிறது. எனவே பாரதியாரும் இத்தகைய சொல் வித்தகைகளில் வல்லவரே என்பது இனிக்மகிறது. நிற்க.

மேலுள்ள பாடல் ஒரு யமகக் குறள் வெண்பா.

யமகம் என்ருல் ஒரு சொற்றெடர், அல்லது வரி திரும்பத் திரும்ப வந்து வெவ்வேறு பொருள்களேத் தருவது. இதில் பாரதியார் என்னும் சொல் ஆறுமுறை வந்து ஆறு பொருள்களேத் தருகிறது. இவற்றை ஆராயு மூன் யமகாதி விசித்திரங்களேப் பற்றிச் சில கூறுவது மிகையாகாது—அவசியமும் கூட.

யமகம், திரிபு, பந்தம், பங்கி, சிலேடை, மடக்கு, நிரோட்டகம், வரி ஒரெழுத்து முதலிய கடி வித்தைகள் இன்று அதேகமாய் மறைந்துவிட்டன. இடைக் காலப் புலவர்கள் இவற்றையே கவிதை என்று எண்ணி இடர்ப்பட்டதால், அறிஞர்கள் இக்கட்டுப் பாடுகளேயே வெறுக்கலாயினர். இவை மட்டும் கவிதைக்குப் போதாது. இவை இல்லாமல் கவிதை திகழ முடியும். எனினும், கவிதாப் பயிற்சியில், சாதுரியத்தில், சமத்காரத்தில் இவைகளுக்கு முக்கிய மானதோர் ஸ்தானம் உண்டு. இவற்றுல் பாஷை பரி பூர்ணமாக நம் வசப்பட்டுவிடும். இன்றுள்ள நிலேமை யில் இப்பழமையே புதுமையாகத் தோன்றும் என்பதா லேயே, இம்முறைகளிலும் பழகிய குருநாதர் பாரதியா ருக்கு இக்குறள் வெண்பாவைக் காணிக்கையாக்குகி றேன். இனி இதன் பொருளேப் பார்ப்போம்.

இதில் வரும் ஆறு பாரதியார்களில் முதல் பாரதி யார், பாரதி யார்? என்ற கேள்வியை எழுப்புகிறது. மற்றுள்ள ஐந்து பாரதியார்களும், கடைசிப்பாரும் இக் கேள்விக்கு பதில் அளிக்கிறது. எனவே.....?

பாரதியார் பாரதி—யார்? எனில்
பாரதியார் பாரதி—ஆர் பாரதி என்ருல்

கலேமகள், ஆர் என்ருல் பொருந்திய, அதாவது பாரதி கலேமகளின் கடாட்சம் உடையவர், இக் கடாட் சத்தால்,

பாரதியார் பா-ரதியார் பா—பாடல்களே,
ரதியார்—ரசிப்பவர்

பாட்டுத் திறத்தாலே-இவ் வையத்தைப்
பாலித்திட வேண்டும் என்று

பராசக்தியிடம் குறை இரப்பவர். அடுத்தபடி

பாரதியார்—பார—தீ—ஆர். பார என்பது அபாரமான, தீ என்பது குறுகித் 'தி' என நிற்கிறது. அன்பு, அழகு, ஆண்மை, கவித்வ முதலான ஆவேசக் கனல்கள், ஆர்—பொருந்தியவர் அவரே,

'தினவிலே சக்தியாக
வளர்வது நெருப்புத் தெய்வம்'
எனவும்,
'தீ வளர்த்திடுவோம்—பெரும்
தீ வளர்த்திடுவோம்
ஆயிரினுள்ளும் அறிவினிடையிரும்'
தீயை அகத்தினிடை மூட்டுவீர்

எனவும் பாடியுள்ளதைக் காண்க. இத் தீயின் ஜ்வாஜ் ஜல்யமான தேஜஸால்,

பாரதியார் பாரது—இ—ஆர் பாரது—

உலகங்கள் எல்லாம், இ—சக்தி, காளி, தேவி சிவம், இகரம் சக்தி, சிவமென்னும் சொல்லில்விடும். எனவே, சக்தியே உலகங்களெல்லாம்.

தின்ன வரும் புலி தன்னேயும் அன்பொடு
சிந்தன செய்திடு வோம்—எங்கள்
அன்னே பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளேக் கும்பிடு வோம்
என்றும்.

'வல்ல பெரும் கடவுளிலா அணுவொன்றில்லே மகா சக்தி இல்லாத வஸ்து வில்லே.
என்றும் அவரே பாடிப் பரவசமடைகிறர். அவர் சக்தி உபாசகர்

'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தவர் மேல்நிலே எய்தவும்
பாட்டிலே தனி இன்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டியான்
மூட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னுகின்ற பொழுதி லெலாம் குரல்
காட்டி அன்னே பராசக்தி ஏழையேன்
கவிதை யாவும் தனக்கெனக் கேட்கின்ருள்'

என்றபடி எங்கும் எதிலும் சக்தியையே கண்டு சக்தி மயமாய் நிற்பவர். எனவே, ஆர்-சக்தி பொருந்தியவர். இந்தச் சக்தியமான சக்திக் காட்சியால்.

பாரதியார் பார்— அதியார் பார்— உலகத்தில், உலக மக்களுள் 'உலகம் என்பது அயர்ந்தோர் மாட்டே'— அதியார்- அதிகமானவர், சிறந்தவர்— என்பதைப் பார் பார்த்துத் தெரிந்துகொள். எனவே..? பாரதி யாரென்ருல் பாரதியரிய கலேமகளின் அருள் பெற்று, கவிதைகளின் சன்னத்தரய் கற்பனேக் கனு கூக் கருத்திலே தரித்து, காசினி முழுமையினும் காளித் தாயையே காணும் தெய்வக் காட்சியுடையவராய், அடிமைத்தனம், கோழைத்தனம் முதலானவை நீங்கிப் பாருலகமும், பாரதமும் உய்யப் பாரத மக்களின் சிரேஷ்டராக விளங்குபவர், அவரே பாரதி. பாரதியை வணங்கி, பாரதி வழியிற் சென்று, பார் அதிக நலம் பெற நின்று நாமும் பார் அதியரான பாரதியைப் பார்ப் போமாக.

முரசு கொட்டுது கேளடா!

—மு. க. தங்கவேலன்.



முரசு கொட்டுது! முரசுகொட்டுது!
முரசுகொட்டுது கேளடா!
மூட்டிவிட்ட கனல்பறக்க
நாட்டிலின்று வீரசக்தி (முரசுகொட்டுது)

உலகம் எங்கணும் கலகம் அற்றிட
உயிர்வழங்கிய நாட்டிலே – அருள்
திலக மாமணி புத்தர் காந்தி
திகழ்ந்த பொன்னெழில் வீட்டிலே நம்
தெய்வீகத் திருநாட்டிலே (முரசுகொட்டுது)

அகில மாநிலம் குமுறி நின்றது
அமைதி வானிடை புயலெழுந்தது
பகலவன் சுடு கனலுமிழ்ந்தது
படை எழுந்தது பகை முடிந்தது
பாரதத் திருநாட்டிலே – (முரசுகொட்டுது)

பழமை கொண்டொரு கிழமை அன்பொடு
பதிவு காட்டிய நெஞ்சிலே – வெறி
கயமை கொண்டொரு ஈட்டி பாய்ச்சிய
காட்டு வெறியரை ஓட்டவே – நம்
கன்னிமைத் திருநாட்டிலே – (முரசுகொட்டுது)

வைய நாட்டின் அரங்கிலே – சம
வாழ்வு கேட்டு முழங்கினேம் – தம்
உய்வு நாடிய அன்னை தன்னை
உதைத்த காலை ஒடிக்கவே – நம்
உதய பாரத நாட்டிலே – (முரசுகொட்டுது)

பாரிலே பகை நோய் தணிந்திட
பஞ்சசீல மருந்து கண்டது
நேரு என்றொரு வீர நெஞ்சினில்
நீசர் இட்ட நெருப்பிலே – உயர்
நீதி கொண்ட சிரிப்பிலே – (முரசுகொட்டுது)

காந்தி என்றொரு சாந்த மூர்த்தியின்
கண்ணின் நீரில் வளர்ந்தது – உயிர்
ஈந்த வீரரின் ஈடிலா உரம்
என்றெழுந்திடு நாற்றிளம் பயிர்
ஈன மாடுகள் மேய்வதா – இங்கு
(சீன மந்தைகள் சாய்வதா) – (முரசுகொட்டுது)

புல்லிலே யொரு படை பிறந்தது
புதிய பாரதம் முரசெறிந்தது
சொல்லிலே நவ சக்தியொன்று
சுழன்றதே உயர் நேருவென்றொரு
சூறையொன்று கிளர்ந்ததே – என
(முரசுகொட்டுது)

குருதி சிந்திட வெறி எழுந்தது
குறுரு நெஞ்செனும் சுவர்விழுந்தது
பரிதி முன்பனி இறுதிஎன்றிட
பயம் அழிந்தது படை நடந்தது
பாரதத் திருநாட்டிலே – (முரசுகொட்டுது)

உமை யமர்ந்தொரு தவமிருந்தது
ஊழிநாயகன் வாழ்வு கொண்டது
இமய மாமலே நமது ஆலயம்
இச்சைகொண்டவர் பச்சை ரத்தம்
இறைத்துக் காளியைப் பாடுவோம் – வட
எல்லைக் காளிமுன் ஆடுவோம் –
(முரசுகொட்டுது)

இமயத்து முடியிலே கொடியைப் பிடித்திடு
எதிர்க்கின்ற பகைவரின் உயிரைக் குடித்திடு
தமையொத்த நாடெலாம் உறவைப் பிணைத்திடு
தடையற்ற தொழில்கண்டு படையைச் சமைத்திடு

இடிபட்ட வானிலே மழையைப் பிணித்திடு
இடமுற்றும் உழுதிட்டு விளைவைக் குவித்திடு
விடிவற்ற வறுமையின் பகையைத் தடுத்திடு
வீரர்க்கு வயிறுர உணவைக் கொடுத்திடு

தறிகெட்ட பிரிவினை வெறியைக் கெடுத்திடு
தாயொத்த நாட்டன்பு வெறியைப் படைத்திடு
நெறியுற்ற வாழ்விலே பொருளைப் பெருக்கிடு
நிமிர்கின்ற சோம்பரைத் தொலையச் சுருக்கிடு

குறியுற்ற திட்டங்கள் முடியச் செலுத்திடு
குறைவற்ற வழியிலே அயர்வற் றுழைத்திடு
எரியுற்ற வீட்டிலே துணையுற்ற சாக்கிலே
இரைதேடு தாய்களை தையப் புடைத்திடு

உமைசக்தி வெற்றிவேல் புகழைத் துதித்திடு
உரமுற்ற தோளிலே படையைப் பிடித்திடு
தவமுற்ற பாரதிக் கவியைப் படித்திடு
தமிழ்பெற்ற பரணிக்கு விலையைக் கொடுத்திடு. ★

வெல்க உண்மை!

—சொந்தரம் கைலாசம்.

சின்னஞ் சிறுகுழந்தை சிங்காரத் தேனிதழில்
மின்னுஞ் சிரிப்பாவான் மென்குதலை தானுவான்
என்னெஞ் சிருந்திடுவான் இன்பக் கவிதருவான்
தன்னந் தனிமுருகன் தாள்பணிந்து பாடுவனே!

பாரதத் தாய்படும் வேதனை – நீங்கள்
பார்த்திலி ரோவிழி போனதோ?
சூரரே தூங்குத லாகுமோ? – பெருந்
தோள்கள் புடைத்திட வில்லீரோ?
நீர்வள் மக்களே அல்லரோ? – உங்கள்
நெஞ்சங் குமுறிட வில்லீரோ?
வீரம் வெறுங்கதை ஆவதோ? – பெரு
வெற்றி பிறக்கெனப் போவதோ?
பாரதம் மற்றவர் ஆள்வதோ? – அதைப்
பார்த்துநீர் இங்கினி வாழ்வதோ?
கூறிடும் ஆயிரம் ஜாதியும் – கட்டுக்
கோப்பைக் குலைத்திடும் பேதமும்
மீறியோர் ஒற்றுமை காணுவீர் – என்றும்
வெற்றியி லேயினை யாடுவீர்! எனக்
கூறிய பாரதி தன்னையும் – நெஞ்சில்
கொண்டு பணிந்துகை கூப்பினேன்!

தூங்கங் கலைத்திடத் துன்ப மொழித்திடத்
துள்ளி யெழுந்தவனே – கவி
சொல்லி மகிழ்ந்தவனே – துயர்
கிள்ளி யெறிந்தவனே

ஊக்க மிகுந்தவன் உண்மை யுணர்ந்தவன்
உத்தமன் பாரதியை – நிதம்
ஊருக் குழைத்தவனே – உணர்
வூறும் அருட் சுனையை

பாக்கள் புனைந்தவை பாடும் அரங்கினுள்
பண்புத் தகவரினே – கவி
பாடிடும் என்னுறவை – தமிழ்ப்
பாடல் சுவைப்பவரை

ஆக்கிக் கவிதர அன்பில் பணித்தவர்
அத்தனே பேரையுமே – மிக
அன்பாய் வணங்கிடுவேன் – உங்கள்
ஆசி விரும்பிடுவேன்!

பாட்டினிலே பாரதத்தைப் பள்ளியெழச்
சொன்னவனே
நாட்டினிலே நல்லுணர்வை நாட்டிவந்த மன்னவனே
வீழ்ந்திருந்த நெஞ்சிலெலாம் வீரத்தைப் பெய்தவனே
சூழ்ந்திருந்த வல்லிருளைச் சுட்டெரித்த வெய்யவனே
தம்மை மறந்துழன்ற தன்மையினைக் கொய்தவனே
தம்மை நமக்குணர்த்தி நாடாளச் செய்தவனே
என்றே பிறந்தவனே என்றும் இருப்பவனே
சென்றதயக் கூட்டிலெலாம் செந்தமி ழிசைப்பவனே
பாரதியை நம்மரசு பாராட்டும் பண்பறிந்து
சீரறிந்து நான்மிகவும் சிந்தை மகிழ்கின்றேன்.
"வெல்க உண்மை" விரித்திடுவேன் என்கவிதை
வெல்லுக வெல்லுக வே!

தாயெனவே தாயெனவே திகழும் உண்மை!
தவழும் அறம் யாவும்தன் மடியில்! நெஞ்சக்
கோயிலிலே ஒளிவீசும் விளக்கே உண்மை!
குலவுகதிர் கூட,அதன் முன்னே மங்கும்!
ஆயிரவர் வந்தாலும் துணிந்து சொல்வேன்
அருமையிலே பெருமையிலே உணர்ந்து
சொல்வேன்
வாயினிக்க மனமினிக்க உண்மை பேசி
வாழ்கின்ற வாழ்க்கையதே சொர்க்க மாகும்!

வாய்திறந்தால் பொய்வழியும் வஞ்சன்
வாழ்க்கை
வானத்தில் மாயமிடும் வில்லே யாகும்
தாய்கூட அவன்சொல்லே நம்பாள் பொய்யன்
தான்பிறரை நம்பாமல் தவிப்பான் சாவான்.
தீயனெனப் பாரெல்லாம் இகழ்ந்து சொல்லும்
திரைமறைவில் வாழ்ந்தாலும் நெஞ்சம்
கொல்லும்
ஆய்ந்துணர்ந்து பார்க்குங்கால் பொய்யன்
வாழ்க்கை
அம்மம்ம! அம்மம்ம! நரகம் ஆகும்!

உண்மையினே வெல்லஒரு சக்தி, இந்த
உலகத்தில் இதுவரையில் உதித்த தில்லே!
கண்ணே இமை வந்துவந்து மூடும்: ஆயின்
கண் குருடாய் ஒருநாளும் போவதில்லே
எண்ணிமிய பலவகையில் பொய்வந் தெற்றும்:
என்ருலும் மெய்வெல்லும்! இதற்குச் சான்று
கண்ணுக்கு முன்னுக நம்முன் வாழ்ந்த
காந்தியவர் தவவாழ்க்கை ஒன்றுபோதும்!

நேற்றல்ல இன்றல்ல நெடு நாளாக,
நின்றிடுமோ வென்றிடுமோ உண்மை, இல்லே
தோற்றிடுமோ என்னுமொரு கேள்வி, நெஞ்சில்
தோன்றியவா றுள்ளதனே அறிவோம்
நன்றும்!
போற்றுதலும் பொன்குவையும் பொய்யர்க்
காகிப்
போவதுபோல் தோன்றுகையில், உண்மை
யொன்றே
சாற்றிவரும் நெஞ்சங்கள் தளர்ந்து நோக்கும்:
சத்தியத்திற் கிதுகாலம் இல்லேயோ என்னும்

பொல்லாத சோதனைக்குள் ளாகும் போதும்
புயல்போலத் துயர்வந்து சூழும் போதும்
வெல்லாது போய்விடுமோ உண்மை, வாழ்வில்
வெற்றியினேப் பெற்றிடுமோ பொய்மை, என்று
எல்லோரும் எண்ணிடுதல் இயற்கை யாகும்
என்ருலும் இறுதியிலே உண்மை வெல்லும்.
நில்லாத பொய்மைக்குத் தோள்கொடுத்து
நிறுத்திடினும் ஒடிந்து விழும், தோற்றுப்
போகும்!

எத்தகைய துயர்வினும் தன்னே நம்பி
இருப்பானு வெறுப்பான என்று தெய்வம்
பக்தியிலே புருவனேப் பிடித்து நாளும்
பலவாறு சோதிக்கும். துயர்க்குள் ளாக்கும்.
சித்தமெலாம் தெய்வத்தில் வைத்துவிட்டால்
செப்பரிய முக்திநிலே தெய்வம் காட்டும்
சத்தியமும் கடவுளுக்குச் சமமே யாகும்
சாகாத பெருநிலையைத் தருவ தாகும்!

கோயிலெனக் கட்டிஅதில் சிலையை வைத்துக்
கும்பிட்டால் தான்தெய்வம் உண்டா ?
உள்ளே
போயந்தச் சிலையெடுத்து வெளியில் கொண்டு
போட்டுவிட்டு வீற்ந்ததென முழக்க மிட்டால்
மாயங்கொல் மறையுங்கொல் என்னும் தெய்வம்?
வாய்கிழியச் சொன்னாலும் பொய்மை
தோற்கும்.
தீயரெலாம் திரண்டெழுந்து போரிட் டாலும்
தீர்ப்பான! தீர்ப்பிதுதான்: உண்மை
வெல்லும்!

பூரிவதனேப் போரென்று புகல்வ துண்டோ ?
போயிருந்த கதிர்வந்தால் மண்ணைக் கௌவி
இருந்த இருள் தானுக இரத்தம் சிந்தும்
இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகும்
சுருங்கும் முகம் போல்மனமும் சுருங்கி, நம்மேல்
தொகைதொகையாய்ப் படை கொண்டுவந்த
சனர்
உருவத்தில் வந்தாலும் பொய்யே தோற்கும்!
ஒருதுணையும் இல்லாதே உண்மை வெல்லும்.
(உலகத்தில் என்றென்றும் உண்மை வெல்லும்!)

மூப்பத்து மூக்கோடி தேவ ரென்ன
முழுமுதலே முன்வந்து வாதிட் டாலும்
எப்பொழுதும் எங்கெங்கும் உண்மை வெல்லும்
எதைக்கொண்டு மூடிடினும் தலையைத்
தாக்கும்.
இப்பாரில் குழிதோண்டி விதைபு தைத்தால்
என்னுரும் நிலங்கிழிக்கும் செடிமு ளைக்கும்.
சிப்பாய்கள் துப்பாக்கி முனையைக் காட்டிச்
சினத்தாலும் ஒடுங்காமல் மெய்சி ரிக்கும்.

நெய்கொண்டு வளர்கின்ற தீயை, நூலில்
நெய்கின்ற துணிமூடி நின்ற தில்லே.
பெய்கின்ற மழையுலகைக் கரைத்ததில்லே
பெருமலேயை மூடுபனி தகர்த்த தில்லே.

வெய்யவனுல் கடல்வற்றி வறண்ட தில்லே.
மேதினியில் இவையெல்லாம் நடந்திட் டாலும்
பொய்யென்ற படைகொண்டு போர்த டத்தும்
புல்லர்க் கிங்கொரு நாளும் வெற்றியில்லே!

தெய்வமென நாமெண்ணி – துதி - செய்கின்ற
தேசம்;
சிதருமல் பதருமல் இது வளர்கின்ற தேசம்;
ஐயனெனும் காந்தியர் அருள் பெய்கின்ற தேசம்
ஆனாலும் ஆனாலும் ஒரு பேராசை யுந்த:
பொய்வந்த சீனத்தர் இது புரியாமல் வந்தார்.
போகட்டும் போகட்டும் அவர் புத்திதெளி
வுற்றே!
மெய்வென்று மெய்வென்று நிலம் மீண்டுவர
வேண்டும்!
வென்றிடுக உண்மையெனும் மொழி விண்முட்ட
வேண்டும்!

மமதை கொண்ட
மனது கொண்டு
வனியவந்த பொய்யரை
திமுதி மென்று
திரண்டு பூமி
திருடவந்த சினரை
நிமிர்ந்து சென்று
நிலையில் நின்று
நெடுகவென்று காட்டுவோம்.
நமது நாடு
நமது வாழ்வு
நமது பக்கம் சத்தியம்
நமது வெற்றி
நமது வெற்றி
நமது வெற்றி நிச்சயம்!

★

"மன்னும் இமயமலை"

—துறைவன்

புல்லே வயிரப் படையாக்கும்
புனிதன், இன்பதுன்பமெனும்
அல்லல் இரண்டும் அகற்றியவன்
ஆசான், அறிவின் பிழம்பானேன்
நெல்லேப் பொருதைக் கரையினிலே
நேர்ந்து கருணேபாலித்து, என்
சொல்லேத் திருத்தித் தமிழாக்கும்
தூபோன் பாதம் பணிந்தேனே,

அலேயலேயாய் எழுந்துவரும்
கவிதை செய்வான்
அன்னே பராசக்தி நினே(வு)
அகன்றிடாதோன்
குலேகுலேயாய்க் காய்த்திருக்கும்
தென்னஞ் சோலேக்
கொழுந்தென்றல் நடை
காட்டும் கவிஞர் கோமான்



தலேவனென விற்றிருந்தான்
அரங்கத் திந்நாள்
ச. து. சு. யோகி யெனும்
புலவர் செம்மல்
மலே இமயம் போன்றுன்தன்
மலர்த்தாள் போற்றி
மழலே மொழி
உரைக்கின்றேன்
மகிழ்வானென்றே!

அன்னை பாரத தேவியின் இதயம்
தன்னில் எழுந்த தாப மணித்தும்
சென்ன பாரதி தோன்றிய நாளே
அன்னை யெனுமொழி அருத்தம் நிறைந்தது!

ன்ற நாடு விடுதலை எய்திடத்
தோன்றிய கவிஞன், சுதந்திரச் சங்கு!
மூன்று தமிழும் முத்துமுத் தாகச்
சான்றோன் நாவில் தழைத் தொளிர்ந்தது

ஞான ரதத்தைச் செலுத்திய சாரதி
ஊசை சிறுமைகள் எரித்தோன் பாரதி
வானச் சுடரை மண்ணிலே அழைத்துத்
தேனைச் செல்லிலே தேக்கியோன் பாரதி

உறைந்து படிந்தநம் உணர்வினை எழுப்பி
மறைந்து கிடந்த நம் மாட்சிகள் பாடி,
பறைந்திருள் வலகச் சாளரக் கதவெலாம்
திறந்து வைத்திடும் செம்மல் பாரதி

எண்ப தாண்டுகள் இனிது நிரம்பிய
பண்பினன் பாரதி, பாரத தளபதி
விண்புலம், பெயர்ந்து வீறுகொண்டு இந்நாள்
தண்பனுப் நம்மிடை வீற்றிருக்கின்றனர்!

மந்திரக் கவிஞன் கொலுவிலே, பாரதக்
செந்தமிழ்க் கவிஞர் செவ்விய அரங்கில்
வந்தனென் ''துறைவன்'', வான்படர் இமயச்
சிந்தனை சொல்லும் திறனிலேன் சிறியேன்!

மன்னும் இமய மலையினை, இராவணன்
என்னும் அரக்கன் எடுத்திட முயன்றுன்
அன்னோன் பட்ட அவலம் அறிவோம்
இன்னுமோர் இராவணன், இந்நாள்
[தோன்றினனே!

பத்துத் தலைகளும் பைய மறைத்தான்
நித்தமும் பஞ்சசீலம் படித்தான்
சுத்த சமரசம் முழங்கினன் குதாய்
வைத்தனன் காலை, வடபுலத் தெல்லையில்!

எட்டி நம் எல்லையில் மிதித்த காலை
வெட்டி எறிய வீறுகொண்டெழுந்தோம்
மூட்டி வானில் முழங்கின துந்துபி
கெட்டிக்கரான், சீனன் ஒடினன்!

இமய வெற்புக் கப்பால் இரிந்தான்
சமயம் பார்த்து மீண்டிடு வானோ?
இமய எல்லையை ஏறெடுத் தொருகால்
அமையப் பார்த்தால், அறிவான் திண்ணம்!

எல்லைக் கோடும் இமயக் கோடும்
கலிலை அடுக்கிய வரம்பென எண்ணி
அல்லற் படுத்தினன் அறிவிலைப் பகைவன்
கல்லா இமயம்? காடா இமயம்?

நாவலந் தீவைக் காத்திடும் இமயம்
பாவலர் நாவற் பொருந்திய பொருப்பு
காவலந் தெய்வம்! கலங்கா நெஞ்சினர்
தாவலம் வந்து தொழுதிடும் மாமலை

இமவான் என்னும் எதிரிலா வலத்தோன்
உமைதொழும் தந்தை! உற்ற வையகம்
சுமையெனத் தரங்கும் தூயோன் யாவன்?
அமையும் மலிபோல், அவனுமோர் மலையே.?

அன்று! நல் இமய அரணெனும் மாமலை
இன்று தோன்றும் நிலநூல் மலையல!
அன்றெனின் யாது? அடுக்கிய குன்றுகள்
என்று நீனைந்தாக்கே இஃதுரைத்திடுவேன்

கோடி கோடி பரதவீரர்கள்
கூடி நின்ற கூட்டமே இமயம்!
கோடி கோடி முனிவரும் கவிஞரும்
ஊடு வாழ்ந்ததால் உயர்ந்ததே இமயம்!

சிறந்த பாரதச் செம்மல்கள், முன்னேர்
இறந்தவரல்லர்! இமயம் ஆயினர்
உறைந்தனர் பனியாய், உணர்ச்சி நீங்காரி:
நிறைந்தனர் வான் தொடும் நெடுஞ்சிகரங்களாய்!

வீட்டுமன் துரோணன், விராடன், மணித்தேர்
ஒட்டிய கண்ணன், உதிட்டிரன் விசயன்
நீட்டிய வேற்கண் திரௌபதி, இவர்தம்
ஈட்டமே இமயமாய் இலங்கியதன்ரே!

காலடிச் சங்கர முனிவனே கங்கை!
சீலவி ராமாநுசனே சிந்து!
மூலன் எனினும் முனிவனேர் சிகரம்
காலனே வென்று கதித்தது இமயம்!

வீரசிவாஜி இமயமாய் விளைந்தான்
தீரன் பிருதுவி திகழ்ந்தனன் ஒருபால்
சேரன் குட்டுவன் சிறந்தவோர் சிகரம்
பாரத வீரத்தம் பாசறை இமயம்!

கம்பன் இமயம்! வள்ளுவன் இமயம்!
செம்பொற் சிலம்பைச் செய்தோன் இமயம்
அம்புவிக் கெல்லாம் அறநெறி பழக்கிய
தம்பன், காந்தி, நாயகச் சிகரம்!

ஆயிரந் தலைமுறைக்கு ஒரு கவி பாரதி
போயிருந் தொளிர்ந்தனன் பொற்கோட்டிமயமாய்
ஆயிரங் காதம் விரிந்து பரந்து
மேயின நம்முலம்! மிளிர்ந்தது இமயம்!

மாற்றலர் தம்மை மடித்திடும் இமயத்து
ஆற்றல், பாரத சக்தியின் செய்கை!
வேற்றுர் தம்மை வேரோடு அழிக்கும்
ஊற்றம் உருவாய் ஒங்கியது இமயம்.

எங்கோ இலங்குவ தன்றுகாண் இமயம்!
இங்கே உம்முள், நம்முளே இமயம்
'' எங்கே பகைவன், இக்கணம் அழிப்பேன்
எங்கே எங்கே '' என்பதே இமயம்!

நம்முள் ஒங்கிய நெடுமலே இமயம்!
பம்மிய அச்சப் பகைவரை விரட்டிடில்
செம்மை எய்துவோம்; வெற்றி சேர்த்திடும்
பொய்மைச் சீனரின் புரட்டும் அழித்திடும். ★

வீரத்தின் பரிசு!

—வித்வான் வி. துரைசாமி



பாரதியைப் பாடவந்த பாவாணர் எங்களுக்குச்
சாரதியாய் முன்னமர்ந்து சல்லாபம் செய்பால
பாரதியே! தங்கள் பதமலர்க்குப் போற்றிசைப்பேன்,
பொன்னெழுத்தில் நீட்டும் புதுமையிது! பாரதியைச்
சென்னீ அரசினரே சிங்கார தனத்திலிட்டுப்
போற்றி விழாவெடுக்கும் புண்ணியத்தால் பூரித்தோம்
ஆம்,
என்ன வியப்பிதிலே? எங்கள் கவிமுதல்வன்
பன்னும் கவிதைகளோப் பாடிக் கொடிபிடித்துப்
போராடிச் சிறைசென்ற போர்வீரர் தாம் இன்று
சீராய் அமைச்சரெனச் செங்கோல் பிடிக்கின்றார்!
இம்முறையில்,
நன்றிக் கடனுற்றும் நல்லமைச்சின் மேலோர்க்கும்,
வென்றிக் கவிமுழக்கும் வித்தகர்க்கும்,
[அவையோர்க்கும்
பாரதியின் பாதைவந்த பாவாணன் துரைசாமி
நேரெதிரே கைகூப்பி நிமிர்கின்றேன் கவிபாட;
அவையோரே,
''சொல்லொன்று வேண்டும் அந்தச் சொல்லாலே
[பாரதத்தின்
அல்லல் களைந்திடுவேன், அமுதத்தை
[ஏர்த்திடுவேன்''
என்று தவங்கிடந்தான் ஏற்றம் இசைக்கவந்தேன்.
கவிதை எழுதுகையில்,
குயிலும்மனக் கோபுரத்தில் கொப்பளிக்கும்
[கற்கனேயாம்
அற்புதங்கள் அத்தனேயும் ஆங்கார மிட்டதிரி,
நிலையேது மின்றி நிமிர்கையிலே ஆ ஆ!!
கண்கள் கலங்கக்கும்! கருத்தும் ஒளிகக்கும்!
பண்கொண்ட பாட்டோ பரவசத்தைக் கக்கிவிடும்
ஆம்,
எங்கள் குலமுதல்வன் இனியவுரு வைக்கண்டேன்!
என்னையே கைம்மறித்தான்! இருவென்றான்
[இங்கிதமாய்
என்னிலே தானுய் இதயம் நிரம்பினனுல்!
ஆதலினுல்,
கொற்றம் வினேத்தகவிக் கோமாற்குக் குரல்கொடுக்கும்
பெற்றியொன்று வாய்த்த பெருமையொன்றே
[என்றனுக்கு!
பாரதியின் பேச்சைப் பரிவோடு கேளுங்கள்!
வெல்க பராசக்தி வேணவரம் தந்திடுக!
புல்லில் வயிரப் படைதோன்றின் பூதலத்தில்
பல்லுயிரின் தாயாம் பராசக்தி தோன்றுமினை
முன்னரே கூறினேன்! முற்றும்மெய் யானதுபார்!
அடர்த்தெழுந்த செங்கருதி யாழிப் பரப்பெங்கும்
காலாந்த ருத்திரனேக் கைகோத்துக் காப்பெயர்த்து
நர்த்தனங்கள் ஆடியபின் நயனங்கள் தீப்பறக்கப்
பாரதத்துப் பண்பட்ட பல்கோடி வீரர்களின்
உள்ளம் நிறைந்தாள்! உடலமெலாம் தானுகிக்
கள்ளம் தொலேத்துவிட்ட காட்சியினேக்
[காணவந்தேன்!
நெருப்பைத் தொடுகின்றேம் என்றே நினேயாமல்
தருக்குற்றுப் பாரதத்தாய் தலேமுடியைத்
[தொட்டபின்னும்
நெஞ்சு கொதிக்காமல் நீலிமீறிப் போகாமல்
பஞ்சையராய் வாழ்ந்திருக்கப் பற்றுமோ நம்முள்ளம்?
பாரதியின் பாட்டுண்டு, பல்லாயிரம் வீரர்
பாரதிரப் படிப்ப் பரவசமாய் நின்றதுண்டு;
அந்தோ பரிதாபம்! ''அவனியிலே பாரதியும்
மாண்டு மறைந்தான்அம் மண்ணில்இனி வீரமில்லே!''
என்ற நினவோடு இமயத்தில் இட்டஅடி;
சீனத்து நாட்டுச் சிறுக்கள் கதறியழத்
தேம்பித் தியங்கும் தெரிவைமார் அவோரின்
வாயில் விழுத்தவடி! வளமார் பசும்தங்க
நெஞ்சில் விழுந்தஅடி என்பதனே நீயின்கள்!
... ...
பண்ணேவைத்துப் பாம்பினத்தை, பச்சைத் தவனேனே
உண்ண வளர்த்திடற்கு உதவுபடி யாகவங்கள்
இமயம் இருக்குதென்ருல் எங்கள்பிரான் நேருவிடம்
சமயம் அறிந்துவந்து சகலதுதி பாடியபின்
கையேந்திப் பல்லிளித்துக் காலில் விழுந்துகெஞ்சி
''மெய்யின் திருவுருவே! மேலான தியாகத்தின்
சுடரே!இந் நானிலத்தின் சோதியே!'' என்றிசைத்து
நேரு பெருமானின் நெஞ்சம் இளகவைத்து,
''வயிற்றுப் பசியையா! வாய்புரள்து போனதையா!
கயிற்றையே பாம்பென்று கடிக்கும்நிலே வந்ததையா!
எங்கள் திருநாட்டில் இடமேதும் இல்லேயையா!
உங்கள் திருவடிக்கே ஒருகோடி தண்டமையா!
பல்லா யிரமைல்கள் பரவும் இமயத்தில்
ஒல்லும் வகையாலே ஒன்றிரண்டு பண்ணேகளே
வைத்து நடத்தியெங்கள் வயிற்றைக் கழுவுகிறேம்!
அனுமதிக்க வேண்டுமென இரத்தல் மிகநன்று!
இதுவன்றி,
வீரம் இருப்பதுபோல் வெளியே பசப்பிவிட்டுப்
போர் தொடுத்த பாதகரைப் பூண்டழிக்க
[வேண்டுமென்று
மூண்ட சீனத்தீயால் முடிவை நெருங்கிவிட்டார்!

(வேறு)

கூற்றென மேவிய சீனர் பிணங்கள் குவித்தங்கே
தோற்றிடும் மற்றெரு இமயம் எனும்நிலே
[தோன்றுங்கால்
போற்றி யெனேப்புகழ் பாடநினேத்து புகுந்தாரே!
ஏற்றெனே இப்பொழு தாயினும் எண்ண இசைந்தீரே!
என்புகழ் என்றும் இசைத்திட லாம்! இவ்வெழில்
[மண்ணே
வன்புடன் ஆக்கிர மித்தவர் கூற்றுவன் வாய்புகுதும்
மூன்று தினப்பொழு தாயினும் வெற்றுரை மூளாமல்
துன்பினேயேற்று வதைத்திட வேண்டும்
துடித்தெழுவீர்!

மானமிகுந்தவர் பாரத மக்கள்! மருந்துக்கும்
ஏனைய மண்ணை விரும்புத லில்லா ஏற்றத்தார்!
பூனை எனப்புகும் ஈனர் துகள்படப் புரியாரோ?
சீனர்கள் நெஞ்சினில் இந்தியர் குண்டுகள்
[செல்லாவோ?

நண்பின ரென்று நினைத்திலர் இந்திய நாட்டோரை!
பண்பெதும் இன்றி படைக்கல முண்டெனப்
[பாய்ந்தாரேல்
மண்பட மண்டி மடித்து கிழித்துடல் மாய்க்கோமோ?
புண்பட நெஞ்ச புகைந்து கிடப்பது பொருளாமோ!

கருவி படைத்திலர் வெருவி யொடுங்குவர்
[எனவந்தார்
நரிவினை செய்தொரு புலியை அடக்க நயந்திட்டார்!
இரவி பறந்தபின் மின்மினி யீர்த்திட இவ்வந்தார்!
உருவிய வாளினி உறைபுகு தும்நிலை உண்டாமோ?

நூற்றிரு மலைகளை நூறி நொறுக்கி நெடிப்பொழுதில்
காற்றினில் தூவிட வல்லவர் பாவையர் கண்ணுக்கில்!
வேற்றுமை யற்றனம்! வேண்டிடில் வெண்மலை
[பொடியாக்கிக்
கூற்றுவ னுக்கொரு பாதை சமைத்திடக் கூடாமோ?

வீர வுணர்ச்சிகள் ஓய்ந்திடு காலையில் விண்ணின்றும்
பாரதி ரக்கவி படிடப் பாரதி வந்துற்றேன்!
பாரத மண்ணிணைச் சேரர் தமக்குப் பணயம் செய்
ஈரமி லாதவர் நெஞ்சினில் வெந்தீ எரியுதுபார்!

துட்ட குணத்தவர் பட்டழி யக்கைத் துப்பாக்கி,
மூட்டி யிடித்திடும் டாங்கி பீரங்கிகள் முதலாகச்
சூட்டு பிணங்கள் குவித்திடு வீர் அதில் சோர்வின்றி
இட்டொரு தவிசினை ஏற்றிடு வீர்எனை இதுபோதே.

தாலி பறித்துத் தந்திடு தையலர் இங்கல்லால்
நாலு திசைக்குள் இருத்தலும் உண்டுகொல்
[நனிநோக்கின்
மாலினி யொத்திடு வல்லமை யூட்டிடு மங்கையரால்
வேலி சிதைத்திடு வீணர்கள் மாய்தல் வியப்பலவே.

முந்தைய ராயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்தாரே
சந்ததி யார்கள் சுதந்திரம் விற்றுல் சயியரோ?
வந்தவர் மாய் வதைத்திடு வீரப் பரிசாக
விந்தை விழுப்புண் தந்திடச் சக்தியை வேண்டுவனே.

(வேறு)

மரங்கள் மலர்கள் உதிர்த்தன
மாக்கடல் ஓன்ன் றதிர்ந்தது!

போர் முரசு!

—கோ. செல்வன், எம். ஏ., பி. எல்., பி. டி.,

கொட்டடா போர்முரசைக்
கூட்டடா பேரணியைப்
பற்றடா போர்க்கொடியைப்
பாடடா வெற்றிதன்னை!

[வேறுநடை]



[வேறுநடை]

பாரதத்தின் மேல்போராம்! புண்ணியத்தைக் காத்துப்
புவிக்களிக்கும் திருநாட்டின் மேல்போராம்! என்றும்
மாறுத அறம்வளர்க்கும் மண்மதா மேல்தான்
மமதையர் தொடுத்தனராம் பெரும்போரை! அந்தோ!
தீரரத போரிருளைத் தீர்ப்பதற்கோ அன்புத்
திருஞ்சக்தை ஏற்றியதுத் தர்நெற்மேல் போராம்!
ஊரளக் காந்திசென்ன உண்மையின்மேல் போராம்!
அறங்காக்க நீதிகாக்க அணிவகுத்து வாரீர்!

போர்முரசம் கேட்கின்றேன்! பாரத நாட்டில்
புகுந்தானும் பாம்பு தின்னும் சீனக் கள்ளன்!
ஆர்ப்பரிக்கு தடாதோள்கள்! என்றன் கண்கள்
அனலுமிழும் குமிமாக ஆன பின்னும்
ஊர்விழுங்கும் எரிமலையோல் எனது நெஞ்சம்
உருமாறப் பெருங்குன்முச் சமைந்த பின்னும்
யார்தடுப்பார் இங்கென்னை? பாசறையே!
பாடிவீடே! பகையறுக்க வந்து விட்டேன்!

அன்னையே! என்தாயே! நான்வணங்கும் தெய்வமே!
என்னீநீர் பெற்றதன் நன்மையை இன்றுகாண்பீர்!

மண்ணுசை கொண்டொருவன் சண்டைக்கு
[வந்துவிட்டான்;
எண்ணிவிட்டேன் என்பங்கை நான்செலுத்த!
[ஈன்றவளே!

வீரரின் பட்டியலில் பேரதனைத் தந்துவிட்டேன்;
மாறுத வெற்றிபெற மாதா விடைகொடுப்பீர்!

செந்தமிழின் சேயடாநீ! சொல்லவா வேண்டும்நான்!
சொந்தமடா வெற்றியெலாம் என்றே
[விடைகொடுப்பீர்

நெஞ்சை தளமாக்கி எஃகின் அரணுக்கி
வஞ்சகரை வீழ்த்திடுவாய் என்றே விடைகொடுப்பீர்!

யதுங்கும் புலிமுன் எலிப்படையா? மேகம்
ஒதுங்கும் மதில் உடைக்க எறும்பணியா?

பாய்கின்ற காட்டாற்றின் முன்னல் பெருமரங்கள்
சாய்கின்ற காட்சிபோல வீழ்வீர் பகைவர்!

ஏளனத் துக்குரிய தம்மா! ஒருநொடியில்
தூளாகும் மாற்றாரின் கோட்டம்! விடைகொடுங்கள்!

போடடா எனும்சைகை போதும் பெரும்பிணக்
காடாக்கிக் காட்டிடுவேன் நான்!

[வேறுநடை]

நான்பெற்ற மாணிக்கமே! மாவீரா! என்றன்
நல்வாழ்வின் பேரொளியே! பெருமறவா! நீதான்
தேன்கூட்டில் தினைத்தாடும் வண்டாக வாழ்வில்
தெவிட்டாத இன்பத்தை துய்த்திடுவாய்என்றே
நானனவு கண்டேனடா! அக்கனவும்
[பெரியோர்?
நற்றமிழர் வீரத்தைக் காட்டுவதாய்க் கூறி
ஏன்மகனே செல்லுகின்றாய்! ஊனேபிரிந்து
[வரமேன்!
என்றன்னே கூறிவிட அவன்தந்தை
[சொல்வான்:

[வேறுநடை]

தந்தேன் ஆணை தடையில்லை மகனே!
தருணம் வாய்த்ததடா!
சொந்த நாடு காத்திடுவேன் என்றே
சபதம் செய்திடுவாய்!
சிந்தும் இரத்தம் தசமத்தைக் காக்க!
போடா போர்முனைக்கு!
சொந்தம் எனக்குச் செந்நீர்நீச் சலென்றே
சொல்லிச் செல்லடாசெல்!

வீரரங் குக்காத் துள்ளார்
வீரனுய்ச் செல்வேன் தாயே!
பேரரும் தவத்தின் இன்பம்
பூணும் பெருநாள் இன்றே:
தீரரின் படையே! வந்தேன்!
என்றவன் புயல்போல் பாய
ஊரறி காதல் கொண்ட
கன்னிதான் அத்தான் என்றுள்!

[வேறு நடை]

நிற்கஇது நேரமில்லை! நீள்விழியின் இன்பத்தில்
சொக்கஇது காலமில்லை! சுந்தாயே சொத்தே
களம்நாடி ஓடுகின்றேன்! உன்கள்ளப் பார்வை
உளமோடித் தாக்கினுமற் தாமதியேன்! கொத்து
மலர்தொடுத்தே வைத்திடுவாய்! "வெற்றி" எனதான்
வலம்வருநாள் சூட்டிடுவாய்! வாட்டாத பூஞ் சிரிப்பைச்
சிந்திடுவாய் என்கண்ணே! சென்றிடுவீர் போருக்கு;
வந்திடுவீர் வெற்றியுடன் என்றவள் சொல்லுமுன்னே
வாயறி யும்பரணி பாடஇனி கையறியும்
தீயரைத் தீய்த்துவிட என்றவனும் ஓடிவிட்டான்
பாயும் புலிநிகர்த் தோன்!

[வேறுநடை]

மூண்ட போரோ முடிய வில்லை
மீண்டும் முரசொலி கேட்கவே அன்று
சிங்கம் போல சென்ற வீரனின்
தங்கை போர்க்கொடி தாங்கி விட்டாள்!

[வேறுநடை]

வீட்டினுள்ளே அடங்கியிருப்பாள்! வீதியிலே
[நடந்திடவும்
அச்சங் கொள்வாள்!
பூட்டிவைத்த நானத்தின் பெட்டிதாகே
[பெண்ணென்பான்
என்றுஞ் சொல்லும்
நாட்டோரே! பெண்ணென்றுல் பேசும்ப
[வையென்பீர்!
கேட்பீர்! கேட்பீர்!
கூட்டைக்கும் வேங்கைபோல் ஆவாள்பெண்
[வீறுகொண்டே
எழுந்து விட்டால்!

தாய்க்குலமே! சூளுரைத்தேன்! தரணிகாக்கப்
[புறப்பட்டேன்!
அகப்பை ஏந்தும்
கைகளிலே ஆயுதங்கள் ஏந்திடுவேன்! பஞ்சணைய
கால்கள், ஆருயிப்
பாய்ந்தோடும் குருதியாற்றுச் செங்களத்தில்
[நடையியலும்!
மணியும் பொன்னும்
வயிந்தொளிரும் முத்தாரம் மார்பிலில்லை; கவசமுண்டு!
எவர்க்கு மஞ்சேன்!

மையிட்ட கண்களெல்லாம் சினத்தீயின் கோளமாகும்!
அருளும் அன்பும்
பெய்திட்ட வாயுமினிக் களப்பாட்டே பாடிக்காட்டும்!
காவி யத்தில்
கொய்திட்டாள் கோவேந்தன் முடியரசைக்
[கண்ணகிதான்!
அவளோ வீரத்
தெய்வத்தின் திருவுருவம்! அவள்வழிவந் தவளோநான்!
எவர்க்கு மஞ்சேன்!

பெற்றேருரே! மற்றேருரே! தென்றலுக்கும் புயலுக்கும்
தாய்மை காதறே!
உற்றருரே! ஊராரே! குளிர்மழைக்கும் கொடுஇடிக்கும்
தாய்மை மேகம்!
வற்றுத புனலுக்கும் பொங்குகின்ற கடலுக்கும்
மூலம் தண்ணீர்!
கற்றேருரே! நானமென்னும் மென்மைக்கும்
[ஆற்றலுக்கும்
தாய்மை பெண்ணே!

துப்பாக்கி தூக்கிடுவேன்! தோட்டாக்கள்
[பெற்றிடுவேன்!
பகையே! தூள்தூள்!
ஒப்பாரும் மிக்காரும் எனக்கில்லே வீரத்தில்
என்னும் சேதி
செப்பிடுவார் சிலநாளில்! சோடைகள் அல்லபெண்கள்!
அறிவீர் என்குல்!
ஒப்பிடுவாய் என்தாயே! வாழ்த்தியென்னே
[வழிவிடுப்பீர்!
தமக்கே வெற்றி!

[வேறுநடை]

களம்நோக்கிப் பெற்றமகன் ஓடிவிட்டான்!
[பெற்றவனோ
குளமான கண்களோடு வாடுகையில் அவள்மகளும்
விளம்பிவிட்டாள் பரணிபாடி! அச்சச்சோ! வீரத்தாய்
உளமழிந்தாள்! உயிர்க்கூட்டின் உணர்விழந்தாள்!
[சிலையானுள்!

எழுத்தாளன்

மகள்சொன்ன மொழிகேட்ட தந்தையும் மயக்குற்ருன்
முகிழ்த்திருந்த முழுமதியும் கனல் கொட்டத்
[தொடங்கியபோல்
மகளெழுந்தால் மாவீரன் மனம்மட்டும் கலங்காதோ ?
மகள்பாசம் வாட்டிற்றுர் அச்சமல்ல ! அவன் வீரன் !

சிறுபோதில் அவள்தாயின் முகத்தில்தான் வீரச்சேதி!
அறம்நாட்டப் பேராடி மாய்த்திட்ட ஜான்சிராணி
அருந்தமிழர் வழிவந்த வள்ளியம்மை
உளம்நினைந்தாள் ;
வெறிகொண்டாள் ! வீரமகளைப் போரெடுத்துப்
போவென்ருள் !

[வேறுநடை]

பொருநர்அணி பெரியரணி
மறவர்அணி சிறுவர் அணி
மகளிர்அணி மைந்தரணி
புகழ்முடியென எழுந்தது பார் !

[வேறு நடை]

போர்முரசின் ஒலிகேட்டு
ஆர்ப்பரித்துப் பகையுடைக்கப்
போர்க்கிரி கிளம்பிய
பொறுமினர் பரதநாட்டார் !

துடிக்கின்ற முழுவுதோளர்
படையெடுக்கும் பகையுடைக்க
இடியெனக் கிளம்பிட்டார்
குடியுயர் பரதநாட்டார் !

துடுக்காகக் கெடுமதியால்
அடுப்பவரின் பகையுடைக்க
கொடும்புலி கிளம்பிட்ட
மிடுக்கினர் பரதநாட்டார் !

[வேறுநடை]

இதுபெரும்படை; எதிர்ப்பவன் எவன்?
இதுபடைக்கடல்: பகைப்புலமெது?
நதியெனமறம் நமதுடல்தனில்
நிதியெனக்குவித் தகதியிதுகாண்!

முரசதிர்வது பறையடிப்பது
வருபகைமுறி யிடத்திடவே!
எரிமலையென பரதவீரனம்
உருப்பெறஎழுந் தகதியிதுகாண்!

புயலுருவினில் எழும்படையிது!
முயல்நிறமுகில் எனப்பகைமுறி!
உரம்வினைவயல் பரதவர்புயம்
மறம்கெடஎழுந் தகதியிதுகாண்!

வெற்றி!

பாரதத் திற்கே வெற்றி!

பார்புகழ் காந்திய நெறிக்கே வெற்றி!

[வேறுநடை]

அறத்தின் தொட்டில் பாரதம் — அதை
ஆக்கிர மிப்பவன் யாரவன்?
திறத்தின் தாயகம் பாரதம் — அதற்குத்
தீமை செய்பவன் தீருவான்!
உரத்தின் மைந்தர் இந்தியர் — அவரின்
பகைவர் பெறுவார் வெந்துயர்!
கருத்தின் வேந்தர் இந்தியர் — போர்க்
களத்தில் என்றும் முந்துவர்!

தாக்கடா போர்முரசை! தட்டடா தோள்பறையை!
தூக்கடா துப்பாக்கி! தூள்தூள் பகைக்கூட்டம்!
பார்த்தபக்க மெல்லாம் குருதிவெல்லம் சக்காடு
தேர்த்தேனும் வெற்றிநாட்ட வீரர்காள் முந்திடுவீர்!

கொட்டட போர்முரசைக்
கூட்டடா பேரணியைப்
பற்றடா போர்க்கொடியைப்
பாடடா வெற்றிதன்னை!

சத்தியப் போர்!

—கு. மா. பாலசுப்ரமணியம்

சத்தியப் போர் நெறி காட்டியும்--பரா
சக்தியின் காவியம் தீட்டியும்--மிகப்
புத்துணர்வூட்டிய பாரதி—பதம்
போற்றிப் புகழ்ந்திசை பாடுவோம்!
செந்தமிழென்னும் பெருங்கடல்—தந்த
சிப்பி நிகர்த்தவன் பாரதி!—அவன்
சிந்தனைப் பாக்கள் அணைத்ததுமே— ஒளி
சிந்தி நகைத்திடும் முத்துக்கள்!
கன்னல் தமிழ்ச்சுவை நாடினுன்—இன்பக்
காதலே மாதரைப் பாடினுன்!—கவி
வண்ணம் குயில் தனில் தேக்கினுன்—தெய்வக்
கண்ணனேச் சேவகனுக்கினுன்!
விந்தைக் கவி பல பாடினும் — மன
வேட்கையடங்காத பாவலன்—சொந்த
இந்திய நாட்டின் சுதந்திரம்—மண்ணில்
என்றும் நிலைக்கவும் பாடினுன் !



காலம் கவினுனேத் தின்றது ! அவன்
காவியம் காலத்தை வென்றது !—கடல்
ஒலமும் பாரதி பாடலே— இன்று
ஓதி முழங்கிடக் கேட்கிறேம் !

சிப்பி மறைந்தது மண்ணிலே !—முத்தின்
சீர்த்தி உயர்ந்தது விண்ணிலே !—அந்த
ஒப்பற்ற மாகவி வாசகம்—நமக்(கு)
உற்ற உரிமையின் சாசனம் !
மன்னும் இமயப் பெருமலே—எங்கள்
மாமலே என்றனன் பாரதி !—அதை
அன்னியன் தீண்டிடும் போதிலே—நம(து)
ஆவியைக் காப்பதோ வீணிலே ?

வேறு சந்தம்

சத்தியப் போர்செம்மே ஜயங்கொண்ட பாரதத்தின்
தத்துவத்தை—ஆத்மீக சக்திதனை எண்ணுமல்,
யுத்த வெறி கொண்டலேயும் ரத்தக் கழுகுகளாம்
புத்தியிலார் சீனரிங்கே போராட வந்துவிட்டார் !
புத்தரையே தந்தும், புனிதமகான் காந்தியெனும்
உத்தமரை ஈந்தும் உயர்ந்தொளிரும் நம் இமயக்
கற்றரையில் ரத்தக் கறைபடியச் செய்துவிட்டுப்
பித்தது மதிச் சீனர்கள் பேயாட்டம் ஆடுகின்றார் !
பண்டையிலே சீனவும் பாரதமும் நல்லுறவு
கொண்டிருந்த அன்பைக் குழியில் புதைத்தந்தோ,
மண்டிலத்தில் சாந்தி மணம்பரப்பத்தூது செல்லும்
பண்டிதரை இன்று படைநடத்தச் செய்துவிட்டார் !
அந்நாளில் ஜப்பான் அடித்ததனைத் தாங்காமல்
பின்வாங்கிச் சீனர் பெருங்கூச்சல் போடுகையில்,
புண்ணுற தன்மருந்து பூசும் மருத்துவரை
அன்பாக நேரு அனுப்பியதெல்லாம் மறந்தார் !
நன்றியுணர்வுடைய நாய்கூட்டும் நாவிளிக்கத்
தின்று குடல் நிரப்பும் சீனச் சிறுபேய்கள்,
இன்றளவும் பன்முறையில் இந்தியர் நாம் செய்துவரும்
நன்றியெல்லாம் கொன்று தின்னும் நாகமெனச்
சீறுகின்றர் !
முன்னுளில் ஹிட்லரொடு முஸ்லோவினி போன்றோர்
மண்ணுசை கொண்டதனுல் மண்ணனதை மறந்து
தன்னுலே போர்தொடுத்து, தானே படைநிறுத்தி
எண்ணுப் படுகொலைகள் ஏற்று விசாயாடுகின்றர் !

இன்னொரு சந்தம்

இமயத் தலியில் சமரெழுந்ததும்
இந்திய நாடே திரண்டது !
சமயம் கட்சி லட்சிய மென்னும்
சகல பேதமும் பறந்தது !
சிறையிலிருந்தே ஷேக் அப்துல்லா
சிங்கம் நேருவைப் போற்றினர்!
நரைத்த பகைவர் தாரா சிங்கும்
நட்புக் கரத்தை நீட்டினர் !
நாட்டைக் கூறுகள் போட்டிடச் சொன்ன
நமது தம்பியர் தெளிந்தனர் !
கேட்ட கொள்கையை மாற்றி வெள்ளியின்
தோட்டா அள்ளிப் பொழிந்தனர் !
சின்னஞ்சிறுவர் கன்னியரெல்லாம்
பொன்னைப் பொருளைக் கொடுத்தனர் !
இன்னும் பலபேர் மன்னுயிர் காக்க
இரத்த தானம் வடித்தனர் !
சீனரை வெல்லச் சேனை திரட்டச்
சீக்கியர் நாகர் முனைந்தனர் !
மானவரெல்லாம் பாரத நாட்டின்
மானம் காக்கத் துணிந்தனர் !
ஜீவனந்தம் செங்கல்வராயன்
சேர்ந்தொரு மேடையில் முழங்கினர் !
சிலம்புச் செல்வரும் நிதியமைச்சரும்
செந்தமிழ் வீரம் வழங்கினர்!
பண்டைப்புகழ் வேற்றுமையெல்லாம்
பண்பின் திறனுல் மறந்தனர் !

பண்டித நேரு தீண்டிறுல் கையைப்
பலப்படுத்தப் பொருந்தினர் !
ஒற்றுமையோடு இத்தனை பேரும்
ஒருங்கு திரண்ட வேளையிலே,
ஒற்றைக் ருலால் ஒரு சிறு கும்பல்
ஊனியிடுதாடா மூலையில் !
கென்னடி, குருஷ்சேவ் அன்னியரெல்லாம்
அண்ணலி நேருவைப் போற்றுகிருர் !
இன்னும் வஞ்சக நெஞ்சினர் துணிந்து
இந்தியத் தலேவரைச் தூற்றுகிருர் !
முன்னம் ஆட்சிக் கெதிராய்ப் பேசிய
முறையிலிருந்தவர் மாறவில்லே !
பொன்னேப் பொருளேப் போருக்குதவப்
போலி வார்த்தையும் கூறவில்லே !
சீனரைக் காட்டி முற்போக்கென்னும்
சிந்தனே அழிக்க எண்ணுகிறர் !
நாணம் கெட்டு முதலாளித்துவ
நலனேப் போதனே பண்ணுகிறர் !
போர்மூண்ட நிற்கும் வீரன் நேருவின்
புறமுதுகினிலே குத்துகிறர் !
நேர்மை இழந்து நடுநிலேக்கொள்கை
நீங்கிடவே தினம் கத்துகிறர் !
ஒருவரைச் சார்ந்தால் மற்றவர் பகைமை
ஒங்கி வளர்வதும் எளிதன்றே !
இருவரும் மோதி இந்திய மண்ணே
இடுகாடாக்கவும் வழியன்றே ?
தன்னலம் பெரிதாய் எண்ணிய பாரதத்
தாயிக்கே புதை குழிதோண்டுவதோ !
தன்னிகரில்லாப் பண்டித நேருவின்
தலேமையை மாற்றத் தூண்டுவதோ ?

மற்றெரு சந்தம்

தாரணியில் எல்லாத் தலேவர்களும் போற்றுகின்ற
நேரு தலேவரென்றே நெஞ்சம் நிதிரமால்,
மாறுதலே தேவையெனக் கூறுகின்ற கோழையரே !
நேருமகன் இல்லேயெனில் வேறுமகன் யாரையா ?
பேருணர்வே கொண்டறியாப் புல்லர்களே !
சொல்லுங்கள் !
நீரிருந்து ஆள இன்னும் பாரதத்தார் ஏற்பாரோ !
பேரும் தனிப்புகழும் பெற்றுப் பெரும் பதவி
ஆரம் அணிந்து முன்னே ஆண்டதெல்லாம்
போதாதோ ?
நாடி தளர்ந்து நரை மூடிப் போகும்வரை
ஆடித் தளர்ந்த பின்னும் ஆசை தளராதோ ?
சாடிவரும் சீனரோடு சத்தியப் போராடி மனம்
வாடி நிற்கும் வேலேயிலும் வன்மம் குறையாதோ ?
மேடையிலே புத்தி சொல்லும் மேதையெனும்
போர்வையிலே
சாடைகளேச் சொல்லிச் சதி செய்யும்பாதகரை,
வேடிக்கை பார்த்து இன்னும் விட்டுவைத்தால்
ஆபத்து !
கூடிநிற்கும் வீரக் குலத்தினரே ! முந்துங்கள் !
பத்தாம் பசலி, பணப்பேயின் கூட்டாளி,
வித்தாரம் பேசி வீணே விதைக்கும் புல்லுருவி,
தொத்து நோய்போலத் துரோகப் பயிர்வளர்க்கும்
எத்தர் குழுவை, இமயத்தின் எல்லேயிலே,
பத்தாயிரம் அடியில் பாதாளத்தின் மடியில்
கொத்தோடு சீனர்களேக் கொட்டிப் புதைக்கையிலே
அத்தோடு மேற்பர மாக்கி உயிருடனே
வைத்துப் புதைக்க வழிகாண்போம் ! பாவலர்காள் !
பத்தினியாம் பாஞ்சாலி பாரதியார் பாடலிலே
வைத்த சபதம் போல் வன்மையுடன் சூளுரைத்து.

சற்றும் தயவின்றிச் சரமகவி பாடிக்
குற்றப் பரம்பரையைக் கூண்டோடு நீயும்திடுவோம் !
பெற்ற சுதந்திரத்தைப் பேணியே காப்பதுடன்,

உற்ற கொடும்பாவி உட்பகையைச் சாய்ப்பதற்கும்,
சத்தியப் போராடி ஜயங்காண்போம் ! பாரதியின்
சித்தம் களிக்கவகை செய்வோம் ! சீனந்தெழுவீர் !

தாய்த்திருநாடு

—சோ. பாலகிருஷ்ணன்

தமிழ்நாடும் பாரதமும் தாரணியில்
வாழ்கின்ற தமிழர் பாரும்
அமிழ்தான கவிஞரென ஒருமுகமாய்ப்
பராட்டும் கவிஞ! போற்றி!
தமிழ்காக்கும் தொழில்கொண்ட கவிஞர்களே!
தலைதாழ்ந்த வணக்கம் கொள்வீர் !
தமிழ்க்கவிஞர் விழாக்குழுவீர் ! குழுமியுள்ள
சான்றோரே! வணக்கம் ஏற்பீர்!

முதல்வர் காமராசற்கு வணக்கம்

பரம்பொருளோப் பாமரரின் உருவில் கண்டான்;
பாரானும் அரசியலும் வாழ்வில் கண்டான்;
தாமான கல்வியினைச் சிறையில் பெற்றான்;
தாழ்ந்தோர்க்கும் எளியோர்க்கும் தோழ னுனுன்;
பெரும்புகழோன் நேருவுக்குத் தூணவன்; என்றன்
பெற்றோர்க்கும் பெற்றோன்கம் காம ராசன்;
திருவடிகள் தொழுகின்றேன்; கவிதை யாப்பேன்;
திருநாட்டின் பெருமையினைத் தெரியச் சொல்வேன்.

1. வடக்கிலே சினர் கூட்டம்!
வலியிலே அணுவின் வேகம்!
படைவலி மிக்கோ ரிந்தப்
பாரினை எரிக்க நோக்கும்
கொடுமையின் இடையே மக்கள்
கொட்டிடும் குருதிக் கண்ணீர்!
கடலிலே புயலின் ஊடே
கலங்கிடும் கவிஞன் நானே!

2. தாய்த்திரு நாடு பற்றித்
தனமிழ்க் கவிதை பாடச்
சேய்மையில் பசும்புல் கண்ட
செம்மறிக் கூட்டம் போன்று
தூய்தமிழ்ப் பாரதியின்
தொகுப்பினில் நுழைந்தேன் அங்கே
ஆய்மயில் எனயி லங்கும்
அன்னையைக் கண்டேன்; நின்றேன்;

3. அன்னைநம் பார தத்தாய்
அருமையை அவள்தன் மாண்பை
என்னரும் கவிதை வேந்தன்
இயம்பிய கவியில் கண்டேன்
கன்னலும் கனியின் சாறும்
கலந்துண்டு களித்தேன்; நம்தம்
மன்னிய பாரத நாட்டில்
வாழ்ந்திடும் பெருமை ஒர்ந்தேன்.

4. புண்ணிய பார தத்தின்
பொன்னேரல் வளங்கள்தன்னே
எண்ணியே அன்னி யர்கள்
இமயத்தைக் கடந்து வந்து
பண்ணிய கொடுமை யெல்லாம்
பகர்ந்திடும் சரித்தி ரங்கள்
எண்ணில; அவற்றை யிங்கே
எண்ணில கண்ணீர் சிந்தும்!

5. இமயத்துக் கப்பா லெங்கோ
இருந்திட்ட கிரேக்க வேந்தன்;
அமைதியைக் கெடுக்க வந்த
ஐரோப்ப வனிகர் கூட்டம்
குமரியை இமயத் தோடு
கோடுஞ்சிறை கொண்ட ஹேஸ்டிங்ஸ்,
இவர்களின் கொடுமை தாங்கி
இருந்தனள் தருப்பாப் எந்தாய்!

6. தீந்தமிழ் மகனுக் காகச்
செருப்படி பட்ட மேலோன்
ஏந்திய கொளகையாளன்
இந்திய முதல்வன் காந்தி
மாந்தரிர் மேனி கலலாள்
வருத்தத்தை யொழித்தான்; ஞாலம்
சாந்திபெற றுய்ய அண்ணல்
தன்னுயிர் தந்தான்; வாழ்ந்தான்!

7. வடக்கிலே இமயக் கோடும்
வாழ்த்திடு குமரித் தாயும்
விடுதலே அடையும் காளே
விளங்கிடும் திருநா னென்று
கடலென ஒலித்து நின்ற
கவிஞனின் கனவுப் பாடல்
விடுதலே பெற்ற மக்கள்
வீடெலாம் முழங்கக் கண்டோம்.

(வேறு)

8. மன்னர்க்கெரு கலிமாமதி
என்னதகு தேரு
கன்னித்திரு பரதந்தனே
வினனிலவரு மதிபோல்
உருவாக்கிடப் பெரும்பாட்டுடன்
விகியாற்றினுன் விரைவாய்
நிரளானவர் அருளாளனின்
தூணேயாயினர் எங்கும்

9. வறுமைப்பிணி அடிமைத்தனம்
குடி கொண்டிடக் கிடந்த
சிறுமைத்தனம கொடிப் போழ்தினில்
சிதறேறிட விஸ்வி
உலகிலபிறர் தலேதாழ்த்திடும்
உயிர்வாழ்வினைப் படைத்தான்
கலேயிறபற வகையில் உல
கினத்துப்புகழ் பெரியான்.

10. வயலும்மலே முகடும்அலே
கடலும் உடை பரதம்
கயலுமவினே பொருளுமகிலே
தொழிலும்பெரு வளமும்
புவிவானிகர் நிறையும்துறை
முகமும்கலே உலகில்
நவபாரதம் முதலா டெனத்
திகழும் எழில் கண்டோம்.

11. பெருக்கெடுத்திடும் திருச் செழிப்பினைக்
கடைக் கண்ணினுல கண்டான்
உருப்படாப்பெரும் எனப்படலுடை
சினன் எலும் வினன்
எரி கெருப்பினில பசிப்பினியுடன்
உருவழிந்திடும் கூட்டம
வருவிப்பதிகோப் பொருட் படுத்திடா
தெழுந்தவந்தனர் கமமேல்.

(வேறு)

12. விரைவீல புதிதாய் வாங்கும்
வியனுல கீன்தது நாடும்
நடைபயில குடிகள் ஆட்சி
நாயகன் கேரு தன்னை
கடலுடை உலகத் துக்கே
காவலன என்று போற்றி
அடிபணிக் தரக செய்யும்
அருமையைக் கண்டு பொங்கி

13. இனந்தீனப் பெருக்கும் பனறி
இனதையும் வெனறு நிற்கும்
மனிதனின் குணங்க ளின்றி
வாழ்ந்திடும் ஈனச் சினன்
தினந்தினம் பார தத்தின்
செழிப்பினைக் கண்டு காணி
பனியுறை இமயக் கோட்டில்
பாய்ந்தன தாழ்ந்த னன்றே!

14. சினவிவ் வினன் எங்கள்
தேசியக் கவிஞன் தந்த
தேனிலு மினிய தான
தீஞ்சுவைக் கவிதை காணில்
மானமே உயிராய்க் கொண்ட
மறவர்வாழ் பார தத்தை
ஏனைக் கேட்பானே கானர்
இமயதைத் தொடுவானே சொல்?

15. பரிதாபச் சினக் கூட்டம்
பாரத மக்கள் வீரம்
தெரியாது மறைந்தி ருந்த
நிரைதனைப் பெரிதா யெண்ணி
விரைந்தனர் பரதம் கோக்கி
விழித்தினர் நிகைத்தார். பின்னர்
தெரிந்தனர் இந்தி யத்தின்
தேசிய ஒருமைப் பாட்டை

16. தென்னவர் வடவர் என்ற
நிரையெலாம் நிறைந்த தன்றே:
இன்னவ ரின்ன ரென்னும்
எண்ணமே மறைந்து நாட்டின்
அன்னியப் பகையை நோக்கி
ஆர்தெழும் உணர்ச்சி காண
என்னரும் பரத மாதா
எண்ணிலா மகிழ்வு கொண்டான்.

சங்கநாதம்!

—கே. பி. எஸ். ஹமீது,

அவைவடித்த தமிழொளியின் கதிரே யென்னச்
சொக்கிநின்ற கனிலமே உருவாய்த் தோன்றி
அவைவடித்த பாரதத்திற் பவனி வீற்ற
அருங்கவிஞ ரகவிபிபா ரதிபால் வந்த
சவைவடித்த கலிக்கனிகள் நடுவா யிங்கே
தாங்குகின்ற கவித்தலிமை பெருமா னுர்க்கும்
கவைவடித்த பெரியோர்கள் அனிவோ ருக்கும்
கனிந்தமன வன்ன மனந்தம் சொல்வாம

பாரதத்தாய் அவள்பூமி பிறக்கத் தந்தாள்
பையலெனக் கவளமுதம் பருகத் தந்தாள்
பாரதத்தாய் எண்டிசைக்கார் றேற்றத் தந்தாள்
பகலிரவாய் எனக்குணவு பசிக்குத் தந்தாள்
பாரதத்தாய் பண்டிதர்கள் பலரைத் தந்தாள்
பாவலர்கள் நாவலர்கள பார்க்கத் தந்தாள்
பாரதத்தாய் நான் வாழும் பலனும் தந்தாள்
பரனறிய பலகிலியின் பண்பே தந்தாள்

பெருமையுடன் எனவளர்த்துப் பேணு நின்ற
பெருந்தலத்தாள் கிழ்குடக்குத் தென்பால்
[மூன்றும்

அருமையுடன் ஆழிநடு வீற்றி ருந்தே
அருள்சுரந்த மகிலஇமய சிரமாய்க் கொண்டாள்
ஒருமையுடன் மாக்மோஹன் கோடே என்றன்
உத்தமத்தாய் மாங்கலயச் சரடே யன்றே.
எருமையுடன் வருவோள்நாள் வரைக்கும் அந்த
ஏந்திழைநூ லோரிழையும் விடவே மாட்டோம்.




அறம்படைத்த நாடிதனில் அகேக சாதி
அவ்வாறே பாஷைகளும் வெவ்வேருன
நிறம்படைத்த பிள்ளேபல வின்ற பூனி
கிக்கிக்கும் பிள்ளேயெது, கிறக்தா னேது.
திறம்படைத்த மொழிபதினெட் டுடையோ ளாயின்
சிக்தையொன் றுடையோளாய்த் திகழ்ந்தா
[ளுண்மை

புறம்படைத்த தாயவன்பர் பேணிக் காக்கும்
புத்திரராய் வாழ்வதுகம் கடமை யன்ரே

வீட்டகத்துக் கற்புடைய மானர் மேனி
வீரர்கர வாளினெடு வேங்கை யின்ரேல்
காட்டகத்துக் கவரிமான் மயிரின் கற்றை
கைப்பற்றக் கொடுத்திடுமோ ஆயுள் மட்டும்.
காட்டகத்துக் கழுத்துநர மிழையைத் தொட்ட
நயவஞ்சச் சீனகை துண்டாய் வெட்டி
ஏட்டகத்துச் சரிதையினி விழிவு பற்ரு
தெண்டிசையும் புகழ்மேவ எழுந்து நிற்போம்

உலகமும் - இயமும்

— கு. சா. கி.



துங்கமுறு சுகதலமே தோன்றக் கண்டால்
துய்யகிலே நெய்வங்கட் கென்றே யிதல்
எங்களது தாய்நாட்டுப் பண்பே யாகும்
என்பதனைச் செய்தளித்த பெருமா னுன
இங்களணி திருச்சடையோன் உமையர் னோடு
வெதவமார் சுயிலயலாங் கிரியை எங்கள்
அங்கமுடன் ஆவிபொரு ளர்ப்ப ணஞ்செய்
தடைந்திடுவா மெனமுழங்கும் சங்கரதம்

இனியிருந்த மலியெனக்கு நிகரே யில்லே
என்றபெரும் விறுப்போ டெழுந்த வெள்ளிப்
பனியிருந்த மலியிலிநி வைத்தான் சினன்
பச்சைரம் புதிரத்தால் அணைத்தே வெலவேரம்.
கனியிருந்த மலியெல்லாம் உழைத்தே வேர்வை
கதிகளெனப் பாய்ந்துவரும் வளத்தால் நல்ல
கவியிருந்த மலியெனவே காணச் செய்வோம்
கைறையப் பல்லுயிர்க்ட் கீந்தே வாழ்வோம்

கோக்களெலாம் கேட்டுதலே சாய்த்து நின்று
கூறிய பெருநீதி இதுவே யென்ன
சாக்களெலாம் கூட்டிவைத்த தேனைப் போல
எங்கள்பிரான் கருந்மகான் அடியிற் ருழுந்து
மாக்களெலாம் தேடிவைத்த சுதந்திரத் தேன்
மாந்திடலாம் எனகிலேக்த னென் மண்டை
பாக்களெலாம் பாடிப்பேர் ந்த ருட்டி
பறந்திடவே வண்டுகளாய் கொட்டு வோமே.

உளங்கொண்ட மட்டும்தா யகத்தைக் காக்க
உணர்வின்மையும் உடலினையும் எ.ங்க யாக்கி
களங்கொண்ட மட்டும்போய் மொயத்துத் தாக்கி
களதவே பற்றலர்வாய் க்க்கும் ரத்தம்
குளங்கொண்ட மட்டும்வேற் தாருய்ப் போக்கி
கும்மாளம் மிடும்படியெம் வீரர்க் கொக்க
வளங்கொண்ட மட்டும் நாம தேக்கி வாரி
வழங்கியவர் வண்டோட்கட் கூக்கம் சேர்ப்போம்.

ஞலகொண்ட தாய்வேண்டு மாயின் மக்கள்
தொட்டுழுத்தி தொழுதேத்தும் இந்த மண்ணின்
பால்கொண்ட பாசமுதத வாச மண்ணே
பரிக்தெடுத்து மோந்துண்ணக் கூடும் வஞ்சத்
தால்கொண்ட ஆதிக்க வெறியால் வேற்ருர்
ஆரேனும் வந்திம்மண் கவ்வின் அஞ்சர்
தோல்கொண்டு சிரங்கொய்து சாய்ப்போம் என்றே
தோன்கொட்டி முழக்கிடுவோம் சங்கநாதம்.

தழைப்பிருந்த மேனுட்டுச் சாதனம்போல்
சரிகிகரா யாயுதங்கள் கரபி தங்கள்
பிழைப்பிருந்த சாலேபல கல்விச் சாலே
பெருகிடவே ஆடவரும் பெண்டி ரும்கல்
உழைப்பிருந்த நாடெனவே ஞரிரச் செய்தே
உத்தமராய் சத்தியராய் உயர்வாயெங்கும்
அழைப்பிருந்த பொருளுண்டும் அமைத்தே
[நித்தம்
அருஞ்செல்வம் திருநாட்டுக் களித்தே வாழ்வோம்

என்றுரைத்த அமரகவி பார திக்கே
எண்பதென்றும் மின்னு நாளாம் இன்று
நன்றுரைத்த அவன் கருத்துத் திக்கே நெய்யாய்
நமமான் உடல்பொருளே வார்ப்போம் வார்ர்
வென்றுரைத்த போர்ப்பரணி பாடிப் பாடி
வேற்றவரின் கூற்றுவராய்ப் பாவல் லோர்கள்
சென்றுரைத்த களவேள்வித் தியே டெங்க
சிங்காத நாமுழக்கும் சங்க நாதம் ★

அகிலம் அனைத்தையும் காத்தருள் சேர்க்கும்
ஆதியாயாய் நின்றிடும ஜோதியைப் போற்றி,
புகழும் சிறப்பெலாம் பெற்று வாழ்கின்ற
பூதலம் மீதுறும் மொழிகளுக்குள்ளே
மிகமிகத் தொன்மையும் மேன்மையும் கொண்டு
மேலிடும் இலக்கண இலக்கியங் கண்டு
நிகரிலாப் பொழிவுடன் வாழ்ந்திடும் எங்கள்
நிதியெனும் செந்தமிழ்த் தாய்ப்பதம் போற்றி!

∴ ∴ ∴

"ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த மாமணி"யாம் பாரதிக்கு
சீரார் விழாவெடுக்கச் சிந்தை களிக்து வந்தப்
போரார்வம் கொண்டோரே! பெரியோனீர!

தாய்க்குலமே!
எல்லோர்க்கு மெந்தன் இதயம் மகிழ்ந்து நன்றி
சொலலித் தொடங்குகின்றேன துய கவிப்பணியை!
கவிதை தொடங்கு முன்னே கவியரங்க நாயகரய்
அவையினிலே வீறறிருக்கும் அமுதத் தமிழ்க்கவிஞர்
பாரதியின பரம்பரையில் பாட்டிசைக்க வந்தவருள்
சிருயர்ந்த மாகவிஞர் சிலருண்டவர் ளிலே
ச.து.சு. யோகியெனும் தமிழக்கடலும் ஒருவரென
மேதைகளெல்லாம் புகழும் மேனமைச் சிறப்புடையார்!
அன்னவர்தம் தகிமையிலே அமரகவி பாரதியின்
உன்னத வழாவினிலே உவந்தளித்த வாய்ப்பை
பெருமையுடைகின்றனை பேருவகை [எண்ணிப்
கொள்ளுகின்றேன்

என்னுடைக் கவியரங்கில் இசைக்க வந்த மாகவிதை
மன்னர்களே வாயார வாழ்த்தி வணங்கு கின்றேன்
தாவைவாழ வகையறியார், தரணியை வாழவைக்கத்
தேன்போல் கவ்யிசைத்துச் செந்தமிழை
வாழவைப்பார்?
வான்மேவும் மழைமுகில் போல் வாரிவழங்கிவிட்டு
ஊன்தேய்ந்து உடல்தேய்ந்து உழன்றிடுவார்
வறுமையிலே
ஒருவனுக்குப் பாட்டினைசத்து உயர்த்திவைத்தால்
அச்செல்வன்
தருவான் சிலபொருள்; தான்வாழ, அதைவிடுத்து

உலகினுக்கே பாட்டிசைத்து உயர்ந்தவர்போல்
தாழ்ந்தவரின்
கீழேயுயர்ந்த எதிர்ரீச்சல் நீந்துகின்ற நல்லோர்க்கு
இத்தரையில் கவ்வாழ்வு ஈதவர்கள் இங்கிருந்து
செத்தபின்னர்தான் சிறப்பு! சிகிடெடுப்பு! பாராட்டு!
அதுவும் சமுதாய அந்தஸ்தில் உள்ளவர்கள்
புதுள்ளம்பரம பெறவேலை போலியாய்ச் செய்திடுவார்!
இவையெல்லாம் உங்களுக்கும் எனக்கும்
தெரிந்திருந்தும்
கவலேநாம் கொள்வதில்லே. கடமை மறப்பதில்லே.
இந்தமிலே மாற்றறி இன்பத் தமிழாட்சி
விந்தை புரிந்த திந்த விழா இதற்கோர் அத்தாட்சி!
ஆம்;
கய்பகாட்டாழ் வார்க்கும், கவிஇளங்கோ,
வள்ளுவர்க்கும்
அப்புவியில் கிட்டாத அரும்பேறு பாரதிக்கு
இன்று கிடைத்துவிட்ட இறுமாப்பால் கவிஞரினம்
என்றும் தலேநிமிர்ந்து ஏறுநடை போட்டிடலாம்!
அரசினரே நம முடைய அமர கவிக்கு விழா
முரசம் முழங்குகின்ரார்! முன்னின்று போற்றுகின்ரர்!
கன்னடத்து முதலமைச்சர்! கனிதெலுங்கின்
முதலமைச்சர்!
உன்னதமாம் தமிழகத்து உயர்அமைச்சர் சேர்ந்து கவி
மன்னனுக்கு அஞ்சலியும் வாழ்த்தெரிவும்
செய்தல்கண்டு
தன்னே மறக்தோய்! தருக்குற்றேரும்! தலேநிமிர்ந்தோம்!
ஆனலும்:
இந்தவிழா நம்முடைய ஏற்றத்தைப் போற்றுகின்ற
சொந்தவிழா! இதைமகிழ்ந்து சுவைத்தல்மட்டும்
போதாது,
பாட்டுத் திறத்தாலே பாரதீத்தும் வாழவைக்கும்
நாட்டம் மிகுந்தகவி நல்லதமக கருத்தொலிக்கும்
பாட்டனேதத்தும் உலகிலுள்ள பற்பலவாம்
மொழிகளிலே
மீட்டும் மொழிபெயர்த்து மேதினியெல் லாம்பரப்பும்
நற்பணியை இப்பொழுதே நாம்செய்து
முடித்துவிட்டால்—
அற்பர்களின் பேராசை ஆர்ப்மிப்புக்
கொள்கையெல்லாம்
கற்பனேயாய்ப் பழங்கதையாய் காலத்தால்
மாய்ந்துவிடும்
அற்புதத்தைக் கண்டிடலாம்; அறப்பணியாம்
திருப்பணியை
இன்றைக்கே இப்பொழுதே இக்குழுவே
தொடங்கிடுதல்
கன்னென்று கூறி நல்லோரின் தாள்வணங்கி
வேண்டுகின்றேன் எங்தன் விருப்பம் நிறைவேற
ஆண்டவன்தன் திருவருளின் ஆசியையும்
கோருகின்றேன்!
இருபதாம் நூற்றாண்டில் இவர்க்கிணேயாய்
இவ்வுலகில்
ஒருகவிஞன் தோன் றவில்லே, "உண்மை வெறும்
புகழ்ச்சியில்லே"
நிர்க்க தரிசனமதான் செப்பும் தரமுளதோ?
போர்க்களத்தின் பதியிலே புரட்சிக் கனலெழுப்பி
ஆர்ப்பரித்து நின்றே நம் அடிமை விலங்குடைக்கப்
போர்ப்பணி பலிமக்கள் புத்துணர்ச்சி கொள்ள
வைத்தான்!
நூற்றாண்டிமை நுகத்தடிக்குத்
தோள் கொடுத்து
ஆற்று தழுதுநின்ற அலலிருள் போக்கவந்த
காந்தியெனும் பேரொளியைப் பிறர்காணு
முன்கண்டான்!

"மாந்தருக்குள் தெய்வமென்று" மனக்கண்ணுள்
முடிவுசெட்டிப்
"பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசத்தினே
வாழ்விக்க வந்தகாந்தி மகாத்மாநீ வாழ்க" என்குள்!
சுடிலார்ச் சுதந்திரத்தை இழந்துகொந் திருக்கும்போதே
"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்று
விடுதலே கிடைக்குமுன்பே விடுதலேப் பண்ணிசைத்து
முடிவிலாக் கீர்த்தியுற்றான்! கவிக்குள்ளே முதனமை
பெற்றான்!
சுதந்திரம் பெற்றநாடு சுகப்படத் திட்டம்நீட்டி
இதமுறத் தந்தான்! அந்த, இணேயில்லாக் கவிதை
காட்டும்
நிரந்தரத் தன்மைகண்டு நிகிலபெரும் பாரதத்தின்
அருந்திரள் மொழியிலெல்லாம் ஆக்கிச்
செய்திருந்தால்....?
குள்ள மதிபடைத்தோன்,—குறுங்கண்
கொடுமனதோன்
கள்ளங் கபடையோன் கயமை நிறைந்அந்தச்
சீனன் படையெடுக்கச் சிந்தை துணிவானா?—வக்ர
வீணேத்தான் உயிருடன்கம் வீரன்விட் டிருப்பானு?
இதுமட்டும் அல்ல: நம் இந்தியனன் னுயிரப்.
புதுமைக் கவியரைத்த போதனேகள் எத்தனேயோ
அத்தனேயும் பாரதமொழி அத்தனேயி ழம்பெயர்க்கும்
உத்தமநற் பணிதொடங்க உறுதிகொளவோம்
என்றுசொல்லி
"உல கும்இமயமும்" என்று ஒருதலேப்பில் தானறிந்த
நிலகருத்து உங்களது சிந்தனேகுக் காணிக்கை!
"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டென"
"உலகம் என்பது உயர்ந்தோர் பழமொழி!
நிலவும் ஒழ்மொழி, நீண்டகார் பழமொழி!
இதனியே இதற்குகாம் எடுத்துக் காட்டும்
வினேனைக் கொணடிடில் வெறிபிடித் துலகினே
அழித்து முடித்திடும் ஆயுத பலத்தினே
செழித்த வளரதிடச் சிந்தனே செய்தும்,
ஏவு கணேகளே எத்தனே வகையிலோ
ஆவலாய்ச் செய்தும் அடுகிக் குனித்தும்
உலகின் உயிர்க்குலம் உள்ளம் கடுக்கும்
கலகம வினாத்திடக் கச்சையை கட்டியும்;
பேயக்குணம் மிருத்திடும் போர்த்தினேள் வளர்த்திடும்
தீய்ச்செயல் பெருகிடும் தேயத்தார் மத்தியில்
இகியாகம பாரத இயற்றிடும் அரசியல்
விகாவெலாம் கண்டு வியப்பறு துலகமே!
எங்கெங்கு நீமைகள் எவர்க்கு யார்விகாகினும்
அங்கெலாம் கழருல் அதீதியை எதிர்த்திடும்!
நீமை விகோப்பவர் நிண்ணிய ராயினும்
காமதற் கஞ்சிடோம், கடுகிலே மாறிடோம்.
புத்தரும் காந்தியும் புனிதப் படுத்திட
சத்திய நெறிவழி தவறிநாம் நடந்திடோம்!
இமையா காட்டமும், இரும்புகேர் நெஞ்சமும்,
அமைந்தநற் பாரதம் அமைதியைக் காத்திடும்!
பாரதம் தாழ்ந்திடி பாரெலாம் தாழ்ந்திடுட!
பாரதம் வாழ்ந்திடில் பாரெலாம் வாழ்ந்திடும்!
பாரதம் வாழ்ந்திடில் பாரெலாம் வாழ்ந்திடும்!
ஆதலால் உலகினே அருந்திரள் பாரத
நீதியின் கேர்மையால் நிகிதந்திடும் அமைதியே!
இத்தகு சிறப்பினல் இந்தியா உலகத்தின்
சத்தியத் தார்மீகத் தகிமையேற் றிருப்பதைப்
பாரினேத் தீர்மதைப் பகைத்திட எண்ணினார்
யாருளரின் னுரைத்தன்னே தவறென்றும்
எண்ணிடார்!

ஆதலீால், உலகமே பாரதம் என்பேன்!
ஆதவன் உலகுக்குப் பாரதம் எனபேன்!
இமயப் பெருமகேயை எணணுகேயம் என்தோள்கன்
அமையும்அம் மேருவைப்போல் விம்முவதைக்
காணுகின்றேன்

எழுத்தாளன்

சமயக் குரவர்களும் சைவத் தலிவர்களும்
இமயமே கைலாயம் என்றெண்ணிப் போற்றிடுவர்!
தென்னு டுடையசதா சிவனுரமும் மலியமரர்த்தும்
கன்னித்தாய தெறலிகின்றும்கார்கின்ருர் தேசத்தை
இந்தவொரு தத்துவத்தை இங்கே வளர்த்தபிற
எந்த மத்தினருஞ் எதிர்த்தலில்லை மறுத்தலில்லை
சீனத்தான் மட்டுமுத்த வெனுறையும் மலியபிரக்கும்
ஈனச் செயல்கண்டும் எதிர்க்கா திருப்பேமோ
தண்டமிழர் இலக்கியங்கள் சாற்றும் இமயத்தின்
பண்டைச் சிறப்பெல்லாம் பணயம்வைக்கத்
துணிவோமோ?
பொங்கிவரும் மாகதிகள் புனிதப் பிறப்பிடமாம்—அத்
துங்கமலே கலாலம் தூங்கிக் கிடப்பேமோ?
"மூடமன்னர் மூவரும் காத்தோம்பும் தெய்வ
வடபே ரிமயம்" என வரும்பாட்டும்; மற்றும்—
"இப்பால் இதயத்து இருத்திய வாள்வேங்கை
உப்பாலிப் பொதற்கோட் டுழையாதர" என்றுவரும்
நற்பாடலும் இளங்கோ கவிஞிலம்பில் உண்டிவிய
அப்பாட்டின் பொருள்உணர்க்தோர் அகற்றுரோ
சினர்களே
இமயவரம்பன் நெடுஞ்சே ரூதன் என்றோர்
தமிழ்மன்னன் வரலாற்றைத் தமிழர் மறப்பாரோ?
உலகத்தின் கூளைனும் இயத்தின் உச்சியிலே
கலகத்தீ மூட்டிவிட்டான் கயலன்செஞ் சீனத்தான
ஒருவீட்டில தீயிடித்தால் மாரிலுள்ள வீடனைத்தும்
பெருகெருப்பு மூண்டுவிடும—பேராபத்தை உணர்ந்து
உலகத்து நாடனைத்தும் ஒன்றுய்த் திரணடுவந்து
கலகத்தீ அணைப்பாதநிலைக்கொருந்து உதவுகின்றார்
சிங்கத்தின் குகையுழைந்த சிறுநரிபோல சீனன்இன்று
பங்கமுற்றுப் பின்வாங்கிப் பதுங்கி உறுமுகின்றான்!
ஈன நரிக்குணங்கள் எல்லாம் நிறைந்திருக்கும்
சினர்க்கோர் வெல்லும் நிறமை நமக்குண்டு
ஒன்றுபட்டால் வாழ்வுண்டு, உயர்வுண்டு, புகழுண்டு.
என்றுசொன்ன பாரதியின் இன்பக் கவிதைகொண்டு
உலகத்தைக் காப்பதற்கும் இமயத்தை மீட்பதற்கும்
கிலவும் சிறுபேத மின்வெல்லவும் நீக்கிவிட்டு
ஆக்க வழிகளிலே அரசுக்குத் துணைநிற்போம்!
வாக்கும் உறுதியுடன் உற்சாகம் கொண்டுழைப்போம்
என்றுசொல்லி இச்சபையோர் எல்லோர்க்கும்
என்னுடைய
கன்றிசொல்லி முடிக்கின்றேன், கல்வணக்கம்
கூறுகின்றேன்!

பாரத நாடு பழம் பெரும் நாடு!

(மதுரகவிஞர் வீ. வே. முருகேச பாகவதர்)



பேரன்பு வாய்ந்த பெருந்தகையீர்! செந்தமிழின்
வீரத்தைத் தோளில் விளைக்கும் இலக்கியத்தைத்
தேக்கி மகிழ்விக்கும் செஞ்சொல் கவிக்குலத்தீர்!!
பாக்கள் பலசெய்து பாரோர்க் களித்திட்ட
தீரராம் எங்கள் திறல்மிக்க சுப்ரமண்ய
பாரதியார் பொன்னுளில் பங்குபெறும் அன்பீர்!
எதிர்த்த பகையரசன் எக்காளம் கேட்டு
விதிர்க்கா துளம் பொங்கி வீரமொடு போராட
கண்ணின் மணியாகக் காத்து வந்த தன்மகளை
எண்ணிமனம் ஏங்காமல் இல்லத் துறைந்திருந்த
வாளெடுத்தத் தாட்டில் மறுமலர்ச்சி கண்டவரும்
ஆற்றல் மிகுந்த அருங்குஞ்ய நாட்டிலிலே
ஏற்றத்தாழ் வெல்லாம் எதற்கென்று கேட்டதனுல்
போற்றத் தகுந்த புகழ்பெற்றுள் புஞ்சின்!
அடிமை வணிகமுறை அண்டா தொழித்த
படிபுகழும் ஆபிரகாம் லிங்கன் நெறியரவும்
நாட்டில் எழுந்தான் நரைகிழவன் வால்ட்விட்மன்!
பாட்டில் சுவையில் பலபுதுமை செய்தான் காண்!
சாகா வரம்பெற்ற 'சாகுமா' காவியத்தை
வாகாய் வரைந்ததனுல் வற்றப் புகழ்பெற்றுர்
பாரோர்த்தம் நெஞ்சில் பதிந்துள்ள பாவாணர்
பாரசிக வல்மீகி என்றேத்தும் பெர்தாசி!
இப்புவியில் உள்ளார் இதயம் விருப்புகின்ற
செப்பரிய ஆலயத்தைச் சேவிக்கும் கோயிலின்
நெஞ்ச மகிழ்வோடு நேசிக்கும் நன்நிலையம்
மிஞ்ச அமைப்போம் விருப்புடனே வாருமெல
அஞ்சாத சிங்கம் அறிஞர் புகழ்வாணன்
பஞ்சாப் கவிஇக்பால் பாரதியப் பாடினன் காண்;
வண்டி. இழுப்போர் வயலில்மா டாயுழைப்போர்
நொண்டி முட்வர் நலிந்தோர்தம் தோற்றத்தில்
மண்டும் வறுமை வளர்க்கின்ற கண்ணீரில்
கண்டு துதிக்கின்றேன் காணுக் கடவுள்தனை
என்குர் கலைக்கிழவர் எந்தலைநம் தாகூரும்!
நன்குய்ந்தோர் இக்கருத்தை நாட்டத்தில் வைக்க
இப்படியாய்— [ஞற்குர்
பல்வேறு நாட்டின் பலகலியைப் பார்த்தோம் நாம்;
சொல்வேறுய்க் காண்கின்ற சூழ்நிலேவே ருனுலும்,
பள்ளத்தை நோக்கியே பாய்கின்ற வெள்ளம்போல்
உள்ளத்தால் யாவரும் ஒருகுலம்! ஆதலினுல்
காலத்தைத் தேசத்தைக் கடந்த ஒருநிலையும்;
ஞாலம் வரவேற்கும் நல்லரிவும் பெற்றவரே
உற்ற கவிஞரென ஒதிடுவார்! ஒதியதால்
பெற்றி பலபெற்றுப் பேரிலங்கி வாழ்ந்தார்கள்!
நாருங் கிழமை நகர்த்தாலும் நாட்டார்முன்
மாருந் திறனின்றி மக்கள் நெஞ்சில் வாழ்ந்தார்கள்!
பிறப்பென்ப துண்டு பிறவிக் கவிஞருக்கோ
இறப்பென்ப தில்லே, இயற்கவிஞர் ஆனதுனல்!
இந்தப் பெருமை கமழ் ஈடில் கவிக்குயில்நம்
சிந்தை கவரந்த சிறப்பை இனிகாண்போம்;
அடிமைத் தனத்தின்கீழ் அந்நியன்கீழ் கொல்லும்

மிடிமை தனில்மூழ்கி மெய்குன்றி நித்த நித்தம்
அஞ்சுகின்ற நெஞ்சும் அவலநிறை வாழ்வும்
விஞ்சி வருநாளில் வீரத் திருமகளே
ஊன்முள் புவிவாழ்த்த ஈங்குற்ற பாரதத்தாய்
சான்றோர் வழிவந்த சக்ரவர்த்தி பாரதியார் !
பெற்று வார்க்கின்ற தாய்க்குலத்தைப் பேணல்போல்
கற்ரர் புகழ்ந்தேத்தும் காவியத்தை ஓவியத்தை
வீரம்செறித்து வினையாடும் பாக்களினும்
தீரம் தனைஎட்டுத் திக்கும் பரப்ப விட்டார்!
பாக்கள் இயற்றுவதில் பண்டைக் தூரைமாற்றி
கோக்கவிஞன் பாரதியோ கொண்டான் புதுமுறையை!
மக்கள் விரும்புகின்ற மாண்பார் இலக்கியத்தைக்
தக்க வழியில் பமைத்தான் காண்! எனவே !
இருளில் கிடந்திருந்த இன்பத் தமிழ்க் கவிதை
பெருவெளியில் நாளும் பெருக் கெடுத்துப் பாய்ந்தது
கற்ரர் தமிழாய்ந்தார் கண்முன் உலாவந்த [வே!
நற்றமிழ்த்தாய் மக்கள் நாவில் நடமிட்டான் !
இந்தப் பணியை இருபதாம் நூற்றாண்டில்
செந்தமிழ்க்குப் பாரதியே செய்தான் முதன் முதலில் !
பாருள் சிறந்ததோர் நாடென்ற பாரதத்தின்
வீரர் திரண்டெழுந்து வெற்றிலயர் சூடியதும்,
செந்தமிழ்நா டென்கின்ற போதினிலே தேனினிமை
வந்து செவியதனில் வார்க்குதெனப் பாடியதும்,
எட்டு திசையெங்கும் எக்களிப மிட்டு வெற்றி
கொட்டு முரசென்ற கொள்கை வளர்த்ததையும்,
ஏங்கும் சுதந்திரமே என்றெழுந்த ஆர்வத்தால்
பொங்கி எழுந்தன்று பூரித்துப் பாடியதும்,
பாட்டுத் திறத்தாலே பாலிக்கச் செய்ததையும்
கேட்டார் செவிகுளிரும்; கேளார்தம் மனங்குளிரும்
விண்ணை இடிக்கின்ற வெற்பாம் இமயத்தைப்
பண்ணில் செவியில் பழந்தமிழில் பாய்ச்சியதும்
ஆடவர்க்கு கற்ப அவசியமென் றேதியதும்
நாடறியும் ஏடறியும் நல்லமனத் தான்அறியும்
இவ்வாறும்,
வெல்லத் தமிழுக்கு வேணம் பலவகையில்
சொல்லில் புதுமெருகு சேர்த்தான் ! அதனலு,
இமந்த பெருமைதனை பெற்றேரும்! இவரால்
பழந்தமிழும் இன்று புதுப்பொலிவு பெற்றது காண்!
நற்றமிழை மாழும் நறுங்கவியை நாடோறும்
பெற்ரள் தமிழன்னை பெறெல்லாம் பெறுரள்காண்!
ஆதலினுல் பாரதியை ஆர்க்கின்ற செந்தமிழால்
மோதலின்றி எல்லாரும் மொய்த்து வணங்குகிறேம்!
சிந்தை தனிவளர்த்த சித்தர்போல் செந்தமிழில்
விந்தை புரிந்தகவி வேந்தர்தமைப் பெற்றதனுல்
பாரதமாம் இப்பூமி பெருமை பெற்றதன்றே!
பாரதியால் இந்தநம் பாரதமும், பைந்தமிழும்
சீரதிகம் கண்டு சிறந்ததுவே! பாரறிய
பாரதத்தின் வாழ்வுயரப் பாடுகின்ற இந்நாளில்
மாத்தமிழர் கூடியே மாண்பாய்நம் பாரதியை
ஏத்திப் புகழ்வோம் இனி.

(எண்சீர் விருத்தம்)

மறைமுகமாய் உரைப்பதற்கும் உண்மைதன்னை
மறைத்தார்க்கும் மருந்தேபோல் பழமை மாய்த்துக்
கறைமனத்துள் ஒளிவிளக்கே ஏற்றிவைத்தான்! காட்சிக்கோர் எளியன்; நாம் ஒதுக்கித்தள்ளும்
பறையருக்கும் விடுதலே இங் குண்டென் ருர்த்துப்
பாவையர்தம் அடிமைதனே தூள்தூ ளாக்கிப்
பறையெலித்த பாரதியை நமக்குத் தந்த
பாரதபொன் னுடுபமும் பெருநாடன்றே!
கோமுனையையும் வீரனெனப் புகழ்வா ருண்டு !
குறைமதியை நிறைமதியை அந்தி வானை
ஆழிதனே வான்முகில மீயைத் துள்ளும்
அருவியைப்பும் பொழிகிமமற்றியற்கை ஈரும்
வாழையையும் கற்பதரு என்றே படி
வந்தாரும் உண்டிங்கே ! வாழவைக்கும்
ஏழையர்தம் ஏற்றத்தை உருக்கத் தோடிய்
கெடுத்திசைத்த பாரதியேல் எவர்தா னுண்டு ?
செந்தாமப் பயிர்க் குயிராம் மழையே ஆவான் !
தீமிலா மக்கட்கும் வீரப்பாலே
எஞ்சாத சுதந்தரத்தாய் நாட்டுப் பத்தி
இனியகவந் தூட்டுவிக்கும் அருந்தாய் போன்முன் !
அஞ்ஞான்றே உலகசமா தானத்தாற்
அண்ணல் நம் மகாத்மா ஒருவர் என்றே
மெய்ஞ்ஞானக் கண்களினுல் உணர்ந்து பாடி.
மேன்மையுற்ற பாரதிசீர் விளம்பி வாழ்வாம் !
போரிழவு அறியாமை ஈன சீனன்
போன்ற கொடும் நயவஞ்சம் நன்றி மாய்த்தல்,
சீரழிக்கும் இனசமய பேதம் சேர்ப்பல்,
சுரண்டலெரிக் கின்ற பெரும் நெருப்பு போன்முன் !
பாரதியின் காவியம்பல் மொழியில் தீட்டிப்
பதுகாப்போம் ; பழம்பெருமை சேர்ப்போம் ! அன்னை
பாரதன் னுட்டின்புகழ் கீர்த்தி தியாகம்
பயிர் செய்வோம் மக்களுக்கு கழனி தோறும்!
சாய்ந்திடுமா தமிழ்ப்பெரு திகை ? இமயம் இந்தச்
சதிகார நயவஞ்சத் தாக்கால் ? என்றும்
ஓய்ந்திடுமா பாரதியின் வெற்றி நாதம் ?
உயிர்க்கவிஞன் விழாவினிலே சபதம் செய்வோம்
காய்த்தனச் சீனனுக்கிங் கெல்லிக்க் கப்பால்
கல்லறை யே கட்டிவைப்போம்! முறத்தி னுலே
பாய்த்தபுலி தனேயடித்த மகளிர் வாழும்
பாரதனன் னுட்டின்பழம் பெருமை காப்போம்!
பழம்பெரிய நாடென்று வையம் போற்றும்
பாரதனன் னுடான புண்ணிய மண்ணும்
இழந்த பழம் பெருமைகளே மீண்டும் எய்த
எம்வீர பாரதியை உரமே தூவி
செழுமையுற கண்ணீர்செந் நீரும் பெய்து
சிறப்பாகக் காத்து வந்தான்! சுதந்தர வீர
பழங்கண்டோம்! சீனமந்திர் நெருங்குதின்று
பாய்ந்தழிப்போம்; பாரதனன் னுட்டைக் காப்போம்!
அத்தினம்தென் னுப்ரிக்கா அறப்போர் முன்னர்
அந்நியனும் வெள்ளையனுப் பாக்கிக் குண்டு
சத்தியத்தின் பெருஞ்சுடராம் காந்தி மாண்பைச்
சதைக்காமல் தன்மார்பில் ஏற்றச் சாய்ந்தே
இத்தரையின் வரலாற்றில் அழிவில் லாத
இடம்பெற்றே இலங்குதனி வீரம் மிக்க
பத்தினிப்பெண் வள்ளியம்மை யாரைப் பெற்ற
பாரதன்னு னுடபும் பெருநா டன்றே?
தாய்மார்கள் ஜான்சிராணி யாகவேண்டும்!
சத்பதி சிவாஜியாய் ஆண்கள் மாறி,
நாய்சீன வெறியன்தன் வீரட்ட வேண்டும்!
நமக்கும்பல் போர்க்கருவி வேண்டும் பொங்கிப்
பாய்கின்ற வெள்ளம்போல் திரள்வோம்! தங்கள்
பணிகைகளில் நிதியைவெடி குண்டாய் ஆக்கி
மாய்த்திடுவோம்; ஈவிர்க்கம் அற்றன் தன்னே!
மாபார தத்தின்பழம் பெருமை காப் போம்!
பாரதியின் உயிர்க்கவிதை உலகமெங்கும்
பரந்தமணம் நனிவீசி வாழ்க! வீர
பாரதியின் அஞ்சாத நெஞ்சம் கற்ற
பாவலர்க்கும், நாவலர்க்கும் பல்லோ ருக்கும்,
வீரஉணர் வளித்தவர்தம் உயிர்போல் காத்த
வெற்றி சுதந்தரம் நாட்டுப்பற்று வாழ்க!
பாரதனன் னுடபும் பெருநா டித்தப்
பாருலகில் நீடுழி வாழ்க! மன்னே!

பரணி

— ச. து. சு. யோகி



1. அண்டை நாடு மீது கூட
அன்பி லாத சீனர்கள்
சண்டை கொண்டு வந்த தென்ன?
சால்பி லாத ஈனர்கள்

2. பாம்பு தின்னும் கார ணத்தால்
பண்பு கெட்டுப் போனரோ?
தீம்பு ஒன்று புரிய மட்டும்
தெரிந்த மக்கள் சீனரோ?

3. புத்தர் தந்த பூமி என்று
புரிந்து கொண்டு சீனர்கள்
பத்த ராக வருதல் விட்டுப்
பகைவ ராக வருவதோ?

4. பஞ்ச சீலம் பேசி வந்து
பார தத்தைக் கூடினீர்
நஞ்ச சீலம் காட்டி இந்த
நாடு பற்ற நினைவதோ?

5. சூயென் லாயிக்கு அர்த்த மொன்று
சொல்ல வேண்டில் கூறுவேன்
தீய சிந்தை தீய எண்ணம்
தீய செய்கை ஆகுமே!

6. கள்ள னுக்குக் கொள்ளை விட்டுக்
கண்கள் கெட்டு வாழ்வதோ?
துள்ளி யாடிப் போர்க்க ளத்தில்
தூட்ட ரோடச் செய்வதோ?

7. சுதந்தி ரத்தைப் போக விட்டுச்
சோம்பி யேங்கி வாழ்வதோ?
புதைந்து நிற்கும் வீர சக்தி
பொங்க யுத்தம் செய்வதோ?

8. சீன நாட்டுப் பேய்மை தன்னில்
சிக்கி நாமும் வாழ்வதோ?
மானம் நாட்ட, போர்க்க ளத்தில்
மார்பு தட்டி நிற்பதோ?

9. செக்கர் வண்ண ஆட்சி யுள்ளே
சென்று நாமும் வீழ்வதோ?
மக்கள் ஆட்சி மாண்பு காத்து
மன்ன ராக ஆள்வதோ?

10. நீறு பட்டு நீச்ச ரோட
நேரு வோடு நேர்ந்து நாம்
வீறு கொண்ட பார தத்தை
வெற்றி யாடச் செய்யுவோம்

11. கங்கை யாறு இரத்த மாகிக்
கரைபு ரண்ட போதிலும்
எங்கள் நாடு தொட்ட சீனர்
எற்றி யோடச் செய்யுவோம்!

12. இமய வெற்பு பிணங்க ளாகி
எழுந்து நின்ற போதிலும்
நமது நாடு காணி கூட
நட்ட மாகப் பார்த்திடோம்.

13. நோயும் துன்பம் சூறை யாடி
நுகர ஆவி ஈதலின்
தாயின் நாடு வாழ வைக்கத்
தருதல் மேன்மை அல்லவோ?

14. பார தத்தின் பண்பு வீணில்
பழுது பட்டுப் போகுமா?
ஈர மற்ற தீயர் செய்கை
வீர வெற்றி காணுமா?

15. நீதி என்றும் தோல்வி யுற்று
நிங்கி அற்ற தில்லையே!
நீதி கொன்ற நீச்ச ரென்றும்
நிர்மை யுற்ற தில்லையே!

16. சத்தி யத்தைப் பொய்ம்மை என்றும்
சாய்த்த தெங்கு மில்லையே!
நித்தி யத்தை வஞ்ச முற்று
நின்று வாழ்ந்த தில்லையே!

17. பற்றி நின்ற பகைமை தன்னைப்
பஞ்சு போல ஊதுவோம்!
வெற்றி! வெற்றி!! வெற்றி!!! என்று
வீர சங்கு ஊதுவோம்

18. பெற்ற பேறு முற்ற நாமும்
பேத மற்ற வாழுவோம்!
ஒற்று மைக்குக் கிட்டி டாத
ஒன்று மில்லை இல்லையே!

19. வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
வெற்றி சங்கு ஊதுவோம்!
வெற்றி வெற்றி வெற்றி வெற்றி
வீர சங்கு ஊதுவோம்!

20. எங்கள் நாடு! எங்கள் நாடு
என்று மோங்கி வாழ்கவே!
எங்கள் நாடு காந்தி நாடு
சாந்தி யோடு வாழ்கவே.

———

பாரதியும் பாரதமும்

தலைமையுரை : பேராசிரியர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனர்.

அமரகவி பாரதியின் பாடல்களுக்கு உள்ள சிறந்த அடையாளம் என்னவெனறால் அவற்றை எவ்வளவு நேரம் கேட்டுக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தட்டுவதில்லே என்பதுதான். இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டினே நிலேநாட்ட வேண்டுமென்று எல்லோரும் முயல்கிறோம். அதற்கு ஒரு புதிய வழியினே பாரதி திருவிழா நமக்குக் காட்டிக் கொடுத்திருக்கிறது நண்பர் திரு. டி. கே. ஷண்முகம் அவர்கள் நன்கு பாடினர்கள். மொழிபெயர்ப்புப் பாடல்களே எழுதி நமக்கு முன்னரே கொடுத்து அதற்கு ஒத்த தமிழ் பாடலேத் தந்திருப்பர்களேயானுல் அப்பாடலேப் பாடும்போதே அதன் கருத்தை நாம் துய்த்து இன்புற்றிருக்கக் கூடும். ஒரு மொழியில் பாடும்போது அதைத் துய்த்து இன்புற அம்மொழியில் சுபபடு இருக்க வேண்டுமென்ற அவசியமில்லே, அதைத் தெரிந்து இருக்க வேண்டும் என்றும் இல்லே. ஏனெனில் நம் நாட்டிலுள்ள மொழிகள் எல்லாம் ஏறக்குறைய ஒரேவிதமான சொற்றொடர் அமைப்பைப் பெற்றிருப்பதைக் காணலாம். பாரதி பாடலில் ஒலிக்கிற ஒலி மட்டுமல்ல அதனுடே ஊடுருவியிருக்கும் கருத்துக்கள் இந்தியாவில் வாழ்கின்ற ஒவ்வொருவன் உள்ளத்திலும் பொங்கி வழிவதைக் கண்டு அனுபவிப்பதோடு அப்பேருண்மை எனக்கு இப்போதுதான் புலனுகியது. பாரதி ஒரு அமர கவி என்பது எனக்கு இன்றுதான் புலனுகியது. இன்று நம்மைப் பாரதி சோதனே செய்து பார்க்கிருன். ஏற்றுமை, பாரதப் பண்பாடு இவை நம் உள்ளத்தில் வேருன்றியிருக்கிறதா என்று சோதனே செய்து பார்க்கிருன். இன்றுவாழும் இளைஞர்கள், கல்லூரிகளில் கற்கிற இளைஞர்கள் இவர்கள் உரிமைப் போராட்டத்தைப் பற்றி அறிய மாட்டார்களே, அவர்களுக்கு இதன் ஆழம் தெரியுமா ? அகலம் தெரியுமா ? உயரம் தெரியுமா ? என்று எண்ணினேன். ஆனுல், இந்நாட்டு இளைஞர்கள், கல்லூரிகளில் படிக்கும் ஆண்கள், பெண்கள், உயர்நிலேப் பள்ளிகளில் படிக்கும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோரும் ஒருமுகமாக நின்று துடிக்கும் துடிப்பைக் கண்டு, அவர்கள் வீரர வேசத்தோடு சிங்க நடை போடுவதைப் பார்க்கும் போது நான் அப்படி நினேந்ததற்கு என்ன பிராயச் சித்தம் செய்வது என்று கருதி விட்டேன். இதைச் செய்து வைத்த பெருமை பாரதியின் கவிதைகளுக்கு உண்டு.

பாரதியின் வீரம் செறிந்த பாடல்களே எல்லாம் திசையிலும் பரப்பி அப்பாடல்களேப் பாடி, சீனர்கள் மேல் எறிந்துவிட்டக் கூடிய நிலேயை நாம் உண்டு பண்ணவில்லேயே. பாரதியின் பாடல்களேப் படிக்கும்போது எல்லோருக்கும் தம்மை அறியாமலேயே வீராவேசம் உண்டாகிறது. இந்த வீராவேசத்தை நாம் தூண்டிவிட வேண்டும். இதைச் செய்யவேண்டும் தமிழ் மகன் பின்வாங்குகிறன் என்று தோன்றுகிறது. அமர கவியின் விழாக் கொண்டாட்டம் மிகவும் ஆழம் உடையது, எங்கும் வேர் பரயும், எங்கேயெல்லாமோ எட்டிப் பிடிக்கும் என்று காட்டுவது போல் இவ்விழாவை அவன் ஆக்கிவிட்டான். இப்போது இந்த நெருக்கடி இல்லாதிருந்தால் பிறகவிஞர்களின் அமைச்சர்கள் இங்கு வந்திருப்பார்களா, பாரதியின் புகழைப் பாடியிருப்பார்களா, புகழ் பாடி அனுபவித்திருப்பார்களா என்ற ஐயம் எனக்கு எழுகிறது நான் அவர்களேப் பழிக்கவில்லே. நம் பாரதிபாடல்களேக் படிக்கும்போது, கேட்கும்போது நமக்குள்ளே ஒரு புதிய உணர்வு ஏற்படுகிறது. பாரதியும் பாரத நாடும் என்பது பற்றிப் பேசுவதற்கு இச்சூழ்நிலேயில் பாரதி நமக்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறன். பாரதி பாடல் ஒவ்வொன்றிலும் உணர்ச்சி ததும்பிக் கிடக்கிறது.

தமிழ் நாடு என்று வந்தவுடன் இந்தியா வையுமறந்து மாநிலங்களே மறந்து விட்டோமோ என்று அஞ்சும் காலம் வந்தது. அஞ்சவேண்டியதில்லே, ஒருவருக்குத்தன் தாய் மேல் உண்மையான அன்பு இருக்குமானுல் அவன் பிற தாய்மார்களேத் தன் தாய்போல் நேசிப்பான். அதேபோல் நம் தாய்மொழியிடம் நமக்கு உண்மையான அன்பு இருக்குமானுல் பிற மொழிகள் மீதும் நமக்கு அன்பு இருக்கத்தான் செய்யும். இங்கு 14 மொழிக் கவிஞர்களும் வந்து 14 மொழிகளில் கவி பாடினுலும் அதன் உள்ளத்துடிப்பை நாம் அறிய முடியும், அதன் இனிமையை நாம் உணரமுடியும். அவர்களும் தமிழ்ப் பாட்டின் துடிப்பை அறியமுடியும், அறிவர்கள். இதுதான் இந்திய நாடு ஒற்றுமையாக வாழ வழி.

அன்று சிவாஜி தன் குருப்புகளுக்கு வீர கர்ஜனே செய்வது போன்று பாரதி கவி இயற்றியிருக்கிறன். நான் இன்று சீனப்போர் வருமென்று நினேக்கவில்லே. ஆனுல் கவி பாரதியின் உள்ளத்தில் சிவாஜியின் குரல் கேட்டது. அதை அவன் எழுதினன். இன்று சீனப்போர் வந்திருக்கிறது. அதற்காகத்தான் அன்று பாரதி அவதப்பற்றி எழுதியிருக்கிருன் போல் இருக்கிறது. பாரதியின் பாடல்கள் மூலம் உணர்ச்சி ஏற்பட்டது அன்று மட்டுமல்ல; அந்த உணர்ச்சி, அப்பாடல்களேப் படும்போது இன்றும் ஏற்படுகிறது. அவ்வுணர்ச்சி நானே யும் ஏற்படும். நம்மிடையே ஏற்படும், ஏற்படுகிற சிறு சிறு சில்லரைப் பூசல்களேப் பற்றக் கூடப் பாரதி சொல்லியிருக்கிருன். இது எதைக் காட்டுகிறது; பாரதியின் தீர்க்கதரிசனத்தைதான் காட்டுகிறது பாரதியின் கவிதைகளேப் படிக்கும்போது அதன் ஆழம் எவ்வளவு, தீர்க்கதரிசனம் எவ்வளவு என்று தோன்றுகிறது. மற்றவர்கள் பேச இருக்கிறர்கள், ஆகவே இத்துடன் நான் நிறுத்திக் கொள்கிறேன். ★

ஜீவாவின் வீரமுழக்கம்



திரு. ப. ஜீவானந்தம் அவர்கள்

அன்பும் அறிவும் மிக்க தலைவர் அவர்களே, சகோதர சகோதரிகளே,

இந்த பாரதியின் 81-வது பிறந்த நாளிய விழாவில் பங்குகொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததற்காக தான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தாகூர் நூற்றாண்டு விழாவிற்குச் சென்றபோது, அங்கு பாரதப் பெருமக்கள் காட்டிய பேருணர்ச்சியை, ஒற்றுமையுணர்ச்சியைப் பார்த்தபோது, தமிழ்நாட்டில் பாரதியின் பிறந்த நாளை மையமாகவைத்து, அந்த ஒற்றுமையுணர்ச்சியை எல்லா மாகாணங்களிலும் எழுப்பும் வகையில் ஒரு விழா எடுக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றியது. அதில் நண்பர் திரு. அகிலனும் ஒருவர். அது வர வர விரிவடைந்து, நாமெல்லாம் பாரதப் தகுந்த விதத்தில், பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளத் தக்க விதத்தில் அரசாங்கத்தினராலேயே முன் முயற்சி எடுக்கப்பட்டு, நடைபெறும் இந்தப் பாரதியின் பிறந்த நாள் விழாவிலே பங்கு கொள்ளும் பெரும் பேறு கிடைத்ததற்காக நான் பெரிதும் பெருமைப்படுகிறேன். இந்த விழாவில் நிற்கிற போது, எனக்கு பாரதியைப் பற்றி ஏற்படக்கூடிய சில எதிரொலிகளை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

பாரதி தமிழ் மண்ணில் பிறந்தான், தமிழகத்தில் தங்கி, அவன் உலகத்தைத் தன்னதாக்கிக் கொண்டு வளர்ந்தான், பாரதி பல தத்துவங்களை உண்டு, அவனுக்கு வேண்டிய ஒரு சூழ்நிலையை வகுத்துக் கொண்டான். அதேகாலத்தில் உலகத் தோடும் ஒட்டி வாழ்ந்தான், வளர்ந்தான். அவன் உலகத்திற்கு ஒரு பெரிய தத்துவ மரம் என்றே எனக்குப் படுகிறது. அவன் கவிதைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, அவனுடைய காவியங்களை எடுத்துக் கொண்டாலும்சரி, கட்டுரைகளை எடுத்துக் கொண்டாலும்சரி, அவைகளிலே சென்ற நூற்றாண்டிற்கும், இந்த நூற்றாண்டிற்கும் உலகத்தில் சிறந்து விளங்கக் கூடிய ஜனநாயகப் பண்பாட்டை நாம் பார்க்க முடிகிறது. அதோடு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டின் சமுதாய வரலாற்றோடு வர வர வளர்ந்து செல்கிறான். நமது பாரத சமுதாயம் வரலாற்று ரீதியாக வளர்ந்து கொண்டே போகக் கூடிய வளர்ச்சியின் அடிப்படையில் கணக்குப் போட்டு வந்த வகையிலே பல்வேறு பொருள்களை நமக்கு எடுத்துக் காட்டுகிறான்.

அதனால்தான் இன்று இந்த அளவுக்கு நமது பாரத சமுதாயம் வளர்ந்து வந்திருக்கிறது. அவனது பாடல்களிலே தனிப்பட்ட ஒரு கருத்து முத்திரையை அவன் வைத்தான். அதே சமயத்தில் அவன் உலகத்தையும் எட்டிப் பார்த்தான். தமிழைப் பார்த்தான், தமிழ்நாட்டு மக்களை பார்த்தான், ஆனால் அதே நேரத்தில் பாரத நாட்டின் பெருமையையும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தான். உலகத்திலே உள்ள மனித வர்க்கம் எப்படி வாழ வேண்டுமென்று அவன் வழி காட்டுகிறான். இந்திய மக்கள் அனைவரும் எப்படி ஒன்றுபட்டு, ஒரு மைப்பாட்டுடனர்ச்சியோடு வாழ வேண்டுமென்று கூற வந்தவன், அதோடு மட்டும் நிற்காமல் உலகத்திலுள்ள மக்கள் அனைவரும் எப்படி வாழவேண்டுமென்றும் கூறுகிறான். உலகத்திலுள்ள எல்லா மக்களும் எப்படி வாழ வேண்டுமென்று வழிகாட்டுகிறான் என்கிற கருத்தைத்தான் நான் இன்றைக்கு உங்களுடைய கருத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பாரத நாட்டின் சுதந்திரத்திற்கு அவனது கவிதைகள் பெரிதும் நமக்கு உதவின. சுதேசிக் கிளர்ச்சியில் ரத்தம் கொதிக்கும் வகையில் எழுச்சி ஏற்பட அவனது பாடல்கள் நம் இயக்கத்திற்கு உதவி செய்தன. 1924ல் போராட்டம் ஏற்பட்டபோது, அவனது ''தாயின் மணிக்கொடி'' பாடல் நமக்குப் பெரிதும் உதவியது. அதிலே இந்திய மக்கள் தங்கள் கொடியினைக் காக்க எப்படி இருக்க வேண்டுமென்று சிறந்த முறையில் விளக்கியிருக்கிறான். அதற்குப் பிறகு, 'அச்சமில்லை, அச்சமில்லை' என்ற பாடலின் மூலமாக நம் கண்களில் ஒளி பிறக்கச் செய்கிறான். பின்னர் நமக்குச் சுதந்திரமும் கிடைத்தது. அதற்குப் அவன் தனது தீர்க்கதிருஷ்டியின் மூலமாக ஒரு பாட்டைச் சமைத்து வைத்தான். அதுதான், ''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'' என்பது. பின்னும் நாட்டிலே நடக்கக் கூடிய காட்சிகளை யெல்லாம் சித்திரித்துக் காட்டுகிறான். அதோடு மட்டுமல்ல. 'தேசிய இன எழுச்சியின் சிறப்பைப் பற்றியும், செந்தமிழின், செந்தமிழ் நாட்டின் சிறப்பைப் பற்றியும் விளக்கியிருக்கிறான்.

சுதந்திரம் கிடைத்து விட்டப் பிறகு நாம் செய்ய வேண்டிய தொழில்களைப் பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறான். ''இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோமே'' என்று நாம் சுதந்திரம் அடைந்தவுடன் பிறகு செய்யவேண்டிய தொழிலைப் பற்றியும் தீர்க்க தரிசனமாகக் கூறியிருக்கிறான். அப்படி சுதந்திரம் கிடைத்த பிறகும், இந்த பாரத நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும், மக்களும் நன்கு வாழ வேண்டும் என்று வாழ்த்தும் முறையிலே ''பாரத சமுதாயம் வாழ்கவே'' என்று நமது பாரத சமுதாயம் அனைத்தையும் வாழ்த்தியும், பாராட்டியும் இருக்கிறான். இதைத் தவிர, இன்னும் அவ்வப்போது, அந்தந்தக் காலத்திலே எழுக்கூடிய பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் முறையிலேயும் கவிதைகளை இயற்றி இருக்கிறான். ''மன்னும் இமயமலை எங்கள் மலையே'' என்று இப்போது நம்மிடையே எழுந்துள்ள பிரச்னைக்கும் தீர்வு காணும் முறையிலே கவிதை இயற்றியிருக்கிறான். இதனால்தான் அவன் பாடல்களை, ''The Song of Songs'' என்று கூற வேண்டுமென்று எங்களுக்குத் தோன்றுகிறது.

பாரதி இந்தப்பாரத நாட்டோடு மட்டும் நிற்காமல் உலகத்தில் ஒற்றுமையைப் பற்றியும் பாடியிருக்கிறான்.

''ஒன்றென்று கொட்டு முரசே — அன்பில்
ஒங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே — இந்த
நானில மாந்தருக் கெல்லாம்''

என்று நமக்கெல்லாம் ஒரு சீரிய காட்சியை அவன் இந்தக் கவிதையின் மூலம் நமக்குக் காட்டியிருக்கிறான். பாரத சமுதாயத்தின் ஒற்றுமையைப்பற்றிப் பாடிய அவன், அதே சமயத்தில் உலகத்தையும் தன் விஸ்வப்பார்வையால் பார்க்கின்றான். அதோடு நில்லாமல்,

''காக்கை, குருவி எங்கள் ஜாதி — நீள்
கடலும், மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்''

என்று உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் கூட அவன் ஒன்றுகப் பார்க்கின்றான். இத்தகைய தேசீயத்திற்கு நாம் ''என்ன இயம்'' என்று சொல்வது? அவனது அகண்டாகார விஸ்வப்பார்வையில் எல்லா தேசீயமும் அடங்கியிருக்கிறது. பாரத நாட்டின் தேசீயம் மட்டுமல்ல; உலகத்தின் தேசீயம் மட்டுமல்ல; இந்தப் பிரபஞ்சத்தின் தேசீயமே அதில் அடங்கியிருக்கிறது. ''தன்னில் உலகத்தையும், உலகத்தில் தன்னையும்'' காண்பவன் அவன். இதைத்தான் நான் அவனிடத்தில் காண முடிகின்றது. பாரதியின் கவிதைகளில், பாடல்களில் அரசியல், விஞ்ஞானம், சரித்திரம், அறம், வீரம், இன்னும் எவை எவையெல்லாம் உண்டோ அவையெல்லாம், அவை அத்தனையும் புகுத்தியிருக்கிறான். அதோடு, வள்ளுவம், கீதை போன்ற வற்றையும் நமக்குக் குழைத்து அதனுள் புகுந்திந்தந்திருக்கிறான்.

1904-ல் கவிதை எழுத ஆரம்பித்த பாரதி, 1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி நம்மை விட்டு மறைந்தான். இந்த 17 ஆண்டுகளில் பாரதி வளர்ந்துள்ள அளவுக்கு உலகத்திலே எவன் வளர்ந்தான்? அவன் அடர்ந்து, படர்ந்து, விரிந்து, சிறந்து வினங்குவதைப் போல், இந்த உலகத்திலே யாருமே வளரவில்லை, வினங்கவில்லை என்று துணிவோடு சொல்லவும், கேட்கவும் தோன்றுகிறது. அப்படி வளர்ந்து விட்டான் அவன். அதனாலேதான் காலம் செல்லச் செல்ல, காலம் போகப் போக அவனது அற்புத, தெய்வீக கருத்துக்கள் இன்றைக்கும் உண்மையாகிக் கொண்டே வருகிறது. 'ரிக்' வேதத்தைக் காட்டி, 'உண்மை வெல்லும்' என்று சொல்கிறான். மனிக்கூத்தில், பாரதி தேவியை ஒருபுறம் சிவகாமியாவும், அமரனை ரூபமாக, சிருங்காரத்தின் சொரூபமாகச் சித்திரிக்கிறான். மறுபக்கம், பராசக்தியை பத்திரகாளியாகச் சித்திரிக்கிறான். படுபயங்கரமான முறையிலே, ஆக, அவன் அமைதியையும் பார்க்கிறான். போரையும் பார்க்கிறான். அப்போர் சிறுமைப் போராக இல்லாமல், தரம் கெட்ட போராக இல்லாமல், மேலும் மேலும் மனிதனை அமர நிலையில் வைக்கத்தக்கப் போராக மாற வேண்டுமென்பதற்காக, அதற்கு வீரமும், ரூபமும் ஒருங்கே இணைய வேண்டுமென்று அப்படிப் பாடியிருக்கின்றான். அவன் தன் கவிதைகள் மூலம் மனிதனை ஒரு முழு வீரனாகவே மாற்றுகிறான்.

பாரதி சாதியைத் தூள் தூளாக்குகிறான்.

''பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே — வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே — பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே — நம்மை
ஏய்ப்போருக்கேவல் செய்யும்
காலமும் போச்சே''

என்று இப்படி ஒருபக்கம் சொல்லிவிட்டு, ''நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் உண்டோ'' என்று அவனைத் துணிவுடன் உயர்த்தியும் கூறியிருக்கிறான். இப்படியெல்லாம் சொல்லிவிட்டு, ''பாரத நாடு பாருக்குள்ளே நல்ல நாடு'' என்று நாட்டின் உயர்வைப் பற்றிக் கூறுகிறான். அப்பால் உலகத்தைப் பற்றியும் கூறுகிறான். அதற்குப் பிறகு, ''ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே, நன்றிது தோற்றிடல் வேண்டும், இந்த ஞானம் வந்தபின் நமக்கெது வேண்டும்?'' என்ற ஒரு உயர்தரமான உணர்வு நமக்கு ஏற்பட வேண்டும்; நம்மிடையே அப்படிப்பட்ட ஓர் நிலையான ஒற்றுமை

வேண்டும்; அத்தனைய அரச நிலைக்கு சராசரி மனிதனும் உயர வேண்டும்; அதிலே தமிழ் மன்னன் தலைமகனுக்கு நிற்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறான். எப்படி? இன்று நடக்கும் எந்தப் போரை ஒழிக்கப் பாடுபடுவதில் தமிழ் மகன் முதலிருந்து நிற்கவேண்டும். அதோடு நிற்காமல், 'எல்லோரும் மக்கள், எல்லோரும் மன்னர்' என்று ஒரு சோஷலிட்சியத்தைச் சொல்லி, 'வில்லிலே எட்டாத புலிகள்' கூட்டத்தைப் பூழ்தி செய்திடாத' என்று நமக்கு ஒரு தெளிவு, அந்தத் தெளிவில் ஒரு உறுதியைக் காண்பித்து, மேலும் மேலும் வளர வளர உயர வேண்டுமென்று சொல்கிறான். இச்சமயத்தில் நம்மிடையே உள்ள பூசல்களே மறந்து, கூச்சல்களே மறந்து, எல்லோரும் ஒன்றுபட்டு உலகம் எல்லாம் மணம்வீச நின்று, அவன் வழி நடக்க இன்றைக்கு சர்க்காரும், மக்களும் சிறந்த முறையில் ஈடுபட்டிருப்பது நாம் செய்த புண்ணியமல்ல. வள்ளுவன் காலந்தில், சங்க காலத்தில் உள்ள அத்தனை பேரும் செய்த புண்ணியமாகும். புண்ணியவான்கள் எல்லாம் செய்த புண்ணியம் ஆகும். சில ஆண்டுகளாக நான் சொல்லிவந்த கனவு, இப்போது நிஜமாகி விட்டது. லட்சம் மக்களுக்கு மேல் ஊர்வலத்தில் கலந்துகொண்டு. அதிலே யும் புலவர் பெருமக்கள், கலைஞர்கள், மாணவ மாணவிகள், பெரியோர்கள், சகோதர சகோதரிகள், ஆளும் கட்சியினர், ஆளாத கட்சியினர் ஆகிய அனைவரும் கலந்துகொண்டு ஊர்வலம் நடத்தியது எனக்கு ஒரு ஆனந்தக் காட்சியாக இருந்தது.

பாரதி நமக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டி. பாரதி "கான்ஷியஸ்னஸ்" நமக்கு ஏற்படவேண்டும். நமக்கு எவ்வித சந்தேகம் வந்தாலும், அது சமுதாய பிரச்னையானாலும், அல்லது வேறு எந்தப் பிரச்னை வந்தாலும் பாரதியிடம் செல்லுங்கள். அவன் அவற்றிற்குத்தெளிவு தருவான்; உறுதி தருவான். பாரதியின் பாடல்களை, அவன் இயற்றியுள்ள கவிதைகளை நாம் தருவித் தருவிப் படிக்க வேண்டும். அவைகளை நாம் நம்முடைய குழந்தைகளுக்கு மனப்பாடம் செய்து வைக்கவேண்டும். நமது செல்வங்களுக்கு அமுதூட்டும் முறையில், நெஞ்சிற்கு வீரமூட்டும் வகையில் பாரதி பாடல்கள், கவிதைகள் இயற்றித் தந்திருக்கிறான். அவனது கவிதைகளை, பாடல்களை எல்லோரும் எடுத்துக் காண்பிக்கும் வழி செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, நெடுநாளாக என்னுடைய நெஞ்சிலே ஒன்று இருந்து வருகிறது. அதாவது பாரதியின் பேரிலே ஒரு சின்னம் வரவேண்டுமென்பது. அவன் பேரிலே ஒரு பல்கலைக்கழகம் வர வேண்டும். அதற்குப் பாரதி பல்கலைக்கழகம் என்று நாம் பெயரிட வேண்டும். அந்தப் பல்கலைக் கழகத்திலே உள்ள எல்லோரும் வந்து, அதிலே பயிலும் அளவிற்கு நாம் அதை வளர்க்கவேண்டும். உலகத்திலே என்னவெல்லாம் "ஃபாகல்டீஸ்" உண்டோ, அவை அத்தனையும் அங்கு ஏற்படுத்திக் கொடுக்க நாம் முன்வர வேண்டும். பாரதி பிறந்த நாடு தமிழ்நாடு, அப்பாரதியின் சின்னமாக, நாம் அவன் பேரிலே கண்டிப்பாக ஒரு பல்கலைக்கழகத்தை ஏற்படுத்த வேண்டுமென்று மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி, பாரதியின் பேரிலே ஒரு பல்கலைக்கழகம் நிறுவி, உலகிலுள்ள எல்லோருமே மூக்கின் மேல் விரலே வைக்கும்படியான முறையில் பல்கலைக்கழகம் செயலாற்ற வேண்டும். பாரதி எப்படி ஒரு விஸ்வரூபக் கவியோ, அதேபோல் பாரதி பல்கலைக்கழகமும் ஒரு விஸ்வரூப பல்கலைக்கழகமாகத் திகழவேண்டும். இப்படி ஒரு எண்ணம் என் நெஞ்சில் படுகிறது என்பதை இந்த நேரத்தில் நாட்டின் கவனத்திற்குக்கொண்டு வந்து, பாரதியின் பாடல்களை, அவனது கவிதைகளை நாம் நாள்தோறும் படித்தால், அவன் நம்முடைய எந்தப் பிரச்னைக்கும் நம்பிக்கைத் தருவான்; தெம்பூட்டுவான்; முன்னேற வழியும் செய்வான்; மேலும் நமது சமுதாயம் வளரும் என்று கூறிக்கொண்டு பாரதிக்கும், இங்குள்ள அனைவருக்கும் எனது வணக்கத்தைக் கூறி முடிக்கிறேன். ★

திருமதி ஆ. ரா. இந்திரா அவர்களின் சொற்பொழிவு

அடுத்தபடியாக திருமதி ஆ. ரா. இந்திரா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"கோடி கோடி குரல்கள் ஒலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்.
'கூடு திண்மை குறைந்ததோ' என்பதென்?
ஆற்றலின் மிகுந்ததோ, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை."

என்ற குரல் தமிழ் நாட்டில் ஒரு கவிஞன் செவியில் ஒலித்தது. இது வங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய "வந்தே மாதரம்" கீதத்தின் பாரதியின் மொழி பெயர்ப்பு. அது அவர்கள் மனதில் புகுந்து கவிதையாக மலர்ந்து மற்றவர்களுக்கு வழிகாட்டத் துணை நின்றது.

பாரதியை நாம் பல கோணங்களிலிருந்து பார்க்க முடிகிறது, அவர்களது பாடல்கள் மூலம். கண்ணனோடப்பற்றி அவர் பாடும்போது நண்பனாய், மந்திரியாய், நல் ஆசிரியனாய், அரசனாய், சற்குருவாய் இப்படியாக விளங்குவதைக் காண்கிறோம். அவரை சமுதாய சீர்திருத்தவாதியாக நாம் காண முடிகிறது. பாரதியை அரசியல் அமைப்பிற்கு வழிகாட்டியவராக்க காண முடிகிறது, அவரை, பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவராகக் காண முடிகிறது. தமிழ் இலக்கியத்திற்குப் புத்துணர்ச்சி ஊட்டியவராக நாம் பாரதியைக் காண்கிறோம். இப்படி

யாக பல கோணங்களிலிருந்து நாம் பாரதியைக் காணலாம். அவர்கள், அஞ்சா நெஞ்சுடையவர்கள். நம் நாடு முன்பு இருந்த நிலையையும், தற்போது இருக்கிற நிலையையும், எதிர்காலத்தில் எப்படியிருக்க வேண்டுமென்ற நிலையையும் பாரதி தன்கு சித்தரித்துக் காட்டியிருக்கிறார்கள். பாரதி, பொருளாதார சமத்துவம்,சமுதாய நிலை இவற்றைப் பற்றியெல்லாம் பல விளக்கங்கள் அளித்திருக்கிறார்கள். பாரதியின் பாரதம் என்கின்ற இந்த நாட்டில் வுள்ள மக்கள்—அனைவருக்கும் மெய் அன்பு, பற்று வருவதற்குரிய வகையில் அவர் தமது நெஞ்சில் தேச பக்தியும், தெய்வ பக்தியும் வீறு கொண்டெழுந்தது போல் மற்றவர்களுக்கும் ஏற்படக் கூடிய வகையில் பாரதி, பாடல்கள் இயற்றியுள்ளார்.

பாரதி கவிதைகள் இயற்றியது, கிட்டமிட்ட உல்ல. அவருடைய நெஞ்சின் உள்ளே தெய்வீக மலர்ச்சி ஏற்பட்டது என்பதுதான் உண்மையான நிலைமை. பாரதி, பாரத நாட்டின் பண்பாட்டையும், பாரதத் தாயின் பேரியல்புகளையும் தெளிவாகக் காட்ட முற்பட்டிருக்கிறார். குணசித்திரத்தில் அவர் தீட்டியிருக்கிற படைப்புகள் அனைவர் கவனத்தையும் ஈர்க்கத் தக்கவை.

பாரதி, உலக சமுதாயம் அனைத்துக்கும் வழி காட்டக்கூடிய பெருமை பாரத நாட்டிற்கு அமைய வேண்டுமென்றார். அதற்கு, நாம் அறப் பாதையில் இருந்து தவருமல் நிற்க வேண்டும் என்றார்.

அடுத்து, விரத்தை எந்தெந்தக் காலத்தில், எந்தெந்த வகையில் பயன்படுத்தி அதைத் தூய்மையாக வைத்துக் கொண்டு பல்வேறு வளர்ச்சியைப் பெறுவதற்கு இந்நாடு தயங்காது என்றும் கூறியுள்ளார்கள், பாரதி அவர்கள்.

''ஞானத்தி லேபர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்னதானத்திலே.....''

என்றும்,

''தீரத்தி லேபடை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்தி லேஉப காரத்திலே.....''

என்று பலவகைகளில் நாம் ஓங்கி நின்ற போதிலும்,

''இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்;
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்.....''

என்று கூறி நமக்கு இன்னல் வருமானால் பாரதம் எப்படி எதிர்க்கும் என்பதைப் பாரதி விளக்கிக் காட்டியிருக்கிறார். பாரதத் தாயின் திருவருவத்தை, பாரதி ''எங்கள் தாய்'' என்பதில் அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அறம் ஒரு பக்கம், வீரம் ஒரு பக்கம். நமது வீரத்தைப் பற்றி பாரதி குறிப்பிடும் போது,

''நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரிவாள் எங்கள் தாய்—அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்''

என்று அறம் அற்றவனை அழிக்கிறபோது ஆனந்தக் கூத்தாடுவாள் எங்கள் தாய் என்று அழகாகக் கூறியிருக்கிறார் பாரதி. அடுத்தபடியாக மேலும் கூறுகிறார்.

'வெண்மை வளரிம யாசலன் தந்த
வீறன் மகளாம் எங்கள் தாய்—அவன்
திண்மை மறையினும் தான் மறையாள் நித்தஞ்
சீருறுவாள் எங்கள் தாய்''

என்று கூறியிருக்கிறார். ஆக, இப்பொழுதுள்ள நெருக்கடியான நிலைமையை வைத்துப் பாரதியின் பாடல்களைப் படிக்கும்போது, அறம் ஒரு கண்ணுகவும், வீரம் மற்றொரு கண்ணுகவும், பாரதி தெளிவு படுத்தியிருக்கிறார்.

பாரதி பிறந்த நாடு இது, இந்நாட்டில் பிறந்தவர்கள் நாம் என்ற உணர்வு தம் நெஞ்சத்தினின் அகற்றப்படாமல் இருந்தால் இந்த நெருக்கடி நீலையில், அறத்தின் வீகிளவால் நமக்கு நிச்சயம் வெற்றி கிட்டும் என்பதில் ஐயமில்லை.'' ★

திரு. கி. வா. ஜகன்னாதன் அவர்களின் சொற்பொழிவு

★

ஒருவர் மைசூரிலிருந்து மிக விலை உயர்ந்த ஊதுவத்தி ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து கூடத்தில் ஏற்றினார் என்றும், அந்த வத்தி முழுவதும் எரிந்து விட்ட பிறகும் அதன் மணம் அந்தக் கூடத்தில் முழுவதும் வீசிக் கொண்டிருந்ததாகவும், அந்தக் கூடத்திற்கு வந்தவர்கள் அனைவரும் அந்த மணம் எங்கிருந்து வருகிறது என்று கூடத்தின் எல்லாப் பக்கங்களுக்கும் சென்று பார்த்ததாகவும், வத்தி சிறிது நேரத்தில் எரிந்து விட்ட பிறகும், அதன் மணம் கூடம் முழுவதும் பரவி இருந்ததாகவும், அதே போல்தான் பாரதியார் எங்கோ திருநெல்வேலியில் பிறந்தார் என்றும், அவரிடத்திலே இருந்த கவி மணம், யாருமில்லாத பொருணை நதி ஆற்றங் கரையிலும், அதன் அருகிலே உள்ள ஒரு சிறு மண்டபத்திலுமே தோன்றியது என்றும், அது மெதுமெதுவாக, திருநெல்வேலியோடு மட்டும் நில்லாமல் பாரத நாட்டின் ஏனைய பிற பாகங்களுக்கும் பரவிற்று என்றார். அவரும் தான் பிறந்த திருநெல்வேலி ஜில்லாவின் புகழை மட்டுமோ அல்லது அவரிருந்த ஜில்லாவிலே உள்ள பொருணை நதியின் பெருமையை மட்டுமோ பாடாமல் பாரத நாட்டின் முழுப் பெருமையையும் பாடியிருக்கிறார் என்றார். ''மன்னும் இமய மலே எங்கள் மலையே, மாநில மிதிது போற்பிறி திலையே'' என்று பாடியி

ருக்கிறார் என்றார். இப்படிப் பாமாலைகளைச் சூட்டி அவர் பாரதத் தாய்க்கு சமர்ப்பிக்கும் பணியை மேற்கொண்டார் என்றார். அவர் நினைத்திருந்தால் எட்டயபுரம் மகாராஜாவின் ஆஸ்தான கவிஞனாக ஆகியிருக்கலாம் என்றும், அதனால் தான் ஒரு பணக்காரராகவே வாழ்ந்து இருக்கலாம் என்றும், ஆனால் பாரதியார் அதை விரும்பாமல், பாரதத் தாயின், பாரத நாட்டின் ஆஸ்தான கவிஞராகவே தன்னை ஆக்கிக் கொண்டார் என்றும் குறிப்பிட்டார்.

பாரதியார் பாரதத் தாயின் திருவடிகளுக்கு நவரத்தின மாலையே பாடியிருக்கிறார் என்றார். அப்படிப்பட்ட பாடல்களிலே தான் நாம் இன்று பேசப்படும் 'தேசிய ஒருமைப்பாட்டு' மணம் கமழ்கிறது என்றும் குறிப்பிட்டார். இதை அப்படிச் சொல்வதற்குப் பதில் 'பாரதியின் பண்பாடு' என்று கூடச் சொல்லலாம் என்றார். அப்படிப்பட்ட பாரதப் பண்பாட்டைத்தான் பாரதியார் பாரத மாதாவின் திருவடிகளிலே மாலையாகக் கோத்துப் போட்டார் என்றார். அப்படிப் போடும்போது, அந்த மலர் மாலையில் தென்னாட்டைப் பற்றி மட்டும் கூறாமல், இந்தியாவிலே உள்ள கங்கை, காவேரி, பொருனை, ஏன் பாலாற்றைக்கூட விடாமல் தொகுத்து அளித்திருக்கிறார் என்றார்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நாட்டிலே அந்தக் காலத்திலே இருந்த, அதற்கு முன்னுலே இருந்த பெருமக்களைப் பற்றியும் அவர் கூறியிருக்கிறார் என்று குறிப்பிட்டார். வங்க நாட்டிலே உள்ள பூபேந்திரரைப் பற்றியும், அதற்கு முன்னுலே இருந்த காளிதாசரைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் என்றார். அதேபோல் கம்பன், வள்ளுவன், இளங்கோ போன்றோரையும் பாடியிருக்கிறார் என்றார்.

அதோடு, பாரதியார் ஓர் தீர்க்கரிசி என்பதற்கு முக்காலமாகிய இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலத்தின் நிகழ்களைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் என்றார். அதனல் அவர் முக்காலம் உணர்ந்த ஓர் விவேகி என்றும், காலம் கடந்த ஓர் பெரும புலவர் என்றும் குறிப்பிட்டார். இறந்த காலத்திலே உள்ளவர்களைப் பற்றியும், அவர் காலத்திலே வாழ்ந்த ரவி வர்மா போன்றவர்களைப் பற்றியும் மட்டும் அவர் குறிப்பிட்டிருப்பதோடு, வருங்காலத்திலே இந்தப் பாரத நாடு எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கப் போகின்றது என்பதையும் தனது தீர்க்கதரிசனத்தின் வாயிலாக விளக்கிச் சென்றிருக்கிறார் என்றும் குறிப்பிட்டார்.

அவர் பாரத நாட்டின் பெருமையைப் பற்றி விளக்கிடும்போது பாரதியாரின் கீழ்வரும் பாட்டை எடுத்துக் காட்டாகக் குறிப்பிட்டார்கள்.

"சிந்தி நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னுட்டிளம் பெண்க ளுடனே
சந்தரத் தெலுங்கினிலே பாட்டி சைத்துத்
தோணிக ளோட்டியாடி வருவோம்
கங்கை நதிப்புறத்துக் கோதமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசி ளிப்போம்"


பின்னுலே நாடு எப்படி இருக்கும், இருக்கப் போகிறது என்பதைப் பற்றி தீர்க்கதரிசனமாகக் கூறிப் போயிருக்கிறார் என்றார். பாரதியார் தன் உள்ளத்தே அப்படிப்பட்ட கற்பனைகளை யெல்லாம் செய்தார் என்றும், வருங்காலத்திலே மக்கள் எப்படி யெல்லாம் இருக்க வேண்டுமென்று சிந்தனை செய்தார் என்றும், அதோடு "பாரத சமுதாயம்" எப்படி அமைய வேண்டுமென்று எண்ணினார் என்றும் குறிப்பிட்டார்கள்.

அதோடு, தனது நண்பர் ஒருவர் 'பாரத சமுதாயம்' என்ற பாட்டுத் தான் அவரது கடைசிப் பாட்டாக இருக்குமென்றார் என்றும், காரணம் அதிலே அவர் 30 கோடி மக்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார் என்று சொன்னார் என்றும், இருந்தாலும் மகாத்மா காந்தியடிகளைப் பற்றிச் சொல்லும் மற்றொரு இடத்தில் அதற்குப் பின்னுல் வளர்ந்த ஜனக் கணிதையின்படி 32 கோடி என்று சொல்லியிருக்கிறார் என்றும், ஆகவே அந்த நண்பர் சொன்ன பாட்டே கடைசியாக அமைந்திருக்காது என்றும் குறிப்பிட்டார்கள்.

கடைசியாக, பாரதியார் உள்ளத்திலே பாரத நாட்டை எப்படியெல்லாம் ஒன்றுபடுத்தி, அற்புதமான எண்ணத்தை எண்ணினார் என்பதை விளக்கும் வகையில் உள்ள ஒரு பாட்டைக் குறிப்பிட்டார்கள்.

"அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னிநீ வேதங்கள், உபநிட தங்கள்,
பரவுபுகழ்ப் புராணங்கள், இகிஹா ஸங்கள்;
இன்னும்பன் நூல்களிலே இசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனே இந்
நாள்?
மின்னுகின்ற பேரொளிகாண, காலங் கொன்ற
விருந்துகாண, கடவுளுக்கோர் வெற்றி காணே'

இந்த வகையில் பாரத நாட்டின் பண்பாட்டு நிலைகளே மிகவும் அற்புதமாக சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டார்கள். அவைகளுக்கெல்லாம் என்ன பொருள் கொண்டாலும், கடவுளுக்கு ஓர் வெற்றி காணேம் என்று ஓர் ஞான ஒளியை, வெளிச்சத்தை விளங்க வைத்திருக்கிறார் என்றும் குறிப்பிட்டதோடு, அப்படிப்பட்ட பாரதியின் பண்பாடுகளை நாம் பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.பின்னர் இரவு 8 மணிக்கு எஸ். வி. சகஸ்ரநாமம் அவர்களின் சேவாஸ்டேஜ் நாடகக் குழுவினர் "இகியபாரதம்" என்ற உணர்ச்சி மிக்க ஓரங்க நாடகக் காட்சியை நடத்தினார்கள். தேசீய எழுச்சியும் சத்ரபதி சிவாஜியும் இதன் முக்கிய அம்சங்களாக அமைந்து நன்கு சோபித்தன. விழாவுக்கு வந்திருந்தோர் தலா ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி இந்த நிகழ்ச்சியைக்கண்டு களித்தனர். வசூலான தொகை தேசப் பாதுகாப்பு நிதிக்கு அளிக்கப்பட்டது. ★



சிறப்புக்கு உரியவர்கள்

திரு. கருப்பையா பி. ஏ.

★

"சீரும் சிறப்பும் மிக்கவாறு விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்திருந்தனர்" என்று "ஆனந்த விகடன்" எழுதிற்று.

"ஊர்வலம் அருமையிலும் அருமை" என்று தமிழ்த் தேசியக் கட்சி ஏடான "தென்றல் திரை" தீட்டிற்று.

"கடற்கரையில் மாபெரும் கூட்டம் கூடி ஒரு கவிஞனுடைய திருநாளைக் கொண்டாடினார்கள்; அதற்கு ஐம்பதினாயிரம். பேர்களுக்கு மேல் வந்திருந்தார்கள். என்ற செய்தியை யாராவது வெளி நாட்டுக்குச் சென்றிருக்கும் தமிழர் ஒருவர் பத்திரிகையில் படித்தால் நம்பவே மாட்டார். அப்படிப்பட்ட அற்புதம் சென்ற டிசம்பர் மாதம், ஒன்பதாம் தேதி சென்னையில் நிகழ்ந்தது; பாரதியாரின் 81-வது பிறந்தநாளைத் தமிழ்நாடு அரசியலார் கொண்டாடிய போது முதல் நாளில் கடற்கரையில் அந்த மாபெரும் கூட்டம் நடந்தது." என்று "கலைமகள்" பத்திரிகை குறிப்பிட்டது.

"வீரக்கனல் எழுப்பிய பாட்டுக்கொரு புலவர் பாரதியாரின் எண்பத்தேராவது பிறந்தினம் சென்னை ராஜாஜி ஹாலில் டிசம்பர் 9, 10, 11 தேதிகளில் அகிலமிசையாக நடைபெற்றது," என்று சுதந்திரக் கட்சியைத் சேர்ந்த "கல்கி" ஏடு பாராட்டி எழுதிற்று.

"தமிழக வரலாறு காணாத மாபெரும் சிறப்பு" பாரதியார் பிறந்ததின விழா என்றும் "தரத்தில்–தமிழ்மொழியின் வரலாற்றில் - இது முதல் ஊர்வலம்" என்றும் பாராட்டியது தமிழரசுக் கழக வார ஏடாகிய "செங்கோல்."

"மகாகவி பாரதியார் பிறந்ததினமான டிசம்பர் 11-ந் தேதி சென்னை ராஜாஜி மண்டபத்தின் முன் அணிவகுத்து நின்ற ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் தமிழகத்து முதலமைச்சர் மாண்புமிகு கு. காமராஜ் முன்மொழிய எழுத்தாளர்கள், கலைஞர்கள், மாதர், இளைஞர், பொதுமக்கள் ஆகிய அனைவரும் வழிமொழிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மீது ஆணையிட்டு ஏற்றுக் கொண்ட இந்த (தேசப் பாதுகாப்பு) உறுதி மொழி உலக சரித்திர வரலாற்றிலே ஒரு புதுமையாகும்." என்று கட்சி சார்பற்ற "எழுத்தாளன்" ஏடு இயம்பிற்று.

"பாரதியாரின் பிறந்தநாள் விழா தேசீய எழுச்சி விழாவாக அமைந்து சிறப்புப் பெற்றது" என்று "தமிழ் முரசு" தலையங்கம் வாயிலாகப் புகழுரை வழங்கிற்று.

—இப்படி, பல்வேறு ஏடுகளும், கட்சித் தலைவர்களும், கட்சிச் சார்பற்ற அறிஞர்களும் பாராட்டுரை வழங்குகின்ற அளவுக்குப் பாரதியார் பிறந்த தின நிகழ்ச்சிகள் அனைத்தும் அமைந்துவிட்டன என்றால் அதற்கு இரவு பகல் பாராமல் தன்நலமற்று உழைத்த பெருமக்கள் பலர் காரணமாவார்.

விழாக் குழுவிலும், துணைக் குழுக்களிலும் அங்கம் வகித்தவர்களின் பட்டியலே வேறு பக்கங்களில் காண்பீர்கள். அவர்கள் அனைவரும் நன்றி செலுத்தப்பட வேண்டியவர்கள். எத்தப்பணி தரப்பட்டாலும் அதனைத் திறம்படச் செய்திடத் தயாராக இருந்த அவர்கள் அத்துணைப் பேர்களும் விழாச் சிறப்பாக நடைபெற வேண்டும் – எல்லோரும் மெச்சும் வண்ணம் நடைபெற வேண்டும் – என்ற ஒரே இலட்சியத்தோடு, தங்கள் சொந்த அலுவல் களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுச் செயல்பட்டார்கள்.

விழாக் குழுவினருக்கிருந்த அதே அளவு உற்சாகத்தோடு மற்றும் பணியாற்றினர்கள்.

"பாரதி பிறந்தார்" (திருச்சி எழுத்தாளர் சங்க வெளியீடு) "சீனப் போரும், தேசக் கவியும்" (அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் பெருமன்றம் வெளியீடு ஆகிய) இரு இலவச வெளியீடுகளை வெளியிட்ட திரு. அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் மூன்று நாட்கள் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் மிக்க சுறுசுறுப்போடும், சிரித்த முகத்தினராகவும் பணியாற்றினர்கள்;

அகில இந்திய வானொலியைச் சேர்ந்த நண்பர் திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களும் அவரது குழுவினரும் விழா நிகழ்ச்சிகளைத் தமிழ் பேசும்

உலகம் முழுவதும் கேட்டுக்களிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்தார்கள்;

திரு. டி. கே. சண்முகம், திரு. கொத்தமங்கலம் சுப்பு, திருநெல்லை சீதாராம், திரு. தேவநாராயணன், திரு. சங்கு சுப்பிரமணியம் ஆகியோர் ஊர்வலம் பூராவும் தம்தம் குழுவினரோடு பாரதி பாடல்களின் இசைத்துப் புதியதொரு காட்சியை-உணர்ச்சியை ஊட்டும் காட்சியை - அளித்து வந்தனர்;

பல பிரபல தமிழ், ஆங்கில், தினசரிகளும் வாரஏடுகளும் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாகப் பிரசுரித்தன. பல பத்திரிகைகள் சிறப்புக் கட்டுரைகளையும், விசேட மலர்களையும் வெளியிட்டுக் கவிஞர் பெருமானுக்கு அஞ்சலி செய்தன; இந்தியாவின் மற்ற மாநிலங்களிலுள்ள பல்வேறு மொழிகளைச் சேர்ந்த பத்திரிகைகளும் இப்பணியை மேற்கொண்டன;

ராஜாஜி மண்டபத்துக்கு முன்பாக அழகிய தழைவு வாயிலையும், ஊர்வலத்திற்காக 120 படங்களுடன் எடையுள்ள பாரதி உருவப்படத்தையும் ஜெமினி ஸ்தாபனத்தார் செய்து அளித்தார்கள்;

பிறந்ததின நிகழ்ச்சிகளை யொட்டிய தகவல்கள், ஆலோசனைகள், தக்க உதவிகள் ஆகியவற்றை அவ்வப்போது மிக்க மமிழ்ச்சியுடன், பாரத அரசினர் தகவல் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரியான திரு. ஸௌமியநாராயணன், சாகித்ய அகாடமியின் அதிகாரியும், குழு உறுப்பினருமான திரு. கே. எம். ஜார்ஜ், தமிழ்நாடு அரசினர் செய்தி, கலித்துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் தந்துதவினர்கள்;

விழாவை யொட்டித் தமிழக அரசினர் செய்தித்துறை தேசப் பாதகாப்பை வலியுறுத்தும் இரண்டு சிறந்த சுவரொட்டிகளையும் 'பாரதி கண்ட பாரத சமுதாயம்' என்ற நூலையும் வெளியிட்டிருந்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பாரதி 81 வது பிறந்தநாள் விழா என்றுமில்லாத வகையில் பத்திரிகைகளால் பாராட்டப்பட்டது. பொது மக்களால் போற்றப்பட்டது. விழாக் குழுவின் நிர்வாக அலுவலகத்திற்கு மௌண்ட் ரோட் கவர்ண்மெண்ட் எஸ்டேட்டிலுள்ள குழந்தைகள் தியேட்டர் மாடியில் அன்புடன் இடம் கொடுத்திருந்தார்கள். இரவு பகலாகடைப் பைட்டர்கள் இயங்கிக் கொண்டிருந்தன. எழுத்தாளர்கள், தேசியத் தொண்டர்கள் எந்நேரமும் அங்கு இருந்து விழா ஏற்பாடுகளுக்கான ஏதாவது ஒரு பணியில் ஈடுபட்டிருந்தார்கள். விசேஷமாக விழா முடியும் வரையில் டெலிபோன் அமைக்கப் பட்டிருந்தது.

திருச்சியிலிருந்து கவிஞர் திருலோக சீதாராம் அவர்கள் ஒருவாரத்திற்கு முன்னமேயே சென்னைக்கு வந்து விழாக் குழுவில் தோற்றெடுக்கப்பட்ட அங்கத்தினராக இருந்து எல்லாக் காரியங்களிலும் ஒத்துழைத்தார். விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்த விருந்தினர்களுக்கும், வெளியூர்களிலிருந்து வரும் எழுத்தாளர்கள், தேசியத் தொண்டர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நீயூ ஹாரிஸ்டல் விடுதியில் அறைகள் ஒதுக்கப்பட்டன. பழைய ஹாரிஸ்டல் சமையலறையும் கூடமும் விருந்துபசாரங்களுக்குத் தயாராயிருந்தன.

விழாவுக்கு பல அன்பர்கள் செய்த உதவியை ஒவ்வொன்றாக விரித்துரைப்பது இயலாத காரியம். திருவாளர்கள் சரஸ்வதி பாண்டுரங்கர், புலவர் முத்துக்கண்ணப்பர், ஸ்ரீ ராமகிருஷ்ணேயர், ஸ்ரீ கே. பாலசுப்ரமண்ய அய்யர், ஸ்ரீ வி. எஸ். வெங்கட்ராமன், ஸ்ரீ ஆர். குழந்தைவேலு, ஸ்ரீ அம்பாசங்கர், எஸ். டி. சுந்தரம் மற்றும் பாரதி பக்தர்கள் கமிட்டி அலுவல்களில் ஊக்கத்துடன் இருந்து விழாவின் வெற்றிக்கு ஆலோசனை கூறியும் செயல்கள் புரிந்தும் உதவினர்கள்.

விருத்தினர்களை உபசரிக்க, ரா. நிலமேகம், கே. ஆர். ஷண்முகம், ராமச்சந்திர ராவ் ஆகிய எழுத்தாள நண்பர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

இன்னும், ஊர்வலம் - பொதுக்கூட்டம் ஆகியவை சிறப்புற நடைபெற பெரிதும் ஒத்துழைத்த திரு. கே. ராமதாஸ் அவர்கள், விழாவுக்கு வந்திருந்தவர்களை அன்புடன் வரவேற்று உணவு வழங்கி உபசரித்த சகோதரிகள் ஞானதீபம் அவர்கள், சரஸ்வதி ராம்ஜத் அவர்கள், தேசப் பாதுகாப்புப் பிரதிக்களை நிகழ்ச்சிக்காகக் கூட்டி இசை சிறப்புக அடையை ஒத்துழைத்த பேராசிரியர் சாம்பமூர்த்தி அவர்கள், வித்துவான் ஸ்ரீரங்கம் கண்ணன் அவர்கள்; அதே நிகழ்ச்சிகாக மாணவிகளையும், மாதர்களையும் திரட்டும் பணியில் ஒத்துழைத்த சகோதரி சரோஜினி வரதப்பன் அவர்கள்; சென்னையில் ஊர்வலத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொள்ளக் காரணமாக இருந்த மாநில அரசினர் ஜெஜட் பதிவில்லாத ஊழியர் சங்கம், மாநில மாதர் காங்கிரஸ், மாநில மாணவர் காங்கிரஸ்; விழா நிகழ்ச்சிகள் ஆனைத்திலும் கலந்துகொண்டு பெருமை செய்த பாரதியார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; விழா நன்கு நடைபெற நிதி வழங்கிய பெருமக்கள்; விழா நிகழ்ச்சிகளை யொட்டித் திரைப்படம் தயாரித்து வெளியிட்ட அன்பர்கள்; திரு. ரெஜைக், ஆர்யா, மாதவன், கோபுலு, நடனம், தீபா, சாமா, சுபபாணி, வேலு, உமாபதி, சாமி அண்டு சங்கர், சுதர்ஸன், சரவணன் முதலிய ஓவியர்கள்; விழா நிகழ்ச்சிகளையொட்டிய பணிகளைக் கௌரவ ஊழியர்களாகவிருந்து, இரவைப் பகலாகக் கருதி உழைத்திட்ட திரு. வி. ஆர். ராங்நாதன், சி. சுப்பிரமணியம், வி. எஸ். ராமானுஜம், வி. எஸ். வரதராசன், கே. ஏ. கேசவன், சுதந்திரநாதன், ஏகாம்பரம், பட்டாபிராமன், விஜயராகவன் போன்ற உணர்ச்சிமிக்க இளைஞர்கள்; விழாவின் நிகழ்ச்சிகள் நன்கு நடைபெற பூரண ஒத்துழைப்பு தந்த சென்னை நகரப் போலீசார் ஆகியோர் குறிப்பிடப் படவேண்டியவர்கள்.

இந்தப் பெருமக்கள் அனைவருக்கும் விழாக்குழுவினர் பணிவான வணக்கங்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள். ★



அமரகவி

சுப்ரமண்ய பாரதியாரின்

81-வது பிறந்ததின விழா

11—12—62

மூன்றும் நாள் நிகழ்ச்சி

ராஜாஜி மண்டபம்

★

பாரதி கவிதை மலையாளப் பதிப்பு
வெளியீடு.

கவியரங்கம்
புதிய கவிதைகள்

பாரதி புகழ்
உரைக்கோவை

தேசியப் பாதுகாப்பு பிரதிக்ஞை

★

—: இன்றைய விழாத் தலைவர்கள் :—

திரு. எம். பக்தவத்சலம்
,, தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்
,, கு. காமராஜ்

விழா நிறைவு

மலையாள மொழியில் பாரதி கவிதை வெளியிட்டு விழா

திரு. கே. எம். ஜியார்ஜ் அவர்கள் சாகித்திய அக்காடமி சார்பில் மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள "பாரதியாரின் கவிதைகள்" என்ற புத்தகத்தைப்பற்றி (ஆங்கிலத்தில்) பேசியதாவது :—

நாட்டின் பல்வேறு மொழிகளின் இலக்கிய முயற்சிகளை ஒரு முகப்படுத்தும் சாகித்ய அகடாமி என்ற கிறுவனம் இந்திய அரசாங்கத்தாரின் ஆதரவில் கடை பெறுகிறதென்றும், தான் அதனுடை தென்பிராந்திய அலுவலரென்றும் அறிமுகப் படுத்திக்கொண்டார். சாகித்ய அகாடமியின் சேவை பற்றி மக்கள் அதிகம் அறிந்துகொள்ளவில்லை யென்பதை முதல் நாள் மைசூர் முதலமைச்சர் பேச்சிலிருந்து தனக்குப் படுகிறதென்றும் அவர் குறிப்பிட்டார். சாகித்ய அகடாமி மொழிப் பரிவர்த்தனை முயற்சியில் மகத்தான சாதனைகள் புரிந்துவிட்டாலும் ஓளரவுக்கு சாதித்திருக்கிற தென்றும் விளக்கினார். பாரதியின் பெயரால் ஒரு பெரிய நிறுவனம் அமைக்கும் யைரு முதலமைச்சர் யோசனை மிகவும் போற்றத் தக்கதாகா.

எனினும், முதலில் மொழி பெயர்ப்பாளர்க்குப் புயிற்சியளிக்கும் அடிப்படைக் காரியம் செய்தாக வேண்டுமென்று குறிப்பிட்டார். மொழி பெயர்ப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் பெருங்காரியமே சாகித்ய அகடமிக்கு நேரங்களுள்ள பிரதானமாகும். திறம் வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்களை கிடைப்பதிலேயே, தொடர்புடைய தென் மொழிகளுக்கூட ஒன்றிலிருந்து மற்றொறுறுக்கு கள்தைகளின் பெயர்க்கத்தக்கவர்கள் காணப்படுவதிலே. பிறமொழிகளிப் பற்றிய பிரகிலே இன்னும் சிரமம். உரிய ஆற்றலுடையவர்களை ஒரு சிலரே யாவர். அவர்கள் சாகித்ய அகடாமிக்கு நனகு அறிமுக முள்ளவர்கள் என்னம், தெலுங்கு மொழிகளில் முதல் நாள் பாரதி மொழிபெயர்ப்பைக் கேட்போம். வெண்ணிலாவின் சோபால குருப் ஆவர்கள் செய்த மலையாளப் பாடலை இன்று நீங்களே கேட்பீர்கள்.

பாரதி நிறுவனம் அமைக்கப்படுமாயின் தக்க மொழிப்பெயர்ப்பாளர்களைத் தயார்ப்படுத்த அதன் முதல் வேலையாக அமையும். அப்படிச் செய்தால், சாகித்ய அகடாமி, தேசிய புத்தக டிரஸ்ட் போன்ற நிறுவனங்களும் அத்தகைய மொழிபெயர்ப்பாளர் சேவைகளைப் பயனபடுத்திக் கொள்ள வசதியாயிருக்கும். தமிழ்க் கன்ன இலக்கிய பரிவர்த்தனை வேலையை ஓரளவு சாகித்ய அகாடமி செய்தே வந்திருக்கிறது. சில அச்சாகி விட்டன. மற்றும் சில வெளியிட வேண்டிய நிலையிலுளன. தமிழில் இது வரை 15 புத்தகங்கள் பிறமொழிகளில் பெயர்கப் பட்டுள்ளன. இந்த மொழிபெயர்ப்பே பெரியசாதனையாகவும் சோதனையாகவும் ஆகிவிட்டன. பாரதியின் இலக்கியத் தொகுப்பு ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ளது. அவர் அதற்கு அரியதொரு முகவுரை வழங்கியுள்ளார். அவற்றைத் தான் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் சாகித்ய அகடாமி பிரசுரித்துள்ளது. மற்றும் சில மொழிகளில் பெயர்ப்புகள் நடைபெற்று வருகின்றன. தவிர, ஞானரதம், பாஞ்சாலி சபதம், ஆகியவையும் இந்திய மொழிகள் பலவற்றிலும் விரைவில் வெளிவர விருகின்றன.

ஜியார்ஜ் அவர்கள் மேலும் பேசுகையில் மலையாள மொழிபெயர்ப்பின் அருமை பெருமைகளை விளக்கிக் கூறினர். பின்னர் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களை மலையாள மொழி பெயர்ப்பை வெளியிடு மாறு கேட்டுக்கொண்டார்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் வெளியிட்டுரை

தென்னக சாகித்தஅக்காடமிசார்பில் திரு. ஜியார்ஜ் அவர்கள் மலையாள மொழியில் பெயர்க்கப்பட்டுள்ள "பாரதியாரின் கவிதைகள்" என்ற புத்தகத்தைப்பற்றி சொன்னார்கள். பாரதியார் அவர்கள் தமிழுக்கு மட்டு மல்ல, எல்லா மொழிகளுக்கும் உரியவர் என்பது இதி லிருந்து நிச்சயமாயிற்று. தமிழ் தாய் பாரதியாரை தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல. உலகத்திற்கே ஈன்று தந்திருக்கின்றாள். பாரத நாடே பாரதியாரின் பெருமை யைப்பற்றி உணர்ந்து வருகிறது. அந்த முறையில் பாரதியாருடைய பிறந்த நாள் விழாவில் பல மொழி கவிஞர்கள் கலந்து கொண்டார்கள். இதுவே ஒரு சான்றுகும். பாரதியார் முக்கியமாக பிற மொழிகளை நாம் உயர்த்த வேண்டும் என்று கூறினர். அந்த வகையில் இன்று இந்த பிறந்த நாள் நிகழ்சியின முதலில் மலையாள மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியார் கவிதைகளை நாம் வெளியிடுகிறோம். பாரதி யாருடைய அரிய பாடல்களீன, மலையாள கவிஞர் ஒரு வர் மலையாள மொழியில் மொழிபெயர்த்து அளித்திருக் கிறார்கள். நாம் அதை வரவேற்கிறோம். அந்த அளவில் இன்றையதினம் அதை முதல் நிகழ்சியாக வைத்தது மிகவும் பொருத்தம் என்று எல்லோரும் உணர்வார்கள். சாகித்ய அக்காடமியார் முக்கியமாக தென் மண்டலத் தில் பணியாற்றுவன்றவர்கள் நம்முடைய மொழிகளுக் குள் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு, ஒருமொழி யில் உள்ள பல அறிய கருத்துக்களை பிற மொழிகளி லும் கொண்டு வர வேண்டும் என்ற சிரிய கருத்தோடு, பாரதியாருடைய அறிய கருத்துக்களின்படி அவைகளை வெளிட முன்வந்திருக்கிருர்கள். இது ஒரு மகத்தான சேவையாகும்.

தென்னாட்டிலுள்ள பல புலவர்கள், எழுத்தாளர்கள் எல்லோரும் அதில் கலந்து கொண்டார்கள். அதில் கலந்துகொண்டவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அக்கருத்தரங்கு அமைந்தது. சாகித்ய அக்காடமியார் பாரதியாருடைய பாடல்களீன வேறு மொழியில் மொழி பெயர்த்து. பிற மொழியிலுள்ளவர்களும் அனுபவிக்கத் தக்க முறையில் அதை வேறு மொழியில் வெளியிடுவ தற்கு சூடுபட வேண்டும் என்று பலர் கூறினர்கள். பாரதியாருடைய பிறந்த நாளாகிய இந்த நன்னாளில், திரு. கோபாலக் குருப் அவர்களால் பாரதியாருடைய பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டு, வெளியிடப்படு கிறது. இதில் நான் கலந்துகொள்வதில் அளவுகடந்த மகிழ்ச்சி அடைகிறேன். திரு. கோபாலக குருப் அவர் களுக்கு மலையாளம் மட்டுமல்ல, தமிழும் தெரியும். இப்போது பாரதியாருடைய பாடல்களீன மொழிபெயர்ப் பதில் பாடல்களிலுள்ள அசல் கருத்துக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லாமல் இந்த மொழிபெயர்ப்பை ஆக்கி யிருக்கின்றார்கள். மொழிபெயர்ப்பைப்பற்றியும் திரு. ஜியார்ஜ் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழுக்கும் மலையாளத்திற்கும் இருக்கின்ற ஒற்றுமையைப்பற்றியும்

சூடிப்பிட்டார்கள். அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மொழிபெயர்க்கக்கூடிய ஆற்றல் பல கவிஞர்களுக்கு இருக்கிறது. எல்லோரும் எல்லா மொழிகளிலும் எளிதில் மொழி பெயர்த்துவிட முடியாது. ஒரு பேச்சை மொழிபெயர்ப்பது என்பதே மிகவும் கஷ்டம். அதற்குப் பிரத்தியேகமான ஒரு ஆற்றல் வேண்டும். சீராக எல்லா மொழிகளிலும் வல்லுனர்களாக இருந்தால்தான் மொழிபெயர்க்க முடியும். பல நூல்கள் சிறந்த முறையில் மொழிபெயர்ப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் நமக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. மலையாளத்தைப் பொறுத்தவரையில் மலையாளத்திற்கும் தமிழுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்று நான் சொன்னால் தமிழ் அறிஞர்கள் என்னை குறை கூறமாட்டார்கள் என்று நம்புகிறேன். மலையாள அறிஞர்களும் இதற்காக வருத்தப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எழுத்து அளவில்தான் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. எழுத்துத்தான் புரியாதேதவிர பேசினால், தமிழ் தெரிந்தவர்கள் சீக்கிரம் புரிந்துகொள்வார்கள். அதே மாதிரிதான் தமிழில் பேசினால் மலையாளிகளும் சுலபமாக புரிந்துகொள்வார்கள். இரண்டு மொழிகளிலும் பேசினால் ஒன்றுக்கொன்று கஷ்டம் இருப்பதாக சொல்லமுடியாது. கொண்டு வருகிறது. முதலாவதாக இருந்த மலையாளம் தமிழாகத்தான் இருந்திருக்கிறது. ஆனால் இப்போது எந்த மொழியை எடுத்துக்கொண்டாலும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

இந்த நிலைமையில் திரு. கோபாலகுருப் அவர்கள் பாரதியாருடைய கவிதைகளை மலையாளத்தில் சிறப்பாக மொழிபெயர்த்து அமைத்திருக்கிறார்கள் என்றால், அதைக்கேட்டு நாம் எல்லாம் மகிழ்ச்சி அடைகிறோம். நமக்கெல்லாம் அவற்றைப் படிக்கத் தெரியாது என்றாலும். திரு. ஆர்காம் அவர்கள் இந்தக் கவிதைகளைப் படிபுனு நாம் அதையெல்லாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை. சாகித்ய அக்காடமியார் புரிந்துவருகின்ற நற்பணிகளில் மகத்தான சாதனைகளில் ஒன்றாக மலையாள மொழியில் திரு. கோபாலகுருப் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் பாரதியார் கவிதைகளே பாரதியாரின் பிறந்த நாள் கொண்டாடும் இந்த நன்னாளில் வெளியிட்டிருப்பதற்கு நான் என்னுடைய பராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கவிஞர் கோபால குருப் அவர்களுக்கும், தென்மண்டல சாகித்ய அக்காடமியருக்கும் உங்கள் அனைவருடைய சார்பிலும், என் சார்பிலும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி நான் வெளியிட்டார்கள்!

அதன்பின் அறிஞர் ஆர்காம் அவர்கள் மலையாள மொழியைப்பிறிவிருந்து சில பாடல்களைப் படிக்காட்டினர். இதைத் தொடர்ந்து கவியரங்கம் ஆரம்பமாகியது.

கவி அரங்கம்

திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையுரை

பாரதி பிறந்த நாள் விழாவின் மூன்றாவது நாளாகிய இன்று, இப்போது கவி அரங்கு நடைபெற இருக்கிறது. இதில் கலந்துகொள்வதற்கு பல புலவர்கள், கவிஞர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் எனக்கு என்ன இடம்? இவர்கள் மத்தியில் நான் தலைமை வகிப்பது என்ன? புலவர்கள், கவிஞர்கள் எல்லாம் கலந்துகொள்ளும் இதில் நான் தலைமை வகிக்கிறது என்ற்ல் அது மிகவும் பொருத்தமற்ற காரியம்தான் என்பதை நான் உணராமல் இல்லே. பெரிய பெரிய கூட்டங்களில் எல்லாம் பேசுகிற பழக்கம் இருந்தபோதிலும்கூட, இம் மாதிரியான கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்கு எனக்கு, கூச்சமாகத்தான் இருக்கிறது. நீங்கள் எல்லாம் உட்கார்ந்திருக்கின்ற இடத்தில் நான் இதற்குத் தலைமை ஸ்தானம் வகிப்பது, அதிலும் இந்த கவி அரங்கத்திற்குத் தலைமை ஸ்தானம் வகிப்பது மிகவும் அறிவீனம் என்பதை நன்கு உணருவேன். புலவர் சுந்தரம் அவர்கள் நான் ஏதோ கல்வி அமைச்சராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்கள். அதை நான் மறுக்க வில்லே. ஆனல் நான் கவிஞனுக இருந்து அமைச்சராக வரவில்லே. இனிமேல் உங்கண்ப்போல் கவிஞனுகிவிடலாம் என்கின்ற துணிவும் எனக்கில்லே. அமைச்சராக இருப்பதற்கு பெரிய கவிஞனுக இருக்கவேண்டும் என்பதில்லே. அதிலும் கல்வி அமைச்சராக இருப்பதற்கு கல்வியில் மிக சிறந்தவனுக இருந்தால் தான் முடியும் என்பதில்லே. எனக்குப் போதிய தமிழ் அறிவு இல்லே என்று ஒரு பத்திரிகை கூறிற்று. ஒரு சின்னப் பத்திரிகை தான். அதை நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கின்றேன். எல்லாவற்றையும் எல்லோராலும் படித்துவிடமுடியாது. உலகத்தில் எல்லோரும் எல்லாம் படித்துவிட முடியாது. ''கற்றது கைமண்ணளவு, கல்லாதது 'உலகளவு'' என்கின்ற வாக்கை நாம் நன்றாக உணர்ந்திருக்கின்றோம். இந்த நிலையில் நான் கல்வி அமைச்சராக இருக்கிறேன் என்றல், கல்வியில் மிகச் சிறந்தவன் என்ற வகையில் அல்ல. கல்வியை நாட்டில் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தோடு தான்—அந்த ஆர்வத்தோடு தான்—நான் கல்வி அமைச்சராக இருக்கிறேன். அந்த முறையில் தான் நான் தொண்டாற்ற விரும்புகிறேன். ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். அது தவறுதலாக இருந்தால் அதை மன்னிக்கக் கோருகிறேன். நம் நாட்டில் ''நாம்தான் படிக்க வில்லே, நாம் தான் அறிவற்றுப் போய்விட்டோம், இனி மேல் நம் குழந்தைகளாவது நல்ல முறையில் கல்வி பெற வேண்டும்'' என்று பல ஆயிரக்கணக்கான மக்கள் இன்றைக்கு விரும்புகிறர்கள். அதுமட்டுமல்ல, பலமிராகளில் கல்வியை துணிவோடு கற்கவேண்டும். முக்கியமாக தமிழ் மொழி மிகவும் எளிமையான மொழி. பாரதியார் அவர்கள் ''யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடியிருக்கிறார்கள். அதை நாட்டுக்கெல்லாம் பரைசாற்றினுர். அவர் ஒரு மொழி மட்டும் கற்கவில்லே. அந்த அளவில் நாம் நல்ல முறையில் படிக்காவிட்டாலும் நம் குழந்தைகளாவது நல்ல முறையில் படிக்க வேண்டும். பொதுவாக நாட்டில் எல்லோரும் நன்றாகப் படிக்க வேண்டும். அதற்கான வழிவகைகளே செய்ய வேண்டும். அந்த முறையில் ஓளவு, அமைச்சராக இருந்து தொண்டு செய்ய முடியும் என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகிறேன். அப்போர்ப்பட்ட ஆர்வத்தோடு தான் இதலும் நான் பங்கெடுத்திருக்கிறேன்.

மேலும் இன்று பாரதியாருடைய 81-வது பிறந்த நாள் விழாவை நாம் கொண்டாடுகிறோம். இங்கு கூடியிருக்கிற புலவர் பெருமக்களாகிய நீங்கள் எல்லாம் பாரதியாரின் வழி வந்தவர்கள். சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னல் கடற்கரையில் பாரதியாரின் குரலே கேட்டு உணர்ச்சி அடைந்திருக்கிறேன். அதே உணர்ச்சியை இன்று நான் உங்கள் முன்னிலையில்

உணருகிறேன். பாரதியின் குரலைக் கேட்டு 40 வருடங்களுக்கு மேலாயிற்று. இன்றைக்கு புலவர்கள், கவிஞர்கள் இவர்கள் எல்லாம் இங்கு கூடியிருப்பதைப் பார்க்கும்போது, பாரதியாரைப்பார்ப்பது போன்ற உணர்ச்சியே ஏற்படுகிறது. இதை நான் அரியதொரு வாய்ப்பாகக் கருதுகிறேன். அந்த அளவில் இந்த கவியரங்கு தொடங்குவதற்கு முன் சில வார்த்தைகள் மட்டும் சொல்ல முற்படுகிறேன்.

பாரதியார் வாழ்ந்த காலம், பாரதியார் கவிதைகள் இயற்றிய காலம் நேற்று அடமைப்பட்டிருந்த காலமாகும். அடிமை வாழ்கையில், நாம் சுதந்திரிமின்றி ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இருந்த காலமாகும். அந்தக் காலத்திலே பாரதியார் தோன்றினார். அந்தக் காலத்திலே மக்களுக்கு ஒரு புதிய எழுச்சியை உண்டாக்க வேண்டுமென்ற கருத்தோடு பாரதியாரை பரம் பொருள் தோற்றுவித்தார் என்று கூறலாம்.

பாரதியாருக்கு எல்லாம் பற்றும் உண்டு. அவரிடத்தே நாட்டுப் பற்று, மொழிப் பற்று, ஏன் கடவுள் பற்றுக்கூட இருந்தது. மொழியிலே ஒரு திடமான நம்பிக்கை. 'தமிழ் மொழியைப் போல் இனிதான ஒரு மொழி காணேன்' என்று நம்பிக்கையோடு கூறுகின்றார். நாட்டிலேயும் அதேபோன்று ஓர் நம்பிக்கை. 'கொட்டு முரசு' என்று சொன்னதோடு மட்டுமல்லாமல், 'ஜெய பேரிகை கொட்டடா' என்று விடுதலை அடைவதற்கு முன்னாலேயே, விடுதலை அடைந்துவிட்டோம். என்ற நம்பிக்கையோடு பாடினார். அவர் ஒரு பெரிய தீர்க்க தரிசியாகவும் விளங்கினார். அவர் சொன்னது கற்பனையல்ல தான் நிதர்சனமாகக் கண்டதையே அவர் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட சிறந்த கவிதைகளெல்லாம் அவர் இயற்றியிருக்கிறார். அதோடு, அப்போது காந்தியடிகளின் தலைமையும் ஏற்பட்டுவிட்டது. பாரதியார் காந்தியடிகளை வாழ்த்தினார். அவரது அன்பு நெறியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொன்னார்.

அதேபோன்ற கவிதைகளை நாம் இப்போதும், அதாவது அக்டோபர் 20ம் தேதியிலிருந்து கடந்த இரண்டு மாதங்களாக நமது கவிஞர்கள் தங்கள் தங்களுக்கு இயன்ற அளவில் இயற்றும் எத்தனையோ அற்புதமான கவிதைகளை நாம் அவ்வப்போது பத்திரிகைகளில் பார்க்கின்றோம். இப்படிப்பட்ட கவிதைகள் சமாரியாக வந்துகொண்டே இருக்கின்றன. அதோடு, தேச பாதுகாப்பிற்காக சின்னஞ் சிறுவர்கள் முதல், பெரியோர்கள் வரையிலே எல்லோரும் சேர்ந்து தங்களால் இயன்றவரை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தங்களிடம் உள்ள பொன்னெல்லாம், பொருளெல்லாம் வாரிக்கொடுத்துக்கொண்டு வருகின்றார்கள். அவர்களிடையே பெரிய மழை பெய்து போன்ற ஓர் உணர்ச்சிபெருக்கைப் பார்க்கின்றோம். இப்போதுள்ள நெருக்கடியான நிலைமையில் பெரும்பங்காற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உங்களுக்கும் இதிலே பெரும் பங்குண்டு. அத்தப் பொறுப்பை உணர்ந்து, பணியாற்றி, மக்களிடத்தே எழுச்சியை முற்பட்டிருக்கிறீர்கள். அந்த காலத்திலே கவிஞர்கள் எப்படி மக்களிடத்திலே புரட்சிகரமான கருத்துக்களை நமக்கு அளித்திருக்கிறார்களோ, அதே போன்று இங்குள்ள கவிஞர்களும் தங்கள் கருத்துக்களிலும் உறுதியுடன் இருப்பார்கள் என்று நம்புகிறோம். பாரதி கண்ட அதே வழியை நாமும் கடைப்பிடிக்கவேண்டும். புல வர்களாகிய நீங்களும் அதே வழியைப் பின்பற்றுவீர்கள் என்று நம்புகிறேன். அத்தகைய வழியிலே மேலும் நமக்குத் தேவையான கவிதைகளை இங்குள்ள புலவர்கள் இயற்றி அளிப்பார்கள் என்று நம்புகிறேன்.

என்னைப் போன்றார்க்கு கவி அரங்கிலே உட்பிலே என்று சொன்னேன். ஆனால் உங்களை பெல்லாம் இந்த நன்னாளிலே தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்படுவதைக் கருதியே, இங்கே நின்று இந்த சில வார்த்தைகள் பேசலாம் என்று ஒப்புக்கொண்டேன். தவிர, என்னைப் போன்ற பாமர மக்களிடத்திலே உங்களுக்கும் அக்கறை இருக்கிறது. நீங்களும் எங்களுக்கு ஏற்ற கவிதைகளையே வழங்குகின்றீர்கள். மக்களின் நிமித்தமாக, அவர்களை உயர்த்தவே நீங்கள் கவிதை களை இயற்றுகின்றீர்கள். அதுதான் பாரதியாருடைய நடையும்கூட. அதுதான் பாரதியருடைய கவிதை யின் சிறப்பு.

இன்றும் பாரதியர் நம்முடன் இருந்திருக்கலாம். இன்று அவருடைய 81வது வயது. அப்படி ஒன்றும் அதிக வயதில்லை. ஆனால், நமக்கு அந்த பாக்கியம், அதிர்ஷ்டம் இல்லை. கவிகளில் பலர் அற்ப ஆயுளிலேயேநம்மை விட்டு அகன்று விடுகிறார்கள். அப்படி அவர்கள் மறைந்தாலும், அவர்கள் கவிதைகள் நமக்கு சிந்தனையை ஊட்டி, அவற்றைப் பின்பற்றக் கூடிய வகையிலே சிறந்த வகையிலே அமைத்து நாட்டிற்கு அவர்கள் பெயர் நிலைத்திருக்க விட்டுச் சென்றிருக் கிறார்கள். அவர்கள் எல்லாம் சிறு வயதிலேயே தான் மறைந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கவிதைகள் நிலைத்திருக்கிறது இன்றைக்கும். அதே மாதிரிதான் நம் நாட்டிலும் ஞானசம்பந்தர், ஆழ்வார்கள் போன்றோரும் சிறு வயதிலேயே மறைந்திருக்கிறார்கள். பாரதி இளமையிலேயே நம்மையிட்டுப் பிரிந்தார். ஆனால் அவர் விட்டுச் சென்ற கவிதைகள் சிறந்ததாக விளங்குகின்றன. அவர் 39 வது வயதிலேயே மறைந்து விட்டார். ஆனால் சிறந்த சக்தியை அவரது பாடல்களிலே அளித்திருக்கிறார். அந்த வழியிலே நாம் சென்று, மேலும் மேலும் உயர்வையே வேண்டும். அத்தகைய உணர்ச்சியும், உற்சாகமும், உறுதியும் நமக்கு ஏற்பட வேண்டும். அத்தகைய நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது. மேலும், உங்களிடம் போன்ற புலவர்கள்தான் இத்தகை நெருக்கடியான சமயத்திலே மக்களுக்கு தன்வாழ்வு காட்டி, நிரந்தரமான அமைதியை நாட்டிலே நிலவச் செய்யமுடியும். தான் அதை உபசாரமாகச் சொல்லவில்லை. அத்தகைய மகத்தான பங்கு உங்களுக்கு உண்டு. இன்று பாரதியாரின் 81வது பிறந்தின விழாவை இதையிட இன்னும் சிறப்பான முறையிலே கொண்டாட முடியாது. உங்களைப் போன்ற புலவர்கள், கவிஞர்களே வைத்துக்கொண்டு சிறந்தமுறையிலே இப்போது கவி அரங்கு நடக்க இருக்கிறது. இப்படிப்பட்ட கவி அரங்கதைக் காண மக்கள் திராளாக கூடியிருக்கிறார்கள். கிராமமாக இருந்தால், இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தை எளிதில் கூட்டிவிடலாம். ஆனால் சென்னை நகரத்திலே, அதுவும் விடுமுறை அல்லாத ஒரு தினத்திலே இப்படி மக்கள் கூடியிருப்பது மிகவும் ஆச்சரமாகும். அப்படி மக்கள் உங்களை வரவேற்கின்றார்கள் என்றால், அவர்கள் வாழ்விலே நீங்கள் எல்லாம் கொண்டுள்ள அக்கறையே ஆகும். உங்களுக்கு அவர்களிடத்திலே அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் உணர்த்திருக்கிறார்கள்.

இந்த விழாவிலே கலந்துகொண்டு, உங்களை பெல்லாம் தெரிந்து கொண்டதிலே தான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இப்போது கவி அரங்கு தொடங்குவதற்கு முன்பு, எனக்கு இந்த வாய்ப்பு அளித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்கு என்பாராட்டுதலே தெரிவித்துக்கொண்டு, நடக்க இருக்கும் கவி அரங்கு சிறப்பான முறையிலே நடக்கவேண்டுமென்றும், இதிலே பங்கு பெறுகின்ற வர்களுக்கும், ஏனையோருக்கும் எனது நல்வாழ்த்துக் களைக் கூறி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். டி. சுந்தரம் அவர்களின் வரவேற்புரை

ஆன்ற தமிழ்க் கவியரசன் ஆஸ்தானத்தை
அணி செய்து வீற்றிருக்கும் கவிச்செல்வங்காள்!
ஈன்ற தவத் தாயெமது தெய்வ நாட்டை
எந்நாளும் காக்கின்ற இளஞ்சிங்கங்காள்!
தோன்றியெழும் தினம் புதிதாய் சூர்யஜோதி
திசையெங்கும் கடல்வெள்ளம் பாய்வதே போல்
சான்றோரின் சங்கம் போல் சத்தியம் போல்
தவக் கவிஞன் திருநாமம் வாழி வாழி.

சுப்ரமண்ய பாரதியார் என்ற ஜோதி
செங்கதிர் போல் செந்தமிழ் வான்சிகரம் தோன்றி
நற்புதுமை மின்சார ஒளி வெள்ளத்தை,
தந்தமிழின் இனிமையிலே சேர்த்தான்! ஆங்கே,
வில்லுறைத்துக் கணப்பேரதில் இலக்கைத் தாக்கும்
வானவெளி வீசைகள் எனக் கவிகள் கொட்டிக்.
கொல்லுவித்த கொடுமை எனும் அடிமைப் பேயின்,
குற்றுயிரும் இற்றுவிடப் போர் தொடுத்தான்!
பாரத மாதேவியின் கைப்பிணி விலங்கைப்
பார்த்தவனும் பதறினன்—கலீமான் ஒன்று
பேரதிர்ச்சி கொண்டோடிப் புலியைத் தாக்கும்
புது வீரம் கொண்டதென உணர்ச்சி, மானம்
பாரெங்கும் பெருக்கினன், பயத்துச் செத்தார்;
பந்தத்தில் கட்டுண்ட பேடிக் கும்பல்;
பரதேசி வாழ்க வென்ற பொய்யர் கூட்டம்;
பிணத்தினும் பேய் மனிதப் புலியர் கூட்டம்;
மடல் வாழ்த்து மதுபானம் மங்கையின்றி,
மற்றெதுவும் அறியாத மன்னர் கூட்டம்!
குடல் வெந்துக் குலை நொந்து வெம்பித் சாய்ந்த
சூடிமக்கள் கொடியநிலை, இவற்றைக் கண்டான்!
மதிகெட்ட மண்ணந்த மக்கள் தம்மை
மனிதருல மணிகள் என மாற்றப் பார்த்தான்
"மாவலிமைத் தெய்வமெலாம் தமிழின் பாட்டால்,
மனமகிழ்ந்து கேட்டவரம் தருவதுண்டேல்
எனதெனது பைந்தமிழின் வீரப்பாட்டால்
எழுச்சி இங்கே தோன்றுது! என்று கேட்டான்.
கருக் கொண்ட நாட்டின்பின் தெய்வ வேகம்
கதிரகக் கனலாகக் கொதித்த தங்கே
உருக் கொண்ட சிற்றடிமைக் குட்டை வற்றிச்
செயல் என்னும் ஆவியதாய்ப் பறந்து மேலே
பருவத்தே கூடிற்று புரட்சிக் கொண்டல்
கூட்டத்தில் நாட்டு வெறி குமுறக் கேட்டோம்!
கோடையிடி கோடையிடி கொட்டத் தாளம்
தட்டாத தடுங்காத கலித் தோட்டத்தில்
கொட்டியது கொட்டியது கவிதை வெள்ளம்!
கிட்டியது கிட்டாத வானச் செல்வம்!

பற்றியது பற்றியது புரட்சி யாகம்!
முற்றியது மூண்டது நற்கரும யோகம்!
இத்தகைய வீர ஒளிக் கவிதை தந்தான்
எந்தமிழர் மானத்தைக் காக்க வந்தான்
சக்தி மிகு மொழி என்றுல் அதன் வீரத்தால்
சொத்தை மன மனிதர் தமை உயர்த்த வேண்டும்
இத்தரையே எழுச்சியுற எட்டுத் திக்கும்
எமது உயிர் முரசொலியைக் கொட்ட வேண்டும்
அத்தகைய வித்தை மிகு தமிழ் வேதத்தின்
வித்தான சக்தியவன் ஞானச் சித்தன்!
இந்த புது நூற்றாண்டின் இதய வேந்தன்!
சந்தமிகு பாரதியின் செந்தேன் சாரம்!
தித்திக்கும் கவிதைகளைக் குயில்கள் பாடும்
தத்தி வரும் கிளிக் கூட்டம் தமிழ்தான் பேசும்!
சித்திரமாம் செந்தமிழைக் குழந்தை காணும்
யுத்த ஜெய பேரிகையை வீரர் கேட்பார்!
வெந்து மர வீரரைப் போல் எரிந்த நம்மை
வித்தை மிகு வீணைகளாய் மீட்டி விட்டான்!
பாஞ்சாலி சபத்தைக் கேட்டு விட்டால்
பேடி மகன் கூட பல பீமனுவான்
மாஜினியின் ஆணையிது மனம் புகுந்தால்
மாருத துரோகிகளும் மனிதராவார்!
ஞானரதம் தனிலேறி ஓட்டி விட்டால்
நமது மனம் கலிமதியை ஓடமாக்கும்
பச்சை மயில் முருகன் இசைப் பாட்டில் அந்த
பாரதியை அழகனே தழுவிக் கொள்வான்
பாரதப்போர் முடித்திட்ட வீரக் கண்ணன்
பாரதியார் வீட்டிலே வேலைக்காரன்!
பாப்பாவின் பாட்டினிமை கேட்டுவிட்டால்
பெற்றறியா மலடிகளும் அன்னையாவர்

(இவ்வாறெல்லாம்)

பாரதியின் புகழென்னும் சாகரத்தில்
பல கப்பல் ஓட்டுகிறோம் சுதந்திரத்தின்
போருக்கு வீரத்தின் வித்தி வருத்த
தளபதிக்கு வீர விழா வாழ்க வாழ்க!

முரசு - முழங்குது

★

கொத்தமங்கலம் சுப்பு



திகிட திகிட தக்குந்த திக்குந்த
தக்கிட்ட திக்கிட்ட தகிர்த்ததோம்

முரசு முழங்குது கேளுங்கோ — மூலே
மூடுக்கிலிருப்போரும் வாருங்கோ
வரிசை வழங்குது வாங்குங்க — நெஞ்சில்
வலிமை இல்லாதவர் தூங்குங்க

தோலாலே கட்டிய முரசுலே — கை
கோலால் அடிச்சு முழக்கலேலே
பாலாடை கட்டிப்போல் படிய — தமிழ்
பாரதி பாட்டு முழங்குது

தாளம் தவறுமல் சீருடன் — வீர
தந்திங்கிணத்தோம் ஒன்று வைக்குது
கானமும் பேரி முழங்குது — அள்ளி
கன்னித் தமிழை வழங்குது

ஜனஜனவென்று ஜமாயிக்குது — இந்த
சத்தமே பகைவரை மாய்க்குது
கணகணகணவென்று தட்டுது — அதில்
கவிதைமழை வந்து கொட்டுது

வீரநடை பல போடுது — லய
விஸ்தாரங்கள் பலகூடுது
சூரர்கள் நெஞ்சத்தை சாடுது—கண்டு
சூ—என்—லாயின் படைஓடுது

இமயமலேதொட்டு குமரிக்கடல் — நம
தெல்லேதக திக தோம்
எல்லேயிலே ஒரு கல்லேப்பெயர்த்தாலும்
தொல்லேயென்றறிவிப்போம்.

ஒன்றுபட்டாலுண்டு — வாழ்வென்று டும்டும்டும்
ஓசையிடும் முரசு.
ஒற்றுமையாலின்று வெற்றி பெற்றுல் இன்றும்
ஓங்கிடும் குடியரசு

பலி மலேக்குள் நரி நுழைந்து
பகைவன் என்ற உருவில் வந்து
புவிகிடக்கும் கிடையில் ஆடுதேடுது — நாட்டின்
புதிய ஒற்றுமையைக்கண்டு ஓடுது

தனிமறந்து பணிபுரிந்து
தகுதிதந்த எனநடந்து
தகுதிகொண்டு வெற்றிமாலே சூடுங்க
தாரத்தின்மேல் ஆசையுள்ளோர் ஓடுங்க

நெஞ்சினேப் பிளந்து நல்ல
நீதியைத்திணித்து அந்த
வஞ்சகர்க்குப் புத்திசொல்ல வாருங்க
வலிமை கொண்டபேர் படையில் சேருங்க

வளவளத்த பேச்சை விட்டு
பளபளத்துப்பாக்கி ஏந்து
களபலிக்கு எல்லேக்காளி கேட்கிருள் — நமது
கருத்தில் பக்தி இருக்குதான்னு பாக்குருள்

பேராட வந்துபுகுந்த அகந்தையை
வேரோடு வெட்டுங்க டமடமடம்
நீராவிப் போரும் உடம்பைசுமக்காமல்
வீராதிவீரன் என்றுதல் கடன்

அருமறை தெரிந்த காந்தி
நெறிமுறை நடந்துவந்த
அரியபாரதத்தின்மீது தாக்கினுன்
அஞ்சுமூனு ஆண்டுக்குள்ளே
பிஞ்சுவிட்டு பழுக்கக்கண்டு
வஞ்சகக் கண்ணுறு சீனன் நோக்கினுன்

ஒருமுறை தயாரிவில்லே
உண்மை சொல்ல வெட்கமில்லே
மறுமுறை புகுந்து சீனன் தாக்கினுல்
திருமுறைகள் மீது ஆணே
தேசபக்தி மீது ஆணே
தெய்வத்தின் மீதாணே
தீர்த்துக் கட்டுவோம்

மேருமலேமேலே பாரதம் என்று .... நம்
பேர்வெட்டி இருக்குதையா
விக்னவிநாயகன் கைக்கொம்பினுலன்று
வெட்டியிருக்குதய்யா.

ஊருக்கு காகிதம் எழுதறபோது நாம்
'உ'னுவைப் போட்டுவிட்டு
உயிரைக்கொடுத்து அதைக் காக்காவிட்டால் - இந்த
உலகம் சிரிக்குமய்யா.

நேத்தைக்கு கார்த்திகை
நெய்விளக்கேத்தினேம்
நிலத்தில் விழுந்தெழுந்தோம்— அவன்கையில்
சாத்திய வேலே மதிக்காவிட்டால் — கந்த
சாமி சிரிக்குமய்யா

வீரகோதண்ட ஸ்ரீராமபிரான் படம்
வீட்டுக்குவீடிருக்கும் — அது
வேகவைத்தண்டல் கடலேக்குத்தானென்றல்
வீரம் சிரிக்குமய்யா.

எழுத்தாளன்

அன்னையரசாக்தி தன்னைக்கொடுத்தது
அந்த இமயமலை — அது
தன்னைக்காக்காமல் நாம் திண்ணியில்தூங்கினால்
அன்னை சிரிக்குமடா.

செத்தபிறகு நாம் கைலாயம் போவது
அத்தனை நிச்சயமா — இன்று
சீனப்படை வெட்ட கைலாசம் போகலாம்
சேர்ந்து புறப்படுங்க.

சத்தியப் போர்

— சுரபி



அமைதிக் கிலக்கணமாம் அமைச்சர் அவர்கட்கும்
பண்பின் நிலைக்களமாம் பாவாணச் சோதரர்க்கும்
செந்தமிழைத் தந்திறத்தால் சிரஞ்சீவி யாக்கிடவே
வந்தோர் வரிசையிலே வந்துதித்த வள்ளலுக்கு
இறந்த நாள் கொண்டாடி மறந்திருந்தோர்
கண் திறக்கப்
பிறந்த திருநாளைப் பெருநாளாய்க் கொண்டாடி.
என்றுமுள தென்தமிழன் எய்தினனே ரென்பதெனப்
பாரதிர முழக்கமிடும் பக்தர் குழாமதற்கும்
வெள்ளித் திரையிருக்கத் துள்ளிவரும் பந்திருக்க
உள்ளத்தை அள்ளுமிடம் ஒரு யிரமிருக்க
வல்லெழுத்தும் மெல்லெழுத்தும் வைத்தடுக்கிச்
சீராக்கிச்
சொல்வில் சுவைகண்டு சொக்கிடுமப் பாவிகளின்
பாட்டிலே நெஞ்சைப் பறிகொடுக்க வந்திருக்கும்
பித்தர்க்கும் பத்தர்க்கும் பெரியோர்க்கும் நமஸ்காரம்.
நமஸ்கார மென்பதனை இனக்கார மாய்ப் பேசும்
சமத்கார முடையனதித் தமிழருக்கென் கும்பிகைள்
அன்பர் அகிலனது ஆக்கினியை மேற்கொண்டு
உடன்பிறந்த சோம்பலினை உதறி எறிந்துவிட்டு
வறண்டிருந்த நெஞ்சத்தைச் சுரண்டிச் சுரக்கவிட்டுக்
கல்லாய் உறைந்திருந்த கற்பனைக்குச் சூடேற்றி
நீண்டநெடு நாளாக நிம்மதியாய் மூலையிலே
தூங்கிக் கிடந்து துருப்பிடித்த மைக்குழலைத்
தேடி எடுத்துத் தெம்பூட்டித் துருவெடுத்துத்
தீட்டித் தினவேற்றிச் சித்தை பிழிந்தூற்றி
எழுத்தை உருவாக்கி எண்ணத்தைக் கோத்தெடுத்துச்
சின்னச் சமாக்கிச் செம்பாகக் கவிமலர்கள்
பூத்துக் குலுங்கிப் புவிமணக்கத் தேன் சொரியும்
இந்தத் திருவரங்கம் வந்துவிட்டேன் ஆசையினால்.
கன்னித் தமிழணங்கின் கைவண்ணத் தீட்டவல்ல
என்னுடைய எழுத்தெல்லாம் பொன்னென்று
[காட்டவல்ல
அன்னையவள் கோட்டைக்கு அரணு யமைந்திருக்கும்
மன்னும் இமயத்தில் சின்னதொரு பூகம்பம்
வந்ததே என்று வாயறைந்து நிற்கவல்ல
கத்தி எடுக்காமல் காலருண்டு வீசாமல்
சத்தியப்போர் செய்மினெனச் சாற்றி முழக்கவல்ல
பாரதத்தின் மேலுள்ள பாச வயிசாலே
பாய்பாய் எனப் பரித்து பாய்ந்தோடி வந்திருக்கும்
மெத்தப் புளித் தெல்லே மீறிவிட்ட மாவுக்கும்
சூத்த மாய் மலவத்தான் சூமந்தர்க் காளிக்கும்
நாற்பத்து நாற்கோடி நமஸ்காரம் என்றுசொல்லி
நாவார மனமார நன்றி தெரிவிக்க
நல்லதொரு நாள்பார்த்து நண்பமிடை வந்துள்ளேன்
ஐந்தாம் படையென்ற ஆலவட்டம் தூக்காதீர்
சித்தித்துப் பாருங்கள் முந்திடுவீர் வந்தனர்க்கு
அல்லல் சிறையுடைத்து அன்னை விலங்கொடித்து
வண்ணக் கொடியேற்றி வந்தேமா தாம்சாற்றிச்
சொர்ண முடிசூட்டிச் சுதந்தரத்தை நிலைநாட்டி
ஊனுருகி உள்முருகி உயிர்க்குயிராந் தானுருகி
ஆனந்தக் கண்ணீரில் ஆழ்ந்திட்ட திருநாளில்
சுபிக்ஷமெனும் பாதையிலே தூக்கியடி.
[வைத்திட்டோம்
காடுவெட்டி நிலந்திருத்திப் பாடுபட்டுப்
[பயிர்வளர்த்தோம்
ஆகாச கங்கையினை அணைபோட்டுக் கடலாக்கி
பூதேவி உடலமெலாம் புளகமுறச் செய்திட்டோம்
சீனன்ஞ் சிறுகுடிலில் மின்னல் விளக்கேற்றிக்
காரிருளில் கிடந்தவரைக் கண்திறக்க
[வைத்திட்டோம்
உள்ளத் திருளகலப் பள்ளித் தலம்சமைத்தோம்
ஊரெல்லாம் பேறுபெற உழவு தொழில்வளர்த்தோம்
ஆலைகள் வைத்தோம்—ஆய்வுச்
சலைகள் வைத்தோம்
மண்ணைக் குடைந்தோம்—மலை
தன்னைப் பிளந்தோம்
எண்ணை யெடுத்தோம்—கரும்
பொன்னை விளைத்தோம்
உத்திகள் கற்றோம்—நிபுணர்
உதவிகள் பெற்றோம்
புத்தம்புதுக் கைத்தொழில்கள்
நித்தம் படைத்தோம்
உப்புக்கொரு கப்பலெதிர்
பார்த்திருந்த நாம்
உப்பரிகைக் கப்பல்கட்டி
ஓட்டி மகிழ்ந்தோம்
கற்பனையில் அற்புதம்
விளைத்த கவிஞனின்
கண்டகன வத்தனையும்
கண்ணெதிர் கொண்டோம்
கனவு நனவாகக் கனிந்துவரும் வேளையிலே
செந்நெல் வயலோரம் திருட்டெலி புகுந்ததுபோல்
வந்து புகுந்துவிட்டான் வரம்பறியாச் சீனனவன்
வறண்டிருந்த பாரதத்தில் வளம் பெருகக் கண்டானே
வந்துசெல்வோர் வாயார வாழ்த்துவதைக்
[கேட்டானே
திட்டங்கள் வானத்தை எட்டுவதைப் பார்த்தானே
திக்கெட்டும் சுடர்வீசும் மக்களது ரத்தினத்தின்
புகழ்கேட்டு நெஞ்சம் பொருமி வெடித்தானே
எல்லையிலே வந்துநின்று ஏறெடுத்துப் பார்த்திட்டான்
காணுமல் கண்ட கனவாழ்வின் போதையிலே

அண்டை வீட்டுக் காரனவன் ஆசைக்கண் வீசுவதைப்
பார்த்தும்பார ராதவராய்ப் பலர்கனவு கண்டிருந்தோம்.
கோட்டைத் தலைவாசல் பூட்டைத் திறந்துவைத்து
உள்ளே புழங்கலத்தை உருட்டிப் புரட்டி வந்தோம்
பல்லா யிரங்கல்லில் பகைக்காரற்று வீசவிட்டு
அர்த்தமில்லா எல்லைகளில் அங்குலம் பிறழ்ந்ததென்று
அண்ணனெடு தம்பியர்கள் அடித்துப்
[புரண்டுவந்தோம்
வடக்கென்றும் தெற்கென்றும் வளமென்றும்
[தேம்வென்றும்
இடக்கான மோனியிலே இன்பத்தைக்
[கண்டுவந்தோம்
பட்டினி கிடந்தவரிகள் பரலுணவு பெற்றலுடன்
சத்தை மறந்திட்டுச் சட்டியை உருட்டுதல்போல்
புத்தம் புதுக்கலைகள் பொங்கிவரும் வேளையிலே
என்பாடை உன்பாடை என்று முரண்டிவந்தோம்
செப்புமொழி நூறெனினும் சிந்தனையொன் றேயென்று
இடித்துரைத்த திருவாக்கைப் படித்துக்
[கிழித்துவிட்டோம்
சாதிசமயம் பேசிச் சடுகுடுக ளாடிவந்தோம்
ஏசுந் திறங்காட்டி மீசையை முறுக்கிவந்தோம்
ஆற்றுக் கண்மோதப்போட்டோம் ஆத்திரத்தைப்
[பொங்கவிட்டோம்
ஆதார மற்ற அற்பப் பூசல்களிலே
மாதா மனங்கசக்க மயிர்பிடித்து நின்றிருந்தோம்
அப்பனவன் தேர்ந்தளித்த அண்ணன்மனம்
[புண்ணுகக்
குப்பைகளைக் கிளறிக் குதர்க்கப் புயல் வினைத்தோம்
கடிக்கும் எலும்புக்குக் காத்திருக்கும் நரிபோலக்
காத்திருந்த சண்டனவன் பார்த்து நுழைந்துவிட்டான்
சோதரனுங் எண்ணிவந்தோம் சோரனென்று
[காட்டிவிட்டான்
தோழனென்று நம்பிவந்தோம் துரோகிஎன்று
[காட்டிவிட்டான்
சீனியென்று ஆசைவைத்தோம் ஹரானிசெய்ய
[வந்துவிட்டான்
மார்க்ளீயம் பேசிவந்தோன் மண்ணுசை
[கொண்டுவிட்டான்
ஊருவது நீந்துவது ஓடுவது பறப்பதிலே
ஒன்றுவிடாக் கண்டனவன் உண்மையையும்
[விழுங்கிவிட்டான்
வஞ்சகம் பொய் அழுக்காறு மாய்மலம் போரசை
அஞ்சும்பஞ்ச சீலமென்று அணைத்துப்
[பிடித்துவிட்டான்
பகைவனுக்கு மகுள்புரியும் பாரதத்தை
[மிதித்துவிட்டான்
முக்தர்களோப் பெற்றவனின் முந்தானே பிடித்திழுத்தான்
பத்தத் தகேபடைத்தும் பண்பரியா ராக்கதன்போல்
அத்தன் தவஞ்செய்யும் அசலம் அசக்கிவிட்டான்
சகமெல்லாம் தமரென்று பகலிரவு மனதார
எண்ணிவந்த தருமன்மனம் புலன்னுகப்
[பண்ணிவிட்டான்.
சில்லறைத் தொல்லைகளில் சிண்டுபிடித்த் திருந்தவர்கள்
சீனவெடி எல்லையிலே சிடுசிடுக்கக் கேட்டார்கள்
எதிர்பாரா ஓசையினுல் அதிர்ந்து விழித்தார்கள்
அன்னைக்கு வந்திருக்கும் ஆபத்தை உணர்ந்தார்கள்
கண்ணீரால் காத்தபயிர் கருகுமோ என்னர்கள்
வர்மத்தை மறந்தார்களின் வாஞ்சையிலே
[அணைந்தார்கள்
தெற்கும் வடக்கும் திராவிடமும் காஷ்மீரும்
கறுப்பும் சிவப்பும் கதிராவள எண்ணினும்
முறுக்கிவிட்ட மீசைகளும் முடிந்துவிட்ட தாடிகளும்
நாமம் திருநீறும் நற்சிலுவை வளர்பிறையும்
கதர்துண்டும் கைத்தறியும் கால்சட்டை கிழ்ப்பாவிசும்
பாவாடைனெனுனும் பக்கத்துக் கட்டுகளும்
நவுத்திரி ரப்படையும் நடுத்தெரு நாராயணனும்
வில்லனும் ஹீரோவும் சொல்லாளர் பாடகரும்
சேவகரும் ஜட்ஜுகளும் சிறையிருந்த கைதிகளும்
பாட்டாளி முதலாளி பயங்காளி கோமாளி
எல்லாரும் இணந்தார்கள் எல்லோக்க கயிறுமுலே
காசு கொடுத்தார்கள் கட்டிப்பொன் தந்தார்கள்
வைரங் கொடுத்தார்கள் வட்டியையுந் தந்தார்கள்
வேலிநிலம் தந்தார்கள் விரியதனைத் தந்தார்கள்
தாலியையுந் தந்தார்கள் தலேகொடுக்கத் துடித்தார்கள்
வையத்தை விற்று மானத்தைக் காத்திடுவார்
மாதாவின் கண்ணில் மைகலப்பப் பாராதார்
ஆவி உடல்பொருனே அன்றை திருவடியில்
அர்ப்பணிக்க வென்று ஆணெடுபெண்
[போட்டியிட்டார்
மேருவென நிற்கின்ற தேருவுக்குக் கைகொடுக்க
ஊரெல்லாம் புறப்பட்டு ஒன்ருய்த் திரண்டுவிட்டார்.
கண்டார்கள் குண்டர்களும் கைகட்டி நின்ருர்கள்
கெல்லிக்கார் மூட்டையென்று நினைத்துலுக்க
[வந்தவர்கள்.
வல்லாளர் ஒற்றுமையால் வாயடைத்து நின்ருர்கள்
பன்றி யெனநினைத்துப் பசிதீர்க்க வந்தவர்கள்
ஹரா வதம்தரிக்க அதிர்ந்து விழுந்தார்கள்
வேடிக்கை யாய்ப்பாம்பை விழுங்க நினைத்தவர்கள்
கோடானு கோடிடலே கொண்டு படமெடுக்கும்
சேடனெனக் கண்டு ஜீவன் இழந்தார்கள்
நிறுத்தினும் போரென்ருர் நிகழ்த்துவோம்
[பேச்சென்ருர்.
கருத்து விளங்காத கண்டிஷன்கள் கேளென்ருர்.
சத்யாயு தந்தரித்த உத்தமராம் பாரதர்க்கு
இத்தரையில் ஈடாளுர் எவருமிலே யென்ருலும்
வஞ்சத்தில் சீனனோநம் மிஞ்ச முடியாது
தாரணியில் உள்ளவர்கள் தடியெடித்து வந்ததனைக்
கண்டு கதிகலங்கிக் கால்வாரிப் போவானே
சிக்கிவிட்ட சிற்றெறும்பைச் சீரணித்துக் கொள்வானே
விக்கிவிட்ட குன்றனைத்தும் சுக்கிவிட்டுப் போவானே
உண்ட இனிப்பாற ஒருநக்கம் போட்டுவிட்டு
மீண்டுமொரு வாய்கொள வெறிநாய்போல்
[வருவானே
திட்டமெது வானலும் திரும்பி யவன்வந்து
வட்டமிட்டு இனியொருகால் வாலாட்ட முடியாது
ஆரும் திகிலில்லே அபியாயப் பகையில்லே
என்ற நினைப்பினிலே ஏமாந்திருந்துவிட்டோம்
உறவோடு பகையாடி ஒய்ந்திருந்த மகதரியை
உசுப்பி எழுப்பிவிட்டார் உலகிர வைத்துவிட்டார்.
சீனனல்ல இனிஎந்த சூனன்கண் வீசியனும்
நம்பிக்கை என்ற நும்பிக்கையால் தூக்கித்
தருகண் பொருகிவருந் தந்தத்தால் பந்தாடிச்
சூலா யுதம்போலும் வாலால் நெறிபுடைத்து
நாலு திசையிலுள நண்பரது நல்லெண்ணக்
காலால் மிதித்துக் கருத்தில் ஒளிந்திருக்கும்
வீணுன ஆசையினே வீரட்டிடுவோம் நிச்சயமாய்
பேராசை யாலே பேணி வளர்த்தபடைத்
தினவு பொறுக்காமல் தினறிவந்த வீணனவன்
ஆசிய ஜோதியெனும் அக்கினியில் கால்வைத்து
வெந்து கருகி வீரைக்கவழி தேடிவிட்டான்
பாரதத்தின் நெஞ்சில் பற்றிப் படர்ந்துவந்த
பொல்லா விஷத்தினையும் பொசுக்கித்
[தொலைத்துவிட்டான்
வீட்டுக்கு ஒன்று வீம்பாய்ப் பறந்துவந்த
போட்டிக் கொடியையெலாம் பொக்கென்
[றிறக்கிவிட்டான்

வீரிக்கு நாலான சாதீயக் கட்சிகளே
வாதுக்கு வழியின்றி வாடி மடியவைத்தான்
வாரீந்தகைகொண்டு தூவி வர்மம் பயிரைக்கும்
வம்பரிமகா சபைகளோயும் வலிந்திழுத்துப்
[பூட்டவைத்தான்

தேருவுக்கு மாருக நிந்தனியைச் சிந்திவந்த
தேயலெலாம் அவர்புகழை வாயாரப் பாடவைத்தான்
ரீசசிலே கொடிகட்டிப் பேச்சிலே பகைவளர்க்கும்
கூச்சலுக்குக் கைதட்டக் கும்பலில்லே என்றுவிட்டான்
இம்மென்குல் போராட்டம் ஏனென்குல் ஊரோட்டம்
என்கின்ற விஷஜ்ரத்தை இம்மியிலே
[தீர்த்துவிட்டான்

மூதலாளி தொழிலாளி இருவரையும் மோதவிட்டுச்
சிந்துவதைக் குடிக்கின்ற தந்திரத்தை மாய்த்துவிட்
டான்
உண்ணும் உணவதனே ஒளித்துவைத்த புண்ணியரை
ஊருக்கு என்று வாரி வழங்கவைத்தான்
ஊரக்காவில் பொன்னளந்த மறைத்துவைத்த பேரை
யெலாம்
டிடிப்பிச்சை யெடுத்துக் கொடையளிக்க வைத்து
விட்டான்

கதிரைக் குழலதனிக் காமன் கணையதனேச்
சுற்றிவரும் வண்டதனேச் சோம்பேறிக் குயிலதனேப்
பாடிப் பரவசத்தில் நாடி இழந்துவந்த
பாணரெலாம் போர்ப்பரணிப் பாடி முழக்கவைத்தான்
ஏட்டை மறந்து எழுத்தின் சுவைமறந்து
பாட்டை மறந்துவிட்ட கூட்டுக் குயில்போல
மாநிலகின் வரிசையிலே மனமுவந்து குந்திவிட்ட
அப்பாவிச் சூரபியையும் அரங்கேற வைத்துவிட்டான்

எந்தப் பகுதியிலே எக்குலத்தில் பிறந்தாலும்
எந்தொழிலைச் செய்தாலும் எம்மொழியை ஆண்டாலும்
எல்லாரும் பாரதத்தாய் ஈன்றெடுத்த கண்மணிகள்
என்கின்ற உண்மையிலே இதயத்தில் ஊன்றிவிட்டான்
கல்லுஷங்க ளத்தனேக்கும் களமாகும் தேகமதில்
டைபடியிட் ஜுரம்வந்து தகித்து வதைத்தாலும்
நோயிதீரும் பேதேனே நொடியெல்லாந் தீர்வதுபோல்
வுடலேகே யிருந்துவந்த மலேக்கயர்ச்ச லதனுலே
பாரதத்தாய் பொன்னுடலில் பதுங்கிக் கிடந்திட்ட
பயங்கரர்த் கோளரெல்லாம் பறந்தோடக் கண்டுவிட்
டோம்
ஒற்றைத் தலேவன் உரைத்திட்ட பொன்மொழிபோல்
ஆபத்தாய் வந்ததனே ஆசியெனக் கொண்டிடுவோம்
கோமகட்கு வந்தவினே கூதிலலோடு போனலும்
இனிவந்த யுகத்தினிலும் இந்தகதி வராமல்
எட்டுத் திசையினிலும் அட்டகஹம் வைத்திடுவோம்
உள்ளத்துக் குள்ளே ஒளிந்திருக்கும் பகைவர்களேத்
தள்ளிக் கதவடைத்துத் தாழ்ப்பாளும் போட்டிடுவோம்
அஞ்சு பெறுவியாயில் அடைத்தவர்கள் சந்ததியேம்
நெஞ்சத்தில் நஞ்சுவந்து நிலையாமல் காத்திடுவோம்
சூரு வளர்க்காற்றில் சொல்லாமல் ஒடிவிட்ட
சைத்தானின் படையெல்லாம் சந்தர்ப்பம் பார்த்திருந்து
குஞ்சு குழந்தையுடன் குடியேற வொட்டாமல்
கோட்டையிலே இருக்கின்ற ஒட்டையெலாம் அடைத்
திடுவோம்

கறுப்பை யெல்லாம் கரியில் பாய்ச்சிக்
கனலிப் பெருக்குவோம்
சிவப்பை யெல்லாம் பழுக்கும் இரும்பு
சிறக்க ஏற்றுவோம்
அறுக்கும் வாளைக் கதிரில் பாய்ச்சி
அறுத்துத் தள்ளுவோம்
கதிரை வாரி எடுத்துக் கட்டிக்
களத்தில் போடுவோம்
பிறரையை இறைவன் முடியில் ஏற்றிப்
பெருமை கொள்ளுவோம்
மின்னும் மீனை விண்ணில் வைத்து
வீதி விளக்குவோம்.
மாட்டைக் கட்டி மண்ணை உழுது
வளத்தைப் பெருக்குவோம்
மற்ற சின்னம் உற்ற இடத்தில்
வைத்து மகிழுவோம்

ஒன்று தேயம் ஒன்று துவஜம் என்று பாடுவோம்
ஒருத்தி அன்னே ஒருவன் தலேவன் என்று பாடுவோம்
ஒன்று கூலி ஒன்று லக்ஷ்யம் என்று பாடுவோம்
ஒன்று சாதி ஒன்று கோஷம் என்றுபாடுவோம்
அமரர் ஏற்றி வைத்துச் சென்ற அரிய ஜோதியை
அகோந்திடாமல் பாதுகாக்க அன்பில் சேருவோம்
சுடரைப் பறிக்க நினைக்கும் இனத்தைத் துவைத்து
விரட்டுவோம்
சொர்க்க வாழ்வு மலரும் வரையும் தூக்கம் விரட்டு
வோம்
நாட்டை இணைத்த சீனனுக்கு நன்றி செலுத்துவோம்
நல்லபுத்தி கொடுக்க புத்தன் நாமம் பரவுவோம்

வெற்றி முரசு

கவிஞர் கண்ணதாசன்

தேவருக்கும் மூத்தவளே! செங்கதிருக் கடுத்தவளே!
தெண்ணிலவுக் கிளேயவளே! திருவளர்த்த பூமகளே!
தென் றலேபோடும் பிறந்தவளே தென்மதுரை
[படைத்தவளே

அகரமெனும் குடிசையிலே ஆரம்ப மானவளே
ஆயிரத் தம் வரயமொழிக்கும் அடைமொழியாய்
[நின்றவளே

காலமெனும் காட்டாற்றில் கரையேறி வந்தவளே!
காவியப்பூங் காவினிலே ஓவியமாய் வளர்ந்தவளே!
தொல்காப்பியன் மனதில் தோட்டில்கட்டிக்
[கொண்டவளே

பல்காப்பி யங்களிலும் பருவமகள் ஆனவளே!
உயிரெழுத்தை மகேயிட்டு மெய்யெழுத்திற்
[புகுந்தவளே!

வல்லினத்தில் உரமேற்றி வாள்கொடுத்த தண்மகளே!
மெல்லினத்து மெல்லியர்க்கு மெருகேற்றும்
[மென்மொழியே!

இடையினமாய் நிற்பவர்க்கும் இன்முகத்தரல
[அருள்கொடுத்து

படையினமாய் ஆக்கிவைக்கும் பைந்தமிழே!
[ஓர்கவிஞன்

தரயார் மடியிருந்து தங்கமணிக் கையெடுத்து
தனப்பால குடிக்கையிலே தன்பாலும்
[கொடுத்தவளே!

மனப்பால் குடித்தவன் குடித்தவற்றை
[வடித்துவைக்கும்

நினேப்பால் எழுதுகிறன்; நீ இனேக்க வினேயென
அனேப்பாயேல் உயிர்பெறுவான் அம்மா! நின
[தாள்வணக்கம்!

காந்திவழி வந்தவரே! கடமைவழி நின்றவரே!
சாந்தமகன் எழுதுவித்த சரித்திரத்தில் உள்ளவரே!
பூந்தமிழர் குடித்தோன்றிப் பொறுமை அரசேற்றவரே!
ஆன்றவித்த பெருமகனே! அமைச்சரே! என்வணக்கம்!



பத்துக் கவியரசர் பாடவந்த மண்டபத்தில்
சிறுரசர் போலவந்த நேசத்தீர்! என் வணக்கம்!
ஏடாளும் மன்னவரே எழுத்தாளும் தென்னவரே!
நீர்டாளும் அமைச்சர்களோ நாமாளும் காளிதாசன்!
கூடாகிப் போனாலும் குடிசையிலே வாழ்ந்தாலும்
ஓடேந்தி ஏங்கி ஊரெங்கும் இரந்தாலும்
பாடுகிற கள்ளுனுக்குப் பதவி பெரும் பதவி!
பாரதிரப் பரங்கியரின் வேரதிர வினைதிர
ஊரதிர உறங்கிவிட்ட ஊன்பொதிகள் விழித்துவர
கீருதிரும் மேகமென நின்ற கவி நாயகனே!
பாரதத்தை எழுப்பிவிட்டுப் பூரதத்தில் உறங்கிவிட்ட
பாரதியே! உனக்கெனோன் பாடுகிறேன்;
[கேட்டருள்க!

எங்கோ திரிந்தேன்! எப்படியோ வாழ்ந்திருந்தேன்
தங்காத மண்டபத்தில் தங்கினேன் கானிழற்தேன்
தோராத தத்துவத்தைத் தேரேற்றி அலைந்திருந்தேன்
சோராத இடஞ்சேர்ந்து நிசை மறந்து போயிருந்தேன்
வாராது போலவந்து வாய்த்த தமிழ்ப் பாடலகளோ
கோளாத செவ்வளிஞ்முல் இன்னென்று
"ரோளார நீ விரும்பும் தேசம் [பாடிவந்தேன்
[இது அல்லவடா
பூரான்கள் எனறும் புலியாவ
[தில்லையடா!
வாராய் என்பினுல வழி
[யுரைப்பேன்" எனுரைத்து
ஈரோட்டுத் தோழன் எனை
[இங்கே கூட்டிவந்தான்
வந்தவுடன பார்த்தேன்
[வானளவு நான்விரிந்தேன்
சிறுகூடு விட்டுவந்து சிறகை
[விரித்தாட்டுகின்ற
பறவையென நான பறந்தேன்
[பழங்கதையை மறந்துவிடோன்
இவ்வுலகம் மிகப்பெரிது!
[எவ்வளவோ மக்களினம்
அவ்வளவும் தோழமையாய்
[ஆக்குவதே கவிதைதனம்
உலகினிலே நாடுபல நாட்
[டிலிலே ஊர்கள்பல
ஊர்களிலே மனிதர் பலர் உள
[முடையோர் சிற்சிலரே!

உளமுடைய மந்திரினும் உரமுடையோர் மிகச்சிலரே
உள்ளம் உயிர் யாவும் ஒர்வழியே தேக்கிவைத்து
கள்ளமின்றி வாழ்பவனே கடவுளினும் பெரியவனும்
அன்னவனே நாட்டை ஆளத் தகுந்தவனும்!
அவ்வழியே பார்த்தால் அளப்பரிய பாரதத்தில்
எள்ளளவும் கள்ளமிலான் எடுத்தசெயல
[முடித்துவைப்பான்
பின்னோக் குணமுடையான் பெட்புடையான
[ஒருவனென
பின்னுளில் நானறிந்தேன் பெரிதும் அவன்
[நினைவானேன்
அன்னவன் யாவேறு? மொழி அழகுமகன் நேரு! என
சொன்னலும் வாய்மணக்கும் சொலலுகின்ற
[மொழிமணக்கும்
வேறுபக்தி கொண்டிருந்த வெள்ளைக் கவிதைமனம்
நேருபக்தி கொண்டதற்கு நேரான காரணமென?
தவக்கெனவே ஏதமிலாத் தலைவனவன் என்பதனல்
நானறிந்த தலைவரெலாம் நரவதிரப் பெரியினும்
நாட்டைவிட் டிவ்டினியே நாள்முழுதும் காத்திருந்தார்
பாரதத்து மாதாதன் பாவம் தொலைவதற்கு
பாரதியைத் தெறிவினிலும் பண்டிதரை வடக்கினிலும்
தூதுவிட்டுப் பேளுள! தூயமகள் கலமடைந்தாள்!
கைக்குவி ஏந்தி களத்தேடி அலைந்தவரைப்
பொய்க்குவி விட்டுப் பொருட்குவி ஏந்தவைத்த
மெய்த்தலைவன் நேரு! வியத்தகுமேரு தேவமகன்
இந்நாரோச் சினன் எதற்கும பணிவதில்லை
பொன்னுடன் நேருமகன் புன்னகையில்
[வீழ்ந்துபட்டான்
நாட்டுச் சபைகளிலே காலுநாள் வாதமலரும்
பாட்டுமகன் நேரெழுந்து பார்த்தவுடன் கீன்றுவிடும்!
எங்கே தருமத்தின் இனக்குலைவு நேர்ந்திடுமோ
அங்கே இருவிழிகள் அறமகளோக காத்திருக்கும
எங்கே மனிதகுலம் இடுக்கணினில் வீழ்ந்திடுமோ
அங்கே இருகரங்கள் அவருயிரை அணைத்திருக்கும
எங்கேதன் போர்முரசை எந்நாடு முழங்கிடுமோ
அங்கே இருகால்கள் அதைபடக்க நடந்துவரும்!
பொன்விலரும் ஆத்திரத்தில் பூமிஅழி யாதிருக்க
தங்கமகன் பண்டிதரை தாயரருத்தி
தந்துவைத்தாள்!
காக்கக் கடவியவன் கடன்பட்ட பேரிறைவன்
தூக்கத்தில் ஆழ்ந்திருனுல் தூயவனைக் காவல்
வைத்தான்



எழுத்தாளன்

அன்றே,
போதிமரப் புத்தன் போய்விட்டான் என்றிருந்தோம்
பாதிவழி போனஅவன் பண்டிதராய்த் திரும்பி
வந்தான்
ஆதிமகன் ஏசுபிரான் அடங்கிவிட்டான் என்றிருந்தோம்
தாவியவன் பாரதத்தில் சுவர்ல்லா ஆகவந்தான்
அன்புருபி நாயகத்தை யார்விழியும் கண்டதில்லை
விளக்கிருக்கும் இடமெனத்தும் வெளிச்சமவரும்
என்றாலும்
விளக்கின்கீழே இருட்டு விடுகட்டி வாழ்ந்திருக்கும்
அத்தன்மை போல, அல்லமெல்லாம் பண்டிதரைப்
போற்றிப் புகழ்ந்தவரும் பொன்னுளில் நம்மையே
கூன்விழுந்த ஞானியர்கள் குறைகண்டு ஏசுகிறார்
ஏசுவார் தம்மிடையே ஏசுனைப் பேர்படைத்தே
ஏசுமகன் வாழ்ந்ததுபோல் பாசமகன் வாழுகிறான்!
அரிசியிலே கல்லிருக்கும் அறிவோம்காம்; அக்கல்லால்
அரிசியையே தள்ளிவிட அணுவளவும் சம்மதியோம்!
ஜனநாயகப் பரிசைத் தந்துவைத்த பண்டிதனே
சமர்தனிலே வெற்றியையும் தருவான் கவலைவிடு!
கேருக்கு கேரெனவே கிற்பதற்கிங் காருமில்லை!
போர்கள் பலமுகத்த புலியென் றெவருமில்லை!
வீரத் தலைமகனின் விரலசைவில் உலகசையும்

வெற்றி முரசொலிப்பாள் வியன்தேவி பாரதத்தாய்!
சினத் திருக்கர் சிரந்தாழ்த்தி வணங்கு மட்டும்
மானத்தலைவன் மதியுறக்கம் கொளவதில்லை!
இமயமலை மீது எங்கள் கொடி பறக்கும்
சமயம் வரும்போது சைனவே ஏறறிவைக்கும்!
அவரைக்கும்,
வயதான பெரியவர்காள்! வம்புமொழி பேசாதீர்
வழிமேல் விழிமாறி வந்தவழி மறவாதீர்
சாணக்ய தந்திரதை சற்றே நிறுத்திவைத்துச்
சாய்வு காற்காலியிலே சடலத்தைக் கிடத்தி
ஒய்வெடுத்துக் கொண்டு உருகுங் யசுர் வேதமெலாம்
பாராயணம் செய்தால் பரகதிக்கு நல்லவழி!
எங்களுக்கு நேரு இருக்கின்றார் அவர்போதும்
பங்கமின்றித் தாயகத்தை பார்த்திருப்பார்
அவர்போதும்,
சனகாயகத்தைச் சற்றே நிறுத்தி வைத்துச்
சர்வாதிகாரம் தருமோம் காம் பண்டிதர்க்கு
அந்தத் தலைவன் ஆணையின்கீழ் ஒன்றுபட்டு
இந்தியமே! தாயே! இருபத்திரண்டிரண்டு
கோடிமக்காள்! நீவிர் கொதித்தெழுவீர்! கூடிடுவீர்!
வெற்ற முரசொலியை விட்டுவிட்டு காமெழுந்து
வெற்றி முரசொலிப்போம்! வீரமே! வாழிய நீ!

சங்நாதம்!

—கவி. கா. மு. ஷெரீப்



வளமார் பாரத வாழ்வைப் புதுக்க
வான்கவி பாடிய தேன்தமிழ்க் கவிஞ!
நலஞ்சேர் புலவர் உலகிற் கரசே!
நானிலம் வியக்கும் நாவல நேரே!
அண்ணல் காந்தியின் அடியொற்றி நின்று,
அன்பறு பாரதம் விடுதலை அடைய
தன்னலான தியாக மனோத்தம்
செய்தநற் தியாகியே! தியாகிகள் மணியே!
பண்பும் அன்பும் பாசமும் குழைத்துப்
பாடிய குயிலே! பாரதி! பாரதி!!
உன்புகழ் நாவால் உரைக்கவும் அரிதே!
உன்கவி உலகோர் உன்னுதற் கமுதே!
உன்போல் கவிஞன் மண்ணிலே எங்கும்
உனக்கு முன்னும் உனக்குப் பின்னும்
இன்றைய நாள்வரை பிறக்கவே யில்லை!
இனிப்பிறந் தாலது மானுடர் அதிர்ஷ்டம்!
வள்ளுவப் பெருமான் வாய்மையும் இளங்கோ
வாக்கியச் செறிவும், கம்பனின் கவிநய
வெள்ளமும், வேகமும் கூட்டிப் பிசைந்த
மதுரமும் மனமும் கமழுமுன் கவிதையில்!
காளி தாசனே மிஞ்சிய கவியீ!
கவிஞன் ஷெல்லி, மில்டனும் கூட
ஊழி காலமுன் அடிமை என்றே
ஓதுவா ருனது பாட்டினைக் கேட்டால்!
உன்னுல் தமிழ்நிலம் பெருமை பெற்றது.
உன்னுல் தமிழ்தான் வளமை யுற்றது
உன்னுல் பெண்கள் உரிமை பெற்றனர்.
உன்னுல் குழந்தைகள் பாநயம் உணர்ந்தனர்!
தமிழைப் பாடி, தமிழரைப் பாடி,
தமிழகம் பாடி நிறுத்திக் கொளாமல்,
இமிழ்கடல் வரப்பில் பாரதம் முழுவதும்
*எங்கள் நாடென அன்பொடு பாடிய
பொய்யில் புலவோய்! மெய்தரு சொல்லோய்!

புதுமைக் கவியே! விடுதலை ஒளியே!
தெய்வம் போலே தோன்றி, எங்களின்
சிறுமையைச் சீறிச் செற்றிய மழவ!
சுதந்திர பாரதம் சுகமுடன் வாழத்
திட்டம் தந்த மட்டிலா அறிஞ!
இதந்தரு விதத்தில் எல்லையைப் பாடிய
இந்திய மக்களின் புரவல! புகழோய்!
வெள்ளிப் பனிவரை மீது, பவனி
வந்திடச் சொன்னுய்! மறந்தோம் அதனை!
அதனுல்,
கள்ளனைப் போலே குள்ளச் சீனன்,
கடுகியே வந்து இமயம் ஏறினுன்!
வந்த சீனனை வென்றிட வேண்டும்.
வாகை பாரதம் சூடிட வேண்டும்,
சொந்த நாட்டின் சுதந்திரம் காக்கத்
துள்ளியே மக்கள் எழுந்திட வேண்டும்
இதற்கு,

பாரதி பாட்டினை வீடுகள் தோறும்
பரப்புதல் நல்ல பயனுடைச் செயலாம்
பாரதி பாட்டுப் பரவினுல் மக்கள்
பாயும் புலிபோல், சீறி எழுவர் !
போர் முனை நோக்கி வீறுடன் செல்வர்!
பொல்லா எதிரியைக் கொன்று குவிப்பர்!
வீரம் செறிந்தது தமிழ்ச்சொல்! அதனினும்
வீரம் மிகுந்தது பாரதி பாட்டு!
பாரதி பரவினுல் தேசியம் பரவும்.
தேசியம் பரவினுல் தேசத்தைக் காக்கச்
சேனை திரளும்! திரண்டுமே இமய
உச்சியி லேறும்! ஏறிச் சீன
நச்சு வெறியினை, நையப் புடைக்கும்!
பாரதி பாட்டும் தானமும் போலே
வீறுடன் நன்கு வீழ்ந்திடும் அடியை
தாங்கா தோடுவன் சீனக் குள்ளன்!
ஓடும் சீனனை ஓட்டி முடித்து,
இமயப் பனிவரை உச்சியில் நின்று,
''மன்னுமி மயமலே எங்கள் மலையே!
மானில மீதிது பேற்பிரி தீலையே!''
என்றுமே உரக்குப் பாடிக் களிப்போம்!
இமய உச்சியில் பாரதி தனக்கு
எடுப்போம் கோயில், உலகோர் காண !
அந்தக் கோயிலின் உச்சியின் மேலே
ஏற்றுவோம் இந்திய தேசியக் கொடியை!
அங்கே,
ஆண்டுதோறும் இந்திய மக்கள்
அணைவரும் அழகாய் இதுபோல் கூடி
நடத்துவோம் பெருவிழா! கவியரங் கமைப்போம்
நல்ல கவிதைகள் ஆய்ப்போம்! அளிப்போம்!
பாரத நாட்டுப் பாவல ரெல்லாம்
பாங்குடன் தம்தம் மொழிகளில் அழகாய்
பாரதி பற்றிப் பேசுவர் பாடுவர்.
பனிவரை உச்சியில் பாரதி தனக்கு
இனிதாய் நடக்கும் விழாவில் நமது
கல்வி அமைச்சரே தலைமை தாங்குவார்!
காமராசர் கவிஞர்க் கெல்லாம்
பரிசுகள் வழங்கித் தவிசி னுயருவார்!
அரிய தமிழில் வரத ராசனுர்
ஆற்றுவா ரினிய செற்பொழி வாங்கே
சிலம்புச் செல்வர் செற்கொண்ட லரகுவார்!
சிந்தை கவர்ந்த தேருதம் தமருடன்
சேர்ந்து வந்து கண்டு களிப்பார்!
சேனையர்கூடி பாரதி பாட்டைச்
செப்பி 'மார்ச்சிங்' நடத்திக் காட்டுவர்!
வாழுவி விழாவின் நிகழ்ச்சிள் அனைத்தையும்
வையக மெங்கும் மகிழ்வோடு பரப்பும்!
நண்பர்கள் !
இதுயென் கற்பனை அல்ல! அனைவரும்
எழுந்தார் முயன்முல் நடைபெறக் காண்போம்!
இந்த ஆண்டுநாம் இங்கே நடத்திய
இனிய பாரதி விழாவை அடுத்த
ஆண்டே இமயத் துச்சியில் நடத்தலாம்!
ஆனல்–
எழுந்த இந்த ஆசைதான் பலிக்க
எதிரியை, சீனனை விரட்டிட வேண்டும்!
சீனனை விரட்ட பாரதி பாட்டினை
தெருவெலாம் முழக்கம் செய்திட வேண்டும்!
ஆகவே,
சிங்கத் தமிழரே சேர்ந்துமே வாரீர்!
சங்க நாதம் செய்குவோம் பாரதி
தங்கக் கவிகனே தமிழக மெங்கும்!
ஆம்,
சிங்கத் தமிழரே சேர்ந்துமே வாரீர்!
சங்க நாதம் செய்குவோம் பாரதி
தங்கக் கவிகனே தமிழக மெங்கும்!
பாரதி பாவினல் கிழவனும் கூட
இமயத்தை மீட்க எழுந்தே செல்வான்!
யாவரு மாகச் சேர்ந்துமே சென்று
இமயம் மீட்போம்! மீட்டே ஆங்கே
பாரதி கோயிலும் பாரதி விழாவும்!
எடுப்போம்! எழுவீர்! எழுவீர் இன்றே
ஜெயஜெய பாரதி! ஜெயஜெய பாரதம்!!
ஜெய் ஹிந்த்! வந்தே மாதரம் !

தாய்த்திருநாடு!

—சே. ர. குமாரசாமி, பி. ஏ.

மாமியும் மருமியும் மதிப்புற வொருங்கே
பூமியில் மாந்தர்பால் பொருந்துதல் அரிதெனும்
அவ்வுரை தன்னைப் பொய்யுரை யாக்கிச்
செவ்வி மிகுந்திட செந்தமிழ் நாட்டில்
நிதியும் கல்வியும் நேர்படப் பெற்ற
மதியுரு மெங்கள் மந்திரியாரே!
கவியரங் குற்ற கவிமா மணிகாள்!
செவியுற நின்ற செம்மைசால் பெரியீர்!
தாய்த்திரு நாட்டார் ! தமிழக்குயிர்தறக்
காய்த்திடும் கல்வ கருங்கெல்லிக் கனியென—
விடுதலேப் பேர்க்கொரு வெற்றி முரசென—
வடுதனேப் போக்க வாய்த்த மருந்தென—
தாய்த்திரு அடியின் தலேயைக் கொய்திடும்
போர்த்திரு வாள்எனப்—பொங்கிடும் வீர
ஆழியில் பாயும் அலேயென வைக
ஊழியன் பாரதி உதித்தனன் ! அன்னேன்;
பிறப்பொடு உதித்த பொருமைகள் பலவாம்—
நிறைப்புறு கருப்பையுள் நின்ற சேய்எனத்
தாழ்ந்து கிடந்த தமிழ்கூறு உலகார்
வாழ்ந்து மேம்படும் வகையை காடினர் !
கொட்டைப் பாக்கெனக் கொடும் தமிழ் விகோதோர்
நிட்டை கெட்டனர் ! நிலவிடும். புவர்
உலகொடு மட்டுமே உரைசெப் பாவலர்
பலமொடு கினரே ! பாரதி வாய்மலர்
எளிமை விரித்தது ! எழில்வடி வெடுத்தது !
வளமைப் பொருளெலாம் வாரிப் பொழிக்தது !
பாரதி அருளிய பாட்டின் இதழ்களாய்ச்
சிருயர் தமிழ்கலம், சீரதிருத் தங்கள்,
அரசியல் அறிவியல் ஆய்வுப் பெருந்துறை,
நிரல்படு தொழில்வகை, கீடுயர் தத்துவம்,
பன்பொடு பொருந்திய பக்தி(இறும்பல)
நன்பொடு பொருந்திய நன்று.
தண்டமிழ் பாரதி தாய்த்திரு காட்டை
மண்டலம் படைத்த மறைமுதல் ஆதி
மூர்த்தி தன்னிலும் முதலெனச் சொன்னுன்
ஆர்த்தனன் பாரதி அமுதச் செஞ்சொலால்
''பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே''!
தாயினும் தனது தாய்திரு நாடே
ஆயச் சிறந்தது! அதனே பாரதி
கொள்ள மறுப்பன் கொல்லோ? தாய்மை,

எழுத்தாளன்

உன்னவனுன ஒருவனின் உடைமை !
கொண்டதாய் காடே, கோடி கோடியாய்
அண்டிய மாந்தர் அனைவரின் உடைமை !
தேச பக்தியின் தெளிவை மகக்கொம்
கேசமுற ஊட்டுகிறுன் கின்று;
காட்டிலே உலக மெல்லாம், கவிஞரை வாழ்வு வாழ்ந்து
கூட்டிலே விலங்காய் மேய்க்கு குறுகுகின்றிருந்த காலை
ஏட்டிலே அறிவை காட்டி, ஏழுறு கலைஞராக்கி
காட்டிலே கதிர்போல் கின்ற காடுபா ரதகன்னுடே !
ஊவான்றுங் என்ற சினன்—ஊர்காண வந்தான் !

[ஏதோ

தேவலோ கத்தைக் கண்டு நிகைத்தவன்போலப்

[பொங்கி,

ஆவலாய் இந்த காட்டை அச்சுத்துப் போனுன்

[இத்தை

காவிலுப் வரலாற் றேடு நவில்கின்ற நிதகன் கூடு !
தாய்த்திரு காடே ! இன்றே தகவிலா ஈனரான
பேய்த்திறம் பூண்ட சினர் பிய்த்திடப் புகுந்து

[விட்டார் !

காய்த்தெரு ஒட்டு வார்போல் நயவஞ்சகத் தீயர்

[தம்மைத்

தீய்த்திட அஞ்சிடாத நீரர்க்குப் பஞ்ச முண்டோ ?
காக்கியர் கடந்துசென்ற காலடிப் பின்னே சென்று
சாக்கியை நாட்டி நாமும் சாலபிலே குறைவ தில்லீ !
தேயங்திட பிறர்நம் பாலே நிமைக்கு வந்தால்

[இரத்தம்

பாய்ந்திடப் போர்க்களத்தில் பாயவும் தயக்க மில்லீ !
வெல்கொயன் ஆட்சி தன்னை வெருட்டியே

[முடித்துவிட்டோம்

சல்லியன் கோவா விட்டுச் சரிந்திட ஊதிவிட்டோம்
எல்கியில் சினத்துப்பேய் ஏறிட்டுப் பார்த்த இன்று
தொல்லிகன் வினாத்தல் கண்டோம் தோள்களில்

[நினவு கொண்டோம்

பாயுவோம் போரக் களத்தில் ! பாணியே

[படி மோதிக்

காயுவோம் பச்சை இரத்தம் களமெலாம்

[பொங்கச் செய்வோம்

ஆயுவோம் பகைமுடிக்க ! அன்றி பாரதத்தோ

[ரெல்லாம்

சாயுவோம் போர்க்களத்தில் ! சரித்திரம் ஆக்க

[வசரிர் !

சகமெலாம் சிகப்பின் கொற்ற சாம்ராஜ்யம் தன்னுள்

[மேவ

அகமெலாம் கொள்கை கொண்ட ஆக்ரமிப்பாளர்

[பாம்த்த

தகவெலாம் வாழ்ந்தால் இந்தத் தாரணி

வாழ்தலுண்டோ ?

சுகலரா சுத்தைச் சேர, சுதந்திரம் காக்க வாரீர் !
படமெடுத்த தாடி வந்த பரம்பரை விட்டால் பின்னுன்
நிடமெடுத்த தோடி வந்து நிதம்பவும் கடித்தல் கூடும் !
விடமெடுத்திட்ட சினர் வீரியம் நீறுகொள்ள
நடமெடுத்த தாட வேண்டும் ! நாட்டினைக் காக்க வாரீர் !

போர்ப் பரணி

ரா. கிருஷ்ணமூர்த்தி

கல்ல கவியரங்கில் நானிருக்க வைத்திட்ட
வல்லாளன் பாதமதை வணங்கிக் கவி சொல்வேன்

காலவரே! கன்னித் தமிழ் மொழியில் கவிசொல்லும்
பாலவரே அன்பதனுல் பாரதியின் பேர் சொல்லிக்
கூடிமகிழும் குணத்தோரே உங்களுடன்
பாடி மகிழப் பரணி சில சொல்லினறேன்.

ஆயிரமாம் ஆண்டுகீல அன்றுவென்ற வீரனுக்குத்
தாயகத்தில் தருபரிசு தமிழிடையே கற்பரணி,
சினர்களீனே வெல்லும் செருக்குடைய இந்தியரின்
மானதை எண்ணிமனம் வருப்பதுவே இப்பரணி.

வீரமிலா மக்கள்எலாம் வீணுக்கு வாழ்கின்ருர்
சாரமற்ற வாழ்க்கை எனச் சொன்னவனே கம்புலவன்
ஞன்றுபட அறியாமல் உருண்டோடப் பார்க்கின்ருர்
கன்றறிய வேண்டுமென கவின்றவனே நம்கவிஞன்.

பாரதத்தைத் தாயகமாய்ப் பண்பாட்டை உயிர்

மூச்சாய்

வீரத்தை நல்லணியாய் விளக்கியவன் பாரதியாம்
அந்தப் பெரும்புலவன் அவதரித்த இந்காளில்
இந்தை மலரிட்டுச் செப்பிடுவன் சிலகவிதை.

காடு அழைக்குது வாருங்கள் – உங்கள்
கலை நிதிகோத் தாருங்கள்
பீடு கடையிட்டு நாட்டினீ – கன்கு
பேணப படையினில் சேருங்கள்

வீர சுதந்திரம் பெற்றதை அந்த
வேட்கை உயிர்எனக் கற்றதை இந்தக்
சோரத்தவர் கொளவப் பாரிலே தரும
சோம்பர் இலலீல என்று கூறுங்கள்

வீட்டுக்கொரு மகன்வேண்டுமாம் – கேட்டு
விம்மிப் புடைத்தன தோள்களே
நாட்டுப் படைதனில சேருவோம் எந்த
நாளுமே காத்திட முகதுவோம்.

மேருமலியை அசைத்திட – ஒரு
மெலிய காற்றுக்கும் ஆகுமோ — எங்கள்
நேருவைச் சற்றும அசைத்திட இந்த
நீசச் சினருக்கும் ஆகுமோ.

வீரம் அறியாத கூட்டமோ — பேசி
வினில் உழன்றிட நாட்டமோ.
சூரம் வினாயாத பூமியோ — வாகை
சூடத் தெரியாத னனோ.

மானத்தைக் காத்திட முந்துவோம் வெகு
மானமாய் ரத்தத்தை சிந்துவோம்.
சினத்தை மட்டுமிங்கில் வையாம் — பல
தேயங்கள் வந்தாலும் ஒங்குவோம்.

சாந்த வழிளனச் சொன்னதை — வெறும்
சாரமற்ற தென எண்ணினுன் — சினன
காக்தி வழிளனச் சொல்ன தை — வீரம்
காட்டுவரில்லீ எனறெணனினுன்

எட்டுத்திசையும் ஒலித்திடும் முரல்
ஏறிடும் பிரங்கிக் குண்டினுல்
எட்டிப் பிடித்திட எண்ணினுன் அந்தோ
எமாற்ற மோடங்கு ஒடினுன்.

வாக்கிய வாள்பகை நீர்ந்தபின் — அதன்
இன்னுறைக் குள்ளிடும் வீரர்கள் — அவர்
சாந்துணை மட்டிலும் பேர்ர் செய்வர் — அந்தச்
சத்தியச் சேமியங்குள்ளதாம்.

உயிரினும் மேல்எனக் கொண்டது — தேசம்
ஒங்கும் வழிஎனக் கண்டது — அதை
வயிரமுடையோர் நெஞ்சினில் சுரத்து
வாழும் வழிதனில் வாழுவோம்.

1. மேற்றுவரை இமயத்தின் உச்சியின்முல்
நிட்டையிலே உளஎயர்கு வீடாய் அந்தக்
கூற்றுனே உதைத்தவனும் உமையைக் கூடும்
கோலினன மனத்துளே எண்ணி வந்தோம்
போற்றியதில் தவறில்லே பொய்யும் இல்லே.
போற்றிவந்த அவ்வியம முகட்டில் அனுஞ்
ஆற்றலுள்ள தமிழரினம் கொடிகள் நட்டார்
ஆர்பரித்தார் என்பதிலும் பொய்மை இல்லே.

2. என்றும் இமயத்தின் உச்சி தன்னில்
ஏகாந்த மோனத்தில் அமைதி தன்னேக்
கொன்றழிக்க குண்டெடுத்துக் ஸ்ரல்
கொடுத்தான்
கோடான கோடினன்ப் பகையைக் கூட்டி
வென்றுவிட ஆசையுடன் மெல்ல வந்து
வெருட்டிவிடப் பார்க்கின்றன் சினத் தானும்
நன்றுகன்று பாரதத்தின் பிள்ளே எல்லாம்
நடுங்கிவிடும் எனக் கனவுகண்டான் போலும்.

3. மலேஉச்சிக் காட்டுவளம், மண்டும் வாடை,
மனிதஇனம் வாழ்வதற்கே அரிதலம் தன்மை,
சூலேஉடுங்க வைகின்ற ஒளரின பயச்சால்,
குருடர்என நகமவைக்கும் பாதைப்பின்னல்,
கீலேயறியா திந்தகிலே தன்னில்நிதம்
நேயமுள்ள பாரதத்து வீரர் எல்லாம்
தலேவணங்கிக் காங்கூபிரித் தண்டவிட்டுத்
தாள்பணிவார் எனநிருந்தான சினத் தானும்.

4. காவியத்தில் வீரத்தைப் படித்த மக்கள்
கதைகளிலே வீரத்தை ரசித்த மக்கள்
ஓவியத்தில் வீரதை வரைந்த மக்கள்
ஒன்றுபட இன்றவரை அறியா மக்கள்
நாவியக்கம் பலபேசிக் கூட்டம் போட்டு
வினின்றபடி நடக்காத மக்கள் என்றே
ஆவியைத்தான் பணயமெனக் கேட்பதேபோல்
ஆர்பரிக்க வந்திட்டான் சின நாட்டான்.

5. நாயகத்தின் பிள்ளேகாள்! வீர முள்ள
தாய்குலத்துப் பெண்டிர்காள்! சினத்தானின்
மாயத்தைக் மருட்டுதலேக் கண்டிங் கஞ்சும்
மடமையிலே நமகதென்று சொல்லிவிட்டோம்
தேயத்தைக் காக்கின்ற பணியில் பாகதை
தேய்கின்ற வரை நின்று போரும் செய்லோம்
நேயத்தை நாட்டுக்காகத் தத்தம் செய்லோம்
நேருவின் கை பலப்படவே முன்ந்து நிற்போம்

6. சொன்னபடி நடக்காத சின நாட்டான்
குதாக நம்மீது படைகள் விட்டான்
மனுனின்ற இமயமலே தனக்கே என்று
மக்கள்எலாம் உயிரிழக்கத் தூண்டிவிட்டான்

தன்னுரிமை இழந்திபா நாட்டார் தம்மைத்
தனக்குமைப் படுத்திடவே முனேந்துவிட்டான்
அன்னியனே விரட்டியுமே பெற்றவாழ்வை
அதிகார மிரட்டலினுல் பறிக்கவந்தான்

7. பண்எல்லாம் வீரத்தைப்பாட வேண்டும்
பாட்டெல்லாம் கனல்வெறியை ஊட்டவேண்டும்
கண்எல்லாம் வீரஒளி காக்க வேண்டும்
கருத்தெல்லாம் வீரத்தில் லகக்க வேண்டும்
பெண்எல்லாம் வீரதை நினேக்க வேண்டும்
பிள்ளேகளும் சூரர்களாய்ப் பிறக்க வேண்டும்
வின்எல்லாம் கம்வீரம் காண வேண்டும்
வெறிபிடித்த சினத்தான் ஒட வேண்டும்

8. ஒன்றுபட்ட சிந்தனேயும் தேச மென்றே
உளத்தினையே கினேக்கின்ற கினேப்பும் கம்மை
வெற்றிபெற வைக்கின்ற ஆற்றலாகும்
வேறுவழி பலகட்சி பேசிநின்றால்
இன்றுவக்கும் சுதந்திரத்தின் இனிமைகானே
இல்லாமல் பறிபோகும் இதையே காட்டில்
அன்றுமுதல் பாரதியின் பாட்டில் கண்டேஎம்.
அதைமீண்டும் கம்கினேவில் கிறுத்தவேண்டும்.

9. புலிக்கொடியைப் பொறித்தவர்கள் வீரம்
காட்டப்
புறப்பட்டால் வெற்றியினே அடைவோம் என்ன
எலிப்படையே நாமெல்லாம் எதிர்த்துவந்தார்
எத்தனே பேர்என்றாலும் இதயம் தாங்கும்
ஒலிப்பதுதான் தாயகத்தின் வெறிப்பாட்டில்
உணர்வதுதான் தேசமென்ற உணர்வாய் நாமும்
விரித்துவரும் சிங்கத்தின் சேப்களாவோம்
சென்றிடவான் சினத்தான் சிறப்போம் காமே.

1. வீரம் விளங்கத் திசை யனத்தும்
வெற்றி விளங்கவே சென்றிடுவோம்
ஈரம் விளங்கும் நெஞ்சுடையீர்!
ஏற்றம் கொள்ளவே கூடுமினே.

2. கங்கையில் நித்தமும் ஆயிரமாம்
அறங்கள் செய்திடும் கோழைகளீர்!
கெங்கை குளிர்ந்திட வாள்எடுத்தே
செருவில் நிற்போம் கூடுமினே.

அ. வெற்றி வெற்றி வெற்றி எனபாடுபடுவோம்
ஆக்க
வேகம் எங்கள் வேகம் என்று ஆடுவோம்
சுற்றிநின்ற பகையை முற்றும் சாடுவோம்
உண்மை
சொல்லிச் சொல்லி நாமணக்க வாழுவோம்

ஆ. பாரில் என்று வெற்றிகொள் ஒங்குவோம்
கம்மில்
பகைமை பேசும் இழிவை முற்றும்
போக்குவோம்
பாரதத்தின் சேய்கள் என்று வாழுவோம்
எங்கள்
பாரதி என்றிமை சொல்லி வாழுவோம்.

சத்தியப் போர்

— கலிவாணன்



பந்த விலங்கற முன்னர் நிகழ்ந்தமா
பாரதப் போரினிலே
சிந்தை துணிந்து முன்னின்ற மரிட்டதில்
சேணுலகம் புகுந்த
இந்திய மைந்தர்தம் தியாகச் சமாதியில்
ஈசனிட்ட நடுகல்
அந்த இமாசலம் நெஞ்சுரத் தோடுவந்
தாரதைத் தொட்டதடா !

கெட்ட நினைப்பொடு துட்டத் தனஞ்செயக்
கிட்டும் பகையதனைத்
தொட்ட கரத்தினை எட்டி எடுக்குமுன்
வெட்டி எறிந்திடுவோம்
வெட்டியில் சொற்களைக் கொட்டி யளப்பதில்
வீண்பொழு தோட்டுவதேர ?
கொட்டுக பேரிகை ! கொம்பெடுத்தூதுக !
கூட்டிவிட்டோம் படையை !

நேற்றை நடப்பினை நெஞ்சினில் கொண்டொரு
நிர்ணயம் செய்து விட்டார்,
மாற்றிப் புதுமைக ளாற்றிடுங் காலத்தின்
மாட்சிமையை அறியார்.
வேற்றவர்க் கித்தியர் ஆற்றல் விளங்கிட
விண்ணகமும் வியக்க
தார்நிசை மண்ணும் நடுங்கிடத் துந்துபி
நாதம் எழுவதைக் கேள் !

ஏக்கத்துடன் செக்கிழுத்த சிதம்பர
மென்ன முன்னோர்களெரடு
தாக்கும் தடியடி தாங்கிட மார்பினைத்
தந்த லஜபதியும்
ஆக்கினையின்படி தூக்குக் கயிற்றினில்
ஆருயிரை அளிக்கும்
பாக்கியம் பெற்ற பகத்சிங்கும் போர்க்களம்
பார்க்க விண்ணெறி விட்டார்.

நாசம்புரிந்திடும் நீசத்தனத்தை இன்
னுணிலமே லெதிர்க்கும்
பாசத்துடன் எழும் பாரதச் சேய்களைப்
பார்த்து விண் மீதிலேதோ !
தேசப் பிதா கனிந்தாசி மொழிந்திடும்
தெய்வீகக் காட்சியைப் பார் !
பேசப் பொழுதிலே பேரணி ஈதில்நம்
பேரையும் சேர்த்து விட்டோம் !

ஒங்கி எதிர்த்திட்ட ஆங்கிலச் சிங்கத்தை
ஓட்டிய பின் அயர்ந்து
தூங்கயிலே வந்து தொந்தரவுட்டி மெய்
தொட்டெழுப் பிட்டதும் பின்
தாய்கிடக் காணவும் தப்புக் கணக்கிடும்
தாரணியே ! இனிமேல்
வேங்கையின் கால்கள் பின் வாங்க லெதிர்ப்பினை
வெல்லவே என்றறிவாய்.

சத்தியமே யுனைச்சாடும் பகையுடன்
சண்டைக் கெழுந்து விட்டோம் !
எத்தனகால மிங்குன்னை விரும்பி இங்
கேங்கித் தவம் கிடந்தோம் ?

இத்தரை மீதிலின்னுள் வரை எம்மினம்
ஏற்ற துயர் முழுதும்
நித்திய வாழ்வினில் மானுடத்தோடு நீ
நிற்பதற் கென்றலவோ ?

யுத்தம், சிறை, மிடி: தொத்தும் பிணி, துயர்,
அத்தனைக்கும் துணிந்தோம்.
சொத்து, சுகம், புகழ், சுற்றமுதற் தொடர்
பத்தனையும் விடுத்தோம்.
குத்தவரும் பகைக் கூகையின் கண்களைக்
கெத்திக் கொணர்ந்தினைத் தோர்
முத்துச் சிலம்பணி யாக்கியுன் சேவடி
மொய்ம்புறச் சூட்டிடுவோம் !

பெற்றவன்தம் மனத்துற்ற மெய்யன்பதன்
பேரினில் ஆணையிட்டோம்
வெற்றி முரசொடு சுற்றிக் கவிஞர்கள்
வீரப் பரணி சொல
உற்ற ஜெயக்கொடி முற்று முயர்ந்திட
ஊர்புகுவோ மலமேல்
மற்றெமை ஈன்ற இம் மண்ணினைக் காப்பதில்
மாண்டதன் மேல் விழுவோம் !

நாசம்புரிந்திடும் தேசத்துரோகியர்
நாற்புறம் சூழ்ந்திடி லென் ?
நேசரெலா மெட்டி நின்று எம்மின்னலே
நீக்கத் தயங்கிலு மென் ?
ஈசப் பகைவலி ஈசல்ப் போல் மிகு
நீண்டு பெருகிலுமென் ?
ஈசன் நம் பக்கலிருக்கயிலே பயம்
ஏதுக்கடா தமிழா !

சற்றுளத்தே பய முற்றிடுங் கோழைகள்
சாவினில் வாழட்டுமே !
உற்றதம் மானத்தை விற்ற துரோகியர்
ஓடி யொளியட்டுமே
முற்ற முடியும் முடிவினில் தர்மமே
முந்தும் இடையிடையே
வெற்றியும், தோல்வியும், சுற்றிவரும் இதில்
வேதனைக் கேதிடங் காண் !

கூவிநம் தாய் அதேர ! கூக்குரலிட்டெமைக்
கூப்பிடக் கேட்ட பின்னும்
பாவியர் கால்கள் நம் பாரதத்தில் படப்
பார்த்துக் கிடப்பதுவோ ?
ஆவியை ஈந்ததில் சாவினையும் எதிர்த்
தப்புறத் தெப் பொழுதும்
சீவிதனுவ அச்சிங்கம் சுபாஷே நம்
சேகர முதவனன் ரோ ?

பாரத மகனே ! பரதோ வடக்கே
பனிமலைக் காட்டினில் பதுங்கி
சோர வெஞ்சீனச் சூதர்கள் நம்மேல்
சுடுவதைப் படுகளத் தெங்கும்
தீரமாய்ப் பகைக்கு நேரெதிர் நின்று
தியாக மார்தீயில் நம் நாட்டு
வீரர்கள் பாய்ந்திப் பாரெல்லாம் வியக்க
வெஞ்சமர் வீனைப்பதைப் பாராய் !

வெறிபிடித் தெழுந்து வீரிடுங்கலி நம்
வீட்டின்முன் வந்து நிற்கின்றான் !
வறியனென் றன்பு வழங்கினோம், நஞ்ச
வஞ்சகப் பாவி என்றறி யோம்
நெறியிலா துறவு முறை யெலாம் பேசி
நெஞ்சினில் குத்தவும் முனைந்தான்.
சிறிய பாம்பெனினும் பெருந்தடி எடுத்துச்
சீறுமச் சீவனைச் சிதைப் போம்.

சத்தியம் தோற்பதும் வீரன் இறப்பதும்
இத்தரை மீதென்று மில்லைகாண் !
சித்தத் துணிவுடன் வள்ளுவன் பாதையில்
செல்லுவீரே பயமேதடா !
சுத்த சுதந்திர பாரத வீரத்தைச்
சொல்லல் இம்மண் தொழக் காட்டுவோம் !
குத்திப் பகைக் குடர் பிய்த்து அணி பூண்டதில்
கொக்கரித் தெக்களித் தாடுவோம்.

வஞ்சகர் கீர்த்தியும் துரோகியர் இன்பமும்
வாழ்வினி லென்றும் நிலைக்குமோ ?
கெஞ்சியும் கொஞ்சியும் கிட்டி வந்தேய்த்திடும்
கீழ்மகன் பேடியே யல்லவோ ?
துஞ்சிய வேங்கையை தொட்டெழுப்பும் நரி
தூரத்தி லோடினும் தப்பவோ ?
நஞ்சுண்ட மூர்த்தியின் குஞ்சித பாதத்தை
நம்பினோர் என்றைக்கும் தோற்பரோ ?

தன்னிகரற்ற ஏ ! பாரத
தர்மமே ! வித்தக சக்தியே !
முன்னமென் நாட்டவர் நெஞ்சினில்
மூண்டவீர தேச பக்தியே !
இன்னலுக் கேங்கி இளைத்திடா
இந்திய மைந்தர்தம் வீரமே !
தன்னுயிரீந்துங் கொடியினைத்
தாங்கி உயர்த்திடும் வெற்றியே !

முன்னின்றறஞ் சொலும் நீதியே !
மூத்த எம்மானிடச் சாதியே !
அன்னவின் நாட்டினைக் காப்பதற்
காக இமாசல மீதிலே,
பின்னகரா தெதிர்ப் பேய்கிடப்
பேரமராற்றி முன்னேறிடும்
என்னருந் தேசத்து வீரர்கட்
கென்றுந் துணையிருந் தூக்கு வீர் !

போர்வீரன் !

—கம்பதாசன்

அன்னையின் நாட்டினர் மேல்—எனக்கு
அளவில்லா அன்பு !
என்னது காரணம் எனில் ? — அவர்கள்
எல்லோரும் ஏழை
தின்றிடச் சோறில்லே — வேலைகள்
செய்யத் திறனில்லே
தன்நிகர் நாடென்ருர் — என்றனேச்
சமர்செயப் போஎன்ருர். (அன்னையின்)

கூட்டு அணிஎன்ருர்—நாட்டினேக்
கூறுசெய் பகைஎன்ருர்
ஆட்டின் விலேஉயர்வு—பசும்புல்
அதற்கும் விலேஉயர்வு
மாட்டிற்கு விலேஉயர்வு—உயர்ந்த
மதிகொள் மனிதனுக்கே
நாட்டில் விலேதருவோர்—அந்தக
நமன் அலால் யாருண்டு (அன்னையின்)

வெற்றியும் தோல்வியதும்—உரைத்திடில்
விண்ணெடு மண்ணுமும்
பற்றுரும் மண்ணிருந்து—வானினேப்
பாரீக்கில் பெருநிலேயம்
உற்றுள வானிருந்து—பார்த்திடில்
உலகம் பெருநிலேயம்
சற்றுமே அச்சமில்லே—காரிருள்
தன்னிடை மின்னுவேன் ! (அன்னையின்)

கோலக் கனமணியாள்—காதல்
குளிர்நிலா சேய்விட்டு
காலக் கதிருதயம்—காணக்
கத்தியத் தீட்டென்ருர் போர்எனும்
சீல மலருளத்தில்—யுத்த
தீயதன் பேயாட்டம்
மாள மனிதனடா—சுதந்திரம்
மண்ணுக் கல்லோடா. (அன்னையின்)

மற்றைய நாட்டினரும்—நம்போல்
மானிட மக்கள் ஜாதியன்ருே ?
குற்றம தென்புரிந்தார்—தமது
கொள்கை உயர்வென்ருர்
ஒற்றுமை கொள்ளாரோ—வானவில்
ஒன்றில் பலநிறம்போல்
உற்றிடும் பாவபுண்யம்—போர்ப்பறை
ஒலிக்கும் நதிக்குண்டோ (அன்னையின்)

ஒருசிறு தீப்பொறியே—தன்றென
உடுத்தும் கலேஎரிக்கும்
திருத்தணி எல்லேயதன்—எதிரொலி
திகழும்—இமயமலேயே
பெருக்கும் மக்மோஹன்—எல்லேயைப்
பேச வழிகாட்டியோ ?
வெறும்மணின் பாம்பான—சீனுவை
வெல்வீர் கருடர்களே ! (அன்னையின்)

ஜன நாயகியம்மன் தேர்விழா

—திருலோக சீதாராம்



உதய சூரியன் தோற்றினன் கீழ்த்திசை
ஓங்கி டுந்திருக் கோயிவிவ் கோபுரத்து
உச்சி வெண்பிறை ஓண்கூடர் கரத்துமாம்
ஒற்றை நாமணி ஓதிடும் செய்தி கேள்

துதிகொள் தெய்விகச் சீர்த்திகள் பாடியே
தூப தீபநி வேதனங் காட்டுவோம்
துய்ய மாமனிச் செஞ்சுடர் பாரதத்
தேய மார்ந்த விடுதலே யென்னுமோர்

புதிய கொள்கையின் பொற்றடந் தேரதோ
பொங்கி யடிக் குலுங்கி எழுந்தது
போத்து நின்றுபல் லாண்டுகள் பாடுவோம்
புதுயுகச் சன நாயகி வெல்கவே.

தேரைசந்தது தேரைசந்தது
திசையதிர்ந்திடப் பாரதத்
தேவிதன் திருத் தேரைசந்தது
செய்த மாதவம் சேர்ந்ததே
பேரி மத்தளம் பெரியகாளமும்
பேசி யார்த்திடும் பேரொலிப்
பெற்றி மீக்குயர் பெரியதேர்மிசைப்
பெரிதுவந் தனள் தேவியே !

இமய நெடு மால்வரையி னின்று பொற்றேர்
எழில் பரத கண்ட மெனும் இனிய நாட்டின்
அமைந்த பெரு வீதியெலாம் அதிரப் போந்த
அழகுதிருப் பவனிபுகும் ஆர்ந்து கேண்மின்!

ஊரெலாம்திரண் டோடிவந்தனர்
உற்றமாபெரும் பக்தியால்
உலக நாயகித் தேரிழுத்திடும்
உவகையோங்கிடும் இசையுடன்
தேரைசந்திடத் திசைய திர்ந்தது
தெருவெ லாம்பெருந் தேர்வடம்
செப்புணியச் சீர்மை யாளர்கள்
சேர்ந்து கைகொடுத் திழுமினே

தேரோடும் வீதியெலாம் கொடிகள் கட்டிச்
செயத் தம்பம் தோரணங்கள் சேர்ந்து நாட்டி
யாராண்ட போதினிலும் இன்பங் குனரு
திருத்தவர்கள் தெருவாயில் வந்த போது

ஆடி வந்ததோர் தேரைசந்திடா
வாறு நின்றதோர் அதிசயம்
ஆண வத்தினில் ஆளடிமைகொண்
டரச போகமே துய்ப்பவர்
கூடி வாழ்த்திடும் கோட்டை யென்றதும்
கொண்டனள் பெருங் கோபமோ
கோம கள்சன நாயகிக்கொலு
வார்ந்து தேர்வரும் வேண்மியில்

ஓங்கியெழு முரசொலியும் அதிர்ந்த தாலோ
உற்றதொரு கட்டளையை உய்த்துக் கேண்மின்
பாங்கிலுறு பரிசனங்கள் பணிந்து போற்றப்
பாவாணர் வாழ்த்திசைக்கும் பதங்கள்

[கேண்மின்

மாட கூடமும் விட்டிறங்கியே
மகுட தாரியர் வருவீரே
மாபெரும் அரண் சாலே விட்டுபல்
மக்களோடுநீர் ஒன்றுவீர்
தேடு மாபுகழ்த் தேச நாயகித்
தேரிழுத்திடும் சேவையில்
செல்வர் வாழ்வீலா வறிய ரென்றிடும்
சிறுமை வேற்றுமை விடுவீரால்

தேரைசந்தது தேயமீதினில்
திருவுளார் இலர் என்றினிப்
பேரிலாவகை பெரிய மண்ணகம்
பேரியாறுகள் பாய்ந்திடக்
காரியம்பல கண்டு மேலவர்
காட்டிடும் பணி கூட்டுவோம்
கங்கை காவிரிப் பொருனை வைகையும்
காலமும் நமைக்காக்குமே

தேரோடும் வீதிகளில் முன்னரெல்லாம்
தியங்கி நலந்தேய்ந் தயர்ந்து திகைத்தார்
[இன்றே
காராளும் கழனிகளில் கால்கள் ஊன்றிக்
கைத்தொழிலில் எத்திறமுங் கண்டு கொள்ளப்

பாரோங்கும் விஞ்ஞானப் பயிற்சி கண்டே
பாரதத்து மண்டலத்தார் பதமும் பெற்ருச்
தேரேறிப் பவனிவரும் தேவ தேவி
திருவார்ந்த விழாப் பெருமை தெரியக் கேளீர்

கற்றறிந்தவர் கலேயறிந்தவர்
காலதேவனின் கைபடாச்
சிற்ப ஓவியம் செய்யவல்லவர்
சேர்ந்து வாழ்ந்திடும் தெருவில்
முற்றுணர்ந்தவள் முந்நதகாளினில்
மூண்ட காதலால் உலகெலாம்
பற்றி நின்றப தத்தினுள் எழும்
பவனி வந்தது நின்றதே

அன்னே புகழ்பாடாமல் அரசர் தம்மை
அணி மாட முன்றிலேனே ஆரணங்கின்
தன்னெழிலேச் சிற்றின்பத் தருக்கைப் பாடும்
தமை மறந்த கலேவல்லார் கலங்கிப் போகத்

தேரைசந்தது தெருவதிர்ந்தது
தேக்கிவைத் ததோர் புன்மைசேர்
சிந்தனேதரும் சிதறலாம் சிறு
கலேயெனும் பெயர்ச் சீறுளர்
பாரெலாம் புகழ் பாரதக் கலேப்
பண்புயர்ந்திடச் செய்குமின்
பாரதத் திருத் தேவிதன்னுடைப்
பவனிமேலு மெழுந்ததே

வாய்மூடி அன்னியரின்
வயப்பட் டேங்கி
வறுமையுடன் சிறுமையெலாம்
பொறுத்துக் கொண்டு
தாயற்ற பிள்ளைகளாய்த்
தவித் திருந்த
தனயர்களோ இன்றுபுதுத்
தருக்குக் கொண்டார்

மொழிவெறி இனவெறி மூண்டசுயநலம்
முன்னும் பணவெறியும்
பழிதரு பகைவெறி பாரத நாட்டுப்
பண்பு மறந்தவராய்
அழிவுறு வகையே ஆற்றலெனச்
சிலர் ஆங்காங் காடுவரால்
விழியிமை ஏற்றினள் வெங்கனல்
பாரத வீறுடை மா சக்தி,

சாரமறிந்து சுதந்திர வாழ்விற்
சருவி மகிழ்வதுவே
பாரத வாழ்வின் பண்பென அறிவார்
பகைகரு தாதமைவார்

வேரிடும் விடுதலே வாழ்வெனும் பயிரை
வெட்டி யெறிந்திடவோ
சேருவிர் யாவரும் தேவியின் சேவகம்
தேசநலம் பெறுவோம்.

இமயவரம் பாகிநின்று செங்கோல் ஒச்சும்
இகேயை திரு பாரதமா தேவி யெங்கள்
அமைந்தபெரு வாழ்வுகுடி யரசாய் வந்து
அருள் செய்யும் தேர்இந்தத் தேசமெல்லாம்.

சென்றவழி யெங்கெங்கும் செம்மை யார்ந்து
சிறப்புடனே கல்விதலம் தொழில்கள் கண்டு
மன்றமெனும் உலகத்தில் மதிக்கப் பெற்று
மண்டுபுகழ் கொண்டினிது வாழ வாரீர்!

தேரின் 'மேலிவர்ந் தாள் சன நாயகித்
தேவ தேவியின் இன்னருட் புன்னகை
யாரும் நாமின வோரும் இணைந்திடும்
இன்ப சோதி எழில்நகை யாகுமே.



எழுகவோ, எழுக!

★

—[ரெட்டியார்]—

அவைத்தலைவ ! கவித் தலைவ !
அடியேங்கள் குலத்தலைவ,
குடித் தலைவ,

சுவையறிந்து பாரதியின்
தேன் மிலிற்றும் கவிதைகளைச்
சலியாமல் ஆய்ந் தாய்ந்து
தான் சுவைத்த சாரமெலாம்
தாரணிக்கே வழங்கும்
தலைவர் இராகவர்க்கே
சரண் நாங்களே !

அவையோரே ! தாய் மாரே !
அருமைக்குமுந்தைகளே !
சுவையறிந்து எம் கவிதை
செவிநுகரும் பெரியோரே !

அமுதத் தமிழ்க்கவியால்
அன்று முதல் இன்று வரை
என்றென்றும் சத்தியத்தின்
இதயக்குரல் கொடுக்கும்
இன்தமிழின் செல்வர்களே ;

தாய்நாடு இது வென்றும்
தன் மானம் அதுவென்றும்
தான் காட்டிப் பாரதத்தின்
தனிப்பெருமைகூறி எம்மைத்
தட்டி எழுப்பி விட்ட
தவக்கவிஞன் பாரதிக்கு
மாண்பார் விழா வெடுக்க
மனம் கொண்ட மேலோரே !

தமிழகத்தின் தலைநகரில்
தக்கார் பலர் கூடித்
தனிக்கவிஞன் பாரதிக்குப்
பிறந்த விழா எடுத்துப்
பெருமை நிலை நாட்டிப்
பூரிக்கும் புண்ணியரே !

அமைச்சரவை மாமணிகாள் !
அனைவருக்கும் என் வணக்கம்.

பொங்கும் தமிழமுதைப்
பூவுலகம் தான்பருக
எங்கெங்கும் புகழ் பரப்ப
இங்குத் தமிழ்நாட்டில்
மங்காத புகழ்படைத்த
மாகவிஞன் இல்லை என்ற
சங்கை வசை மொழியும்
தான் தீர்த்த கவிவரதன்

"சொல்லுக்குப் பலபொருள்கள்
சொல்லுகின்ற மல்லர்களின்
செல்வாக்கு எந்நாளும்
சேராமல், சொல்லுக்குச்
சொன்ன பொருள் அல்லாதே
தொக்கும் பொருள் ஏதும்
தோற்றத்தில் கொள்ளாத
சிறப்புடைய பிரான் சுமொழி
அம்மொழியில் வல்ல
அறிஞர்களும் கவிஞர்களும்

ஆங்கிலமும் உலகமொழி
ஆண்டுகொண்ட மேதைகளும்
அனைவோரும் ஒருமுகமாய்
எந்தன் தமிழ்க் கவியை
எழிலாய் மொழிபெயர்த்துப்
பேற்றி மகிழ்கின்றார்
பூரித்து நிற்கின்றார்.

பூமியுடன் சூரியனும்
புகழ்பெரும் காலம் வரை
பொருள் புதிதாய் சுவை புதிதாய்
வளம் புதிதாய் நடைபுதிதாய்
பெருகிவரும் உளமொப்ப
பெருகும் திறனுடைத்தாய்
பொங்கும் தமிழ் என்று
போற்றிசைத்தார் வாழ்நாளில் ''

என்று மகிழ்த் திறுமாந்து
இன்தமிழில் கவியாத்த
மாராசன் கவியோகி
மாண்பார்ந்த பாரதத்தின்
மாதவத்தால் வந்துதித்த
மாகவிஞன் பாரதியே
புதுமை உரு வெடுத்து
பொற் சபையில் போந்திங்கு
புகலு கின்ற பாவலீயில்
ஈடில்லாப் புகழுடையாய்
எழுகவோ! எழுகவென!
ஈடில் புகழுடையான்
இயம்பு திறல் இயம்புகிறேன்.

களவிரன் பார்த்தனுடன்
கண்ணபிரான், பீஷ்மனெனும்
மன்னர் குலத்துதித்த மாயோகி
மற்றுங்கே, சிங்கமென ஆர்க்கும்
திறல் வீமன், வாள் அபிமன்
துங்க மதைக் குலத்தே
தோன்றிடினும் பெருமறவர்
சிங்கமெனத் திகழ்ந்த
துரோணர் கிருபரெனும்
மங்காத புகழ்படைத்த
மாவீரர், மற்றிணையர்
வீறுகொண்ட பாரதத்தில்
வீரம் விளைத்தன்று
முன்னமொரு பாரதப்போர்
முடித்த பழஞ் சேதியெலாம்
முற்றும் அறிவீர்கள்

வில்லுக்கொருவன்
விஜயனெனும் மாவீரன்
கண்ணபிரான் தேரோட்ட
களம்கண்டான் வில்விஜயன்.

பீஷ்ம பிதா மகனும்
பெரியப்பன் பிள்ளைகளும்
பெரியோரும் சிறுவர்களும்
மின்னந்த ஆசானும்
உற்றவரும் மற்றவரும்
ஊரவரும் கூடியெதிர்
மேவுவதைக் கண்டவுடன்
''காண்டீவ மேந்திவிட்டால்
களப்பலியும் தந்துவிட்டால்
எதிரே இருப்பாரில்
என்தெய்வ மகனையவர் தாம்
எவர் பிழைப்பார் உயிர்தப்பி''
என்று நினைத்த யர்ந்து

காண்டீவ வில்லதனைக்
கண்ணன் திருவடியில்
போட்டு நிலைகுலைந்து
பேதுற்ற போதாங்கு
''ஈடில்லாப் புகழுடையாய்
எழிலுடையாய் வீறுடையாய்
எழுகவோ எழுக''வென
எம்பெருமான் முழங்கிட்டான்.

கீதைஉரைத்திட்ட
கிளர்ச்சிதனை யுந்தப்
பார்த்தனும் வீறுகொண்டான்
பாரதத்தின் உரிமைக்காய்
பதினெட்டு நாள் அந்தப்
பாரதப்போர் நீண்டதுவும்
பாரதப்போர் முடிவும்
பாருலகம் தானறியும்.

அதன் பின்னர்,
அன்னியர்கள் இந்த மண்ணில்
அண்டிக் குடிகெடுத்தார்
பாருக்குள் அன்னியர்க்குப்
பாரதமும் அடிமையுற்று
வீழ்ந்திட்ட போதங்கே
மீண்டுமொரு பாரதப்போர்
மூண்டதொரு செய்தியதை
மேதினியும் தானறியும்
காந்தி மகான் தலைமையிலே
சாந்திப் பெரும் படையும்
கத்தியின்றி ரத்தமின்றி
சத்தியத்தைக் காத்திடவே
வீறு கொண்ட நாளையிலே
பாரதத்தின் பாவலனுய்க்
பாடிக் கவி பெய்தேன்

சூர மறவர் களின்
தொல்பெருமை அத்தனையும்
வீரக் குமரர்களின்
வெற்றிப் பெருமிதமும்
போற்றிக் கவி இசைத்து
போர்ப் பரணி பாடி நின்று
கீர்த்தி பல எடுத்துக்
கீதை யிசைத்திட்டேன்.
ஈடில் புகழுடைய
இணையற்ற பாரதரை
எழுகவோ எழுகவென
எழுப்பிக் குரல் தந்து
ஆனந்த சுதந்திரத்தை
அன்றே தெரிசித்தேன்
காந்தி மகான்வழியில்
காண்பர் சுதந்திரத்தைப்
பாரதரும் என்றேதான்
பாடிவிட்டு வீடுற்றேன்.

பாரதமும் மேன்மையுற்று
பாருலகம் காத்துநிற்கும்
வீரத்தைக் கண்டு மனம்
விண்ணுய்க் கவிந்து நின்றேன்

சொந்த அரசாட்சி யிதில்
சுகம்பெறிற்றீர் என்கள்கள்
இந்த நிலவுலகில்
என்றென்றும் போருக்கு
வித்தாகி நிற்குமந்த
கொத்தும் கொடும்பசியை
தெத்தி எடுத்துவிட்டால்
சுகமுண்டு என்பதனை
சிந்தித்த பெரியோர்கள்
திட்டம் பலதீட்டி
இந்திய நாடிதனை
இந்திரனுர் உலகெனவே
ஆக்கத்துணிந் திங்கே
அயரா துழைக்க ஓற்றுர்

மற்றவர்க்குத் தீங்கு
மனதால் நினையாத
மறவர்குடி பாரதத்தார்
மற்றவர்கள் கம்மீது
வேற்றுமையால் படையெடுத்து
மேவிடார் என்றெண்ணிப்
போர்புரியச் சாதனங்கள்
பெருக்காமல் தாமிருந்தார்.

சுதந்திரம் பெற்ற பின்னர்
சொந்தசுகம் மேலிடவே
சுதந்திரப் பெரும் படையும்
சிதறியதுபல் பிரிவாய்.
வேற்றுமைகள் தலைதூக்க
வெவ்வேறு திசைகளிலே
கருத்துச் சிதைந்தவராய்க்
கட்சிகளாய்த்தாம் பிரிந்தார்.

என்ருலும்,
சத்தியத்தின் தவப்பயனுய்
தருமத்தின் திருவருவாய்
இத்தரையின் பாக்கியமாய்
இந்தியத்தாய் நன்மகனுய்
மக்கள் குலத்துக்கோர்
மாமணியாய் நேருவெனும்
உத்தமனின் தலைமையிலே
உயர்ந்துநிற்கும் பாரதத்தின்
இமயத்தின் எல்லையிலே
இந்தியரின் மஞ்ஞதிலே
சீனத்தான் படையெடுத்து
சிறுவதைப் பார்த்தவுடன்
பிணங்கிப் பிளவுபட்டுப்
பிரிந்திருந்த பாரதத்தார்
வேற்றுமைகள் விட்டொழித்து
வீரிட்டெழுந் துவிட்டார்.

ஆயிரம் முண்டிங்கு சாதிஎனில்
அன்னியர் புகவென்ன நீதி
பாயிரம் பாடிய எந்தன்
பாட்டின் பொருளின்று கண்டேன்.

புதுமைப்பெண் ஒருத்தியைஅன்று
போற்றி வளர்த்த தென்பாட்டின்
பொருளினை இன்றுநான் கண்டேன்
புத்தொளி யின்று நீர்காண்பீர்.

தாயையும் தான்கழற்றித்
தாய்நாட்டின் எல்லைக்கு
வேலியைப் போட்டுவைக்கும்
மேன்மகனைப் பார்க்கின்றேன்

புத்தம்புதிய உயிர்
பூரிக்கும் என் மகளிர்
ஒருத்தி இருக்கும்வரை
ஓர் அடி மண் கூட
சீனனுக்கு மட்டுமல்ல—எந்த
ஞனனுக்கும் போகாது.

நேருமகன் விரலசைத்தால்
நீணிலமேபாயிந்து வந்து
சரணுவதைப் பார்க்கின்றேன்
சத்தியத்தின் தத்துவத்தை
பாரதத்தின் போர் முரசு
படையெடுப்பின் எக்காளம்
வீரர்படை இமயம்
மேவுவதைப் பார்க்கின்றேன்

பாலர்முதல் விருத்தர்வரை
பாரதத்தின் புதல்வரெலாம்
தாய்க்குலமும் வீறுடனே
தான் துடித்து எழுகின்ற
வாய்ப்பின்று வந்தவுடன்
வற்ரு புத்துணர்ச்சி
காய்த்துக் குலுங்குவதை
கண்குளிரப் பார்த்துஎந்தன்
வாயடைத்து நிற்கின்றேன்
வாழ்த்தெனை வாழ்த்துகின்றேன்.

மண்ணில் உதித்த கவி
மலர்களெலாம் மக்கள்மன
எண்ணத்தில் வாடாமல்
இதயக்கொலு விருக்க
விண்ணில் கவிந்துநின்று
விழித்தபடி வாழ்த்துகின்றேன்

கண்ணின் கருமணிகாள்
காளிஉமைக் காத்திடுவாள்.

நேரு தலைமையினில்
நீவிர் திரண்டெழுந்த
போர்க்கோலம் கண்டிங்கே
பூரித்தேன் வாழ்த்துகின்றேன்

சீனத்தார் மற்றெந்த
தேசத்தார் யார் எனினும்
பாரதத்தை வென்றிடுதல்
பகற்கனவு என்பதனை
இவ்வுலகம்தா னறிய
ஈடில்லாப் புகழுடைய
என்மக்காள் எழுகவென
இதயம்மகிழ் வெய்தி
இயம்புகின்றேன் கேளீரோ ?

எடுத்த காரியம்
யாவும் வெற்றி
எங்கும் வெற்றி,
எதனினும் வெற்றி
கொடுத்தேன் வாக்கு
உமக்கே இன்று

கொட்டுவீர் பேரிகை
கொட்டுவீர் முரசு.

தடுத்தே நிறுத்தும்
தருக்குடன் மூன்றந்து
தானுய்த் தோன்றிய
தெய்வமே வரினும்


படுத்தே மாய்ப்பள்
அருட்பெருங்காளி
பாரினில் வெற்றி
உமக்கே இசைத்தேன்.
ஈடிலாப் புகழுடை
இசையபாரதமே—நீ
எழுகவோ எழுக.

கவியரங்க முடிவுரை

—[பேராசிரியர் அ. சீனிவாசராகவன்]—

அப்புவின் முரசு முழங்கிடச் சுரபி
தொட்டனன் சத்தியப் போரை
ஓப்பிலாக் கண்ண தாசன் அப் பேரில்
ஓங்கிடும் வெற்றியை உணர்த்த
செப்பினுன் போரின் முறைகளை முரசில்
திருலோகப் பெயர்க் கவிஞன்
எய்ப்பிலா நெஞ்சின் நாதமாய்ச் சங்கின்
இசையினை எழுப்பினன் ஷெரிப்

வீரமே கம்ப தாசனும் பாட
வியன்புகழ் எழுப்பினன் அ. வெ. ர.
தீரமே மிகுத்த தாய்த்திரு நாட்டைத்
தீட்டினன் குமரனும் கவிஞன்
போரிலிற் பரணிப் பாடிடக் கிருஷ்ண
மூர்த்தியும் கவிக்கலே வாணன்
நிர்மையெம் போரின் சத்தியம் உணர்த்த
நிறையுமிக் கவிப்பெரும் அரங்கம்.



கவியரங்கத்தைக் கண்ணுறும் பெருமக்கள்

மனத்தை வாழ்த்துதல்

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவு மமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தேதாம் ;
உலாவு மனச்சிறு புள்ளீனே யெங்கணும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம் ;
பலாவின் கனிச்சுளை வண்டியிலோர் வண்டு
பாடுவதும் வியப்போ ?

தாரகை யென்ற மணித்திரள் யாவையும்
சார்ந்திடப் போ மனமே,
ஈரச்சுவையதி லூறிவருமதில்
இன்புறுவாய் மனமே !
சீரவிருஞ்சுடர் மினெடு வானத்துத்
திங்களேயுஞ் சமைத்தே
ஓரமாக விழுங்கிடு முள்ளத்தை
யொப்பதொர் செல்வமுண்டோ?

— பாரதியார்

பாரதி புகழ்

திரு தெ பொ. மீனுட்சிசுந்தரனார் தலைமையுரை.

இன்றைக்குப் பாரதியைப்பற்றி நாம் மட்டும் பேச வில்லை, அயல் மொழிகளிலுள்ளவர்களும் புகழ ஆரம்பித்துவிட்டார்கள். உலக மொழிகளில் பலவற்றில் அவரைப்பற்றிப் புகழ வேண்டியகாலம் சீக்கிரமாகவே வந்துவிடும். அந்த நாளே நாம் திருநாளாகக் கொண்டாடப்போகிறோம். பாரதி தன்னுடைய பாடல்களில் இமய மலையைப்பற்றியும், கங்கையாற்றைப் பற்றியும் காவேரி ஆற்றைப்பற்றியும் குறிப்பிட்டு, அவற்றில் நம் பண் பாட்டை எல்லாம் குறிப்பிடுகிறார். அத்தப் பண் பாட்டை காப்பாற்ற வேண்டியது நம் எல்லோருடைய கடமை. அதன் காரணமாகத்தான், இன்றைக்கு நாம் எல்லோரும் அவன் புகழ் பாடுகிறோம். இன்றைக்கு உலகத்தில் எத்தனையோ நாகரீகங்கள் தோன்றுகின்றன, சில காலங்களுக்குப் பின்னால் இவைகள் எல்லாம் மண்மேடிட்டுப் போய் விகிடுன்றன. பல பெரியார்கள் தோன்றுகிறார்கள். அவர்கள் மறைந்த சில காலத்திற்கு அவர்களுடைய புகழ் பரவி நிற்கிறது. அதன் பின்னால் அவர்களுடைய புகழும்மறைந்து போய்விடின்றது. ஆனால் ஒரு சிலர் என்றுமே நிலைத்து நிற்கிறார்கள், நம் நாட்டைப் பொறுத்தவரையில், புத்தர் பெருமான், காந்தி அடிகள், ஏசுநாதர் இவர்கள் எல்லாம் காலத்தையும் தாண்டியவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய உடல் மறைந்து விட்டாலும், அவர்கள் செய்த தொண்டின் காரணமாக காலவரையின்றிப் புகழ் நிலைத்து நிற்கின்றது. அந்த முறையில் பாரதியும் சிறந்ததொரு இடத்தைப் பெற்றுவிட்டார். ஆகவே தான் இன்று நாம் அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். நாம் மட்டுமல்ல, இன்றைக்கு உலகமெல்லாம் பாரதியைப் போற்றக்கூடிய அளவில் இருக்கிறது. முன்னுள் பாரதி காலத்தில் இருந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத்தான் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். அதே நேரத்தில் மட்டுமல்ல,அதற்குமுன்னுலும் கூட , பலரும் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். பல தத்துவங்களை கூறி வந்திருக்கிறார்கள். அந்தத் தத்துவங்களை எல்லாம் நாட்டு மக்களிடையே பரப்புவதற்குக்கூட பயமாக இருந்த காலமும் உண்டு. ஆனால் அன்றைக்குப் பரதி பாடிய பாடல்கள் எல்லாம் இன்றைக்கு நமக்குப் பொருந்தக் கூடிய வகையில் அமைந்திருக்கின்றன. பாரதி பலதத்துவங்களைச் சொல்லியிருக்கிறார் என்றால் அவன் பாடிய எல்லோரும் நடக்க, கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். அன்றைக்கு புலவர் பெரு மக்கள் அதை தமிழாக ஏற்றுக் கொள்ள வில்லை.


ஆனுல் மக்களிடையே உள்ளத்தை தொடக்கூடிய கவிதைகள் தான் என்றுமே நிலைத்து நிற்கின்றன. அந்த அளவில் பாரதியின் கவிதைகள் இன்று உள்ளத்தை தொடக்கூடியவைகளாக அமைந்திருப்பதால்தான் பாரதியின் புகழ் வாழ்கிறது மக்களின் உணர்ச்சியையும் பெருக்குகிறது.

பாரதி புதிய விஷயங்களை பழைய கருத்திலேயே நமக்கு அளித்திருக்கிறார். அதன் மூலம் நமக்கு ஒரு புதிய யுகத்தையே கூட அவர் தந்திருக்கிறார். நாம் குடியரசு ஏற்ற நேரத்தில், அச்சமயத்திற்கு வேண்டிய ஒரு கவியைக்கூட நமக்கு பாடிக்கொடுத்திருக்கிறார். நாம் சுதந்திரம் ஏற்ற நேரத்தில், அவர் வாயிலிருந்து வந்திருந்த கவிதைகள் எல்லாம் எப்படி உருவாகி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். அதனுல் தான் நாம் இத்தகைய உரிமைகள் பெற்றோம்.


ஏதோ பள்ளுப்பாட்டு என்று நாம் மிகவும் எளிமையாகச் சொல்லிவிடுகிறோம். ஆனுல் அவன் அதன் மதிப்பை உயர்த்தும் வகையிலே "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் வந்துவிட்டதென்று" என்று சுதந்திர கீதப் பாட்டையே ஒரு பள்ளுப் பாட்டாக பாடியிருக்கிறான். அதேபோல் பெரிய வேதாந்த கருத்துக்களையெல்லாம் 'மாரியம்மன்' பாடலாக பாடியிருக்கிறான். அதேபோல், இன்னும் பொது மக்கள் விரும்பும் வகையிலே பூசாரிப்பாட்டு, அந்தப் பாட்டு, இந்தப் பாட்டு என்று மக்கள் உள்ளத்தைக் கவர்கின்ற பாடல்களாகவே பாடியிருக்கிறான். அப் படிப்பட்ட பாடல்களே அவன் பொதுமக்கள் மனதிலே சுதி கூட்டிவிட்டான். அதுதான் அவன் செய்த, யாரும் செய்யாத ஒரு சிறப்பான செயலாகும். அதற்குப் பிறகு இப்படி எத்தப் புலவன் இதுவரை மக்களுடைய பேச்சிலே, அவர்களுடைய மனதைத் தொடும் வகையிலே எடுத்துக் கூறி சுதி கூட்டினுன் என்று கேரியவில்லே. சொல்வதற்கும் இல்லே. அதனுலேதான் அவன் பொது மக்கள் உள்ளத்திலே ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்டான். அவன் புகழ் வாழ்க.

திரு தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

அன்பர்களே! இந்த நூற்றுண்டின் ஆரம்பத்திலே தமிழன் எப்படி இருந்தான், அதிலும் ஆங்கிலம் கற்ற தமிழன் எப்படி இருந்தான் என்று கவிஞர் அவர்கள் சொன்னது என்னுடைய ஞாபகத்



கருத்தரங்க மேடையில் பெரியோர்கள்



திற்கு வருகிறது. அதை 'தமிழ்த் தாய்' என்னும் தலைப்பிலே உள்ள பாடலிலே பேசுகின்றார்.

அதாவது ஆங்கிலம் கற்றத் தமிழர்கள் தமிழினில் ஒன்று மில்லை என்று சொல்லிவிட்டார்கள், இருந்தாலும் இந்த வசைச் சொல்லிற்கு நாம் ஆளாகக் கூடாது, அது நமக்கு வந்து சேரக் கூடாது என்பதற்காக, நம்மை 50 வருஷங்கள் முன்பே அழைத்திக்கிறார். அப்படி ஒரு பேதை உரைத்தான் என்று சொல்லி, அதற்கு மறுப்பு கொடுத்திருக்கிறார்.

இப்பொழுது நாம் எல்லோரும் ஒருமுகமாகக் திரண்டு ஆவேசத்தோடு சீனுக்காரனைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் இத்தகைய உணர்ச்சிகளை நாம் இன்றைக்கும் அவனது பாடல்களிலே பார்க்கிறோம். அதற்கு உதவிக்கொண்டு வருகிறது அவனது பாடல்கள். இதை நாம் உணர 50 வருஷங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அவனது பாடல்களிலே அற்புத மான உணர்ச்சிகளை உருவாக்கியிருக்கிறான்.

கவிதைகளை நாம் எழுதிப் பயனில்லை. அப்படி நாம் எழுதப் போனலும் அதிலே பயனும் இல்லை. கவிதை ஒருவனைத் தேடிக்கொண்டு வரவேண்டும். அப்படி பாரதியை கவிதைத் தேடிக்கொண்டு வந்தது. அதை அவரே ஒரு இடத்தில் குறிப்பிடுகின்றார்.

தனிமையில் ஆற்றங்கரையிலே உட்கார்ந்து இருக்கும்போது, தன்னைத்தேடி கவிதைவந்தது என்று குறிப்பிடுகின்றார். அவர் கவிதையை தேடிக்கொண்டு போகவில்லை.

'சிலப்பதிகாரம்' என்னும் நாலில் ஒரு அரச குமாரன் சிலம்பு விற்கை கற்க விரும்பினனும். அதற்கு ஒரு ஆசிரியரிடம் போனபோது, உனக்கு சித்திரம் எழுதத் தெரியுமா என்று கேட்டாராம். தெரியாது என்னும். தாங்கள் தான் சகலகலா வல்லுனர் ஆயிற்றே, அதையும் கற்றுக்கொடுங்கள் என்னும். அப்படியானல், நடனம் ஆடத்தெரியுமா, அப்படியில்லாவிட்டால் பாடத்தெரியுமா, அதுவும் இல்லை விட்டால், இசை தெரியுமா, அதுவும் இல்லாவிட்டால் கவிதையாவது எழுதத் தெரியுமா என்றார். அதுவும் தெரியாது. அதையும் தாங்கள் கற்றுக்கொடுங்கள் என்று சொன்ன போது அது இயற்கையிலேயே வர வேண்டும். அதைச் சொல்லிக் கொடுப்பதிற்கில்லை என்று தட்டிக் கழித்தாராம். அதே போல், கவிதை யானது ஒருவனை தானே தேடிக் கொண்டு வர வேண்டும்.

மைசூரிலுள்ள பேரூர் கோயிலுக்குச் சென்றிருந்த போது, அங்குள்ள சிற்பங்களைப் பார்த்தேன். அதை வடித்துள்ள சிற்பி, அங்கே 4 அடி சதுர இடத்தை காலியாக விட்டிருக்கிறான். தன்னைப்போல் யாராலாவது அப்படி செதுக்கமுடியுமா என்று சவால் விட்டு வகையிலே விட்டிருக்கிறான். ஆனால் இதுவரை அந்த இடம் யாராலும் பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே விடப்பட்டிருக்கிறது. அதேபோல்தான் பாரதியும், தன்னுடைய கவிதைகளிலே சுவை, பொருள், வளம், சொல் புதிது என்றும் கூறும் வகையிலே கட்டியம் கூறியிருக்கிறான். அதற்கு ஒருசில பாடல்களைத் தெரிவிக்கிறேன். வள்ளுவனைப் பற்றி தமக்குத் தெரியும். அவர் ஒரு தெய்வீகப் புலவர். அவரது பாடலிலே பிச்சை எடுப்பவர்களைப் பற்றி ஒரு பாடல் பாடியிருக்கிறார்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற்
பரந்து கெடுக உலகியற்றியான்''

ஆனால் பாரதியோ, அதற்கும் மேல் ஒருபடி சென்று, 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று, ஒருவனுக்கு உணவு கிடைக்கா விட்டாலே, இந்த ஜெகமே அழியட்டும் என்று கூறியிருக்கிறார். இந்தப்பாட்டிலே உள்ளசுவை சொல், வளம், பொருள் ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

அதேபோல் கம்பன் சீதையைப் பற்றி வர்ணிக்கின்ற போது, 'பொன்னிலே இருக்கின்ற பிராசாம்' பூவிலே உள்ள வாசனை, தேனிலே உள்ள சுவை, என்றெல் லாம் பாடியிருக்கிறார். பாரதி இதைப் படித்தான் போலும். பின்னுலே, குயில் பாட்டிலே ஓரிடத்தில் புதிய சுவைபட, புதிய பொருள்பட, புதிய சொல்பட சொல்கின்றதை நாம் பார்க்கிறோம்.

அதேபோல் ஆழ்வார்களும், நாயன்மார்களும் இறைவனைக் காதலனாக வைத்துப் பாடினார்கள்; எழுதினார்கள், அதிலே ஆண்டாள் தலைசிறந்தவளாக விளங்கினாள். ஆனால் பாரதியோ, 'கண்ணன்—என் காதலன்' என்ற பாட்டைப் பாடுகின்றபோது,

'' கனவு கண்டதிலே— ஒருநாள்
கண்ணுக்குத் தோன்றுமல்,
இனம் விளங்கவில்லை,— எவனே
என்னகந் தொட்டு விட்டான் !
வினவக் கண் விழித்தேன்; —ஸகியே
மேனி மறைந்து விட்டான்;
மனதில் மட்டிலுமே—புதிதோர்
மகிழ்சி கண்டதடி'' என்றும்,

'' எண்ணும் பொழுதி லெல்லாம் – அவன்தை
இட்ட விடத்தினிலே
தண்ணென் றிருந்ததடி—புதிதோர்
சாந்தி பிறந்ததடி.
எண்ணி யெண்ணிப் பார்த்தேன்–அவன்தான்
யாரெனச் சிந்தை செய்தேன்.
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணின் முன் நின்றதடி''

என்றும் கூறி இருக்கிறார்.

அதாவது, இந்தப் பாடல்களிலிருந்து தன்னைக் காதலனுகவும், கடவுளை ஓர் காதலியாகவும் வைத்து பாரதியார் பாடியிருக்கின்றார். இப்படிப் பாடுவதற்கு அவனுக்கு என்ன துணிச்சல் இருக்கவேண்டும். இப் படிப் பல இடங்களிலே, அவனுடைய கவிதைகளிலே சுவை, சொல், பொருள், வளம் எல்லாம் ஒளிவிட்டு, அவனது பாடல்களே ஒரு நவ கவிதையாக, நவகவிதா உணர்ச்சியை ஊட்டும் வகையிலே அமைந்திருப்பதை நாம் பார்க்கின்றோம்.

இன்றுள்ள நிலையில் பாரதியின் பாடல்கள் பல நம்மை எதிர்க்கும் சீனுவுக்கு எதிராக நம் மக்களே தட்டி எழுப்பக்கூடிய அளவுக்கு அவை பயன்படுகின்றன.

தேசிய ஒருமைப்பாட்டைப்பற்றி பலர் பேசுகிறார்கள். தேசிய ஒருமைப்பாட்டை உண்மையிலேயே எந்த அரசியல்வாதிகளாலும் வளர்க்க முடியாது. சமயம், கலை, இலக்கியம் இவைகளினால் தான் வளர்க்க முடியும் என்று நான் நம்புகிறேன். பாரதி தனது கவிதையில் ''செப்பு மொழி பதினெட்டுடையாள்'' என்று கூறியிருக்கிறார். இன்றைக்கு அரசாங்கம் இந்திய மொழிகள் 14 தான் என்று கொண்டிருந்தாலும், பாரதி இந்திய மொழிகள் 18 என்று கூறி, இப்படி 18 மொழிகள் கொண்ட ஒரு தேவிக்கு உயிர் ஒன்றே தான் என்று சொல்லியிருக்கிறார்.

எல்லோப்பற்றி சொல்லுகின்ற நேரத்தில் '' இமயம் முதல் குமரி வரை '' நமது தேசம் என்பதை வற்புறுத்தியிருக்கிறார். அது மட்டும் அல்ல, பக்கத்து தேசங்களை எல்லாம் சேர்த்து ஒன்றுக்கி அனுபவித்து பாடுகிறார்.

'' சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே,
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி வினையாடி வருவோம்''

என்று அனைவரையும் சேர்க்கிறார். சிலர் வேடிக்கையாக கூட என்னிடம் கேட்டதுண்டு, பாரதியார் தம்மை விட்டுவிட்டு மிற நாட்டினரைக் கொண்டு அல்லவா கூறியுங்கிறார். தம்மைப்பற்றி விட்டுவிட்டாரே என்று, நான் அதற்கு சொன்னது, பிற நாட்டினரைப்பற்றி சொன்னலும் இவற்றை எல்லாம் சேர்த்து நம்மையல்லவா அனுபவிக்க சொல்லியிருக்கிறார். இதை எல்லாம் அனுபவிப்பதற்கு தமிழரை இருக்கவேண்டும் என்று எண்ணித்தான் இதை சொல்லியிருக்கிறார் என்று தான் சொல்வதுண்டு.

பாரதியார் இத்தியாட்டோடு மட்டும் நின்று இதைச் சொன்னார். ''பாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற அளவில் நானும் பாரதியார் சொன்ன இதே அடிப்படையில் உலகத்தைச் சேர்த்து, தேம்ஸ் நதிக் கரையையும், அமெரிக்க நாட்டையும், அழகான ஜெர்மனியையும் சேர்த்து ஒரு பாட்டு இசைத்து வைத்திருந்தேன். எனக்கும் மேலாக என் பேரன் ஒருவன் '' தாத்தா உலத்தோடு மட்டும் நின்று விட்டாரே, அது போதாது '' என்று நினைத்து மேலோகத்தையும் சேர்த்து, இந்திரனையும் ரதியையும் சேர்த்து ஒரு பாட்டு இசைத்து வைத்துவிட்டான். இமயத்தோடு மட்டும் அல்ல, அல்பஸ் மலையோடுமல்ல, இந்திரலோகத்தோடும் தொடர்பு வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்ச்சி நம்மிடம் வளர்ந்துவந்திருக்கிறது.

பாரதியாரின் விழாவை இவ்வளவு நாட்களுக்குப் பின்னால் அரசாங்கம், விழா எடுக்க முன்வந்தது மிகவும் பாராட்டத்தக்கது என்றலும் இதற்கு முன்னமேயே பாரதிக்கு விழா எடுத்திருக்கவேண்டும். இன்றைக்கு பாரதி மக்களுடைய கவிஞராகிவிட்டார்; அவர் கருத்துக்களை எல்லாம் மக்கள் உணரும்படி செய்ய வேண்டும், அது நம் எல்லோருடைய கடமை.

திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள்

'' புரட்சிக்கவி பாரதி '' என்னும் பொருள் பற்றி பேசினார்கள். அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்க மாவது:-

தற்காலத்தில் எது தான் புரட்சி என்று சொல்வதென்று தெரியவில்லை. முப்பது ஆண்டுகளுக்குமுன்



தான் உண்மையான புரட்சி என்ன என்பது தெரிந்திருக்க முடியும், ஆனல் அந்தக் காலத்தில் பாரதி மனம் புரட்சியை நடியிருந்தது என்பதை நம்மால் அவருடையபல பாடல்களிலிருந்து அறிந்து கொள்ளமுடிகிறது. அன்றைய நினத்தில் பாரதியின் பாட்டுக்களை எல்லாம் புகழ் பெற்ற பாட்டுக்களாகவே எடுத்துக் கொள்ளவில்லே. பாஞ்சாலிசபதத்தை எல்லாம் வெறும் சாதாரண தொண்டிச் சிந்து பாட்டாக படிவைத்தான். இவற்றை எல்லாம் வேறு பாக்களில் அவரால் பாடியிருக்க முடியும், ஆனல் பமர மக்கள் உணரும் வகையில் பல புரட்சிப் பாடல்களே செய்து வைத்தார் பாரதி. இப்போதுள்ள புரட்சி எல்லாம் '' தேசை வட்டவடிவ மானது. ஏன் வேறு வடிவில் இருக்கக்கூடாது'' என்கின்ற எண்ணுகின்ற புரட்சித்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. பல சங்கப்பாடல்களிலிருந்து பலவிதமான கருத்துக்களே, நாம் அறிந்து கொள்கிறோம். பாரதி இந்த உலகத்தையே தன்னுடைய பாட்டுக்களால் பரவித்திட வேண்டும் என்று கூறுகிறார்.

'' பாட்டுத்திறத்தாலே இந்த வையத்தை பரவித் திடவேண்டும்,'' என்று திறம்பட கூறிவிட்டார். உலகத்தை காப்பது என்பது கவிஞர்களுடைய கடமை. 19-ம் நூற்றாண்டில் இதை துணிந்து நின்று கூறிய கவிஞன் பாரதி. தொழுதுக்கும் வஞ்ஞானத்திற்கும் இப்போது முக்கியமான இடத்தை கொடுத்து வருகிறோம். பாரதி காலத்திலேயே சொல்லுகிறார்.

'' ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்,
ஆலேகள் வைப்போம். கல்வி சாலேகள்
[வைப்போம்''

என்று ஆலேகள் அமைப்பதைப்பற்றி சொல்லிவிட்டார். இவ்வாறு 19-ம் நூற்றாண்டிலேயே விஞ்ஞானத்திலே விஞ்ஞானத்தை பாடினுன்.

2000 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகின்ற தமிழ் நாற்கனே எல்லாம் பார்த்தால், மன்னனே உயிராகவும் மக்களே உடலாகவும் கருதி பாடியிருக்கின்றபாடல்களே எல்லாம் நாம் பார்க்கலாம். இந்தக் கருத்து கம்பர் காலத்தில் ஒளவுக்கு அடிபட்டிருக்கிறது. கம்பர் அப்போது ஒளவுக்கு புரட்சியை புகுத்தினர், மன்னன் மக்களுக்காக வாழ வேண்டுமே தவிர மக்கள் மன்னனுக்காக வாழக்கூடாது என்கின்ற கருத்தை புகுத்தினர். பாரதி, '' ஆண்டவன் தெருவில் போகிறன். '' என்றும் ''கம்பன் என்தெரு மானிடன்'' என்றும் மானிடன் என்பதை எல்லேயில்லாத அளவுக்கு புரட்சி செய்கின்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறன். எப்போதும் உயர்வாகப் பேசும்போது 'அன்' விகுதி போடுவது இயல்பு.

இது மட்டும் அல்ல, பெண்புலவராகிய ஒளவை ''தையற் சொல் கேளீர்'' என்று ஒருபெண்னேசொல்லி வைத்தார். பாரதி அதைப்பார்த்து எந்த அளவுக்குக் கோபம்அடைந்தார் என்பதை அவருடையவாக்கு நமக்குத் தெரிவிக்கின்றது. '' பெண்டாண்டி கால்லவிக்கு,

விண்ணைக் சுள்ளாணி" என்று சொல்லுகின்ற இந்த காலத்தில், பெண்ணே உயர்ந்த வேண்டும் என்ற நோக்கத்தோடு சொல்லி வைத்தார் பாரதி.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று, பெண்ணே இழிவு செய்யக் கூடியதை "மடமை" என்று புரட்சி எண்ணத்தோடு வெறுத்து கூறினார்.

சமுதாயத்திற்கு வேண்டிய பாடல்களும் உண்டு. இலக்கியத்திற்கான கவிதைகளும், அரசியலுக்கான கவிதைகளும், கட்டுரைகளும் உண்டு. இவை அனைத்தையும் ஒரு அளவோடு சேர்த்தான். அப்படிச் சேர்த்து மிகச் சிறந்த முறையிலே ஒரு அவியலாக தமக்குக் கொடுத்திருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு காரியத்தை இதுவரை யாரும் செய்யவில்லை. ஒரு வேளை நானே தோன்றலாம். அது இறைவனுடைய கட்டளை. அறம், பொருள், இன்பம், வீடு என்றுநான்கு உள்ளதைப்போல், இலக்கியம், சமயம், அரசியல், தத்துவம் ஆகிய இந்த நான்கினையும் ஒன்றுக அளவோடு சேர்த்து 62 ஆம் ஆண்டிலுள்ள மனிதனுக்கு ஏற்றவாறு அமைத்து, அத்தகைய வழியிலேயும் ஒரு புரட்சியைச் செய்திருக்கிறான். இதை அவன் அப்போதே நன்கு அறிந்திருக்கிறான் ஆனால் நம்மிலே சிலர் இன்னும் இதைப்பற்றி அறியாமலேயே இருக்கின்றோம். அப்படி எண்ணுவதையே இன்னும் சிலர் தாழ்வாக நினைக்கக்கூடிய அளவிலேயும் இருக்கிறார்கள். ஆனால் இதைப்பற்றியெல்லாம் அந்தக் கவிஞன் நினைத்தான். நமது ஆன்மா உய்வடைய வேண்டுமென்று அவன் பாடுபட்டான். இந்த பாரத சமுதாயத்திலே உள்ள அனைவரும் மோக்ஷத்திற்கு போக வேண்டுமென்று நினைத்தான். ஆனால்நாமோ கண்ணில் லாதவன் சித்திரம் வாங்குவதைபோல், இத்தனை விஷயங்கள் இருந்தும் அவனைப்பற்றி, ஆண்டவனைப் பற்றி எண்ணுவதற்கு இன்னும் அஞ்சுகிறோம். அவனைப் பற்றிய நிரம்பிய உணர்வு நமது மனதிலே உண்டாக வேண்டும். அப்போதுதான் மனிதன் தன்னுடைய ஆன்மாவை நல்ல முறையிலே வளர்த்துக் கொள்ள முடியும். ஆகவே, இந்த நான்கும் மனிதனுக்கு மிகவும் அவசியமானது என்பதை அவன் உணர்ந்ததான், கடைசியாக அவன் கூறியுள்ள குயில் பாட்டிலும், பாஞ்சாலி சபதத்திலும் இதைப்பற்றியெல்லாம் விளக்கி இருக்கிறான். நாடு அடிமை நீங்கப் பட்டாலும்கூட, இந்த தத்துவம்' அரசியல், கடவுளே 'நினைத்தல் போன்ற வைகள் மிகவும் அவசியமானது என்பதை அவன் தனது பாடல்களிலே பின்னிப் பின்னிக் காட்டுகிறான். இதை ஒத்தக் கவ்தை முன்னும் இல்லே; பின்னும் இல்லே. புராண காலத்திலேகூட நம்முடைய நாடு எப்படி இருந்தது என்பதை நமக்கு அறிவிக்கும் விதத்தில் அதன் அடிப்படையிலேயே புரட்சிக் கவிதைகள் இயற்றினான். அப்படிப்பட்ட புரட்சிக் கவிதைகளிலே, தத்துவத்தையும் புகுத்தியிருக்கிறான்; அரசியலும் புகுத்தியிருக்கிறான் இப்படிப்பட்ட காரியங்களே இதுவரை யாரும் செய்யாததால், அப்படிப்பட்ட கவிஞனே ஏன் ஒரு புரட்சிக் கவிஞன் என்று நாம் கூறக்கூடாது, ஆகவே, புரட்சிக் கவிஞன் என்று சொன்னலே அது பாரதிதான். அதற்கு அடுத்து ஆள் இல்லேயென்று கூறி முடிக்கிறேன்

திரு. கி. சந்திரசேகரன் அவர்கள்

எனக்கு இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றிதெரிவித்துக்கொள்கிறேன். இந்த பாரதி விழாவைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். நானுகவே தான் இந்த விஷயத்தையும் எடுத்துக்கொண்டேன். அவர்கள் எனக்கு ஒருவீதமான கட்டளையும் இட வில்லே. 'பாரதியின் பக்தி'யைப் பற்றி பேசுகிறேன் என்று நானே சொன்னேன்.

எனக்கு முன் பேசியவர் பாரதி ஒர் புரட்சிக் கவி என்பதை நன்கு விளக்கி, அதை நிலேத்துவிட்டார். எப்படி புரட்சி உண்டாகிறது என்று பார்த்தோமானுல், உள்ளத்திலே ஏற்படுகின்ற ஒரு செயலின் காரணமாக ஏற்படுகின்றது என்பதைப் பார்க்கலாம். அப்படி உள்ளத்தே ஏற்படுகின்ற காரியமாக வடிக்கின்றன். ஆனுல் உள்ளம் என்பது எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆனுல் அது எங்கோ மறைந்து விடுகின்றது. நாம் எல்லோரும் நமது உள்ளங்களே எங்கோ தொடும்படியாக வைத்துவிடுகிறோம். ஆனுல், சில சமயங்களில் நமது உள்ளங்களும் யாரோ ஒருவர் ஏதோ ஒரு காரியம் செய்யும்போது, அவன் செய்கை நமது உள்ளத்தைத் தொடும்படியும் செய்துவிடுகிறது. அப் படியே சிலர் சொல்லக்கூடியவைகளும் நமது உள் ளத்தைத் தொட்டுவிடுகிறது. இந்த உள்ளம் என்பது எப்படி இருக்கிறது என்றல், ஒரு கவிதையையோ, ஒரு கட்டுரையையோ அல்லது ஒரு கதையையோ நாம் வாசிக்கிறோம். திடீரென்று அந்த கதையோ, கட்டுரையோ, கவிதையோ நமது உள்ளத்தைத் தொட்டு விடுகின்றது. அப்போது தெரியும், நமக்கும் அதை எழுதியவருக்கும் ஏதோ ஒருவித தொடர்பு ஏற் படுவதை. அதற்கு முக்கிய காரணமாக இருப்பது அவனது நீண்ட்பே ஆகும். அப்போது இருவர் உள்ள மும் அதனுல் நிறைந்திருக்கிறது. அப்படி நம் உள் ளத்தை தொட்டுவிடுகின்றதோ, நாம் பிறிதிடம், ஆகா, இந்தப்படைப்பு என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. நெஞ்சைத் தொட்டுவிட்டது என்று சொல்கிறோம். அப்படி உள்ளத்தைத் தொடுவதற்கு அவனது வாக் கினிலே உண்மை இருக்க வேண்டும். அப்போதுதான் அதிலே ஒரு ஒளி ஏற்படும். இப்போது இதைவிளக்கும் வகையில் நான் ஒரு சிறு கதை சொல்கிறேன்.

இந்தக் கதை ஒரு சிறுவனுல் எழுதப்பட்டதுதான். ஆனுல் அது என் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. இதைச் சொன்னுல் உங்கள் உள்ளமும் தொடும் என்றே நான் நம்புகிறேன்.

காட்டிலே வளர்ந்த சிறு பையன், தன் தகப் பனிடம் சென்று அப்பா, இது என்ன அதியாயம், காட்டிற்கு அரசகுமாரன் வந்து இங்குள்ள மிருகங்களே யெல்லாம் வேட்டை ஆடுகிறானே என்று சொன்னுன். அதற்கு தகப்பனுர், நாம் அதைத் தடுக்க முடியாது என்று சொல்கிறான். அது என்னப்பா, தீங்கு செய்தது. பாரதியார் காக்கை, குருவி எங்கள் ஜாதி என்றல்லவா சொல்லியிருக்கிறர், அப்படியிருக்கும்போது ஏன் இந்த அரச குமாரன் மிருகங்களே வேட்டை ஆடுகிறான், நாம் அதைத் தடுக்க வேண்டுமென்று கூறி ஓடுகிறான். தகப்பனும் பின் தொடருகிறான். அச்சமயம் பார்த்து, ஒரு மானின் மீது அரசகுமாரன் அம்பு எய்துவிடுகிறான். அதைக் காப்பாற்றப் போன சிறுவனின் மீது அம்பு பாய்கிறது. தகப்பன் சிறுவனே மடிமீது வைத்து அலறுகிறான். சிறுவனே கண்ணே மூடிக்கொண் டிருக்கிறான். அரசகுமாரன் வந்து இதைப் பார்த்து விட்டு, மிருகங்களே வேட்டையாடஎண்ணி,சிறுவனே கொன்று விட்டோமே என்று வருந்தி, இனி வேட்டை ஆடுவதில்லே என்று சபதம் செய்கிறான் அப்போது மடி யிலிருந்த சிறுவன் ஒரு விஷ்டி கண்ணைத் திறந்து பார்த்து தான் சொன்னதைச் சாதித்து விட்டதாக அறிவிக்கும் முறையிலே பார்த்துவிட்டு, இறந்தான்

என்று கதையை முடித்திருக்கிறான். இதன் லட்சியத்தைப் பார்க்கும்போது, நமது அனுபவரது உள்ளமும் தொட்டுவிடுகின்றது. ஆனால் கதை சின்னதுபோல் இருந்தாலும், நம் உள்ளத்தை தொடுகிறது. இதேவித நிகழ்ச்சிதான், செயல்தான் கலீஞர்கள் தங்கள் படைப்புக்களே செய்யும்போது செய்துவிடுகிறார்கள். அதனுல நமது உள்ளம் அதைத் தொட்டு விடுகிறது.


